எந்திரன் மந்திரன் தந்திரன்

(மந்திர மலை)

இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

Pustaka
Digital Media
http://www.pustaka.co.in

எந்திரன் மந்திரன் தந்திரன்

Enthiran Manthiran Thanthiran

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarajan

For more books
http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5
அத்தியாயம் 6
அத்தியாயம் 7
அத்தியாயம் 8
அத்தியாயம் 9
அத்தியாயம் 10
அத்தியாயம் 11
அத்தியாயம் 12
அத்தியாயம் 13
அத்தியாயம் 14
அத்தியாயம் 15
அத்தியாயம் 16
அத்தியாயம் 17
அத்தியாயம் 18
அத்தியாயம் 19
அத்தியாயம் 20
அத்தியாயம் 21
அத்தியாயம் 22
அத்தியாயம் 23
அத்தியாயம் 24
அத்தியாயம் 25
அத்தியாயம் 26
அத்தியாயம் 27
அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

அத்தியாயம் 38

அத்தியாயம் 39

அத்தியாயம் 40

அத்தியாயம் 41

அத்தியாயம் 42

எந்திரன் மந்திரன் தந்திரன்

1

“இயக்குவிக்கப்படும் போது இயங்குவதோடு, அப்படி இயங்குவதால் தேவையைப் பூர்த்தி செய்வது எதுவோ அதுவே எந்திரமாகும். யார் இயக்கினாலும் எப்போது இயக்கினாலும் பாரபட்சமின்றி இயங்கி தொடக்கம் முதல் முடிவு வரை ஒன்றே போல் இயங்குவதும்- எந்திரமாகும். குணம் கடந்து செயல்பாடு மட்டுமே கொண்டு செயல்படுவதே இதன் சிறப்பாகும். “மாறாத செயல்பாடு குறையாத வேகம், குணம் கடந்த தன்மை இதுதான் எந்திரம். இயக்கத் தெரிந்தவனே எந்திரன்!"

*****

அபிராமி அந்தாதியைப் படித்துக் கொண்டிருந்தான் தனஞ்ஜெயன், அறையில் ஒரு மரவாடி மேல் பருத்த ஒரு மந்திரங்கள் நிரம்பியிருந்த புத்தகத்தில் அபிராமி அந்தாதியும் இருந்தது. அருகே ஒரு நீர்ச் சொட்டளவில் நெய் விளக்கின் தீபச்சுடர்! சற்றுத் தள்ளி தசாங்கத்தை தீக்கு இரையாக்கியதில் அதுவும் புகைந்தபடியே அவிந்து கொண்டிருந்தது. அற்புதமான வாசம்...

தனஞ்ஜெயனும் ஒரு வேட்டி உடுத்தி இடுப்பில் துண்டு கட்டியவனாய் நெற்றிக் குங்குமம் பளிரிட அந்தாதியைச் சொன்னபடி இருந்தான்.

'ததியுறு மத்தில் சுழலும் என் ஆவி தளர்விய தோர்.

கதிஉறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்...'

என்று அபிராமி பட்டரின் அன்றைய நெகிழ்வை உள் வாங்க முயன்றுகொண்டே இருந்தான்.

யதார்த்தமாய் அந்தக் காட்சியைக் கண்டபடியே கடந்து போனார் சுந்தரம்பிள்ளை. பெரிதாக அவரிடம் ஆச்சரியமில்லை. மாறாக ஒரு நிறைவு தெரிந்தது.

எதிர்ப்பட்டாள் மனைவி நல்லம்மை. ஆனால் அவள் முகத்தில் ஒரு சன்னமான சிடுசிடுப்பு.

“ஏன் நல்லா ஒரு மாதிரி இருக்கே... பிள்ள அந்தாதி படிக்கிறது கேட்குதா?”

“கேக்காம... அதான் எனக்கும் இப்ப பெரும் கவலையே...”

“அடக்க ஒடுக்கமா சாமி கும்பிடறது உனக்கு கவலையைத் தருதோ... கோட்டி.”

“எந்த வயசுல எதைச் செய்யனுமோ அதைச் செய்தாத்தானே நல்லாருக்கும்? இவன் வயசுப் பயலுங்க காதுல வெச்ச செல்போனை கீழ் இறக்க மாட்டேங்க றாங்க. நாலடி தூரத்துக்கு கூட டர்ருபுர்ருன்னு மோட்டார் சைக்கிள்ள போறானுவ... அதுவும் தோட்டா தெரிச்ச மாதிரி பறந்தா தான் அவனுகளுக்கு போனால் போலவே இருக்கு. இவன் என்னடான்னா சைக்கிள் ஒட்டவே யோசிக்கறான். எங்க சாமியாரா போயிடுவானோன்னு பயமா இருக்குதுங்க...”

"அப்படியெல்லாம் ஆக மாட்டான். கவலையே படாதே. ராகு தசைல கேது புத்தி இப்ப நடந்துகிட்டு இருக்கு. இப்படித் தான் சாமி பூதம்னு

அது செலுத்தும். ஊருக்கெல்லாம் ஜோசியம் சொல்ற எனக்கு தெரியா தாக்கும்?”

“ஆமா நீங்க சொல்ற எல்லாமே அப்படியே நடந்துடு தாக்கும். பத்து சொன்னா ஆறுதான் நடக்குது. நாலு ஏன் நடக்கலேன்னு உங்களுக்கே தெரியமாட்டேங்குது.”

“எங்கையோ ஆரம்பிச்சு எங்கையோ வந்து நிக்கறியே. இப்ப இவனை இப்படி பார்க்கற நீ ஒரு நாள் நேர் எதிராவும் பார்ப்பே. அப்ப நீ என்ன சொல்றேன்னு பாக்கறேன்.”

"அப்படியும் அவன் ஜாதகத்தில் இருக்கா...?”

“இருக்குதாவா... பெரிய புதையலையே எடுக்கப் போறான் நல்லா உன் மவன். அதுமட்டுமில்ல... நீயும் நானும் பார்க்காத சாமியை, இந்த ஊர் உலகம் பார்க்காத சாமியை இவன் பாக்கப்போறான்?”

“குழப்பறீங்களே... நேர் எதிராப் போவாங்கறிங்க... சாமிய பாப்பாங்கறிங்க... ஒண்ணுக்கு ஒண்ணு இடிக்குதே"

இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது கால் கொலுசு சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தனர். நல்லம்மை யின் அண்ணன் மகள் விஜி என்கிற விஜயலட்சுமி வந்தபடி இருந்தாள்.

“உன் மருமக வந்துட்டா... கைல பார் தூக்குவாளி. உன் மவனுக்கு மாமன் ஊட்ல இருந்து சூடா ஏதோ வந்துருக்குதாட்டம் இருக்கு...” என்றபடியே கொல்லைப் புறம் நோக்கி நடந்தார். அடுத்தடுத்து எண்ணெய் முழுக்கு வென்னீர் குளியில் என்று அவருக்கானவை காத்திருந்தன.

விஜி தூக்குவாளியை ஆட்டியபடியே பூஜை அறை வாசல் கதவருகே நின்று தனஞ்ஜெயன் அந்தாதி சொல்லும் அழகைப் பார்த்தாள். கைச் சொடக்கு போட்டு தன் வருகையை உணர்த்த முயன்றாள். அவன் திரும்பவே யில்லை. தொண்டையைச் செருமியவளாய் “அத்தே” என்று குரல் கொடுக்கவும் நல்லம் மையும் அருகே வந்தவளாய், “பக்கத்துல தாண்டி இருக்கேன்... எதுக்கு கத்தறே?” என்றும் கேட்டாள்.

“இந்தாத்த... உளுத்தங்கஞ்சி தேங்காப்பால் எடுத்து செஞ்சது. அம்மா கொடுத்து உட்டுச்சி...”

“எனக்கா இல்லை என் மவனுக்கா?”

“எங்க... சாமியார் திரும்பற மாதிரியே தெரியலியே...?”

அவள் அப்படிச் சொன்னது அவன் காதைத் திருகியது போல அவனை திரும்பச் செய்தது... அந்தாதி வாசிப்பதும் நின்றுபோனது.

“ஏ கோட்டி... என்ன கொழுப்பா?”

“பின்ன... வந்து நின்னு சொடக்கு போட்டா திரும்பிப் பாக்க வேண்டியது தானே?”

“விரலை வெட்டுவேன். சொடக்கா போட்றே சொடக்கு. வாய் இருக்குல்ல?”

“அதான் அத்தேன்னேல்ல?” அவள் பதிலில் ஒரு சளைக்காத தன்மையும் அவனை ஒரண்டை இழுக்கும். ஒரு விளையாட்டு புத்தியும் பளிச்சென்று தெரிந்தது. அதை நல்லம்மை ரசித்தாள். ஆனால் தனஞ்ஜெயன் அவளை வெறித்து விட்டு திரும்பவும் அந்தாதியை தொடரப் போனான். டிவி. யை போட்டு அதில் வடிவேல் காமெடியை காணாததை கண்டுவிட்டது போல ரசிக்க முயன்றாள். அவன் பூஜை அறையை விட்டு எழுந்து வந்து டி.வி.யின் மெயின் ஸ்விட்சையே அணைத்தான்.

“போடி, உன் ஊட்டுக்கு போய் பாரு...” என்று ஆவேசமாக கையை ஆட்டினான்.

“இதுவும் தான் என் வீடு...” என்றபடி அவள் திரும்ப ஸ்விட்சை போட முயன்றாள்.

“போட்டா கையை ஒடிப்பேன்...”

“எங்க ஒடி பாப்போம்...” அவள் முயன்றாள். அவன் கையைப் பிடித்து தள்ளி விட்டான்.

“ஒடிக்கறேன்னுட்டு தள்ளி விடறே?”

அவனுக்கு கீறினாற் போல் இருந்தது. அதற்குள் நல்லம்மை இடையிட்டு “போதுண்டா... அவளுக்கும் அறிவில்லை. உனக்கும் துப்பில்லை” என்றாள். துப்பில்லை என்று அவள் எந்த அர்த்தத்தில் சொன்னாள் என்று தெரியவில்லை. ஆனால் அவனுக்கு அது மிகுந்த வலியைத்தந்தது. முகம் மாறிவிட்டது. ஆவேசம் ஆத்திரம் எல்லாம் தண்ணீர் பட்ட நெருப்பு போல் அணைந்து போய் சலனத்தை முகத்தில் பிரதிபலித்தான். அப்படியே பூஜை அறைபக்கம் செல்லப் பார்த்து பின் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியேறத் தொடங்கினான்.

“அத்தே...” விஜி சற்று சோர்வாய் அழைத்தாள்.

“சொல்லு...”

“என்ன அத்தை இப்படி பேசிட்டீங்க?"

“எல்லாம் சரியாத்தான் பேசியிருக்கேன். பரிட்சைல ஃபெயிலாகி அரியர்ஸ் வெச்சுருக்கான். அதுக்கான பாடத்தை படிக்காம அபிராமி அந்தாதியை படிக்கறவனை என்னான்னு சொல்ல. துப்பில்லாதவன்னு தானே?

சாமி பக்தி எல்லாம் இருக்க வேண்டியது தான். அதுக்காக இப்படியா? அப்படித் தான் சாமிகும்பிட்றானே அதுக்கான அமைதி அடக்கமாவது இருக்குதா? நீ ஒரு வார்த்தை பேசுனா பதிலுக்கு ஒன்பது வார்த்தை பேசுறான். கோவம் கொஞ்சம் கூட குறையலை. இவனை எந்த கணக்குல எடுத்துக்கறது?

இவங்கப்பா என்னடான்னா என் மவன் புதையலே எடுக்கப் போறான் பாருங்கறாரு. இவனுக்கெல்லாம் கரிச்சட்டி கூட கிடைக்காது. ஒத்த புள்ளையை பெத்துட்டு என் மனசு பட்ற பாடு எனக்கு தாண்டி தெரியும்.

முறைப் பொண்ணுதான். நீ உனக்கும் இவனை பிடிச்சிருக்குதுதான். ஆனா உன் அப்பன் அன்னிக்கு என்ன சொன்னான்? நிரந்தரமா ஒரு வருமானம் இல்லாத ஆம்பளைக்கு உனக்கு ஒரு பொண்ணு இருந்தா நீ கட்டி வைப்பியான்னு கேட்டானா கேக்கலியா?” பொல பொல வென்று பொரிந்து தள்ளினாள் நல்லம்மை. அவ்வளவும் ஆற்றாமை. விஜயலட்சுமியாலும் அவள் கேள்விகளுக்கு பதிலைக்கூற முடியவில்லை. மௌனமாக கண்களில் தேங்கிவிட்ட கண்ணிருடன் நிற்க மட்டும் தான் முடிந்தது!

சரவணப் பொய்கையை ஒட்டி ஒரு பாதை... அப் படியே திருப்பரங்குன்ற மலை மேலே ஒரு நடைபாதையாய் மேலேற படி இருந்தது. தனஞ்ஜெயனும் அதில் நடந்து மேலேறியபடி இருந்தான். வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டான். சில இளம் காதல் ஜோடிகள் போகிற வழியில் பாறை இடுக்குகளில் கண்ணில் பட்டார்கள். தாராளமான சில்மிஷங்கள்! ஆனால் அவனுக்கு அது அருவருப்பாய் இருந்தது.

அங்கங்கே சுருட்டு பிடித்துக் கொண்டு சன்யாசி யாகவும் இல்லாமல் பிச்சைக்காரர்களாகவும் இல்லாமல் சிலர். அவனைப் பார்த்தபோது சிரித்தார்கள். பதிலுக்கு சிரித்தால் அருகில் தொடர்ந்து வந்து காசு

கேட்பார்கள் என்பது தனஞ்ஜெயனுக்கும் தெரியும். எனவே அவர்களை சட்டை செய்யாமல் மேலேறினான். திரும்பிப் பார்த்தான் அவ்வப்போது...

விரிந்து கிடந்த நிலப்பரப்பின் மேல் மதுரை நகரத்து வீடுகள். கருப்புகோடு போல சாலை. அதில் செவ்வக இரும்புப் பெட்டிகள் போல் பேருந்துகள்! அவைகள் எறும்புகள் ஊர்வது போல கண்ணில் பட்டு மனசுக்குள் ஒரு பிரமிப்பு பரவத் தொடங்கியது.

‘எதையும் மேலிருந்து பார்ப்பது தான் அழகு’ என்று ஒரு கருத்தும் மூண்டது. காற்று வேறு மொதுமொது வென்று வந்து முகத்தில் முட்டிவிட்டுப் போய்க் கொண் டிருந்தது. அதன் ஜில்லாப்பும் காதோரத்து சப்தமும் மௌனம் பேசினால் அப்படித்தான் இருக்கும் போல அவனுக்கு தோன்றிற்று.

வீட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் மெல்ல கரைந்து அவன் விடுபட்டு விட்டது போல தெரிந்தது. அவன் பார்வையும் யாரையோ தேடுவது போல நாலாப் புறமும் பார்த்தது.

“எலேய்...” என்று ஒரு பருத்த பாறையின் அடியில் மஞக்கென்று தோன்றிய ஒருவர் குரல் கொடுத்து அவனை அழைத்தார். அவரைப் பார்க்கவும் அவனிடமும்உற்சாகம். “வந்துட்டேன் சாமி...” என்றபடியே அவரை நெருங்கினான். அந்த பாறைக்கு கீழே தாராளமாய் ஒரு பத்து பேர் அமர்ந்து சீட்டாடலாம். அத்தனை விஸ் தீரணம். அதில் அவர் ஒரு மான்தோல் பையோடு அதை அக்குளில் அணைத்தபடி படுத்திருந்தார். அவர் எதிரில் அமர்ந்தான். அவன் எதிரில் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். புகையை ஊதி வெளியேற்றாதபடி கசிய விட்டு வெளியேற்றியது எதனால் என்று தெரியவில்லை.

"அப்புறம்?” கேள்வி வேறு.

"நீங்க சொன்ன மாதிரியே ஆயிடிச்சு சாமி...”

"அப்படின்னா உன்னால முழுசா சாமிய கும்பிட்டு முடிக்க முடியலன்னு சொல்லு”

“ஆமாம் சாமி என் மாமன் மக ரூபத்துல இன்னிக்கும் தடங்கல் வந்துடுச்சி”

“அது அப்படித்தான் வரும். நான் சொன்னேன்ல... ஆனா அதை நீ சட்டை பண்ணக்கூடாது.”

“நான் அப்படித்தான் இருந்தேன். எங்கம்மாவும் வந்து கூடச் சேர்ந்துகிட்டாங்க. துப்புகெட்டவன்கற மாதிரி பேசவும் கோபம் வந்துடிச்சி சாமி. எங்கம்மாவுக்கு படிச்சு பட்டம் வாங்கறதும் எங்கையாவது வேலைக்கு போய் கைகட்டி நின்று வேலை பார்த்து சம்பாதிக்கறதும் தான் ஆம்பிளைக்கு லட்சணம்னு நினைக்கறாங்க... ஆனா அது அடிமைத்தனம்னே தெரியமாட்டேங்குது...”

அதைக் கேட்டு அவர் ஒரு தினுசாக சிரித்தார்.

“சிகரெட் புடிக்கிறியா...?” என்று கேட்டு ஒரு சிகரெட்டையும் நீட்டினார்.

“இல்ல சாமி வேண்டாம்.”

“வேண்டாம்னு மனசு சொல்லணும்; உதடு சொல்லக் கூடாது.”

“என் வரைல மனசு தான் சாமி சொல்லுது. அது என்னவோ தெரியல என் வயசுப் பசங்களுக்கு பிடிக்கற எதுவுமே எனக்கு பிடிக்க மாட்டேங்குது.

இந்த படிப்பு, பரிட்சை, அதுல மார்க்கு எல்லாமே சுத்த ஹம்பக் ஏதோ ஒரு ஆபீஸ்ல உக்காந்துகிட்டு அவங்க கணக்கு வழக்க பாக்கப் போறவங்களுக்கு, அசோகர் மரம் நட்டதும், பிதாகரஸ் தியரியும், தேற்றமும் எதுக்கு சாமி?”அவன் சற்று ஆவேசமாகக் கேட்டான்.

“எப்பவும் நமக்கு பிடிக்காத ஒண்ணை ஏத்துக்க முடியாத போது புத்தி இப்படி எல்லாம் தான் கேக்கும். பிடிச்ச விஷயத்தை ஏத்துக்க முன்வரும்போதும் அதுக்கு பொருத்தமா என்ன பேசணுமோ அதைப் பேசும். இது மாயா உலகமாச்சே...?”

அவர் கருத்தைச் சொல்லிவிட்டு தண்ணீர் கொப்ப ளிப்பது போன்ற சப்தத்தோடு சிரித்தார்.

“நீங்க என்னசாமி சொல்றீங்க?”

“நீ பேசறது தப்புங்கறேன். படிப்பை நீ வேலை பாக்கறதுக்கான ஒரு வாசப்படியா மட்டுமே பார்க்கற... அது அப்படி இல்லை... இந்த உலகத்துல ரொம்ப பெருசு படிப்பு ஒண்ணுதான். உன் காலேஜ்ல ஏட்டுல இருக்கிற கல்வியை மட்டும் நான் சொல்லல. இன்னிக்கு உங்கம்மா திட்டுனது, உனக்கு வலிச்சது, இங்க நீ வந்தது, வர்ற வழில பாத்தது, யோசிச்சது, இப்ப நான் இங்க பேசிக்கிட்டு இருக்கிறது எல்லாமே கல்வி தான். எல்லாத்தையும் திறந்த மனசோட பாக்கணும்.

அதை அசை போடணும். அதுக் குள்ள ஒவ்வொண்ணுலயும் ஆயிரமாயிரம் அர்த்தங்கள் ஒளிஞ்சிருக்கு”

‘‘சாமி நீங்க சொல்றதுல கொஞ்சம் தான் புரியுது. பெருசா எதுவும் புரியல. அதே சமயம் எனக்குள்ளயும் சில கேள்விகள் இருக்கு. அதுக்கு தான் யாரும் சரியாவே பதில் சொல்ல மாட்டேங்கறாங்க...”

“நீ என்கிட்ட பதில் சொல்ல முடியாதபடி ஒரு கேள்வியை கூட கேட்டதே இல்லையேப்பா...”

“இப்ப கேக்கறேன் சாமி... இந்த பூமில ஒருத்தன் கார்ல போறான். ஒருத்தனுக்கோ நடக்க கூட கால் இல்லை.ஒருத்தன் மாட்டை விட மோசமா பாடுபட்டும் பெருசா சம்பாதிக்க முடியலை. ஒருத்தனோ உக்காந்த இடத்துல எந்த உழைப்பும் இல்லாமலே லட்சலட்சமா சம்பாதிக் கிறான். முயற்சி திருவினையாக்கும்னு சொல்றாங்களே ஒழிய அது எப்ப எப்படின்னு சொல்ல மாட்டேங்கறாங்க... இது வேடிக்கையா இல்லை?”

“ஒரு கேள்வின்னுட்டு ஒன்பது கேள்வி கேட்கறி யேப்பா... சுருக்கமா தெளிவா கேள்...”

“படிச்சா உழைச்சா தான் முன்னுக்கு வரலாம்னு சொல்றாங்க, படிக்காமலும் உழைக்காமலும் முன்னுக்கு வந்தவங்களுக்கு உங்க பதில் என்ன?”

“சேத்து வெச்சதை சுலபமா பெற்று செலவு செய்ய றாங்க அவ்வளவுதான்.”

“எப்ப சேர்த்தாங்க...?”

“புரிஞ்சுக்கறதுக்காக கேக்கறியா... இல்லை நாத்திகத் துல நின்று கேக்கறியா?”

“சத்தியமா புரிஞ்சுக்கத்தான் சாமி கேக்கறேன்.”

“அப்ப இதுக்கு பதிலை உன்னை வெச்சே நான் உனக்கு சொல்றேன். நீ கூட நிறைய சேத்து வெச்சிருக்கற ஒருத்தன் தான்! அப்படி நீ சேத்து வெச்சதெல்லாமும் உனக்குக் கிடைக்கணும்கறது தான் உன்விதி. அதனால படிப்பு அது தொடர்பான சம்பாத்யமெல்லாம் உனக்கு பெருசா படலை. அது பின்னாலயம் நீ போக விரும்பலை...”

“கொஞ்சம் புரியற மாதிரி சொல்லுங்களேன்.”

“அன்னிக்கு காட்டுனா மாதிரியே எங்க உன் கையை கொஞ்சம் காட்டு...”

அவனும் அவர் முன் கையை நீட்டினான். உள்ளங் கையில் திரிசூல வடிவில் ரேகை அவர் முகத்தில் சிரிப்பு.

“நீ யாருங்கறத சொல்ற டைரிக் குறிப்புதான் உன் உள்ளங்கை. இதெல்லாம் கையை மடக்கறதாலையும் விரிக்கறதாலையும் விழுந்த கோடுங்க இல்லை. உன்னைப்பத்தி கோட்டால் எழுதி வெச்சிருக்கற பாஷை இது. இதை படிக்க தெரியணும். கோடு வளைஞ்சா எழுத்து. எப்படி வளையுதோ அதைப் பொறுத்து தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு, அரபின்னு அதை சொல்லிக்கறோம். வளையாத கோடு வட்டமா மாறுனா ஒரு அர்த்தம். சதுரமா மாறுனா இன்னொரு அர்த்தம். முக்கோணமா மாறுனா வேறு அர்த்தம்.”

கோடு வளைஞ்சு எழுத்தாகி ஒரு மொழியாகவும் ஆயிட்ட நிலையில், அதுக்குள்ள புகுந்து ஒருத்தன் கெடுக்க நினைச்சா கெடுத்து விடலாம். உதாரணமா 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகுன்னு வள்ளுவர் எழுத்துல சொன்னதுல ஆதிபகவன்கறதுக்கு பதிலா விஷ்ணுபகவன் முதற்றே உலகுன்னு ஒரு வைஷ்ணவன் அதை திருத்தி எழுதி வெச்சுடலாம். ஈஸ்வரபகவன் முதற்றே உலகுன்னு ஒரு சைவன் கூட திருத்திப்பிடலாம். யார்கண்டா ஆதிபகவன்கறதே கூட திருத்தி யாராவ்து எழுதுனதா இருக்கலாம்.

ஆனா கோட்டுக்குள் இருக்கற பாஷையை ஒருத்த னால, திருத்த முடியாது. கோட்டு மொழி ஒரு மாற்ற முடியாத, திருட்டுத்தனத்துக்கு இடம் கொடுக்காத பல மான மொழி. அந்த மொழிதான் எல்லாரோட கைலயும் அவங்கள பத்தி எழுதி வெச்சிருக்கு. ஆனா அதை கோடில ஒருத்தனுக்கு கூட படிக்கத் தெரியாதே...? அதனாலே, தான் யாருங்கறதையே தெரிஞ்சுக்காமலே இந்த பூமில ஒவ் வொருத்தனும் கத்திகிட்டு இருக்காங்க”

அவரது நீண்ட பிரசங்கத்தில் அவர் எங்கே வருகிறார் என்று தனஞ்ஜெயனுக்கு புரியவேயில்லை.

“சாமி நீங்க இப்ப எனக்கு என்னதான் சொல்ல வர்றிங்க?”

“சொல்றேன்... நான் கேக்கற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிகிட்டேவா... அப்பதான் நான் சொல்லப் போறதும் உனக்குப் புரியும்.”

“சரிங்க சாமி. கேளுங்க”

“யார் நீ”

“மனுஷன் சாமி”

“அது இனம். அதுல நீ யார்?”

“தனஞ்ஜெயன்”

“அது உன் பேர். அந்த பேர்தான் நீயா?”

‘‘சாமி தயவு செய்து நேரா விஷயத்துக்கு வாங்க. என்னை சோதிக்காதீங்க”

“முட்டாப்பயலே நான் நேராத்தான் வந்துகிட்டிருக் கேன். உன்னாலே நீ யார்னு உனக்கு தெரியுமா? இது தான் என் கேள்வி’

“தெரியல சாமி... தெரிஞ்சுக்க முடியாமதானே தவிக்கறேன்”

“சரி இப்ப நான் சொல்றதை நல்லா கேட்டுக்க. பாடறவனை என்னன்னு சொல்வோம்”

“பாடகன்னு சொல்வோம்”

“ஆடறவனை...?”

"ஆட்டக் காராம்போம்.”

“பாடம் சொல்லித்தர்றவனை”

“வாத்யார்னு சொல்வோம்.”

“எந்திரத்தை இயக்கறவனை?”

“எந்த எந்திரத்தை சாமி?”

“நீ இரும்பால ஆன எந்திரங்களை மனசுல வெச்சுகிட்டு கேக்கறே. நான் கோட்டால ஆன ஸ்ரீயந்திரத்தை சொல்றேன்.”

“அப்படின்னா?”

“நீ அந்த ஆதிசக்தியோட ஸ்ரீபயந்திரத்தையே இயக்கப் போறே எந்திரன்டா... எந்திரன்!”

“ஸ்ரீ யந்திரமா... அப்படின்னா?”

“போன ஜென்மத்துல அதைக் கொண்டு மழையை யும் புயலையும் வரவெச்சு செப்பிடு வித்தையெல்லாம் காட்னவன் நீ. இந்த ஜென்மத்துல அப்படின்னா என் னன்னா கேக்கறே?”

அவர் கேட்ட விதத்தில் ஒரு அலாதி அழுத்தம். அப்படியே அவன் கையையும் இழுத்துப் பற்றி விரல் களையும் நீவி விடத் தொடங்கினார்.

அவனுக்குள் தூரத்தில் கோவில் மணி ஒசை ஒலித்து மெல்லிசாய் அது கேட்கப்படுவது போலவும், குங்கும வாசம் மூக்கில் ஏறுவது போலவும், பொன்னூஞ்சல் ஒன்றில் அம்பிகையின் உருவம் அவனைப் பார்த்து புன்னகைப்பது போலவும் எல்லாம் தோற்றங்கள், உணர்வு கள்! இது பிரமையா, இல்லை கற்பனையா!

2

மிக மிக முதிர்ந்த, இன்றைய விஞ்ஞான வளர்ச்சி களை விடவும் மேலான வளர்ச்சிகளைக் கொண்ட ஒரு இனம் இந்த மண்ணில் வாழ்ந்திருந்தால் மட்டுமே பூஜ்யம் என்கிற ஒன்றைக் கண்டறிந்திருக்க முடியும். அதேபோல் எழுத்துக்கள், அதிலும் ‘உயிர், மெய், உயிர்மெய்’ என்கிற பிரிவுகளை உருவாக்கி இலக்கணமும் செய்திருக்க முடியும். ஒரு படி மேலே போய் நிலங்களைப் புரிந்து அதை ‘முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை’ என்கிற ஐவகைக்குள் அடக்கியதோடு ‘இயல், இசை, நாடகம்’ என்கிற மூவகை கலாவடிவங்களையும் சிருஷ்டி செய்திருக்க முடியும்.

உச்சபட்சமாக ‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’ என்று கூறியதிலும் கூட எண்ணை முன்னால் வைத்து எழுத்தை பின்னால் வைத்ததன் பின்னே ஒரு ஆச்சரியம் ஒளிந்திருப்பதையும் கூர்ந்து கவனித்தால். உணரலாம்.

எண்ணாவது உலகம் முழுக்க ஒரே வடிவில் தான் உள்ளது. ஆனால் எழுத்து, மதம் இனம் சார்ந்து பலவடிவம் பெற்று அது பல மொழிகளாக மாறிவிட்டது. மாறாத எண்களுக்குள்ளும் அவைகளை விளங்கிக் கொள்ள தோதாக ‘மனித இனம் ஒன்று, அதில் ஆண்பெண் இரண்டு, மொழி மூன்று, திசை நான்கு, பூதங்கள் ஐந்து, அறிவானது ஆறு, கரங்கள் ஏழு, சித்திகள் எட்டு, சக்திகள் ஒன்பது, அவதாரம் பத்து என்று பகுத்து வைத்தனர்.

வானியலிலும் பஞ்சாங்கம் கண்டு தான் கிழமை, திதி, நட்சத்திரம், ஹோரை என்று பொழுதுகளுக்கும் அடையாளமிட்டது தான் அனைத்திலும் மேலான செயல்.

இன்றைய விஞ்ஞானம் எதை எதை எல்லாமோ கண்டறிந்த போதிலும் புதிதாக ஒரு எழுத்தோ, மொழியோ கண்டறியப்படவில்லை. அழிக்க முடியாத பழமைகளின் மேல் நின்று கொண்டு அது இன்று கண்டறிவதெல்லாமும் கூட முந்தைய மனித சமுதாயத் தில் வேறு வடிவில் இருந்திருக்க வாய்ப்புகள் மிகுதி!"

அந்த தாடிக்கார கிழட்டு மனிதர் அவன் கரத்தைப் பற்றியிருந்த நிலையில் கைவிடவும் தனஞ்ஜெயனுக்குள்ளும் பிரமையா, கற்பனையா என்கிற விதத்தில் இருந்த அவ் வளவு உணர்வுகளும் அது தொடர்பான காட்சிகளும் நின்று போக மலங்க மலங்க அவரைப் பார்த்தான்.

‘என்ன அப்படிப் பாக்கறே’

‘என் கையை நீங்க பிடிச்சு வருடினதும் எனக்கு பரவசமா இருந்துச்சி சாமி. குங்கும வாசம் அடிக்கற மாதிரியும், ஊஞ்சல்ல சாமி ஒண்ணு ஆடற மாதிரியும் மணி ஓசை கேக்கற மாதிரியும் தோணிச்சு.

நீங்க கையை விலக்கவும் கரண்ட் போன டிவி. பெட்டி மாதிரி ஆயிடிச்சு மனசு... எப்படி சாமி இப்படி?” ஆச்சரியம் விலகாமல் கேட்டான் தனஞ்ஜெயன், “சட்டியில இருந்தா அகப்பையில் வரும். எல்லாம் உன் பூர்வ அனுபவம்! அதான் நான் கரண்ட்டை கொடுக்கவும் பழசெல்லாம் ஒட ஆரம்பிச்சிட்டாப்ல இருக்கு.”

“பூர்வ அனுபவம்... கரண்ட்... நீங்க பேசறது என்ன சாமி?”

“அது உனக்கு இப்ப புரியாது. புரியவும் வேண்டாம். தான் சொல்ற மாதிரி மட்டும் கேளு. கேப்பியா?”

“அது நீங்க சொல்றத பொருத்தது சாமி”

"அப்ப என் மேலே உனக்கு பயமோ, இல்லை சந்தே கமோ இருக்குன்னு சொல்லு”

“ஆமாம் சாமி. சாமியாருங்கன்னாலே பயமா இருக்கு. என் வரைல கொலை கொள்ளை பண்ற ஒரு ரவுடிப்பய கூட போலியான சாமியார் முன்னால ரொம்ப நல்லவன்கறது என் அபிப்ராயம்.”

“அது சரிதான். என்னைய நீ போலியா நினைக் கறியா?”

“இந்த நிமிசம் அப்படி நினைக்கல. போகப்போக எப்படிங்கறது எனக்குத் தெரியாது. யாரா இருந்தாலும் மனசுல என்ன நினைக்கறேனோ அதை பேசிடுவேன் சாமி. அதனால சில சமயங்கள்ல நிறைய கெட்ட பேரும் எனக்கு ஏற்பட்டிருக்கு. ஆனா என்னால என்னை மாத்திக்க முடியல. அதான் நீங்க கேக்கவும் நான் மனசுல பட்டதை சொல்லிட்டேன்.”

தனஞ்ஜெயனின் பேச்சை கேட்டு சிரித்தவர். அவன் கையை இழுத்துப் பிடித்து ஆள்காட்டி விரலுக்கு கீழே உள்ள குருமேட்டு பகுதியை பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தார்.

“என்ன சாமி சிரிக்கறிங்க!”

“உன்னை பத்தி நீ சொன்னதெல்லாம் உண்மை. உன்னால மனசை மூடி வெச்சுக்க முடியாது. அதை பூட்டிகிட்டு இருக்கவும் முடியாது. குருமேடு வரை நீண்டிருக்கற இந்த ரேகையே அதுக்கு சாட்சி...” என்றார்.

“அப்ப கைரேகையை வெச்சு கிட்டு ஒருத்தர் எப்ப டின்னு கண்டு பிடிச்சுட முடியுமா?”

“நீ யாரு, எப்படிப்பட்டவன்னு சொல்றது தானே கைரேகையே.”

“ஆனா யாரும் சரியா சொல்ல மாட்டேங்கறாங்களே பொய்யால்ல புளுகறாங்க.”

“பின்ன, அபூர்வமானதெல்லாம் அரிசி பருப்பு மாதிரி அள்ளிக்கற மாதிரியா கிடைக்கும்? இது பெரிய படிப்பு.குருநாதன் கருணை, வித்யாலட்சுமியோட பார்வை, கொஞ்சம் போல பூஜாபலன், பெரியவங்க ஆசீர்வாதம்னு நாலு விசயங்களும் இருக்கறவனுக்கு தான் இந்த கோட்டு பாஷையை படிக்கற ஞானம் பிடிபடும்.”

“எந்த ஒரு விசயத்துக்கும் பட்டுன்னு புரியறமாதிரி ஒரு பதிலை சொல்லவே மாட்டேங்கறிங்களே சாமி.”

"நீயும் பெரிய கேள்விகளையே கேட்கமாட்டேங் கறியே.”

“அது என்னவோ சரிதான். போகட்டும் கொஞ்சம் முந்தி என் கையை பாத்துட்டு எந்திரன்னு சொன்னிங்க. நான் இதைப் போய் வெளிய சொன்னா நான் என்னை ரஜினின்னு சொல்றதா நினைச்சு கேலி தான் பண்ணு வாங்க...”

“எதுக்கு வெளிய போய் சொல்றே... ஏன் சொல்ல ணும்!”

“ஒரு பேச்சுக்கு சொன்னேன் சாமி.”

“சொல்லாதே. என்கிட்ட பேசற எதையும் யார் கிட்டயும் சொல்லாதே. அது தான் உனக்கு நல்லது.”

“ஏன்சாமி சொல்லக்கூடாது. நான் தான் எதையும் மனசுக்குள்ள வெச்சுக்காதவன்னு நீங்களே சொன்னீங்களே?”

“அது சரி, திறந்த மனசுங்கறதுக்காக எப்ப மலம் தழிச்சே எவ்வளவு ஜலம் கழிச்சேன்னுல்லாமா சொல்லி கிட்டிருக்கே...?”

“சீச்சீச்சீ... இதையெல்லாமா சொல்வாங்க!”

"அப்ப உள்ளடக்கமா இருக்க வேண்டியதும் இருக் குல்ல?”

“அந்த மாதிரி உங்க விசயத்தை நான் வெளியே தெரியாம வெச்சுக்கணும்?”

“எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லிகிட்டிருக்க என்னால முடியாது. இன்னிக்கு நீ என்கிட்ட பேசினது போதும். அபிராமி அந்தாதியை தடை இல்லாம ஒரே ஒருதடவை சொல்லி முடி. அங்கதான் உனக்கு ஆரம்பமே இருக்கு.”

“இதை நீங்களும் நாலஞ்சு தடவை சொல்லிட்டீங்க. ஆனா என்னாலயோ அதை முழுசா ஒரு தடவை கூட சொல்ல முடியல. சரிசாமி... இந்த தடவை நான் வைராக்யமா என் தலைமேல இடியே விழுந்தாலும் அதை பத்தி கவலைப்படாம என் கவனமும் கலையாதபடி அந்த நூறு பாட்டையும் சொல்லி முடிக்கறேன். அவ்வளவு தானே?”

“அவ்வளவேதான்... அந்த நூறை நீ தொடும்போது தான் அற்புதமே இருக்கு.”

“அதையும் பார்க்கறேன். போகட்டும் சாமி. நான். இப்ப சாதாரணமா சில கேள்விகளை கேட்கட்டுமா” அவர் பதில் கூறாமல் அவனுக்கு முதுகை காட்டியபடி பிரண்டு படுத்துக் கொண்டார். கிளம்பு என்று அவர் சொல்வதாக அதற்கு பொருள்.

“ஒண்ணுமில்ல சாமி உங்க பேர் என்ன. உங்க ஊர் எதுன்னு தெரிஞ்சிக்கலாம்னு...”

“அவர் திரும்பவேயில்லை.”

“இதுல என்ன சாமி தப்பு இருக்கு... உங்களுக்கு ஒரு பேரும் ஊரும் இருந்துதானே தீரணும்?”

அவர் வெடுக்கென்று படுத்திருந்த நிலையில் இருந்து எழுந்தவராக தன் மேல் அமர்ந்த ஈ ஒன்றை விரட்டுவது போல “இப்ப நீ போமாட்டே... நீ உக்கார என் உடம்பு தானா கிடைச்சது” என்று கத்தவும் தனஞ்ஜெயனுக்கு புரிந்துவிட்டது. இனி அவரிடம் ஒரு வார்த்தை கூட பேச முடியாது என்று.

ஊர் பெயரைக் கூட சொல்ல விரும்பாதவரிடம் தான் மட்டும் எதற்கு பேச வேண்டும்! இன்றைக்கு ஜெயிலில் இருந்து தப்பித்து வரும் பல கைதிகள் தாடி மீசையை வளர்த்துக் கொண்டு இப்படி சாமியாராக மாறி ஏதாவது ஒரு மலையாக பார்த்து ஒதுங்கி விடுவதாக ஒருபுலனாய்வுப் பத்திரிகையில் படித்ததெல்லாம் அவன் நினைவுக்கு வந்தது.

“இவரும் அப்படிப்பட்டவராக ஏன் இருக்கக் கூடாது.”

அவனுக்குள் கேள்விகள் எழும்பிய நிலையில் மலைப் பாதையில் இருந்து கீழ் இறங்கத் தொடங்கினான். எதிரே தெரிந்த மதுரை நகரமும் சுருங்கத் தொடங்கியது. ஒரு பெரும் சைரன் சப்தத்தோடு கன்னியாகுமரி எக்ஸ்ப்ரஸ் ஊருக்குள் போகும் ரயில்பாதை மேல் விரைந்துகொண் டிருந்தது. தடதடவென்று இறங்கியதில் இரண்டு நிமிடத் தில் அடிவாரப் பரப்பு வந்துவிட்டது. அங்கிருந்து வீடு ஒன்றும் அதிக தொலைவில் இல்லை. அப்படியே நடக்கத் தொடங்கினான்.

***

வீட்டு முகப்பில் ஒரு பத்துக்கு பத்து அறை. அதில் அவற்றை ஒட்டி ஒரு சிறிய மரபீரோ, பீரோவுக்கு மேல் மதுரை வீரன் சாமி கையில் அரிவாளோடு இருக்கும் ஒரு கறுப்பு வெள்ளை புகைப்படம் சட்டம் போட்டு மாட்டப் பட்டு அதற்கு ஒரு கிள்ளுப் பூவும் வைக்கப்பட்டிருந்தது. பீரோவை ஒட்டி தரைப்பரப்பில் ஒரு ஆசன பலகையும் பலகைக்கு முன்னால் ஒரு கணக்கு பிள்ளை சாய்வு மேசையும் இருந்தது. அதற்கும் முன்னாலே இருபக்கத்து சுவற்றை ஒட்டியும் அமர்ந்து கொள்ளத் தோதாக ஒரு மீட்டர் நீளத்துக்கு பாய் ஒன்றும் விரிக்கப்பட்டிருந்தது.

அது தான் சுந்தரம் பிள்ளையின் அலுவலக அறை. ஜோதிடம் பார்க்க வருகின்றவர்கள் பாயில் உட்கார்ந்து கொள்ள, ஜாதக நோட்டை பிரித்துக் கொண்டு அதை சாய்வு மேசைமேல் வைத்து பார்த்தபடியே

சுந்தரமும் ஜோதிடம் சொல்வார்.

நடுநடுவே ரத்தினம் பட்டணம் பொடியை ஒரு சிட்டிகை ஏற்றிக் கொள்வார். கிறு கிறுவென்று படுசுள்ளாப்பாக இருக்கும். அன்றைக்கும் இரண்டு பேர் ஜோதிடம் பார்க்க வந்திருந்தனர். அவர்களுக்குச் சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு பொடி போட்டபடி அறையை விட்டு வெளியே வந்தவர் எதிரில் வீட்டு வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது.

குதிரை வண்டிகள் எப்பொழுதோ வழக்கொழிந்து விட்ட போதிலும் ஒன்றிரண்டு இருந்து கொண்டு அவை ஒடுவது ஆச்சரியமில்லை. அதில் பயணம் செய்ய இன்னும் சிலர் விரும்புவதுதான் ஆச்சரியம். அப்படி வந்து நின்ற குதிரை வண்டிக்குள் இருந்து சபரி மலைக்கு மாலை போட்ட தினுசில் ஒருவர் இறங்கினார். அவரோடு ஒரு மரப்பெட்டியும் வண்டியில் இருந்து இறங்கியது.

வண்டிக்காரன் பணத்தை வாங்கிக் கொண்டு விலகவும், அந்தப் பெட்டியை தூக்க மாட்டாதபடி தூக்கிக் கொண்டு அவர் சுந்தரம் பிள்ளை முன் வந்து பெட்டியை யும் கீழே வைத்தார். முகத்தில் அதீதமான பயணக்களைப் பும் தெரிந்தது.

"ஐயா நீங்க தானே ஜோசியக்கார சுந்தரம் பிள்ளை”

"ஆமாம், நானே தான்!”

“நான் வைத்தீஸ்வரன் கோவில்ல இருந்து வரேன். என் பேர் வரதன்!”

“நல்லது இது என்ன பெட்டி?”

“இது சுவடிப் பொட்டிங்க”

“சுவடிப் பொட்டியா?”

“திறந்து பாருங்க தெரியும்” என்றபடியே அவரே திறந்து காட்டினார். உள்ளே கட்டுக்கட்டாக பனை ஏட்டுக் கட்டுகள். திறந்த மாத்திரத்தில் ஒரு கசட்டு வாசம் வேறு. .திரும்பவும் பொட்டியை மூடியவர் “கொஞ்சம் உள்ற போய் உக்காந்து பேசலாங்களா?” என்று கேட்கவும் சுந்தரம் பிள்ளையும் தனது அறைக்குள் அவரை அழைத்துச் சென்றார். அந்த மரப்பெட்டியோடு அவரும் அறைக்குள் நுழைந்து பெட்டியை வைத்துவிட்டு உள்ளேமரபீரோ மேல் இருந்த மதுரை வீரன் சாமி புகைப்படத்தைப் பார்த்து “அப்பாடா. சாமி இருக்காரு. நான்சரியான

விலாசத்துக்குதான் வந்துருக்கேன்” என்றார்.

“நீங்க என்ன சொல்றீங்க?”

“சொல்றேன்யா... விவரமாவே சொல்றேன். கொஞ்சம் குடிக்க தண்ணி கிடைக்குமா?”

“இருங்க எடுத்துகிட்டு வரேன்’ சுந்தரம் பிள்ளை எழுந்து உள்ளே போனார்.

“யாரது பெரிய பொட்டியோட...?” உள்ளே நல்லம்மை தேங்காய் துருவிக் கொண்டிருந்தாள். அப் படியே தலையை நிமிர்த்தாமலே கேட்டாள்.

“யாருக்கு தெரியும். வைத்தீஸ்வரன் கோவில்ல இருந்து வந்துருக்காரு. அம்புட்டு தான் தெரியும். குடிக்க தண்ணி கேட்டாரு எங்க சொம்பு?”

“பானைக்கு பக்கத்தாலையே இருக்குபாருங்க” சுந்தரம்பிள்ளை தண்ணிரை சொம்பில் நிரப்பிக் கொண்டு திரும்பிச் சென்றபோது தனஞ்ஜெயன் வீட்டுக்குள் நுழைந் தான்.

“உங்கம்மா சவுண்டக் கொடுக்கவும் வெளிய ஒடிட்டு இப்ப தான் வர்றியாக்கும்!” என்று கேட்டபடியே தன் அறைக்குள்ளே நுழைந்தவருக்கு பகீர் என்றது.

தண்ணீர் கேட்ட மனிதர் பொட்டி மேல் அப்படியே சரிந்து விழுந்திருந்தார்.

“என்னய்யா இது தண்ணி கேட்டுட்டு இப்படி விழுந்து கிடக்கறிங்க..” என்றபடியே சுந்தரம் பிள்ளை அவர் தோளைத் தொடவும் பொட்டி மேல் சரிந்திருந்தவர் மேலும் சரிந்து பாயின் மேல் விழுந்தார்.

பதறிப் போய் கொண்டு வந்த தண்ணிரை முகத்தில் அறைந்து எழுப்ப எல்லா முயற்சியும் செய்துவிட்டு இறுதியாக மார்புப் பக்கம் காதை வைத்து பார்த்தபோது தான் அவர் மரணித்து விட்டிருப்பது தெரிந்தது.

3

“உலகில் எவ்வளவோ மொழிகள்**... 1600** மொழிகள் பேசப்படுவதாக ஒரு புள்ளி விபரக் கணக்கு கூட உள்ளது**.** இவைகள் அவ்வள விற்கும் லிபி வடிவான எழுத்துக்கள் உள்ளனவா என்றால் அது தான் இல்லை**.**

ஒரு முப்பது சதவிகிதத்துக்குத்தான் எழுத்து வடிவம் இருக்கிறது. அதில் தமிழுக்குதான் பெருவாரியான சிறப்புக்கள் இருக்கின்றன. தமிழிற்கு இணையாக சமஸ்க்ருதமும் கருதப்படுகிறது. சமஸ் க்ருதத்தில்தான் வேதங்கள் உள்ளன. வேதங்களே உலகின் தலையாய நூல் என்றும் கூறப்படுகிறது. மொழிகளுக்குள் சென்றால் இப்படி எது பெரியது எது சிறியது என்று சிந்திக்க அனேக விஷயங்கள் இருக்கின்றன.

மொழிகளிலேயே கோட்டு மொழி என்று ஒன்றும் இருக்கிறது. இந்த கோட்டு மொழிதான் மொழிகளி லேயே தலையானது என்றும் கூறலாம். ஏன் என்றால் கோட்டு மொழியைக் கற்கவும், பின் புரிந்துகொள்ளவும் மிகவும் ஞானம் வேண்டும். அது மட்டுமல்ல... இந்த கோட்டு மொழிக்குள் ஒருவர் கற்பனையையோ தன் விருப்பங்களையோ புகுத்த முடியாது. இது ரகசிய மானது. ரகசியத்துக்கு காரணமான தத்துவங்களை தனக்குள்ளே ஒளித்து வைத்துக் கொண்டிருக்கும் ஒன்றாகும். இதை உணர மொழி மதம் என்று தடைகளும் கிடையாது. ஞானம் இருந்தால் போதும். ஆனால் ஞானம் என்பதே இறையருளின் இன்னொரு வார்த்தைதானே?"

*****

சுந்தரம் பிள்ளைக்கு உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிட்டது. தன்னைப் பார்க்க வந்த ஒருவர் தான் யார், என்ன பெயர் என்று கூடக் கூறாமல் இறந்தே போய் விட்டதில் அவருக்குள் தடுமாற்றங்கள் வேறு.

“எலே தனா... நல்லம்மை...” என்று மகன், மனைவி இருவரையும் கூவி அழைத்தார். அணிந்திருந்த சட்டையை கழற்றி ஆணியின் மூக்கில் மாட்டியபடி இருந்த தனஞ்ஜெயனும் குரல் கேட்டு தான் அணிந்திருந்த வேட்டி பனியனோடு வாசற்புறமுள்ள அவரது அறை முன் வந்து நின்றான்.

தரைமேல் கிடக்கும் அந்த மரப்பெட்டிக்காரரையும் ஆச்சரியத்தோடு பார்த்தான்.

“என்னவே பாக்குறே. என்னை பாக்கவந்தவன் சுருண்டுட்டான்! உசுர் இருக்குதா போச்சுதான்னும் தெரியல. இந்த ஆள் ஏறி வந்த குதிரை வண்டி இங்கண தான் எங்கிட்டாச்சும் இருக்கும். அந்த குதிரை வண்டிக் காரனை பிடிச்சு இழுத்துகிட்டுவா. அப்படியே நம்ம சித்த வைத்தியர் நடராஜனையும் கையோட பிடிச்சி இழுத்து கிட்டுவா... இன்னிக்கு எந்த நேரத்துல கண்ணு திறந்தேனோ தெரியலையே?’ என்று சுந்தரம்

பிள்ளை படபடத்தார்.

அடுத்த அரைமணியில் தனஞ்ஜெயனும் குதிரை வண்டிக்காரனோடும் கூடவே வைத்தியர் நடராஜனோடும் வந்து சேர்ந்தான். குதிரை வண்டிக்காரன் எட்டிப் பார்த்து விட்டு அடி ஆத்தி, என்று கையை உதறி கொண்டான். வைத்தியரும் உயிர் பிரிந்து விட்டதை ஊர்ஜிதம் செய்தார்.

“யாருய்யா இது. மாரடைப்புல போய் சேர்ந்துட் டான் போல இருக்கு.”

“அதுதானே தூங்கிகிட்டு இருக்கும் போது கூட வரும்... ஏ.., குதிரை வண்டி... வாய்யா இப்படி? இந்த ஆளை உனக்குத் தெரியுமா?”

“எனக்கென்னங்க தெரியும். ஜங்ஷன் பக்கமா சவாரிமுடிஞ்சு வந்துகிட்டிருந்தேன். திருப்பரங்குன்றம் போகணும்வருமான்னு கேட்டாரு. ரொம்பதுரமாச்சுங்களே இரு நூறு ரூபா ஆகும்னேன். இந்தா பிடின்னு அப்பவே பணத்தை கைல கொடுத்துட்டாரு. மத்தபடி இவரைப் பத்தி எதுவும் தெரியாதுங்க”.

“உன் கூட வாரைல எதுவும் பேச்சு கொடுக்கலியா?”

“பேசுனாருங்க. நான்தான் மரப்பொட்டிக்குள்ள என்ன இருக்குன்னு கேட்டேன். ஏன்னா குதிரை இழுவைல ரொம்ப கஷ்டப்பட்டுச்சு. உள்ளேயும் பாரமா ஏதாச்சும் இருக்கணும்னு நினைச்சு கேட்டேன். ஆனா அம்புட்டும் ஏட்டுக்கட்டுங்கன்னாரு..! அப்படியே ஜோசியர் சுந்தரம் பிள்ளை ஊட்டுக்கு போகணும்னு சொன்னதை வெச்சு நீங்களும் ஜோசியிருங்களான்னு கேட்டேன். ஆமாம் நான் ஒரு நாடி ஜோசியன்னார்.”

“நாடி ஜோசியர்னா சொன்னாரு?”

“ஆமாங்க... நான் கூட எனக்கு நாடி ஜோசியம் பாக்க எம்புட்டு செலவாகும்னு கேட்டேன். சிலருக்கு அரை யணாக்கும் படிப்போம். சிலருக்கு ஆயிரத்துக்கும் படிப்போம். எங்க சம்பளம் எவ்வளவுங்கறது எடுக்கற நாடியிலையே தெரிஞ்சிடும்னாரு. எனக்கு ஆச்சரியமா போச்சு... அட என்னங்க நீங்க... எங்க ஊர்ல நாடி பாக்க இவ்வளவுவோன்னு எழுதியே போட்டுருக்காங்க நீங்க இப்படி சொல்றீங்களேன்னேன்... அதெல்லாம் சித்தனுங்க எழுத்தா இருக்கும். என்கிட்ட இருக்கறது சக்தி நாடின் னாரு.”

“இவ்வளவு சொல்லியிருக்காரு. எதுவுமே தெரியா துன்னு

சொல்றியேய்யா...?”

“இதெல்லாம் தெரிஞ்சு என்னங்க பிரயோசனம்...? இவர் யார் பேர் என்னங்கறதுதானேங்க முக்கியம்.”

“அது வாஸ்தவம்தான். இதாபார் சுந்தரம் நீ போய் போலீஸை பார்த்து விபரத்த சொல்லு. இதுல நாம செய்யறதுக்கு எதுவும் இல்லை. மிச்சத்த அவங்க பாத்துப் பாங்க” என்றார் வைத்தியர்.

தனஞ்ஜெயன் மலங்க மலங்க பார்த்தபடி இருந்தான். இறந்து கிடந்த மனிதரின் சட்டைப் பாக்கெட் புடைப் போடு இருந்தது. சட்டென்று குனிந்து பாக்கெட்டில் கையை விட்டு உள்ளிருந்த அவ்வளவையும் வெளியில் எடுத்தான். சில ரூபாய் நோட்டுகள். கொஞ்சம் சில்லறை இதுபோக ஒரு குட்டி பாக்கெட் டைரி, ரயில் டிக்கெட் ஒன்று மாயவரத்தில் எடுக்கப்பட்டிருந்தது. அதுபோக ஒரு சிகரெட் அட்டையில் சுந்தரம்பிள்ளை வீட்டு முகவரியுடன் காணப்பட்டது. அதே சமயம் செல்போன் சிணுங்கும் சப்தமும் கேட்டது. அது அந்த மனிதரின் இடுப்பு பாகத் தில் இருந்து கேட்கவும் தனஞ்ஜெயனுக்கு புரிந்துவிட்டது. வேகமாக வெளியில் எடுத்து காதைக் கொடுத்தான்.

“ஹலோ...”

“வரதா, நான் நீடாமங்கலம் வேணு பேசறேம்பா.” “நான் வரதன் இல்லைங்க. என்பேர் தனஞ்ஜெயன். இந்த செல்போனை வெச்சிருந்தவர் இறந்துட்டாரு நீங்க கூப்பிடவும் எடுத்தேன்.”

“என்னது வரதன் செத்துட்டானா... என்னங்க சொல்றீங்க?”

“ஆமாங்க. மதுரைல இருக்கற எங்க வீட்டுக்கு எங்க அப்பாவை பாக்க வந்த இடத்துல மாரடைப்புல இறந்துட் டாருங்க. இவர் யாரு பேரு என்னன்னு கூட தெரியாம அல்லாடிகிட்டிருந்தோம். நல்ல வேளையா நீங்க போன் பண்ணிங்க. இவர் பேர் வரதனுங்களா?”

“ஆமாங்க. வரதன் என்கிட்டேயும் மதுரைக்குப் போகணும். சுந்தரம்பிள்ளை ஜோசியர்கிட்ட அம்புட்டு ஏடுங்களையும் ஒப்படைச்சிடணும் என் கணக்கு சீக்கிரம் முடியப்போகுது. அவர்கிட்ட ஒப்படைக்கச் சொல்லி ஏடும் வந்துடிச்சின்னான். அப்படியே நடந்துடிச்சே..!"

“அது சரிங்க. இவருக்கு குடும்பம் குட்டின்னு யாரும் இல்லைங்களா?”

“இல்லைங்க. இந்த வரதன் கதையே ரொம்ப சோகமானதுங்க. நாகப்பட்டினத்துல குடும்பத்தோடுஇருந்துகிட்டு நாடி ஜோசியம் பாத்துகிட்டிருந்தான். சில வருஷம் முந்தி வந்த சுனாமில வரதனோட பொண்டாட்டி புள்ளைங்க அவ்வளவு பேரும் செத்துட்டாங்க. ஒரு ஆச்சரியம் என்னன்னா பொண்டாட்டி புள்ளைங்க தன்னை விட்டு இன்னும் ஒரு வாரத்துல போயிடுவாங் கன்னு அவன் என்கிட்ட சொன்னது இப்ப கூட எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. அதுக்கு காரணம் கூட அவன் கிட்ட இருந்த சுவடிங்கதான்! சக்தி உபாசகர் ஒருத்தர் எழுதினது அது. இப்ப வரதன்கிட்ட இருந்து உங்கப்பா கைக்கு வந்துருக்கு. அந்த மரப்பொட்டியே ஒரு சாமி மாதிரிதான். ருத்ராட்ச மரத்தோட தண்டுல செஞ்ச பொட்டி அது.”

“அது எதால ஆகியிருந்தா என்னங்க... இப்ப இவரை என்னங்க பண்றது. பாடியை போலீஸ்ல ஒப்படைச் சுடவா..?”

"ஐயோ வேண்டாங்க. வரதனுக்கு நான் ரொம்பவே கடமைப்பட்டுருக்கேன். ஒரு நண்பனா நானே அங்க வந்து அங்கையே சுடுகாட்டுல வெச்சு காரியத்த செஞ்சுடறேன். அதுவரை உடம்பை பாத்துக்குங்க. அது போதும்.”

"நீங்க வர எப்படியும் பல மணி நேரம் ஆகும் இங்க அதுவரை எப்படிங்க வெச்சுகிட்டு இருக்கறது. அக்கம் பக்கம் என்ன நினைப்பாங்க?"

"ஐயா... அவரை உங்க அண்ணனாவோ தம்பியாவோ நினைச்சுக்குங்க. புண்ணியமா போகும். எப்ப அந்த பாட்டி உங்ககிட்ட வரணும்னு விதியிருக்கோ அப்பவே உங்களுக்கும் அவருக்கும் ஒரு கணக்கு இருக்கறதாதான் நான் நினைக்கறேன். இது ஏதோ விட்ட குறை. தொட்ட குறை. கொஞ்சம் புரிஞ்சிகிட்டு பிணத்தை வெச்சிருங்க நான் ஒரு வாடகை கார் பிடிச்சு அதிகபட்சம் அஞ்சு இல்ல ஆறு மணி நேரத்துல மதுரை சுடுகாட்டுக்கே வந்துட்றேன்" என்ற அந்த நபர் அத்தோடு போனையும் கத்ததரித்துக்கொண்டார்.

தனஞ்ஜெயனும் காதில் இருந்து போனை விலக்கி னான். முகத்தில் சிந்தனை ரேகைகள். சுந்தரம் பிள்ளை படபடக்க ஆரம்பித்தார்.

“எலே, தனா... யாருடா போன்ல. என்ன சொன்னTங்க?

“பேசுனவர் இறந்து போன இவரோட நண்பர்ப்பா!பேர் கூட வேணுவோ கீனுவோ. சரியா ஞாபகம் இல்ல.ஆனா இவர் பேர் வரதன். இவர் ஒரு நாடி ஜோசியர்.இவருக்கு குடும்பம் குட்டின்னு

யாருமில்லையாம். இருந்த வங்கல்லாம் நாகப்பட்டினத்துல சுனாமி வந்தப்ப அதுல சிக்கி இறந்துட்டாங்களாம்.

இவரும் சீக்கிரமா இறந்துடுவார்னு இவருக்கு முந்தியே தெரியுமாம். அதோட இந்த மரப்பொட்டில இருக்கறது சக்தி நாடியாம். இது நம்ம கைக்கு வரணுங்கறது தான் விதியாம்."

"அதெல்லாம் சரிடா. இப்ப இந்த பொணத்தை போட்டுகிட்டு என்னத்தடா பண்ண. அதை கேட்டியா?"

"என்னப்பா நீங்க... உங்க எதிர்லதானே கேட்டேன். அந்த வேணுங்கறவர் ஒரு அஞ்சாறு மணி நேரத்துல கிளம்பி வந்துட்றாராம். அதுவரைக்கும் பாடியை நம்ம கிட்டயே வெச்சுக்க சொல்றாரு. உங்க அண்ணனாவோ தம்பியாவோ நினைச்சுக்குங்கன்னு சொல்றாருப்பா."

"இது வேலைக்கு ஆகாது. சரியான ஏழரையாப் போச்சே. வைத்தியரே என்னய்யா பண்ணலாம்?"

"நான்தான் சொன்னேன்ல. போலீசுக்குப் போய் முதல்ல தகவலைக் கொடுங்க. இல்லாட்டி பின்னால வில்லங்கம் எப்படி வேணா வரலாம். நீங்களே கொன் னுட்டு அவசர அவசரமா எரிச்சிட்டீங்கன்னு யாராச்சும் சொன்னா என்ன பண்ணுவீங்க?" வைத்தியர் பீதியைக் கிளப்பினார்.

"அப்ப சரி... எலேய் தனா தேரடிகிட்ட சுமை தூக்கறவங்க இருப்பாங்க. அவங்கள கூட்டிகிட்டுவா.உடம்பை தூக்கி வெளியே போடுவோம். நான் போய் போலீசை பாத்துட்டு வரேன்..."

சுந்தரம்பிள்ளைக்குள் பிணம் என்கிற அருவருப்பு தான் பிரதானமாய் வேலை செய்தது. சொன்ன வேகத்தில் புறப்பட்டவர் காலும் வாசல்படியில் மோதி நொடியில் நகம் பிய்த்து ரத்தம் பீறிட ஆரம்பித்தது.

"அய்ய நீங்க எங்கேயும் போக வேணாங்க. உள்ள வாங்க. புறப்பட்ட நேரமே சரியில்லை..." என்று அரற்றி னாள் நல்லம்மை. அதை பார்த்த வைத்தியர் "சுந்தரம் நீ இரு. போலீசுக்கு நான் தகவல் தரேன். வீட்டுவாசல்ல பொணத்தை போட்டு ஊரைப் பேச வெச்சுடாதே. இந்தமாதிரி விசயத்துல ரொம்ப சூதானமா நடந்துக்கணும்"என்றபடி அவர் புறப்பட்டு போனார்.

சுந்தரம் பிள்ளை உள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்து விட நல்லம்மை மஞ்சள் பத்து போடத் தொடங்கினாள்.

“காலைல அவனோட தகராறு. இப்ப புதுசா ஒரு சிக்கலு. எங்க இருந்துதான் எனக்குன்னே வருதோ?” என்று அவளிடமும் முணுமுணுப்பு.

தனஞ்ஜெயன் இறந்து கிடக்கும் வரதன் என்கிறவனின் உடம்பைப் பார்த்தான். கண்களை மூடிக்கொண்டு தூங்கு வது போலத்தான் இருந்தது. ஆனால் நிரந்தர தூக்கம். அன்றாட தூக்கம் என்பது மரண ஒத்திகையோ? அந்த நிலையிலும் தனஞ்ஜெயனிடம் கேள்வி. வெளித்திண்ணை வில் பிணத்தை ஒரு சீராக கிடத்தி கட்டியிருந்த வேட்டியை இழுத்துச் சரிசெய்தான்.

அப்படியே நிமிர்ந்து பார்த்தான். உள்ளே அந்த மரப்பொட்டி. அதைக் கொண்டுவரப் போய் தானே இந்தப்பாடு?

மெல்ல அருகே சென்றான். பொட்டிக்கு பூட்டெல் வாம் இல்லை. திறந்தான். ஒரு வித வாசம் மூக்கைச் சினுப்பியது. உள்ளே ஏராளமான சுவடிக் கட்டுகள்.கைக்கு வந்த ஒன்றை எடுத்து பிரித்தான். மிகப் பழமையான ஓலைக் கட்டு.

முதல் ஏட்டின் மேல் ‘மகாதேவி க்ருபை' என்னும் எழுத்துக்கள். அந்த ஏட்டை விலக்கி அடுத்த ஏட்டை பார்த்தான்.

“கேளப்பா தனஞ்ஜெயா!

பாரப்பா வாசலிலோர் பிரேதம்...

சேரப்பா அதனையும் எரிமயானம்

கூறப்பா இவன் எனக்கு பங்காளி!

ஆதி கடன் இதுவும் உன்னாலே தீருங்கால்

அந்தாதி நூறும் நீ சொல்ல ஏலும்.

நூறதனை நீ சொன்ன பின்னாலே வாழ்வுக்

கூறதனை அடுக்கடுக்காய் அறிவாயே

சுந்தரம் பெற்ற எந்திரனே..!”

என்று இருந்தது. படிக்கப் படிக்க தனஞ் ஜெயனின் இதயமும் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் வேகமாகத் துடித்தது!

4

‘கோட்டுமொழி எனப்படுவது இறை மந்திர மொழி யாகும். மந்திரத்தை அந்த நாளில் பனை ஏடுகளில் எழுதினர். இப்படி எழுதப்படுவது அழியாமல் இருந்து, படிக்க முடிந்தவர்களுக்கு மட்டுமே பயன்பட்டது. ஆனால், ஒரு மந்திரம் என்பது இந்த உலகின் எல்லா ஜீவராசிகளுக்கும் பயன்படவேண்டும். அவர்களை இன்பமாக வாழ்விக்கச் செய்ய வேண்டும். மந்திரத்தைப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் அது பயன்பட என்ன வழி என்று சிந்தித்தே சான்றோர்கள் சக்கரங்களை கண்டறிந்தார்கள்.

சக்கரம் என்றால் ஒரு புள்ளியில் நிற்பது. எல்லா கோணங்களையும் தடையின்றி பார்க்கவல்லது. சக்தி அதனுள் பாயும்போது தடையின்றிச் சுழல்வது.

இந்த சக்கரம்தான் எந்திர உலகிலும் புரட்சிக்கு வித்திட்டது. சக்கரம் கண்டறியப்பட்ட பின்பே மனிதன் பெரிதும் வளரத் தொடங்கினான். சக்கரங்களாலேயே வாகனங்கள், எந்திரங்கள் தோன்றின. பொறியியல் எனும் ஒரு புதிய இயலே உருவானது.

சக்கரம் என்பது ஒரு பக்கம் பொறியியலுக்கு பயன்பட்டதைப்போலவே அது அருளியலுக்கும் பயன் படுத்தப்பட்டதில்தான் அது மேலானதாகியது. இந்த அருளியல் சக்கரங்களில்தான் கோட்டு மொழி பயன் படுத்தப்படுகிறது. இந்த மொழிக்குள்தான் மந்திரங்கள் உள்ளன. இந்த மந்திரங்களே கோட்டுமொழி வாயிலாக சக்கரங்களை சக்திக் கோடடைகளாக ஆக்குகின்றன!

எப்படி?

*****

துடித்த இதயத்தை அடக்கிக் கொண்டு ஆச்சரியத் தோடு திரும்ப அந்த ஏட்டைப் பார்த்தான்.

‘கேளப்பா தனஞ்ஜெயா...

பாரப்பா வாசலிலோர் பிரேதம்

சேரப்பா அதனையும் எரிமயானம்

கூறப்பா இவன் எனக்கு பங்காளி..!’

என்று அந்த வரிகளைத் திரும்ப படித்தவனுக்கு தலை சுற்றாத குறை. அகஸ்மாத்தாக கையில் எடுத்த ஒரு ஏட்டில் தன் பெயர் பெயரைத் தொடர்ந்து வரும் வரிகளோ அப்போதைய நிலையை அப்படியே எதிரொலிக்கின்றன!

இதெல்லாம் என்ன?

இதெல்லாம் எப்படி..?

தனஞ்ஜெயனுக்குள் ஆச்சரியம் ஒரு குதிரை போல ஓடத் தொடங்கியது. அப்படியே ஏட்டின் அடுத்தடுத்த ஏடுகளுக்குள் நுழையத் தொடங்கினான்.

‘ஆதிசக்தி வாழ்க... அன்னை திருவடி வாழ்க

ஜோதிச்சுடரொளியாம் ஒற்றி ஊர் தேவி வாழ்க...

மேதினியில் பிலவத்தில் பின்னேகிய பல்குனியில்

மாமதுரை மீனாட்சி சாகரத்தில், முன்வினையால்

உத்தரம் உதித்த சுந்தரம்பிள்ளை இவனும்

சித்திரை நாளில் இத்தரை எழுவானே..!”

என்று அந்தப்பக்கத்திலும் ஆறுவரியில் பாடல் வரிகள். அவன் அதைப் பார்த்தபடியே இருக்கையில், சற்று கெந்திக் கெந்தி நடந்து வந்தவராக பின்னாலேயே வந்து நின்றார் சுந்தரம்பிள்ளை.

தனஞ்ஜெயனும் திரும்பிப் பார்த்தான்.

உள்ளங்கையில் ஏடுகள்!

“என்னப்யா பண்றே!”

“அப்பா... பொட்டியில என்ன இருக்கு பாத்தேன். அம்புட்டும் ஏடுங்க. எடுத்துப் பிரிச்சா அப்படியே என்னப் பத்திச் சொல்லுது!”

“நெசமாவா!”

“பாருங்கப்பா”

அவரும் வாங்கிப் பார்த்தார். அப்போது அவர்களோடு நல்லம்மையும்

வந்து சேர்ந்துகொண்டாள்.

சுந்தரம்பிள்ளை கண்ணாடியை தேடி எடுத்து அணிந்துகொண்டு படிக்கத் தொடங்கினார். படித்து முடித்துவிட்டு நெற்றியை சுருக்கிக் கொண்டு வெகுவாக யோசித்தார்.

“என்னங்க?”

“ஒண்ணுமில்ல நல்லா... நானே ஊருக்கு ஜோசியன். இங்க எனக்கே ஜோசியம் சொல்லுது இந்த நாடி...”

“என்னன்னு?”

“விரிவா பாத்தால்ல தெரியும். குதிரை வண்டிக்காரன் சொன்னது சரிதான். இது சக்தி நாடி! ஜோசியமோ, நாடியோ பொணம் கிடக்கும்போது பாக்கக் கூடாது. ஆனா, இதை பாக்கப் போய்த்தான் இந்த பொணம் நம்ம பங்காளின்னு தெரியவருது. காரணமில்லாம காரியமில் லேன்னு பெரியவங்க சொல்லுவாங்க. வீட்டு சுவத்துல பல்லி அடிக்கறதுல இருந்து, வெளிய மரத்துல காக்கா கத்துறது வரைக்கும் சரியான காரணகாரியம் இருக்கு. இதை ஒரளவு உணர்ந்தவன்தான் நானும். அப்படி இருக்க இந்த ஆள் இங்க வந்து செத்ததுக்கும் காரணம் இருக் கணும். அதுல நமக்கு ஒரு சம்பந்தம் இருக்கணும். இதை நான் யோசிக்கத் தவறிட்டேன் பார்... ஹூம்! கெரகம் பிடிச்சு ஆட்டும்போது எல்லாருமே ஆடித்தான் போயிட்றோம்...” மிக விரக்தியாகவும் ஆழ்ந்த தாக்கத்தோடும் பேசினார் சுந்தரம்பிள்ளை.

“என்ன பேசிறீங்கன்னே புரியல...” என்றாள் நல்லம்மை.

“நீ எல்லாம் ஜோசியக்காரன் பொண்டாட்டின்னு வெளியே சொல்லிக்காதே. சுருக்கமா சொல்லிக்கறேன்.இங்க வந்து செத்துப்போன வரதன்ங்கறவன் எனக்கு பங்காளி... என் அப்பா வழி சொந்தம்! போதுமா?”

“இவ்வளவு நேரம் தெரியாத சொந்தம் இப்ப மட்டும் எப்படிங்க தெரிஞ்சுச்சு...?”

“தொண தொணன்னு கேள்விய கேட்காம வீட்டு பூஜை அறைல விளக்கு எரிஞ்சு கிட்டிருந்தா அதைக் குளிரவை. யப்பா தனஞ்ஜெயா... அந்த உடம்பை இரண்டு பேருமா தூக்கி உள்ள போடுவோம் வா...”

“அப்பா..!”

“என்ன அப்பா? இந்த நாடியை பொறவு படிக்கலாம். இப்ப செய்ய வேண்டியது எழவு காரியம்” என்றபடியே வாயில்புறம் சென்றார். தனஞ்ஜெயனும் குழப்பத்தோடு சென்றான். இருவருமாக தொட்டுத் தூக்கி வந்து ஹாலில் கிடத்தினர்.

தலை வடக்கிலும், கால் தெற்கிலுமாக இருக்கும்படி கிடத்திவிட்டு வாசலில் நெருப்பு போடும் முயற்சியிலும் அவர் இறங்கினார்.

அவர் பாதி படித்த அந்த நாடி ஏடுகள் அந்த பொட்டிக்குள் பழையபடி அடங்கி மூடிவைக்கப்பட்டு விட்டது. அப்பாவிடம் ஏற்பட்ட மாற்றம் அவனுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது. அதைவிட ஆச்சரியமாக அந்த ஏடுகள்! அதில் வந்த தன் பெயர்!

‘கேளப்பா தனஞ்ஜெயா...

பாரப்பா வாசலிலோர் பிரேதம்

சேரப்பா அதனையும் எரிமயானம்

கூறப்பா இவன் எனக்கு பங்காளி..!’

ஆதிகடன் இதுவும் உன்னாலே தீருங்கால்

அந்தாதி நூறும் நீ சொல்ல ஏலும்...

அந்தாதி நூறும் நீ சொல்ல ஏலும்...

அந்தாதி நூறும் நீ சொல்ல ஏலும்!”

தனஞ்ஜெயனின் மனதுக்குள் அந்த நாடிப்பாடல் கீரல் விழுந்த ரெக்கார்டு போல் திரும்பத் திரும்ப ஒலிக்கத்தொடங்கியது. ஏற்கனவே அபிராமி அந்தாதியை சொல்லசொன்ன அந்த மலைச்சாமியாரும் இப்போது அவன்மனதுக்குள் முண்டி வந்து நின்றார்.

சற்றுமுன் சந்தித்தபோது கூட அந்தாதியை முழுவதுமாக சொல். பிறகு, உனக்கு எல்லாம் தானாகப் புரியும்என்பதுபோல பேசியதும் நினைவுக்கு வந்தது.

‘நூறதனை நீ சொன்ன பின்னாலே

வாழ்வுக் கூறதனை அடுக்கடுக்காய்அறிவாயே

சுந்தரம் பெற்ற எந்திரனே!’

என்று பாடலின் அடுத்த மூன்று வரிகளும் நினைவுக்கு வந்தது. மலைச்சாமியாரும் விஷயம் தெரிந்தவர்தான். போலியான டுபாக்கூர் சாமியார் இல்லை என்று அவ னுக்குள் தோன்றத் தொடங்கியது.

நெற்றியில் சுருக்கம் விழ யோசித்தபடி நின்றவனிடம் டேய் தனா... போய் ஒரு மாலை வாங்கிட்டு வாப்பா... பொணத்தை இப்படி கட்டையா கிடத்தக் கூடாது. சவமும் சிவமும் ஒண்ணும்பாங்க...” என்று தனஞ்ஜெயனை கலைத் தார் சுந்தரம்பிள்ளை.

தனஞ்ஜெயனும் சிந்தனை குன்றாதபடி தெருவில் இறங்கினான்!

கோவில் வாசலில் பூக்கடை!

கூட்டம் கட்டி ஏறிக்கொண்டிருந்தது.

ஒரு கடை வாசலில் டூ வீலர் ஒன்றை நிறுத்த வந்தவரிடம் எங்கிருந்தோ வந்த ஒருவர் டோக்கன் போடப் பார்த்தார். ‘தெருவுல நான் வண்டிய நிறுத்த உனக்கு எதுக்குய்யா பணம் தரணும்’ என்று அவரும் ஆரம் பித்தார்.

“கான்ட்ராக்ட் எடுத்துருக்கோம்ல?”

“உன்னை நானா எடுக்கச் சொன்னேன். கவர்மென்ட் ரோட்டுக்கு நீ என்ன கான்ட்ராக்ட் எடுக்கறது?”

“நான் எடுக்கல... மாநகராட்சில ஏலம் விட்றாங்க எடுக்கறோம்...”

“அட கொடுமைக்காரங்களா... ஒரு அஞ்சு நிமிசம் வண்டிய நிறுத்திட்டு அப்படி போயிட்டுவரதுக்கு காசாடா. இந்த நாடு வெளங்குமாடா?”

“வெளங்காமதான் டுர்டுர்னு வண்டில போறிங்க ளாக்கும்?”

திருப்பரங்குன்றம் கோவில் வாசலில் தினமுமே இந்த சர்ச்சைதான்!

போதாக்குறைக்கு தெருமுழுக்க கல்யாணமண்டபங் கள். அவ்வளவிலும் ஸ்பீக்கர் அலறிக் கொண்டிருந்தது. அமைதி என்ற வார்த்தையையே அறியாதவர்கள் மட்டுமே அங்கே குடி இருக்க முடியும் என்று தோன்றியது. ஆனாலும் நூற்றுக்கு தொண்ணூறு பேரிடம் எந்த எதிர்ப்பும் இல்லை. இப்படித்தான் இந்த இடம் இருக்கும். இதற்கு நடுவில்தான் வாழவேண்டும் என்று அவர்கள் முடிவுக்கு வந்ததுவிட்ட மாதிரியும் இருந்தது. இவர்களுக்கு நடுவில் ஏராளமான பிச்சைக்காரர்கள்!

இத்தனை அதர்மத்துக்கு நடுவில் கொஞ்சம் போல் தர்மமும் இருந்தாலன்றி இவர்கள் எப்படி உலவ முடியும்! மொத்தத்தில் முருகனின் முதல் படைவீடு தவறான புரிதலோடு படைக்களம் போலவே ஆகிவருவதுதான் கொடுமை. இதை எல்லாம் பார்த்துப் பார்த்து தனஞ்ஜெய னுக்கு அலுத்துவிட்டிருந்தது. மாலை வாங்க கடைப்பக்கம் வந்து நிற்பவனை கடைக்காரனும் வெகு ஆச்சரியமாகப் பார்த்தான்.

“என்னப்பா... இந்த பக்கமே வராம மலை மேலயே கிடப்பே... அதிசயமா வந்துருக்கே?”

“ஆமாய்யா... ஒரு மாலை கொடு.”

“மாலை கொடுன்னா... எந்த மாலை?”

“பொணத்துக்கு எந்த மாலையா இருந்தா என்னய்யா?”

“அடக்கெரகமே, யாரு மண்டய போட்டது?”

“என் அண்ணாத்தேன்னு வெச்சுக்கேயேன்.”

“என்ன ஹார்ட் அட்டாக்கா இல்ல... சக்கரை கோளாறா?”

“மாலையை வாங்கணும்னா இதை எல்லாம் சொல்லணுமா?”

“என்னப்பா நீ... ஒரே ஊர்க்காரன்னு கேட்டாக்கா?”

“ரொம்பத்தான் ஊர்ப்பாசம் பொங்கி வழியுது. முதல்ல மாலையைக் கொடு”

"அப்ப நீயும் இந்த ரோஜா மாலைக்கு முப்பது ரூபாயைக் கொடு.”

“உனக்கே இது அநியாயமா தெரியல?”

“எந்திரன் படத்துக்கு இருநூறு ரூபாயில் டிக்கெட் எடுக்க முடியும்; பூமாலைக்கு மட்டும் நியாயம் அநியாயம்னு பேசுவியா?"

“நான்லாம் சினிமா தியேட்டர் பக்கமே போற தில்லைய்யா! போனவங்ககிட்ட இந்தக் கேள்விய கேளு. நான் இருவது ரூபாய்த்தான் தருவேன்” என்று பணத்தை கொடுத்துவிட்டு மாலையோடு திரும்பின தனஞ்ஜெயன் எதிரில் அந்த மலைச்சாமியார் அவனையே வெறித்து பார்த்தபடி ஒரு பூட்டப்பட்டிருந்த கடை வாசலில் அமர்ந்் திருந்தார். அவரைப் பார்த்த நொடி ஓடினான். ரோஜா இதழ்கள் உதிர்ந்திட

அவர்முன் நின்றான்.

“என்ன... மாலை அண்ணனுக்கா!’’ அவர் எடுத்த எடுப்பில் கேட்ட கேள்வி அவன் காதைத்திருகியது.

"சாமி ஈ ஈ...!"

“போ... போய் பங்காளிக்கு செய்ய வேண்டிய கடமையை வேகமாக செஞ்சு கழி. அப்படியே 10 நாள் தீட்டு கழியவும் அதைப்படிச்சு முடி. உன்னால நிறைய அதிசயத்தை இந்த பூமி பார்க்கப்போவுது. பொறக்கப் போற தமிழ் வருஷத்து மழையும் காத்துமே உன் கைலதான் இருக்கு.”

‘‘சாமி... நானே உங்கள பாக்கனும்னு இருந்தேன். பாழாப்போன புத்தி உங்களைக் கொஞ்சம் சந்தேகப் பட்ருச்சு. மன்னிச்சுடுங்க சாமி...”

“இல்ல அதெல்லாம் எதுக்கு. போ, போய் கர்மத்தை முழுமனசா செய். கணக்கு தீர்ந்தாதான் அடுத்தடுத்து நடக்க வேண்டியது நடக்கும்.”

“சாமி... நான் இப்ப பெரிய பிரமிப்புல இருக்கேன். குழப்பத்துலயும் இருக்கேன். யாரோ ஒருத்தர் எங் கிருந்தோ வர்றாரு. எங்க வீட்லயே செத்தும் போறாரு. பாத்தாக்கா அவர் என் பங்காளின்னு அவர் கொண்டு கிட்டு வந்த ஏடுங்க சொல்லுது. அதுல என்பேர் நட்சத் திரம் நான் பிறந்த மாசம்ன்னு எல்லாம் துல்லியமா இருக்கு”

“எனக்கு ஒண்ணுமே புரியல. இதெல்லாம் எப்படி சாமி சாத்யம்”

‘‘இதெல்லாமே ஆரம்பத்துல இப்படித்தான் நினைக்க வைக்கும். கேட்கவும் வைக்கும். புரிஞ்சு போச்சுன்னா, ப்பூ இவ்வளவுதானான்னு சொல்லிடுவே!”

“அது எப்படின்னு கொஞ்சம் புரியத்தான் வையுங் களேன்.”

“அதுக்கு இதுவா நேரம்? போய் கர்ம காரியத்தை முடிச்சி தலைமுழுக்கு போட்டுட்டுவா. அப்ப சொல் றேன்.”

“சாமி அதுவரை நான் தவிச்சுகிட்டே இருக்கணுமா? இப்ப சொல்லமாட்டீங்களா?”

“ஒரு அஞ்சு நிமிஷத்துலயோ பத்து நிமிஷத்துலயோ சொல்ல முடிஞ்ச விஷயம் இல்ல இது. சுருக்கமா சொல்றேன் கேட்டுக்க, ஒரு ரயில் வண்டி மதுரையை விட்டு சென்னப்பட்டணத்துக்குப் புறப்படுது. அது ஒரு மணிக்கு புறப்படுதுன்னு வெச்சுக்கயேன்”

“சரிங்க சாமி”

“ரெண்டு மணிக்கு அது எங்க இருக்குன்னு கேட்டா சொல்லிட முடியும்தானே?”

"தாரளமாக."

"அப்படித்தான் இதுவும். எல்லாமே கணக்கு. எந்த மாய்மாலமும் இதுல கிடையாது. நீ புறப்படு”

“சரிங்க சாமி. வேகமா காரியத்த முடிச்சிட்டு வந்து பாக்கறேன்...” என்று அவரிடம் இருந்து விலகியவன் திரும்பவும் வந்து “ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் இப்ப நீங்க பதில் சொல்லுங்க சாமி” என்று முண்டி நின்றான்.

“என்ன... செத்தவன் எந்த வகைல உனக்கு அண்ணனாவு றான்னுதானே கேக்க வந்தே...”

“உன் அப்பனைப் பெத்த அப்பனோட தம்பிக்கு... அதாவது உன் சின்ன தாத்தாவுக்கு செத்தவன் பேரன்! நீங்க இப்ப இருக்கற வீடு நியாயப்படி உன் சின்னத் தாத்தாவுக்குச் சேர வேண்டியது. அதை உன் தாத்தா அபகரிச்சுட்டாரு. தாத்தா சொத்து பேரனுக்குன்னு அது உனக்கு வரப்போகுது. தாத்தாவோட சொத்துல மட்டுமா உனக்குப் பங்கு? பாவத்துலயும்தானே? இதையெல்லாம் நாடியை தெடர்ந்து படிச்சா நீயே தெரிஞ்சுக்குவே! போ... போய் வேலையைப் பார்...” அவர் கூற திரும்பவும் திகைப்பில் விழுந்தான் தனா!

5

‘எந்திரங்களுக்கான சக்தியானது பீஜாட்சர மந்திரங்களிடம் இருந்துதான் வருகிறது. மந்திரம் என்பதோசப்த வடிவம். ஒரு சப்தமல்ல அது... ஆழ்ந்த நுட்பமான பொருளை உடைய சப்தங்களே மந்திரங்க ளாகும். இந்த சப்தம் ஒரு மனிதனிடம் இருந்து எழும்பிட குறிப்பிட்ட சக்தி தேவைப்படுகிறது. அந்த சக்திக்கு பின்னாலே கழுத்துக்கு கீழ் இருந்து வயிற்றுப் பாகம் வரையிலான பாகங்களில் ஒருவித இயக்கமும் ஒளிந்திருக்கிறது. இந்த இயக்கத்துக்கு ஆதாரமாக சுவாசிப்பு என்பதும் இந்த சுவாசிப்பின் மூலம் ரத்தத்தில் கலக்கும் ஆக்சிஜன் எனப்படும் பிராண வாயுவின் அளவுகளும் உள்ளன.

அதாவது நாம் சரளமாக பேசும்போது உடம்பில் இருந்து சக்தி செலவாகிறது. இந்த சக்தியானது மந்திரங்களை உச்சரிக்கும்போது

அதிகமாகிறது. அதேபோல மந்திர உச்சாடனத்தின்போது நம் சுவாச முறையும் மாறுகிறது.

ஒரு முக்கியச் செய்தி. உண்மையில் நாம் சுவா சிப்பதில்லை. அது ஒரு அனிச்சை செயல். நாம் மனதால் திட்டமிட்டு அதை நிறுத்த வேண்டுமானால் முயலலாம். அதற்கும் ஒரு அளவு உண்டு. இந்த அனிச்சைச் செயல் கூட ஒவ்வொரு அரைமணிக்கும் மாறிக்கொண்டே இருக்கிறது. இடது மூக்கு துவாரம், வலது மூக்கு துவாரம் என்று காற்றானது நமது இதயத்துக்குள் வந்து போகும் வழிகளை மாற்றிக் கொண்டே இருக்கிறது. கூர்ந்து கவனித்தால் இதை உணரலாம். தியானத்தில் சுவாசத்தை கவனிக்கச் சொல்வது இதற்காகத்தான்.

*****

இப்படி சுவாச முறை மாறுவதன் பின்னே உடம்பில் நாம் உணர முடியாத அளவில் மாற்றங்கள் ஏற்பட்ட படியே இருக்கின்றன.

சுருக்கமாகச் சொல்வதானால் சகஜமாக பேசும் போது ஒருவிதமாய் சக்தி செலவாகிறது. எதுவும் பேசாத நிலையில் மனதுக்குள் எதையாவது எண்ணியபடி இருக்கையில் ஒருவித சக்தி செலவாகிறது. கண்டதை எண்ணாமல் ராமா என்றோ, கிருஷ்ணா என்றோ நாமங்களை ஜெபிக்கும்போது ஒருவித சக்தி செல வாகிறது.

இந்த சக்தி செலவாவதன் அளவுகளை ஒரு எந்திரத்தால் கணிக்க முடியும் என்று வைத்துக் கொள்வோம்.

மந்திரங்களை உச்சரிக்கும்போது அந்த எந்திரம் மாறாத ஒரே அளவை காட்டியபடி இருக்கும். அதிலும் பீஜாட்சரங்களை ஜெபிக்கும்போது இந்த அளவு மெல்ல அதிகரித்து உடம்பில் இருந்து மின்காந்த அலைகள் உருவாகத் தொடங்கும். இதை கையில் பிடித்துள்ள எழுத்தாணி வழியாக செப்புத்தகட்டில் ஏற்றுவதற்கு பேர்தான் உருவேற்றுதல்!

எல்லோருக்கும் இது வந்துவிடாது. உடம்பையும் மனதையும் நுட்பங்களை உணர்ந்து வைத்திருப்ப வர்களுக்குதான் இது சாத்தியம். இவர்களால் பார்வை வழியாக மின்காந்தத்தை பாய்ச்ச முடியும். ஸ்பரிச வழியாக (தலையில் கை வைத்து ஆசிர்வதிப்பதன் மூலம்) பாய்ச்ச முடியும். எங்கோ இருந்து கொண்டு எண்ணங்களின் வழியாகவும் பாய்ச்ச முடியும் இவர் களே மகான்களாகவும் உள்ளனர்!

***

தனக்கு ஏற்பட்ட திகைப்பு துளியும் குறையாமலே பூமாலையோடு வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினான். எதிரில் சற்று முன் வீட்டுக்கு வந்துவிட்டு போலீசுக்குதகவல் சொல்வதாக சொல்லிச் சென்ற வைத்தியர் நொண்டிக் கொண்டே வந்தார்

.மாலையோடு வந்த தனஞ்ஜெயனை ஆச்சரிய மாகவும் பார்த்தார்.

“என்னப்பா இது கையில மாலை?”

“அண்ணனுக்கு போடத்தான் மாமா!”

"அண்ணனா... உனக்கேதப்பா அண்ணன்? சுந்தரத் தோட கருகப் பிள்ளையாச்சேப்பா நீ...”

“பார்றா... இத யாரு சொன்னது!”

“அவர் கொண்டுட்டு வந்த மரப்பொட்டில இருந்த ஏடுங்க!”

“என்னலே... பெரிய மாயா ஜாலமா இருக்கு. அதான் என்னாலயம் போலீசுக்கு போக முடியாம வழியிலேயே கிறுகிறுன்று வந்து மயக்கம் போட்டு உழுந்திட்டேனா நான்.”

“அதான் நொண்டுறீங்களா மாமா?”

“ஆமாம்பா... சரி போ. அடுத்து ஆக வேண்டியத பார்... அந்த மரப்பொட்டிய பத்திரமா வையுங்க. அப்பால வந்து பாக்கறேன். எனக்கு அதுல நாடி இருந்தா நான் எப்ப போய்ச்சேருவேன்னு தெரியணும். 'ஆ ஊ’ன்னா கிறு கிறுன்னு கண்ணை இருட்டிகிட்டு வந்து தள்ளிடுது. வெளிய போகவே பயமா இருக்கு. இந்த உடம்போட ஒரே ரோதனை...”

அவரே ஒரு வைத்தியர். அவரே இப்படி புலம்பினால் எந்த சுவற்றில் போய் முட்டிக் கொள்வது?

மாலை நான்கு மணி! அந்த நீடாமங்கலம் வேணு ஒரு கால்டாக்சியில் வந்து சேர்ந்தார். வரும்போதே அவர் கைகளிலும் மாலை.

ஆனபோதிலும் சுந்தரம் பிள்ளை வீட்டுக்குள் மாலையோடு கிடந்த வரதனின் உடல் வேணு வரையில் ஒரு சிலிர்ப்பை உண்டு பண்ணியது.

பெரிதாக அழுகை வரவில்லை. ஆனால், கண்கள் கலங்கி மூச்சுக்காற்று முட்டியும், அவர் ஒரு மாதிரி அவருக்குள் முட்டி மோதிக்கொள்வது

நன்றாகத் தெரிந் தது.

“பாவம் வரதன்... சுகம்னா என்னன்னே தெரியாமலே வாழ்ந்து கடைசில இங்க வந்து செத்தும் போயிட்டான். இவனை உங்க உறவுபோல நினைச்சு வீட்டோட கிடத்தி யிருக்கீங்க. உங்களுக்கு ரொம்ப நன்றிய்யா. நீங்க நல்லா யிருப்பீங்க...” என்றார் அந்த நீடாமங்கலம் வேணு. நல்லாயிருப்பீங்க என்று சொன்னபோது தொண்டை கட்டிக்கொள்ள நெகிழ்வு நன்கு வெளிப்பட்டது.

“சரிங்க தம்பி... தூக்கிடலாமா?”

"தாராளமா... ஆமா காட்டுல தகவல் சொல்லி யாச்சா!”

“எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சு. எங்க வழக்கம் எரிக்கிறதுதான். அப்படியே செஞ்சிடலான்னு.”

“வரதன் குடும்பத்துலயும் அதான் வழக்கம்.”

“என் பங்காளி குடும்பம்தானே... ஒரே வழக்கமா தானே இருந்தாகணும்...” சுந் ரம்பிள்ளை சொன்னது அந்த வேணுவை ஒரு இடி இடித்தது.

“என்ன சொல்றீங்க நீங்க?”

“இந்த வரதன் எனக்கு மகன் முறை. என் அண்ணன் மகன்தான் இவன்.”

"ஆச்சரியமா இருக்குதே... இது எப்படி தெரிஞ்சுச்சு உங்களுக்கு.”

“அதான் ஒரு மரப்பொட்டியோட வந்தாரே! அது இவன் யாருங்கறது மட்டுமில்ல. பல பேரோட ஆதி மூலத்தையும், அடுத்து நடக்கப் போறதையும் சொல்லப் போற ஒரு அறிவுப் புதையலாச்சே!”

சுந்தரம் பிள்ளை சொன்னபடியே சுடுகாட்டு வேனுக்கு போன் செய்தார்.

“பாடை கட்டி தூக்குன காலமெல்லாம் போயே போச்சு. அங்காளி பங்காளிங்கல்லாம் மாறி மாறி தோள் கொடுத்து தூக்கிட்டு வந்து செத்தவங்களுக்கு பட்ட கடனை தீர்க்கப் பார்ப்பாங்க.

செத்துட்டாதான் உசுர் சுத்தமாயிடுமே. ஆகையாலஅதுவும் கூட்டிக்கழிச்சு வகுத்துப் பெருக்கி கணக்கு போட்டு பார்த்து மனுஷ புத்திப்படி நடந்துக்காம தேவபுத்தியோடு தோள் கொடுக்கறவங்களை வாழ்த்தும்.

இப்ப எல்லா வாழ்த்தையும் வண்டிக்காரன்தான் வாங்கிக்கணும். ஆனா, பொணம் உழுந்தாத்தான் இவங்க கொம்பில ஏறிக்கறாங்களே? இங்க இருக்கற சுடுகாட்டுக்கு பொணத்தக் கொண்டு சேர்க்க இரண்டாயிரம் கொடு. மூவாயிரம் கொடுன்னு கறந்துடறானுங்க. எல்லாம் கலிகாலக் கொடுமை...”

சுந்தரம் பிள்ளை அலுத்துக் கொண்டதிலும் நுட்ப மான உண்மைகள்.

அந்த நீடாமங்கலம் வேணு வேகமாய் பாக்கெட்டில் கையை விட்டு பணத்தை எடுத்துத் தரமுயன்றார்.

"அப்பு... இது எங்க கடமை. நீங்க உள்ளார வையுங்க. என் வாழ்க்கைல ஒரு வாய் சோறு கூட போடாம... ஆனா, என் மகனுக்கு நான் காரியம் பண்ணப்போறேன். இது பெரிய கொடுமை. பெரியவங்க இருக்க சின்னவங்க போறது சாபமப்பா... அந்த சாபம் இவனோட நீங்கட்டும்”என்று அவர் வருந்தியதிலும் அடுத்து ஒரு செய்தி!

***

எல்லாமே தனஞ்ஜெயனுக்குள் உண்டியலுக்குள் விழும் காசுகளைப் போல விழுந்தபடி இருந்தன.

இரவு மணி ஒன்பது! எல்லோரும் சாப்பிட உட் கார்ந்தார்கள். நல்லம்மை இட்லி சுட்டிருந்தாள். இரவு வேளைக்கு சாவு வீட்டுக்கு ஏற்ற பிரகாசமான உணவு.மனக்கசங்கலோடு பெரிதாக கைமணத்தை காட்ட சாவு விட்டில் இடம் ஏது?

இருந்தும் சின்ன வெங்காயம் போட்டு பாசிப் பருப்பைச் சேர்த்து அவள் செய்திருந்த சூடான சாம்பார் அவர்கள் சாப்பிடத் தொடங்கிய இட்லியை அமிர்தத் துக்கு பக்கமாய் கொண்டு சென்று விட்டன.

புதிய இடத்தில் கூச்சத்தோடு சாப்பிடும் தன்மை உடையவர்களை எல்லாம் நல்ல சுவை கொஞ்சம் கொஞ்சமாய் கையில் எடுத்துக் கொண்டுவிடும். வேணுவும் இரண்டு, நாலு, ஆறு என்று எட்டு இட்லிகளை கடந்துபோய்க் கொண்டிருந்தார்.

பானைத் தண்ணீர்! அதைக் குடித்தபோது சாப்பிட மட்டுமே ஒரு ஜென்மம் எடுத்து நல்லம்மை வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று தோன்றியது.

நல்லம்மையின் சமையலுக்கு அவள் அண்ணன் மகள் விஜயலட்சுமியும்

உறுதுணை. பரிமாறுகையில் தனஞ் ஜெயன் சாப்பிட்ட இட்லிகளின் மேல் நல்லெண்ணையைப் பொழிந்து ஒரு பிரத்யேக கரிசனத்தை சற்று காதலோடு காட்டினாள்.

குனிந்து பரிமாறும்போது அவன் கண்களில் பட்ட அவளது தனங்கள் இரண்டும் அவனுக்குள் மளுக்கென்று ஒரு தீக்குச்சியை கொளுத்திபோட்டது போல அவனையும் எரிக்கத் தொடங்கிவிட்டன.

நாக்கில் ஒரு சுவை. மனசில் ஒரு சுவை..! இரண் டிலுமே உச்சநிலை? தனஞ்ஜெயனின் வாலிபம் தட்டா மாலை சுற்ற ஆரம்பித்துவிட்டது.

சாப்பிட்டு முடித்துவிட்டு கழுவி விடப்பட்ட திண்ணையில் ஆசனவாய்ப்பரப்பு சிலுசிலுப்பை உணரும் வித்தில் உட்கார்ந்த போது எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா?' என்கிற கவிதை வரிதான் தனஞ் ஜெயனுக்குள் ஞாபகமாய் ஞாபகத்திற்கு வந்தது.

வேணுவும் அருகில் அமர்ந்தார்.

"இப்ப மனசு விட்டு பேசுவோம். சொல்லுங்க. தம்பி நீங்க என்ன பண்றிங்க?"

கேட்டபடியே சுந்தரம் பிள்ளையும் அருகில் வந்து அமர்ந்தார்.

"சொல்ல என்னங்க இருக்கு. நான் ஒரு மில் தொழிலாளி. வரதன் எனக்கு நல்ல சினேகிதன். வரதனுக்கு நாடி ஜோசியம்தான் பொழப்பு. ஜோசியம் பாக்க இவ் வளவு கொடுங்கன்னு ஒருத்தர் கிட்ட பணம் கேட்க மாட்டான். கொடுக்கறத வாங்கிக்குவான். ஜோசியத்தா லயே கிட்டதட்ட ஒரு ஞானியாயிட்டான். எதுலயும் பெருசா ஆசை கிடையாது. ஏன் இப்படி இருக்கே பிற்காலத்து தேவைக்காக கொஞ்சம் சம்பாதிச்சு வெச்சுக் கறதுதானே நல்லதுன்னு நானும் சொல்வேன். சிரிப்பான். ஒரே காலம்தான் வேணு. நம்ம மனசுதான் அதை இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம்னு அடையாளப்படுத்துது. ஆடு மாடுங்களுக்கு ராத்திரி பகல் கூட தெரியாது. அதுகளும் பொறந்து வளர்ந்து ஒரு நாள் செத்துப் போயிடுது. மனுஷங்க நாமாதான் என்னமோ வாழ்க்கைங் கறது நம்ம கைல இருக்கற மாதிரி நினைச்சுகிட்டு அதை இப்படி வெச்சுக்கணும். அப்படி வெச்சுக்கணுன்னு அலை மோதறோம்.

ஒரு மண்ணாங்கட்டியும் கிடையாது.

நீ பொறந்தப்பவே போய்ச்சேர்ற நாளு நேரம் எல்லாம் முடிவாயிடிச்சு.

நடுவுல நீ எத்தனை லட்சம் மூச்சு விடணும், எத்தனை வார்த்தை பேசணும்கறது கூட தீர்மானமாயிடிச்சு. இதுல ஒரு நூல் அளவு கூட்டவோ குறைக்கவோ கூட யாருக்கும் அதிகாரமில்ல. நாம் கும்பிடுற அந்த சர்வேஸ்வரனுக்கே கூட இம்மட்டுல, பவர் கிடையாது. தெரிஞ்சுக்கன்னு தத்துவமா தாங்க பேசுவான்...”

என்று வேணு கூறவும் தனஞ்ஜெயனிடம் ஒரு குறு குறுப்பு. அதன் நிமித்தம் ஒரு கேள்வி.

"அண்ணே... அண்ணன் சொன்ன இந்தக் கருத்தை நீங்க ஒத்துக்கிறீங்களா!”

"ஏம்ப்பா உனக்கு இதுல மாற்றுக் கருத்து இருக்கா?”

"அப்படி இல்ல... எல்லாமே முடிவான ஒண்ணுன்னு அண்ணன் சொல்றது புரியல எனக்கு. இப்ப கும்ப கோணத்துல ஒரு பள்ளிக்கூடத்துல பிஞ்சுக் குழந்தைங்க அறுபது எழுபது பேர் செத்தாங்க. அதே மாதிரி ஸ்கூல் வேன் கவுந்து ஒரு ஏழெட்டு பேர் செத்தாங்க. அதுக்கு பின்னால இருக்கறது பொறுப்பில்லாத்தனம்ங்கற சில மனுசங்களோட தப்புதான். இதை எப்படி அவங்க விதின்னு சொல்றது? அப்படியே விதின்னா அறுபது எழுபது பேருக்கு ஒரே மாதிரியா இருக்கும்?

அதுலயும் பிஞ்சுக் குழந்தைங்க எந்த தப்பும் பண்ணாதவங்க. இவங்களை நெருப்புல சுட்டு எரிச்சு தண்டிக்கற அளவுக்கு கடவுள்ங்கறவர் அவ்வளவு கொடுமையானவரா?

எங்க தெருவுல ஒரு தெருநாய் இதுவரை பத்து குட்டி போட்டுச்சு. அந்த நாயும் குட்டிங்களும் எப்படியோ சாப்ட்டு உசுரோட தான் இருக்குதுங்க. இதுங்கெல்லாம் வாழும்போது அந்த பிள்ளைங்க மட்டும் அப்படி ஏன் சாவணும்? இதை விதின்னு சொல்லும்போது எரிச்சல்தான் வருது.

அதுவே மனுஷத்தப்புன்னு சொல்லும்போது ஒரு காரணம் தெளிவாகுதுல்ல?”

தனஞ்ஜெயன் கேட்டதற்கு வேணுவிடம் பதிலில்லை. சிரித்தார்.

“தம்பி... நான் வரதன் எப்படிப்பட்டவன்னுதான் சொன்னேன். இப்ப நீ கேட்ட மாதிரிதான் நான் வரதன் கிட்ட பேசுவனே. ஆனா, வரதன் ஒரே வார்த்தைல என்னை தாண்டிப் போயிடுவான்.”

“என்னன்ணே அந்த ஒரு வார்த்தை”

“எல்லாமே ஒரு கணக்குதான் வேணும்பான்!”

“கணக்கா?”

6

மனம் என்பது கடல் போன்றது. அது எப்போழுதும் அலைபாய்ந்தபடியேதான் இருக்கும். இது அதன் இயல்பும் கூட! இந்த அலைபாய்தலில் அபத்தமும் ஒருவித ஆவேசமும் கூடிடும்போது கடல் பொங்கி யெழுவதுபோல மனமும் பொங்கியெழுந்து அமைதி இழந்து தத்தளிக்கும் ஒரு நிலை உருவாகிறது.

அமைதி இழந்த இந்த அலைபாயும் மனதுக்கு காரணமே அடுக்கடுக்கான எண்ணங்கள். அவைகளால் உண்டான அழுத்தம்தான்!

இதை நீக்கி அமைதியை ஏற்படுத்த அதாவது எண்ணங்களே இல்லாதபடி ஆக்க கையாளும் ஒரு வழிமுறைதான் தியானம். மீனை வலைவீசி பிடிப்பார் கள். சிங்கம் புலியை துப்பாக்கியில் சுட்டுப் பிடிப்பார் கள். இந்த வகையில் யானையைப் பிடிக்க வேண்டும் எனும்போது மட்டும் இன்னொரு யானையைப் பயன் படுத்தியே அதைப் பிடிக்க முயல்வார்கள். இதையே 'யானையால் யானை யாத்தற்று' என்பார்கள். இது மனதுக்கும் பொருந்தும். எண்ணக் குவியல்களால் நிரம்பிப்போன மனதை அடக்கி அமைதிப்படுத்தவும் ஒரு எண்ணத்தையே பயன்படுத்துவதுதான் அது! அதா வது பெரும் சப்தத்தை அடக்க ஒரு சிறு சப்தத்தைப் பயன்படுத்துவது. இந்த சிறுசப்தம்தான் ஏதாவது ஒரு மந்திரம் அது ராம என்றோ கிருஷ்ணா என்றோ ஈஸ்வரா என்றோ இல்லை குமரா என்றோ ஓம்சக்தி என்றோ இறை நாமமாகவும் இது இருக்கலாம்.

இந்த வகையில் மனதை அடக்கியவர்கள் உடம்பையும் அடக்கும் சக்தியை கூடவே பெறுவர்.இப்படி உடம்பு மனது இரண்டையும் வென்று பேரமைதியில் திளைக்க முடிந்தவர்கள் தொடர்ந்து மந்திரங்களைஉச்சரிக்கும்போது அந்த மந்திர சக்தியானது... அதாவது அந்த ஒலி அலையானது புலன்களுக்கு புலப்படாத மின் காந்த அலைகளாக மாறி பிறரைத் தீண்டும்போது தீண்டப் பெறுபவருக்கு மெல்லிய மின் அதிர்வு ஏற் பட்டதுபோல இருக்கும்.

இப்படிப்பட்டவர்களாலேயே சப்த அலைகளிலுள்ள சக்தியை மின்காந்த அலைக ளாக்கி அதை செப்புத்தகட்டுக்கு கொண்டு சேர்த்து அந்த செப்புத்தகட்டையும் சக்திக் கோட்டையாக ஆக்க முடியும். அப்படி சக்திக் கோட்டையாகிவிட்ட எந்திரங் களை எப்படி பயன்படுத்துவது என்பதில்தான் எந்திரங் களின் பயன்பாடு உள்ளது!

*****

'கணக்கா!' என்று கேட்ட தனஞ்ஜெயனை வேணுவும்ஆமோதிப்போடு பார்த்தார்.

கணக்குன்னா எப்படிண்ணே... எனக்கு புரியலை"

"எனக்கு மட்டும் புரிஞ்சிச்சா என்ன... அவன் சொன்னதைச் சொன்னேன்."

வேணுவின் பதிலால் தனஞ் ஜெயனிடம் ஒரு ஏமாற்றம். அது அவன் முகத்தில் எதிரொலித்தது. ஆனால், தரம் பிள்ளை ஒருவித அமைதியில் ஆழ்ந்த சிந்தனை பொடு இருந்தார். அவருக்கு தனஞ்ஜெயன்போல கேள்வி கேட்கவோ இல்லை. வேறுமாதிரி யோசித்து பேசவும் பிடிக்கவில்லை. அவர் மனதுக்குள் வேறு மாதிரியான உணர்வுகள்.

அந்த கணத்தில் அந்த மௌனத்தைக் கலைப்பது போல் பால் டம்ளர்களோடு வந்தாள் தனஞ்ஜெயனின் மன்மகளான விஜயலட்சுமி.

"இல்லம்மா... பால் வேண்டாம். சாவு வீட்ல யாரும் திரில பால் குடிக்க மாட்டாங்க..." என்றார் வேணு.விஜயலட்சுமியும் சற்று ஏமாற்றத்தோடு அந்த டம்ளர் களோடு திரும்ப முயன்றாள். அந்த வேளையில் தனஞ் ஜெயனை ஒரு மாதிரி பார்த்தாள். அதுவே அவள் அவனோடு பேசப் பிரியப்படுவதை அவனுக்கு உணர்த்தி விட்டது.

தன் மை விழிகளால் தனஞ்ஜெயனை லாவகமாக அசைத்து அழைத்துவிட்டு ஸ்டோர் ரூம் பக்கமாய் போனாள். அப்போதைக்கு அங்கேதான் அவள் அவ னோடு பேசத்தோதாக இருளோடு கூடி இடமும் இருந்தது.

வேணுவிடமும் கொட்டாவி பிரிய ஆரம்பித்தது. அதைக் கவனித்தார் சுந்தரம்பிள்ளை.

"தம்பிக்கு உறக்கம் வந்திருச்சு. பாய் தலையணை எடுத்தா..." என்று குரல் கொடுத்தார்.

“காலைல சுடுகாட்டுல சாம்பலை எடுத்து வைகை ஆத்துல கரைச்சிட்டு அப்படியே ஒரு முழுக்கு போட்டுட்டு நானும் ஊருக்கு கிளம்பறேன்யா...”

“உசிதம் போல செய்யுங்க தம்பி... முடிஞ்சா பத்தா வது நாள் காரியத்துக்கும் வாங்க...”

"அப்ப அதெல்லாமும் செய்யப் போறிங்களாய்யா?”

“செத்தது இந்த குடும்பத்து வாரிசு தம்பி. கடமை இருக்குல்ல?”

“கேக்க ரொம்ப சந்தோசமா இருக்குங்க. அனாதைப் பொணம்னு அலட்சியப்படுத்தப்பட வேண்டியவனை அள்ளி அணைச்சுப் பாசம் காட்றீங்க. வரதன் ஆத்மாவுக்கு நிச்சயம் ரொம்ப சந்தோசமா இருக்கும்.”

வேணு சொன்ன நொடி சுவற்றுக் கவுளியிடம் இருந்து “டொப்... டொப்!” என்று சப்தம். அது சுந்தரம் பிள்ளை முகத்தில் ஒரு மகிழ்ச்சியை உருவாக்கியிருந்தது.

நல்லம்மையும் கோரைப்பாயும் கோடு போட்ட ஜமக்காளம் ஒன்றோடும் வந்து நின்றாள்.

“இப்படியே கூட படுத்துக்குங்க. இன்னிக்கு அவ் வளவா வெக்கையும் இல்ல...”

"ஆமாங்க...” என்றபடியே வேணு பாயை விரித்து படுக்க முனைந்தார்.

தனஞ்ஜெயனும் அவர்களிடமிருந்து விலகி அந்த ஸ்டோர் ரூம் இருட்டு அறைக்குள் நுழைந்திருந்தான்.

வழக்கமான அவனது உடற்சூடு அந்த நொடியில் தன் ஃபாரன்ஹீட்டை பெருக்கத் தொடங்கியிருந்தது. உலகில் எல்லாமே மாறுகிறது. மனிதன் கூட தொடக்கத்தில் மிருகங்களைப் போல கைகளையும் காலாகத்தான் பயன் படுத்தியிக்கிறான். பின் பரிணாமத்தால் நிமிர்ந்து நின்று நடப்பவனாகியிருக்கிறான்.

உலகில் மாறாதது மாற்றம் ஒன்றுதான் என்பதற்கும் எவ்வளவோ சாட்சிகள். ஆனால், தனிமையில் ஒரு இளம்பெண்ணை ஒரு ஆண் சந்திக்கும்போது நிகழும் அவ்வளவு விஷயங்களும் ஆதாம் ஏவாள் காலத்தில் இருந்து இன்றுவரை அப்படியே மாறாமல் தான் உள்ளது. "வியர்வை, கூடுதலான இதயத்துடிப்பு, தொண்டை வறட்சி’ என்று இளமையும் கிறுகிறுக்கத் தொடங்கிவிடுகிறது.

தனஞ்ஜெயனும் கிறுகிறுப்போடு விஜயலட்சுமியைப் பார்த்தான். அவள் எட்டிப் பார்த்துவிட்டு தாழிடாதபடி கதவைச் சாற்றினாள். அவனுக்குள் அடுத்து என்ன செய்வது என்பதில் சற்று தடுமாற்றம்.

“என்ன யோசனை?” அவனிடம் காற்றுக்குரல்.

“எதுக்குக் கூப்பிட்டே” இது அவன்.

“உம்ம். சங்கீதம் படிக்க”

“நான் என்ன பாட்டு வாத்தியாரா?”

"பரவால்லியே நீ ஒரு பாட்டு வாத்தியார் இல்லன்னு உனக்கு கூட தெரிஞ்சிருக்குதே?”

“என்ன விஜி... உடசல் கொடுக்கே?”

“ஐய்... இது உடசல்ங்கறதும் புரியுதே!”

“வெளையாடாதே. நானே எவ்வளவு குழப்பத்துல இருக்கேன் தெரியுமா?”

“அதத்தான் பாத்தேனே. ஆமா கணக்கு வழக்குன்னு எப்பவும் வேதாந்தமாதான் பேசுவியா? உனக்கு ஜாலியாப் பேசவே தெரியாதா?”

“இதோ பார்... நீ குனிஞ்சு குனிஞ்சு இட்லிய போடும் போதே நான் ஒரு மாதிரியாயிட்டேன். என்னை சீண்டாதே.”

“ஆமா... இல்லாட்டியும் நீ இறுக்கிப் பிடிச்சு முத்தமாதான் கொடுத்துடப் போறே பாரு...”

“முத்தமா... அதுக்கு மேலயும் போக எனக்குத் தெரியும். ஆனா, உங்கப்பா உருவம் மனசுக்குள்ள வந்து தடுக்குது தெரிஞ்சுக்க...

“இது என்ன புதுக்கதை... அவர் என் அப்பா மட்டு... மில்ல. உனக்கு மாமாவும் கூட...”

“மண்ணாங்கட்டி, மாமனாம் மாமன்... கொஞ்சம்கூட புரிஞ்சுக்கற சக்தி இல்லாத ஆளு.”

“என்ன சக்தி இல்ல... நீ இப்ப தேவை இல்லாம எதுக்கு எங்கப்பாவை இழுக்கறே?”

“இழுக்காம... நீ இவ்வளவு ஆசைப்பட்றியே நாளைக்கு உனக்கு வேற

இடத்துல மாப்பிள்ளை பாத் துட்டா?”

"நீ ஏன் பாக்க விட்றே?”

“நான் விட்றேனா?”

“ஆமா. எங்கப்பாகிட்ட மல்லுக்கு நில்லு. விஜி என் பொண்டாட்டின்னு சொல்லு”

“இப்ப இதையெல்லாம் பேசத்தான் கூப்ட்டியா?”

“நான் பேசமட்டும் கூப்பிடலை.”அவளிடம் கொஞ்சம்போல வெட்கமும் வெளிப்பட்டு குழைந்தாள்.

"விஜி... உன் ஆசை புரியுது. ஆனா, என்னால உன் அப்பா ஆசைப்பட்ற மாதிரி ஏதோ ஒரு ஆபீஸ்ல வேலைக்குப் போய் சம்பாதிச்சு, ஒண்ணாம் தேதியானா சம்பளத்த வாங்கிட்டு வந்து கொடுத்து உன்கூட குடும்பம் நடத்த முடியாது. எனக்கு அந்த மாதிரி ஒரு அடிமை வாழ்க்கையை யோசிக்கவே என்னவோ மாதிரி இருக்குது.”

“வேண்டாம். ஏதாவது தொழில் பண்ணு. இல்லாட்டி உங்கப்பா மாதிரி ஜோசியமாச்சும் பாரு.”

“த்தூ...” அவனிடம் உமிழ்வு.

“எதுக்குத் துப்பறே. நான் என்ன தப்பா சொல்விட்டேன்.”

“இந்த ஜோசியத்த எங்கப்பா கட்டிகிட்டு அழு வதையே நான் வெறுக்கறேன். நானே இதுல இறங்கவா?”

“சரி வேற என்ன செய்ய உத்தேசம்?”

“அது தெரியல எனக்கு. ஆனா நிச்சயம் நான் பெருசா ஏதாவது செய்வேன் விஜி."

“ஒரு இடத்துல வேலைக்கும் போக மாட்டேன். ஜோசியம் பாக்கற தொழிலையும் செய்யமாட்டே. வேற எப்படித்தான் பொழப்பு நடத்துவே?”

“அதான் தெரியல... ஆனா நிச்சயமா நான் பெருசா ஏதாவது செய்வேன்.”

“நீ சொல்றத பார்த்தா ஒண்ணு திருடனும். இல்ல கொலை செய்யணும்.”

“அட போ விஜி... நான சாதிச்சுக் காட்டின பிறகு தெரியும் உனக்கு.”

“சாதிச்சுக் காட்டுவேங்கறது சரி. அது எதுல?”

“இப்ப எதையும் கேக்காதே... மரப்பொட்டி நாடிச் வடிங்களை முழுசா படிச்சுட்டு நான் உனக்கு சொல்றேன்.”

“இது என்ன புதுக்கதை’’

"கதை இல்ல... அவ்வளவும் அதிசயம். நம்ப முடியாத உண்மைகளும் கூட...”

“நாடி ஜோசியம் பத்தி கேள்விப்பட்டிருக்கேன். இதுவும் அந்த மாதிரியா?”

“ஆமா... அப்படியேதான்.”

“இப்ப எங்க இருக்கு அது?”

"அப்பா ஜோசியம் பாக்கற வாசப்பக்கம் இருக்கற அறைக்குள்ள இருக்கற மரப்பொட்டிக்குள்ள...”

“நான் போய் எடுத்துட்டுவரேன். அது என்னன்னு இப்பவே பாத்துருவோமா?”

“வேண்டாம். சாவு வீட்ல அதை படிக்கக் கூடாதாம். அப்பா சொன்னாரு.. .”

“ஆமா உனக்குதான் ஜோசியமே பிடிக்கலியே. அப்புறம் எதுக்கு அந்த நாடியை பாக்க ஆசைப்பட்றே?”

“அதுல என்பேரு நட்சத்திரம்னு எல்லாம் சரியா இருக்குதே... அதோட இந்த வீட்டுக்கு வந்து செத்துப் போன அந்த வரதன்ங்கறவர் பத்தி எல்லாமும் இருந் துச்சே!”

"அப்படின்னா அந்த நாடிலதான் உன் எதிர்காலமே இருக்குதா?”

"அப்படித்தான் என் மனசு சொல்லுது. மலைல இருக்கற சாமியார் அப்பப்ப சொன்னது, இந்த நாடி சொல்றது எல்லாம். ஒண்ணா இருக்கும்போல தெரியுது. தீட்டு கழிஞ்சு உடனேயே நான் அபிராமி அந்தாதி அம்புட்டையும் எப்படியும் சொல்லிடுவேன். அதுக்குப் பிறகு நிச்சயமா என் வாழ்க்கைல பெருசா ஏதோ ஒண்ணு நடக்கப் போகுது...”

தனஞ்ஜெயன் சொல்லும்போதே அவன் கண்களில் அதிகபட்சமான விரிவு. தொடக்கத்தில் அவனிடம் அரும்பிய காமம் அவ்வளவும் கரைந்து போய் அவன் துளியும் அந்த உணர்வே இன்றி நாடி பற்றிய நினைவுக்குள் மூழ்கத் தொடங்கி விட்டான்.

விஜயலட்சுமி அதைப் பார்த்து கலங்கிப் போனாள்.சலிப்பாக கூட இருந்தது. இருளும் தனிமையும் கிடைத்தும் ஜாடை மாடையாக உரசியும் சீண்டியும் கூட அவன் இளமைத் துடிப்புகளுக்கு ஆட்படாமல் விலகிப்போனது எரிச்சலைக் கூட தந்தது. கூடவே அந்த நாடியில அவனைப் பற்றி அப்படி என்னதான் இருக்கும் என்கிற கேள்வியும் எழும்பியது. அதற்கு மேல் அங்கே இருந்து தொடர்ந்து பேச வழி இல்லாதபடி நல்லம்மையின் குரல் வேறு அழைத்தது.

சலிப்போடு அவனைப் பார்த்து வெறித்தபடி அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

நல்லம்மை முன்னால் போய் நின்றாள்.

“நேரமாச்சு நீ ஊட்டுக்கு போவலையாடி?”

“போவணும் அத்தை”

“புறப்படு... புறப்படு... அங்க அண்ணன் தவிச்சுகிட் டிருப்பாரு. நான் நாளைக்கு வந்து இன்னிக்கு இங்க நடந்த விசயங்கள் பத்தி விபரமா சொல்றதா சொல்லு”

“சரி அத்தை... அப்ப நான் புறப்பட்றேன்.”

“மணி பத்தாகப் போவுது. தனியா போயிடுவியா?”

“போயிடுவேன் அத்தை. வர்ரேன்.”

என்று விலகியவள் வாசலைத்தாண்டும்போது பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள். அந்த ஜோதிடம் பாக்கும் அறை திறந்துதான் இருந்தது. மரப்பெட்டியும் கண்ணில் பட்டது. விறுவிறுவென்று உள்ளே நுழைந்தவள், அந்தப் பொட்டியை திறந்து உள்ளே பார்த்தாள். கட்டுக் கட்டாக ஏடுகள்!

இதுல எந்த ஏடு தனஞ்ஜெயன் வாழ்க்கையைச் சொல்லப் போவது?

அவளிடம் குழப்பமான தேடல்.

7

‘எந்திரங்களை உருவாக்குவது ஒரு பிரத்யேகமான பேராற்றல் என்றால், அப்படி உருவாக்கிய எந்திரங் களை பயன்படுத்தவும் பேராற்றல் தேவை. இது ஒரு வாகனத்தை உருவாக்குவதும், அதை இயக்குவது போன்ற செயலுமாகும். எந்த ஒரு விஷயத்திலும் மனோலயம் என்பது மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சைக்கிள் ஓட்டத் தெரிந்த ஒருவர், புதிதாக கற்றுக் கொள்ளும் ஒருவர் இருவருக்கும் இடையே என்ன வேறுபாடு உள்ளது! ஒட்டத் தெரிந்தவர் கீழே விழுவ தில்லை. ஆனால், கற்றுக் கொள்பவர் அடிக்கடி விழுந்து எழுகிறார். இது எதனால்? இருவரின் செயல்பாட்டிலும் எந்த குறையும் இல்லை. வாகனத்தின் மேல் அமர்ந்து கொண்டு சைக்கிளை மிதிப்பது எல்லாம் ஒன்றாகவே உள்ளது. ஆனாலும் பழகுபவர் விழுவதும், 1ழகியவர் விழாமல் வாகனத்தை செலுத்துவதும் எப்படி? ஏன்?

இதற்கு பின்னால்தான் மனோலயம் என்கிற நுட்பம் ஒளிந்துள்ளது. உடல் சக்தியை பயன்படுத்தி இயங்குவதோடு ஒரு உள்ளுணர்வு கலப்பதில்தான் அந்த நுட்பம் உள்ளது. இந்த உள்ளுணர்வில்தான் எல்லாமே உள்ளது. இதே உள்ளுணர்வே எந்திரத்தை பயன்படுத்த வேண்டும் எனும் போதும் தேவைப்படு கிறது. இங்கே உள்ளுணர்வு என்று குறிப்பிடப்படுவது ஏதோ உணர்வு சார்ந்த ஒன்று மட்டும் அல்ல. இது ஒரு தெளிவுநிலை. இது ஒரு விழிப்பு நிலையும் கூட!

*****

விஜியின் கண்களில் பட்ட ஏடுகள் அவளைக் குழப்பின. ஒரு கசட்டு வாசம் அடித்து முகம் சுளிக்கவும் வைத்தன. அறையில் நிலவிய வெளிச்சத்தில் அந்த எட்டில் உள்ள எழுத்துக்களை எடுத்துப் படிப்பதும் அசாதாரணமாக தோன்றவே அதில் மேலாக கிடந்த ஒரு நான்கைந்து கட்டுக்களை எடுத்து தன் தாவணிக்குள் மறைத்துக் கொண்டவள் அப்படியே புறப்பட்டுவிட்டாள்! புறப்படும் அவசரத்தில் பெட்டியை மூடக் கூடத் தோன்றவில்லை.

***

விடிந்துவிட்டது.

மாடப்பிறையில் கொட்டப்பட்டிருந்த கோபால் பல்பொடியால் வருக்கு வருக்கு’ என்று எச்சில் சொட்ட சொட்ட பல் விளக்கிக் கொண்டிருந்தார்

சுந்தரம்பிள்ளை. வேணுவும் பல் விளக்க கொல்லைப்புறம் வந்தார்.

“இன்னமும் பல்பொடிதானா!’’ என்று கேட்டபடியே தானும் பல்பொடியால் விளக்கத் தொடங்கினார்.

“அப்ப நீங்களும் நம்மள மாதிரிதானா... ப்ரூச்ச்ச்!’ உமிழ்வோடு பேச்சு ஆரம்பமானது.

“நான் லாம் டூத் பிரஷ் தான். இந்த காலத்துல பல்பொடியால பல் விளக்குனா என் பசங்க சிரிப்பாங்க”

“இங்க மட்டும் என்ன வாழுது! இதோ...” சுந்தரம் பிள்ளை கை காட்டும்போதே வாயில் பிரஷ்ஷை உழற்றிய படி வெள்ளை நுரைக்கட்டோடு எதிரில் வந்தான் தனஞ் ஜெயன். பிரஷ்ஷால் வாயோடு ஒரு யுத்தமே நடத்தினான். உள்ளே சமையல்கட்டில் நல்லம்மை காபி போட்டுக் கொண்டிருந்தாள். வென்னிரோடு கூடி கருப்பட்டி கொதிப் பதில் ஒருவித வாசம். அதன்மேல் காபி பொடியைக் கொட்டும்போது அது திரிந்து இன்னொருவித வாசம் பழக்கப்பட்டுவிட்ட மூக்குகளுக்கு அந்த வாசம். ஒரு பிடித்த விஷயம். தனஞ்ஜெயனுக்கு அந்த வாசமே மிகவேபிடிக்கும். கொதிநீரை முரட்டுத்துணி ஒன்றில் வடித்து பின் அதில் காய்ச்சிய பாலை சேர்த்து ஒரு மாதிரி ஆட்டி அதை காப்பியாக்கி எடுத்துவந்து தருவாள் நல்லம்மை.

தந்தாள்.

குடித்தான்

நிஜமாலுமே சுகமாக இருந்தது. எல்லாமே சற்று சுலபமான விஷயங்கள் தான். ஆனால், அதனால் ஜீவன் தீண்ட முடிவதுதான் ஆச்சரியம்.

“சரி தம்பி. காட்டுக்குப் புறப்படலாமா?”

“நான் தயாருங்க”

"அப்பா நான் வரணுமா?’ என்று தனஞ்ஜெயன் தயக்கம் காட்டினான்.

“பொறவு... முத நாள் சுடுகாட்டுக்கு வந்தவங்க மறுநாள் வந்து சாம்பல் அள்ளணும்ல!”

“இல்லாட்டி...”

“கேள்வி கேட்காம புறப்படு போ... போய் ஒரு ஆட்டோ

பிடிச்சுகிட்டுவா...”

தனஞ்ஜெயன் அரைமனதாக புறப்பட்டு சென்றான்!

***

விஜியின் வீடு பாதி ஒடு... பாதி தார்சு!

சாளரம் வழியாக சுள்ளென்று சூரியன் புகுந்் திருந்தான். மாராப்பு விலகியது கூட தெரியாதபடி படுத்திருந்தவளை அழுத்தமாக உசுப்பி எழுப்பினாள் அவளுடைய தாயான தேவகி.

“எழுந்திருடி... இப்படி தூங்குனா போற இடத்துல விளங்கி விளக்கேத்துன மாதிரிதான்...” என்றாள். ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்தபடி இருந்த விஜியின் அண்ணன் இளங்கோ அதைக்கேட்டு நிமிர்ந்தான். அவனுக்கு விஜியை யாராவது திட்டினால் பிடிக்காது.

“காலங்காத்தால ஆரம்பிச்சிட்டியா?” என்று கேட்டான்.

“நீ படிடா... பரிட்சைக்கு படிக்கறே பார். மார்க்கு போயிடப் போகுது” என்று அவனுக்கு இடக்காக ஒரு பதில் சொன்னாள் தேவகி.

விஜி எழுந்து அமர்ந்திருந்தாள்.

அம்மாவின் ராகம் அவள் வரையில் அரதப்பழசு. அலட்சியமாக தலைமுடியை திருத்தி மார்பையும் மூடிக் கொண்டாள். அந்த கணத்தில் ஏட்டுகட்டுகளின் ஞாபகம் வந்தது. பூனைபோல நடந்து சென்று புத்தக அலமாரியில் ஒரு மூலையில் வைத்து, அதன் மேல் புத்தகங்களைக் கொண்டு மூடியிருந்ததை விலக்கிவிட்டு பார்த்தாள் அப்படியே இருந்தது.

‘அப்புறமா வந்து உன்னை கவனிக்கறேன்’ என்று ஹால் பக்கம் விஜி வந்தபோது பேப்பரை விலக்காமலே பேச முயன்றான் இளங்கோ.

‘ராத்திரி ரொம்ப நேரமாயிடுச்சு போல!’

‘ஆமா. அத்தை ஊட்ல ஓயாத வேலை’.

“எவனோ வந்து செத்துப் போனதுக்கு அத்தையும் மாமாவும் எதுக்கு இந்தப் பாடு படறாங்க!”

“எவனோ இல்லையாம். செத்தவன் தனாவுக்கு அண்ணன் முறையாகுது. எனக்கே ஒண்ணும் புரியல”

“ஆமா. ஏதோ மரப்பொட்டியோட வந்தான்னு கேள்விப்பட்டேன். பொட்டிக்குள்ள அப்படி என்ன இருத் துச்சு?”

“எல்லாம் நாடி ஜோசிய ஏட்டு கட்டுங்கண்ணே!”

“நாடி ஜோசியமா. சரிதான் மாமா குடும்பத்தவங் களுக்கும் கதை உட்றதுதான் தொழிலாக்கும்?”

“நாடியை பத்தி தப்பா பேசாதேண்ணா...”

"அப்படியா... அப்ப வர்ற தேர்தல்ல அம்மா வரு வாங்களா. இல்ல ஐயாதானான்னு சொல்லிடுமா அந்த நாடி’’

இருவரிடமும் பேச்சு நாடியைப் பற்றி மாறியபோது வாசலில் ஒரு பிச்சைக்காரன்.

“தாயி... தர்மம்...” என்று அவனிடம் குரல்.

“இப்பெல்லாம் என்ன காலங்காத்தால வந்துட் றாங்க. போயி முதல்ல அவனைப் போகச் சொல்லு”

இளங்கோ கூறிட விஜி வாசல்புறம் சென்று பிச்சைக் காரனையும் பார்த்தாள். பஞ்சத்தில் அடிப்பட்டதுபோல அழுக்காக இல்லாதபடி ஒரு சன்யாசி போல தெரிந்த அந்த நபரின் கையில் மொழுமொழுவென்று ஒரு தடி, முகத் திலும் பளிச்சென்று பூசிய திருநீறு.

“போயிட்டு அப்புறமா வாங்க” என்றாள் விஜீ

“உன்கையால ஒரு கை அரிசி போடு தாயி. கட்டத் தொட்ட கைக்கு அதுதான் பரிகாரம்” என்றார். பகீர் என்றது விஜயலட்சுமிக்கு. வெறித்தாள். அதற்கு மேல் நிற்க விரும்பாத மாதிரி “சரி நான் வரேன். விதியை யாரால மாத்த முடியும்?” என்று முணுமுணுத்துக் கொண்டே விலகவும் விஜயலட்சுமிக்குள் ஏதேதோ எண்ணங்கள். விறுவிறுவென்று உள் ஓடியவள் கையில் அரிசியோடு வந்து பார்த்தபோது அவரைக் காணவில்லை. திரும்பி உள் வந்தாள்.

இளங்கோ நிமிர்ந்தான்.

“அந்தாளைப் போகச் சொன்னா அரிசியோட போய் நிக்கறே?”

“இல்லண்ணே. அவர் பேசுன பேச்சு” அவளால் முடிக்க முடியவில்லை.

“என்ன பேசுனான் அப்படி?

“ஒண்ணுமில்ல...”

“வரவர நீயும் மென்னு விழுங்க ஆரம்பிச்சிட்டே” என்றபோது தேவகி அவனருகில் வந்தவளாக “நீ பேப்பரை மடிச்சி வெச்சிட்டு எழுந்திருடா. சட்டு புட்டுன்னு குளிச் சிட்டு கடைக்குப் போய் வியாபாரத்தை கவனிக்கற வழியை பார்” என்றாள்.

"அதைத் தானே தினசரி செய்யறோம். என்ன வியாபாரமோ, இந்த அரிசிக்கடையை ஏறக்கட்டிட்டு கம்ப்யூட்டர் பிசினஸ் பண்ணலாம்னா கேட்கறிங்களா?” அவன் அலுத்துக் கொண்டான்.

"ஆ ஊன்னா இதைச் சொல்லு. இந்த வியாபாரத்துல வளர்ந்தவங்கத்தாண்டா நீங்க. இதுக்கென்ன குறை?”

"ஏன் கேட்க மாட்டே... மார்கெட்ல முந்தி நம்ம கடை மட்டும்தான் பெரிய அரிசிக் கடை. இப்ப இருபத்தி முணு கடை வந்துடுச்சி. யாராச்சும் ஆர்டர் பண்ணா டெம்போ வேன்ல டோர் டெலிவரி வேற. ஆனா, நாம இன்னமும் அந்த கை வண்டிக்கார கண்ணாயிரத்தோட ற்காலத்துலயே இருக்கோம்.”

இளங்கோ அலுத்துக் கொண்டான். அப்போது அவன் அப்பாவும் தனஞ் ஜெயனின் மாமனுமான தனசேகரன்பிள்ளை ஈரத்தலையை துவட்டியபடியே வந்தார். வரும்போதே “பேங்க் லோனுக்கு சொல்லி விருக்கேம்பா... ஏற்பாடாயிடும். நல்ல பெரிய இடமா பார்த்து முடிச்சு விரைவில் போர்டெல்லாம் வெச்சு அமர்க்களப்படுத்திடுவோம் "நீ புலம்பாம புறப்பாடு" என்றார்.

அதே வேகத்தில் திரும்பி “ஏ புள்ள தேவகி. மாப்ளை ஊட்டுக் காரங்ககிட்ட ஜாதகம் கேட்ருந்தேனே கொடுத்து உட்டாங்களா?” என்றும் கேட்டார்.

"தா... அந்த கண்ணாடிக்கு பின்னால இருக்குது யாருங்க காக்கி கவர். அதுக்குள்ள இருக்கு...”

அவரும் போய் கவரை எடுத்துப் பிரித்தார்.

“என்னப்பா... விஜிக்கு மாப்ளை பாக்க போறீங்களா?”

"பொறவு... வயசாவுதுல்ல?”

"இல்ல... நம்ம தனாவை.”

"வாயக் கழுவு. அவனுக்கு நான் இல்ல. ஒரு பிச்சக் ரன் கூட பொண்ணு தர மாட்டான். வேலை வெட்டி இல்லாம சுத்தறவனைக் கூட என்னால ஆளாக்க முடியும். ஆனா, முழுசா மூணு முடி மீசைன்னு முளைக்கறதுக்கு முந்தியே 'ஆத்தா, அபிராமின்னு ஒருத்தன் சாமி கும்புட்றான்னா அவன்கிட்ட ஜாக்ரதையா இருக்கணும்."

தனசேகரன் பிள்ளை பேச்சு விஜி காதிலும் விழுந்து அவள் முகம் வாடிப்போனது.

‘‘சாமி கும்புட்றது ஒரு தப்பாப்பா?"

"எப்படி கும்புட்றேன்னு இருக்குல்ல... சாமியார் மாதிரி இப்பவே கும்புட்டா நீ எல்லாம் என்னத்த கல்யாணம்னு பண்ணி புள்ள குட்டின்னு வாழப்போறே?"

அவர் பேசப்பேச அவர் எதற்குப் பயப்படுகிறார்என்பது இளங்கோவுக்கும் புரிந்தது. விஜிக்கும் புரிந்தது.அதற்கு ஒரு பதில் தர முடியாதபடி அனைவரிடமும் ஒருவித இறுக்கம். தனசேகரன்பிள்ளையும் அடுத்தடுத்து தலை சீவல், விபூதிப்பூச்சு, பனியன் அணிதல், ஜிப்பாவை எடுத்து மாட்டிக் கொள்ளுதல் என்று தன் அன்றாடங் களில் கரையத் தொடங்கிவிட்டார்.

விஜி மட்டும் அந்த ஏட்டுக்கட்டுகளை எடுத்துக் கொண்டு மொட்டை மாடி நோக்கி சென்றுவிட்டாள். நிழல் பொதிந்த ஒரு இடமாய் பார்த்து கட்டுக்களையும் பிரித்தாள். பின்னாலேயே வந்து நின்றான் இளங்கோவனும்!

8

‘எது எந்திரம்?

இந்த கேள்வியை விளங்கிக் கொள்வதே நோக்கம்.

இயங்குவது எதுவோ அதுவெல்லாமே எந்திரம்.

இயக்குவதற்கு கருவி, காரணம் இரண்டும் தேவை. இதில் கருவி எனப்படுவது வடிவம். காரணம் எனப் படுவதில்தான் அந்த எந்திரம் எதற்காக என்பது தெரிய வரும். ஒரு எடை எந்திரத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். அதில் நாம் ஏறி நிற்கும்போது அது நமது உடலின் நிறையை தனக்குள் வாங்கி எண்ணிக்கையில் காட்டும். மொத்தத்தில் எடையை காட்டுவது அதன்

செயல்பாடு. அதற்கே அது வடிவமைக்கப்பட்டது. அதில் ஒருவர் ஏறி நிற்கும்போது அதன் செயல்பாடு தொடங்கி ஏறியவர் இறங்கவும் முடிந்துவிடுகிறது. அது இயங்கும் போது வடிவமைக்கப்பட்டதற்கு ஏற்ப அது சில சப்தங் களை எழுப்பும்.

அமைதியாக துளியும் சப்தமின்றி இயங்கும் எந்திரம் என்று ஒன்று இருக்கவே வாய்ப்பில்லை. கைக்கடிகாரம் கூட காதில் வைத்து கேட்கையில் 'டிக்... டிக்...' ஓசை எழுப்புவதை உணர்கிறோம்.

இப்படி ஒரு காரணம் கருதி வடிவமைக்கப்பட்ட எந்திரங்களோடு அதன் இயங்கும் தன்மைக்கேற்ப ஒருவித சப்தமும் உருவாகிறது. இந்த சப்தத்தை வைத்தே கூட கண்ணால் பார்க்காமலே இது இன்ன வகை எந்திரம் என்று கூறிவிட முடியும்.

தொலைவில் பேருந்து வருகிறது. கழுத்தில் மணி கட்டிய யானை வருகிறது. தெருவில் சைக்கிள் பெல் எழுப்பியபடி தபால்காரர் வருகிறார். இங்கெல்லாம் இவர்களைப் பார்க்காமலே இது பேருந்து, இது யானை, இது தபால்காரர் என்று நம்மால் கூறி விட முடியும். காரணம் இதன் சப்தம்!

ஆம்... எந்திரத்தை விளங்க வழிவகை செய்வதே சப்தம்தான். அது இயங்கும்போது சப்தம் புறத்தில் ஒலித்து நாம் அதன் இயக்கத்தை உணர்கிறோம். இயங்காத போது அந்த சப்தம் எந்திரத்தோடு எந்திரமாக கடடுண்டு கிடப்பதாக கூறலாமா?

அதில் பிழையில்லையே?"

*****

இளங்கோவன் வந்து நிற்கவும் ஏட்டுக் கட்டுகளின் மேல் அவன் நிழல் விழுந்து காட்டிக் கொடுக்கவே விஜி திரும்பினாள். அண்ணனைப் பார்க்கவும் படபடத்தாள்.

"என்ன கைல?"

"எ...எ... ஏடுங்க."

"உன் கைல எப்படி..."

மரப்பொட்டியில் இருந்து எடுத்து வந்துவிட்டதை மென்று விழுங்கியபடி கூறினாள் விஜி.

“உனக்கெதுக்கு இந்த வேண்டாத வேலை. இதெல் லாமே சுத்த டுபாக்கூர் விஷயம். இதைப் போய் நீ பெருசா நினைச்சு தூக்கிட்டே வந்துட்டியா?”

“இல்லண்ணே. தனாவை பத்தி அப்படி இதுல என்னதான் இருக்குன்னு தெரிஞ்சிக்கலாம்னுதான்.”

“அவனைப்பத்தி தெரிஞ்சிக்க இந்த ஏடுங்க எதுக்கு? அதான் ஊருக்கே தெரியுமே. அவன் ஒரு சாமியார் பயன்னு உனக்குத் தெரியுமே...”

“ஐயோ அண்ணே... நீ சொல்றதெல்லாம் இல்லை. இனி அது எப்படி இருக்கும்? அதோட காலம் எப்படி இருக்கும்னு இதுல இருக்குதாம்!”

"அப்படின்னு நீ நம்பறியாக்கும்.”

"ஆமா".

“என்ன ஆமா... இதெல்லாம் டுபாக்கூர்னா நீ புரிஞ்சிக்க மாட்டியா? என் ஃப்ரெண்டு ராஜபாண்டி தனக்கு நாடி பார்க்க வைத்தீஸ்வரன் கோவிலுக்கே போய்ட்டு வந்துட்டான். அங்கேயும் நாடி பாத்தாங்க. ஆனா, அவங்க சொன்னதுதான் எதுவுமே நடக்கல. அப்படியும் அவன் விடலை. இந்த தமிழ்நாட்டுல எங் கல்லாம் நாடி பாக்கறாங்களோ அங்கல்லாம் போறதும் தனக்கு நாடி பாக்கறதும்தான் அவன் பொழப்பே. ஆனா, அதுல ஆயிரக்கணக்குல பணம் போனதுதான் மிச்சம்.”

“இங்க நான் சும்மாதானேண்ணே பாக்கப் போறேன்?”

அவனை மடக்கினாள் விஜி

“சரி... இப்படி கொண்டா இதுல எந்த முனிவர் என்னத்த புளுகி வெச்சிருக்கார்னு பாப்போம்.”

இறுதியாக இளங்கோவும் அவளோடு சேர்ந்து கொண்டான். கட்டைப் பிரித்து படிக்கவும் முயன்றான்.

ஆனால் , கூட்டெழுத்து முறையில் எழுதப்பட் டிருக்கும் அந்த ஏட்டு வரிகளை அவனால் வாசிக்கவே முடியவில்லை. அதோடு அவன் கையில் வைத்துக் கொண்டு தலையை குனிந்து வாசிக்க முனைந்தபோது அவன் தலையில் காக்கை ஒன்று எச்சமிட்டு விட்டுப் பானது. உடனே, அவன் கவனம் தலையைத் தடவி யல்லாம் எச்சமாகிவிட அதில் திரும்பியது.

“ச்சே... என்னன்னு பாக்கும்போது இப்படி தலைல காக்கா எச்சம் போட்ருச்சே..."

“சரிண்ணே போய் கழுவிட்டுவா. நான் பாத்துகிட்டு ருக்கேன்.”

“என்னத்த பாக்க... தலையும் புரியல, காலும் புரியல. இதை படிக்கவே ஒரு தனி மூளை வேணும்போல தெரியுது.”

"அப்ப நாம இதை படிச்சு புரிஞ்சுக்க முடியா தாண்னே?”

“ரொம்ப கஷ்டம்.”

அவன் சொன்ன சமயம் வெயிலுக்கு ஒதுங்கி மேலுள்ள ஒட்டு கூரைக்கு கீழ்பாகம் சற்று தலையை சரித்துக் கொண்டு போய் நின்றாள் விஜி. வாகாக கூரைச் சட்டத்தை பிடித்துக் கொண்டது கை!

அந்த கைக்கு இரண்டு அங்குல தூரத்தில் ஒரு கருந்தேள்! அண்ணனோடு பேசியபடியே அப்படியும் இப்படியும் அசையும்போது கையும் தேளை நோக்கி நகர்ந்து தேளைச் சீண்டவும் தேளும் காத்திருந்த மாதிரி ஒரு போடு போட்டது.

அடுத்த நொடி கையில் உதறல், வாயில் கதறல். இளங்கோவும் பதைக்கத் தொடங்கினான்.

"அண்ணே தேளு... தேளு...”என்று கையை உதறு உதறு என்று உதறினாள் விஜி. பதட்டமாக இளங்கோ அவள் கையில் இருந்து கீழே விழுந்த தேளை அடிக்கத் தேடினான். அது ஒட்டுச் சட்டங்களில் இடைவெளி களுக்குள் புகுந்து தன்னை மறைத்துக் கொண்டுவிட்டது.

விஜியின் அலறல் சப்தம் கீழ்வரை கேட்டு தேவகி மாடிக்கே ஏறி வரத் தொடங்கினாள். அம்மா வருவது தெரியவும் ஏட்டுக் கட்டை எடுத்து கூரைச்சரிவில் கிடைத்த இரண்டு இடுக்குகளில் மறைக்க முயன்றான் இளங்கோ.

“என்னாடி என்னா சத்தம்...?”

“அது வந்தும்மா விஜியை தேள் கடிச்சிடிச்சு...”

“தேளா! இங்க எங்கடா இரண்டு பேரும் வந்தீங்க!”

“ஆமா... இப்ப அதுவா பெருசு முதல்ல அவ கைய பாரு.”

“உன் தலைல என்னடா?

“காக்கா எச்சி...”

“உன் தலைல காக்கா எச்சி, இவ கையில தேள், ராத்திரில என் கனவுல என்னை மாடு முட்ட வருது, எதுவும் நல்லதுக்கா தெரியலியே, முருகா!”

புலம்பியபடியே தேவகி விஜியின் கையைப் பிடித்து இழுத்துப் பார்த்தாள்.

“அம்மா கடுக்குதும்மா. வலி உசுர் போகுதும்மா...”

“நல்லா போகட்டும். கீழ ஊர்ப்பட்ட வேலை கெடக்கு. அரிசியை எடுத்து இட்லிக்கு ஊறப்போடச் சொன்னேன். இங்க மொட்ட மாடியில எந்த ரம்பை ஆட்றான்னு பாக்க வந்தே?”

“அம்மா முதல்ல சுண்ணாம்பை வெச்சு ராவுத்தர் கிட்ட கூட்டிட்டு போய் மந்திரிக்கற வழிய பாரு. இங்க கூரைல கைய வெச்சுக்கிட்டு நிக்கும்போது தேள் வந்து கடிச்சிட்டு சூதானமா ஒடியும் ஒளிஞ்சிடுச்சி. நான் போய் முதல்ல தலை முழுக்கு போட்டுட்டு வரேன்” என்று இளங்கோ அவளிடம் ஜாடைகாட்டியபடியே மாடிப் படிகளில் இறங்கினான். அவளும் தாயோடு படி இறங்கத் தொடங்கினாள். திரும்பி ஒரு பார்வை பார்த்தபோது கூரைச்சரிவில் இடுக்கில் அந்த ஏட்டு கட்டுகள்!

***

அதிசயமாக வைகையில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந் தது! ஒரே முட்செடியும் தாழைச்செடியுமாக மண்டிக் கிடந்த ஆற்றுவெளியை துப்புரவாக சுத்தப்படுத்தியிருந் தார்கள்.

வைகை மேல் மதிப்பும் மரியாதையும் உடைய ஒரு கலெக்டரின் செயல்! அதனால் புரண்டு வரும் தண்ணி ரிலும் ஒரு தெளிவு.

அதில் சுந்தரம்பிள்ளையும் தனஞ்ஜெயனும் ஒரு பக்கமும், வேணு இன்னொரு பக்கமுமாக மூழ்கி மூழ்கி எழுந்தனர்.

தனஞ்ஜெயன் முகத்தில் ஒரு சின்ன ஆச்சரியம்.

"அண்ணே... இத்தனை வருசமா மதுரைல இருக்கேன். ஆனா, இன்னிக்குதாண்ணே வைகை ஆத்துல குளிக்கறேன்” என்றான்.

“ஆமாம் தம்பி. எனக்கு நினைவு தெரிஞ்சு நானும் இன்னிக்குதான் குளிக்கறேன். வைகை ஆத்துல மழை காலங்கள்ல தண்ணி ஒடும். ஆனா,

குளிக்கத் தோணாது. ஏன்னா வருசம்பூரா எங்க ஊர்க்காரங்க இதை ஒரு பெரிய சாக்கடையால்ல ஆக்கி வெச்சுருக்காங்க. அந்த அரு வெறுப்பு.”

“இன்னிக்கு அந்த அருவெறுப்பு இல்லீங்களா?”

“இதை விட பெரிய அருவெறுப்பு எழவுத்தீட்டுல்ல. அத்தோட ஊட்டுக்கு போய் ஊட்டையும் தீட்டு மண்டல மாக்காம இருக்கத்தானே நம்ம பெரியவங்க ஆத்தோரமா சுடுகாட்டை வெச்சாங்க?”

“ஒ நீங்க அப்படி வர்ரீங்களா?”

“பொறவு... அதோட அதிசயமா எங்க வைகை ஆத்தையும் சுத்தப்படுத்தி முள்ளுச் செடியெல்லாம் இல்லாம பண்ணியிருக்காங்களே. எப்பவாவது ஒரு சில தெய்வபக்தி உள்ள அதிகாரிங்க இப்படி வந்துநல்லது பண்றாங்க...”

“உண்மைதாங்க... போன மாசம் திருநெல்வேலி பக்கமா ஒரு வேலையா போயிருந்தேன். அப்ப தாமிர பரணி ஆறு கண்ணுலப்பட்டது. என் கண்ணுல ரத்தம் வராத குறை?”

வேணுவிடமும் ஆற்றாமை மீறிடத் தொடங்கியது.

“எந்த ஆத்தை இந்த ஜனக் கூட்டம் விட்டு வெச் சிருக்கு. மதிப்பு தெரியாம நாம் அதை அழிக்கிறோம். பொன் திருடலாம். பொருள் திருடலாம். ஆனா ஆத்தை யேல்ல திருடறாங்க.”

துண்டால் உடம்பை துவட்டியபடியே சுந்தரம் பிள்ளை அலுத்துக் கொண்டார். அவர்கள் பேச்சை கேட்டபடி இருந்த தனஞ்ஜெயனுக்குள் பலவிதமான கேள்விகள். குறிப்பாக சாவுத்தீட்டு பெரிய அருவெறுப்பு என்று அவர் சொன்னது? அதைப் பற்றி கேட்க விரும்பி னான். ஆனால் சுந்தரம் பிள்ளையிடம் ஒரு அவசரம் தெரிந்தது.

“தம்பி இன்னிக்கு என்கிட்ட ஜோசியம் பாக்க பெரிய புள்ளிங்க ஒரு இரண்டு பேர் வர்றாங்க. பத்துமணிக்கு வரச் சொல்லியிருக்கேன். மணி இப்ப எட்ரையாவுது. கிளம்பிப் போனா சரியா இருக்கும். நீங்க வீட்டுக்கு வந்து ஒரு வாய் சாப்ட்டு பொறப்படுங்க. அப்படியே முடிஞ்சா பத்தாவது நாள் காரியத்துக்கும் வந்துடுங்க”

“நல்லதுங்க...” என்றார் வேணு.

பின் மூவரும் ஈர உடையுடன் ஆட்டோ ஒன்றில் ஏறிக்கொள்ள அதுவும் புறப்பட்டது.

***

ராவுத்தரை பார்க்க வித்தியாசமாக இருந்தார். தலையில் பெரிய தலைப்பாகை, வெகு நீண்ட தாடி... உலர்ந்து வெடித்த உதடுகள்! நெற்றி உச்சியில் தொழுகை யின்போது தரை தட்டியதால் உருவான சன்னமான தழும்பு. வேட்டி ஜிப்பா என்கிற எளிய தோற்றம்.

அவருக்கு பின்னாலே சுவற்றில் அரபி மொழியில் எழுதப்பட்ட எந்திரம் ஒன்று. பக்கத்தில் ஏதோ ஒரு தர்காவின் புகைப்படம்.

ராவுத்தர் மட்டும் மரப்பலகை ஒன்றின் மேல் அமர்ந்திருந்தார். கையில் ஒரு நீண்டதுண்டு. விஜி அவரை நெருங்கவும், அவள் கை நாடியை பரிசோதித்துவிட்டு தேள் கடித்த இடத்தையும் பார்த்தார். தேவகி அடப்பமாக கண்ணாம்பை வைத்திருந்தாள். அதை பார்த்தபடியே துண்டை எடுத்து விறுவிறுவென்று மின்விசிறி சுழல்வது போல் சுழற்றியபடி உதட்டிலும் ஏதோ மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார் ராவுத்தர். அந்த துண்டில் விஜியின் முகத்தை வருடியும் விட்டு, மூன்று முறை முகத்தில் ஊதி, ஒரு கறுப்பு கயிறை தாயித்து ஒன்றுடன் எடுத்து அவள் கையிலும் கட்டிவிட்டார்.

கூடவே இருந்த தேவகி, "ஐயா, சரியாயிடும்ல!" என்றாள்.

“அதுக்குதானம்மா பாடம் போட்டுருக்கேன். கொஞ்ச நேரத்துல விஷம் இறங்கிடும். வீட்டுக்குப் போன உடனே உக்கார வெச்சு மிளகா உப்பைக் கையில் எடுத்து சுத்திப் போடு. அப்ப உச்சந்தலையல இருந்து மூணே மூணு முடியை வெடுக்குன்னு புடுங்கி அந்த உப்பு மிளகாயோட அடுப்புல சேர்த்து போட்டுடு...” என்றார்.

அதற்கு மூன்று ரூபாய் ஐம்பது காசுகளை அருகில் உள்ள தட்டில் போடச் சொன்னார். கையில் கொடுத்த போது வாங்க மறுத்துவிட்டார்.

9

‘ஒரு எந்திரம் இயங்கும்போதுதான் சப்தமிடும். அந்த சப்தமே எந்திரத்தின் இயங்கும் தன்மை எப்படிப்பட்டது என்பதை உணர்த்தி விடும். ஒரு பேருந்து அதற் குண்டான இயக்க கதியில் செல்லும் போதும் எழும் சப்தத்திற்கும், அதில் மாறுதல்கள் ஏற்பட்டு கோளாறுகள் காரணமாக எழும் சப்தத்திற்கும் அதை இயக்குபவருக்கு வித்தியாசம் தெரியும்.

சப்தம் என்பது இயக்கம் எப்படிப்பட்டது என்பதை உணர்த்துவதாகும். இந்த சப்தத்திடம்தான் எல்லாம் இருக்கிறது. மந்திரம் என்பதும் ஒரு வகை சப்தம்தான் ஒரு மொழியிலுள்ள ஒவ்வொரு வார்த்தைகளுமே கூட சப்தம்தான். வார்த்தை சப்தங்கள் பேசுபவர் மனதில் இருந்து வெளிப்பட்டு கேட்பவர் மனதில் செயலாற்று கிறது. மொத்தத்தில் சப்தம் என்றாலே ஏதோ ஒரு செயல் என்று பொருள் கொள்ளலாம்.

இதில் சப்தமானது இரண்டு வகைப்படுகிறது. ஒன்று, மொழிக்குள் அடங்கிய வார்த்தைகளின் சப்தம்! இன்னொன்று, இயற்கையாக எழும் சப்தம்! இதில் வார்த்தை சப்தம் ஒவ்வொரு மொழிக்கு ஏற்ப மாறும். உதாரணமாக 'வா' என்று ஒருவரை அழைக்கிறோம். இதையே ஆங்கிலத்தில் "கம்' என்று கூறுவோம். ஹிந்தி, தெலுங்கு என்று ஒவ்வொரு மொழியிலும் இது மாறியபடியே இருக்கும். எனவே, மொழிக்குள் அடங்கிய வார்த்தைகளில் சப்தம் என்பது மொழிக்கு மொழி மாறும். ஆனால், எந்திர சப்தமும் இயற்கையாக எழும் சப்தமும் மாறாதபடி இருக்கும்.

உதாரணமாக இடி இடிக்கும் சப்தம் அமெரிக்கா விலும் சரி, இந்தியாவிலும் சரி ஒன்றே போலத் தான் இருக்கும். அதே போல் ஒரு கண்ணாடி ஜாடி கீழே விழுந்து உடையும் சப்தம்... இதுவும் உலகம் முழுக்க ஒன்று போல் இருக்கும்.

இப்படி மாறும் சப்தம், மாறாத சப்தம் என்று சப்தத்தை இருவிதமாக பிரிக்கலாம். இதில் மாறும் சப்தத்துக்குள் வருவது தான் மொழி, இசை எல்லாம்! இசைக்கு மனதை மயக்கும் வல்லமை உண்டு. அதே சமயம் சில மாறாத சப்தங்களுக்கு இயற்கையையே அசைக்கிற வல்லமை உண்டு. இந்த மாறாத சப்தங் களைத் தான் மந்திரங்கள் என்கிறோம். இந்த மந்திரங் களை உச்சரிக்கும்போது அவை அலைகளாக பரவி எதிரில் உள்ள அனைத்தின் மீதும் மோதுகிறது. மோதி அழிந்து இல்லாமலும் போய்விடுகிறது. ஆனால், கருங்கற்களின் மேலும் செப்புத் தகடுகளின்மீதும் மோதும்போது அங்கு இது அழிந்துவிடாமல் எதிரொலிக் கவும் சுற்று சூழலில் ஒரு மனிதன் தன் புறவிழிப்பு நிலையில் உணர முடியாத நிலையில் அதே நேரத்தில் அகவிழிப்பு நிலையில் உணர முடிந்ததாகவும் இது வினையாற்றுகிறது!

இந்த வினைப்பாட்டுக்குள்தான் நம்ப முடியாத பல அதிசய செயல்களும் ஒளிந்துள்ளன!

*****

ராவுத்தரின் செயல் தேவகியை விட விஜிக்குதான் அதிக ஆச்சரியத்தை அளித்தது. ஆனால், ராவுத்தரோ இந்த வித்தையை தகுந்த குருநாதர் ஒருவரிடம் இருந்து கற்றவர். அந்த குருநாதர் ராவுத்தருக்கு உபதேசிக்கும் போதே, 'அற்புதமான இந்த வித்தையை நீ காசுக்கு விற்று ஆசை உள்ள சராசரி மனிதனாக ஆகிவிடாதே. அதே சமயம் இதை இலவசமாக கொடுத்தாலும் இதற்கொரு மதிப்பு இருக்காது. எனவே, உசிதமான ஒரு எளிய தொகையை நிர்ணயம் செய்துவிடு. அதைவிட கூடுதலாக கொடுத்தாலும் வாங்காதே குறைவாகக் கொடுத்தாலும் வங்காதே. அப்படி வசூலிக்கும் தொகையையும் உன் கையில் தீண்டாதே. அதை அப்படியே ஏதாவது நல்ல காரியத்துக்கு கொடுத்து விடு. ஏனெனில், நோயுற்று துன்பத்தில் இருப்பவன் தரும் பணத்திடமும் பெருமூச்சும் வருத்தமும் தொற்றிக் தொற்றிக்கொண்டிருக்கும். அருளாளர்கள் எக்காரணம் கொண்டு இந்த இரண்டும் தொற்றிக் கொள்ள இடம் தரக்கூடாது. உன்னுடைய வாழ்க்கை இந்த சேவையால் உருவாகும் புண்ணிய பலத்தோடு வேறு விதத்தில் அல்லா உனக்கு செய்யும் உதவிகளோடு நல்லபடியாக நடக்கும்' என்று கூறி யிருந்தார்.

அதை ராவுத்தரும் உறுதியாகப் பின்பற்றியதால்தான் காசு பணத்தை அவர் கையால் தொடுவதில்லை. உள் ளடக்கமான அந்த உண்மையை மட்டுமல்ல, அவர் பாடம் போடுவதில் தேளின் விஷம் எப்படி ரத்தத்தில் இருந்து பிரிந்து தனக்கு குணத்தை ஏற்படுத்தும் என்பதும் அவ ளுக்கு புரியவில்லை.

திரும்பி வரும்போது ஒரு சைக்கிள் ரிக்ஷாவில்தான் வந்தார்கள். ரிக்ஷாக்காரர் தான் தடுத்து தனது ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டார். "கொடுக்கறத கொடுங்கம்மா'. இந்த ரிக்ஷாவை விட்டாலும் என்கிட்ட முதல்னு எதுவும் இல்லம்மா..!" என்று வருத்தமாய் பேசியது தேவகியை உருக்கிவிட்டது. ரிக்ஷாக்காரர் சிரமப்பட்டு மிதிப்பதைப் பார்க்கும்போது பாவமாக இருந்தது. விஜிக்குள்ளேயோ ஒரே குழப்பம்.

ஒரு பக்கம் தான் எடுத்து வந்த ஏடுகள். அதன் புரியாதவிபரங்கள். மறுபக்கத்தில் ராவுத்தரின் அணுகுமுறை பற்றிய சிந்தனை. அதை தேவகியிடம் கேட்கவும் செய்தாள்.

"ஏம்மா தேள் கடிச்சா டாக்டர் கிட்டப் போய் ஊசி போட்டுக்காம இப்படி பாடம் போட்டுக்கறது சரியா?"

"இப்ப எதுக்கு இந்தக் கேள்விய கேக்கறே?"

"இல்ல... பாடம் போட்டா எப்படி விஷம் வேலை செய்யாமப் போகும்?"

“இப்ப கடிச்ச இடத்துல கடுப்பு இல்லதானே!”

“லேசா இருக்குது!”

“குறைஞ்சருச்சா இல்லையா?”

“குறைஞ்சிருக்கு. ஆனா...”

“ஆனா... ஆவன்னான்னு இழுக்காதே. தேள் கடின்னா பாடம் போட்றதுதான் நம்ம வழக்கம். டாக்டர்கிட்ட போனா எக்ஸ்ரே, ஊசின்னு அவங்க லஞ்சம் கொடுத்து சீட்டு வாங்கி படிச்சதுக்கெல்லாம் சேத்து வெச்சு நம்ம தலைலதான் கைய வைப்பாங்க.”

ஆனா, ராவுத்தமாருங்க அப்படி கிடையாது. அவங்க சட்ட திட்டம் உள்ளவங்க, காசு அவங்களுக்கு பெருசு கிடையாது. பாத்தேல்ல. காசை கைலயே தொடாததை...”

‘‘இதெல்லாம்தாம்மா எனக்குப் புரியல. துண்டால விசிறி விட்டு என் மூஞ்சில மூணு தடவை ஊதினா உள்ளுக்குள்ள ரத்த துல கலந்து ட்ட விஷம் எப்படி இறங்கும்?”

“இப்ப இதை எல்லாம் தெரிஞ்சிகிட்டு என்னடி பண்ணப்போறே? பேசாம வா. அப்புறம் என்னை தேள் கடிச்சிச்சின்னு யார் கிட்டயும் சொல்லி வைக்காதே. வயசுப் பொண்ணை தேள் கடிச்சா ஏதோ தீட்டுக்குத்தம் போல இருக்குன்னு முடிவு பண்ணி உன்னைத்தான் தப்பா நினைப்பாங்க.”

“இது என்னம்மா புதுசு புதுசா சொல்றே, தேள் கடிக்கு பின்னால தீட்டு குத்தமெல்லாம் இருக்குதா?”

“பின்ன... நேத்து உன் அத்தை வீட்டுக்கு போய்ட்டு வந்தேல்ல; சாவு வீடுதானே அது. தலை முழுக்க போட் டுட்டு படுன்னேன். நீ ஒழுங்கா குளிச்சிருக்க மாட்டே..”

“அது சரி... தீட்டுன்னா என்னம்மா?”

“தொண தொணன்னு கேள்வி கேட்காம பேசாம வாடி...” தேவகி பதில் சொல்லத் தெரியாத இயலாமையை கோபமாகக் காட்டி அவள் வாயையும் அடைத்தாள். சைக்கிள் ரிக்ஷா... கிரீச்... என்கிற சக்கர சப்தமும் ஒரு சீரான வேகத்தில் சென்றபடி இருந்தது!

வீட்டுக்குள் வந்தவர்கள் வாசலிலேயே ஒரு முறை கால்களை கழுவிக்

கொண்டனர். ஈர உடைகள் கிட்டத் தட்ட காய்ந்து விட்டிருந்தன. அதே சமயம் சுந்தரம் பிள்ளை முன்பே கூறியது போல அவரிடம் ஜோதிடம் பார்க்க ஜாதக நோட்டுடன் இரண்டு பேர் வந்து காத்திருந் தனர்.

சுந்தரம் பிள்ளையும் அவர்களை பார்க்கவும் தொழில் நிமித்தமாகத் தோன்றும் பதட்டங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன.

“வந்து ரொம்ப நேரமாச்சுதோ?”

“இல்லய்யா... இப்பதான் ஒரு பத்து நிமிசம் இருக்கும்.”

“பத்துமணிக்கு வந்தா போதும்னு சொல்லியிருந் தேனே, மணி ஒன்பதுதான் ஆகுது. இப்பவே வந்துட் உங்களே...”

“அதனால என்னய்யா நீங்க பத்து மணிக்கே வாங்க”

அவர்களிடம் அவர் பேசியபடி இருக்க தனஞ் ஜெயன் உள்ளே பெட்டியை பார்த்தான். அது திறந் திருக்கவும் சற்று பகீர் என்றது. ஒடிப்போய் உள்ளே பார்த்தான். ஏட்டுக்கட்டுகள் அப்படியே இருந்தன. ஆனால் விஜி எடுத்துச் சென்றதை உணர முடியவில்லை.

“அங்க என்னலே பண்ணுறே?”

“பெட்டி திறந்திருக்குப்பா...”

“உங்கம்மா ஒருவேளை உள்ள என்ன இருக்குன்னு பாத்திருப்பாளாக்கும். நீ அதை மூடி வெச்சுட்டு உன் சோலிய பார். அந்த அறைல எனக்கு இவங்களோட சோலி கெடக்கு” என்றார். அதே வேகத்தில் வேணுவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றவர் மனைவியை அழைத்து, “நல்லம்மை... ஆகாரம் தயாரா?” என்றும் கேட்டார்.

“ஆச்சுங்க... இடியாப்பமும் தேங்காப்பாலும் செஞ் சுருக்கேன்.”

“நல்லது... தம்பிக்கும் எனக்கும் இலை போடு” என்றார்.

தனஞ்ஜெயன் கவனமெல்லாம் அந்த ஏட்டுக்கட்டு களின் மேல்தான் இருந்தது. அவைகளில் தன்னைப் பற்றிய ஏட்டுக்கட்டை எடுத்துக் கொண்டு உடனேயே திருப் பரங்குன்ற மலைக்குப் போய் அங்குள்ள சித்தர் சாமியிடம் காட்டி இதெல்லாம் எப்படி சாமி? என்று கேட்கும் ஆவல் கொந்தளிப்பில் இருந்தது.

“தனா... நீயும் சாப்பிட வாய்யா...” என்றாள் நல்லம்மை.

“இல்லம்மா... நான் பொறவு சாப்பிட்றேன்” என்றவன் வேகமாகப் பொட்டியருகே சென்று மேலாக கிடந்த இரண்டு கட்டுகளை தனக்கானது என்று கருதி எடுத்துக் கொண்டு மளமளவென்று வெளியேறத் தொடங்கினான்.

பத்து மணிக்கே மலைப்பாறையில் உஷ்ணம் தகிக்க ஆரம்பித்திருந்தது. மேலாக அமர்ந்திருந்த குரங்குகள் மரக்கிளைகளை தேடத் தொடங்கியிருந்தன.

தனஞ்ஜெயன் அந்த மலைப் பாதையில் நடந்தபடி இருந்தான். நடையில் நல்ல வேகம். ரகசியங்கள் எப் பொழுதும் சுவாரஸ்யமானவை. அவைகளை தெரிந்து கொள்வதில் மனித மனங்களுக்கும் அலாதி விருப்பம்.

அந்த கிழட்டுச் சித்தரும் வழக்கமான இடத்தில் பாறை நிழலில் அமர்ந்தபடி சுருட்டு பிடித்துக் கொண் டிருந்தார். அவரைப் பார்க்கும் முன் அந்த சுருட்டு புகை வாடை தனஞ்ஜெயனை அடைந்து அவர் இருப்பதை ஊர்ஜிதம் செய்துவிட்டது. அதுவே அவனுக்கொரு உற்சாகத்தையும் அளித்தது. அவனும் மூச்சிரைக்க அவர் எதிரில் சென்று நின்றான். கையில் ஏட்டுக்கட்டுகளை வைத்திருந்தான். அவரும் புகை மூட்டத்துக்கு நடுவில் அவனை ஏறிட்டார்.

"சாமி."

“என்ன சாமி எங்க வந்தே?”

“உங்கள பார்க்கத்தான் சாமி... பாத்தீங்களா கைல ஏட்டுக்கட்டு”

“என்ன... உன்னோட புராணமா?”

"ஆமாம் சாமி. என்ன பத்தி இதுல அப்படியே இருக்குது சாமி. என்னால நம்பவே முடியல...”

அந்த ஏட்டைப் பிரித்து பார்க்காமல் உண்மையை உணராமலே பேசினான்.

“சரி அதுக்கென்ன இப்போ?”

"இதெல்லாம் எப்படி சாமி... எப்படி சாமி இது சாத்தியம்?”

அவன் பட படவென்று கேள்விகளைக் கொட்டினான். அவர் சிரித்தார். பின் சுருட்டை வலிந்து ஒரு இழுத்தார். புகையும் வெளியேறியது.

ஆனால், பதில் கூறவில்லை.

"சாமி எனக்கு பதில் சொல்லுங்க சாமி...”

"சொன்னால்லாம் புரியாதுடா...”

"நீங்க சொல்லுங்க சாமி நான் புரிஞ்சுக்கறேன்.”

"புரியாதுடான்னா விட்டுடனும். அப்புறம் இதை இப்படி எல்லாம் கண்டபடி எடுத்துகிட்டு சுத்தக்கூடாது. இப்பவே போய் இது எங்க இருந்திச்சோ அங்க வெச்சுரு. அதுலயும் நீ தீட்டுக்காரன். பத்து நாள் துக்கத்தோட தீட்டகாக்க கடமைப்பட்டவன். உன் கவனம் வேற எதுலயும் போகக் கூடாது.”

“தீட்டா... அதான் காலையில வைகை ஆத்துல குளிச்சுட்டேனே?”

“அதுல சுடுகாட்டு தீட்டு போயிருக்கும் மனசுல படிஞ்ச துக்க தீட்டு போயிருக்குமா?”

“என்னென்னமோ சொல்றீங்களே சாமி. தீட்டுன்னா என்ன சாமி?”

“லக்னத்துல இருள் படிஞ்சா தீட்டு...”

“எனக்கு லக்னம்னாலே என்னன்னு தெரியாதே சாமி!”

“நீ எல்லாம் ஒரு ஜோசியக்காரன் மகன்! பைத்தியக் காரா. லக்னம்ங்கறது ஜாதகத்துல உன் உசுர் ஸ்தானம். உடம்புல தலை பாகம் மாதிரி அது. இருட்டுல எதை யாவது பார்க்க முடியுமா?”

“முடியாது.”

“அப்படித்தான் தீட்டு இருக்கும்போதும் எதை செஞ்சாலும் அது விளங்காது. தீட்டும் ஒரு இருட்டு.”

“சரி சாமி... அது எப்படி இப்ப என் மேலே படிஞ் சிருக்கறதா சொல்றீங்க?”

“செத்தவன் உன் பங்காளிதானே?”

“ஆமாம்.”

“பங்காளிங்கறவன் யாரு, ஒரு மரத்துல இருக்கற பல கிளைகள்ல ஒரு கிளைதானே?”

“இது ஓரளவு புரியுது.. இன்னும் கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க சாமி...”

“அந்த கிளைல ஒண்ணு ஒடிஞ்சு போச்சு.. அதோட பாதிப்பு மரத்தோட எல்லா பாகத்துக்கும் போகத்தானே செய்யும்?”

“அதனால?”

“என்ன அதனால... அந்த பாதிப்புல இருந்து முதல்ல வெளியவா...”

“நான் நல்லாதான் சாமி இருக்கேன். என்னால எந்த பாதிப்பையும் உணர முடியில சாமி...”

“ஒரு கிருமி உடம்புக்குள்ள நுழையும்போது நம்ம ளால உணர முடியாது. அது உள்ள நுழைஞ்சு உட்கார வேண்டிய இடத்துல உட்கார்ந்து வளர வேண்டிய விதமா வளர்ந்த பிறகுதான் வியாதியா அது வெளில தெரியவரும். தீட்டும் அப்படித்தான். அது ஆக்ரமிக்கும்போது ஞானத் தாலதான் உணர முடியும். உணர்வால உணர அது உடம்பு சார்ந்தது இல்ல. மனது சார்ந்தது!”

“என்னென்னமோ சொல்றீங்க... உங்களுக்கு எல்லாமே தெரிஞ்சிருந்தும் எதையும் தெளிவா புரியவைக்க மாட் டேங்கறிங்க.

எனக்கோ இந்த வாழ்க்கையே விசித்திரமா இருக்கு. எங்கிருந்தோ ஒருத்தர் வந்து என் வீட்ல உயிரை விட்றாரு. நல்லா இருந்த வீடு சாவு வீடாயிடிச்சு. எல்லாமே புதிரா இருக்கு.”

‘‘இதெல்லாமா புதிரு? இன்னிய தேதில இருந்து 13வது நாள் நீ அந்தாதி முழுவதையும் படிச்சு முடிக்கப் போறியே... அன்னிக்கு இருக்கு புதிருக்கெல்லாம் புதிர்”

“பதிமூணாவது நாளா... அது என்ன கணக்கு?

“செத்தவன் பூமியை விட்டு வானம் போய்ச் சேர பத்து நாள்! அந்த துக்கத்துல இருந்து வெளிய வந்து நீ கர்ம கணக்கு தீர்க்க இரண்டுநாள். பதிமூணாவது நாள் மொத்த தீட்டும் போய் தீபம் ஏத்தற தகுதி உனக்கு வருது. அதுக்கு பிறகுதான் அந்தாதியை நீ எடுத்து படிக்கலாம். இந்த முறை எந்த தடையும் உனக்கு வராது. ஏன்னா காலம் கூடி வந்துடுச்சி. உனக்கு வழிகாட்ட கச்சிதமா ஏடுகளும் வந்து சேர்ந்துடுச்சி. அந்தாதியைப் படிச்சு முடி. அப்புறம் நீ என்கிட்ட கேள்வி கேட்கமாட்டே என் கேள்விக்கு கூடநீ பதில் சொல்றவனா மாறிடுவே.

முட்டாபயலா இருந்த காளிதாஸ் எப்படி பெரிய கவிஞனா மாறினான்? இப்படிதான்! அந்த காளமேகம்மட்டும் என்ன... அவனும் இப்படிதான். நீ அவங்க வரிசைல வந்துருக்கறவன். நானே உன் தயவை நாடி வரப்போறேன். நீ என்னடான்னா என்கிட்ட வந்து சாமி சாமின்னு அவசரப்பட்றியே!

போ... போய் ஒழுங்கா தீட்டைச் காத்து... அந்தாதியைப் படி... அதுவரை என்னைப் பார்க்க நீ இந்த பக்கமெல்லாம் வரவே கூடாது. ஞாபகம் இருக்கட்டும்.”

அவரின் முடிவான பேச்சுக்குள் ஆயிரமாயிரம் அர்த்தங்கள். ஆனால், அதைப் புரிந்துகொள்ளும் திராணி தான் தனஞ்ஜெயனிடம் இல்லை!

10

எந்திர விசைப்பாட்டின் அதிசயங்களை இன்றுள்ள சில ஸ்தலங்களை வைத்தே நாம்உணர முடியும். இன்றைய உலகின் எட்டாவது அதிசயம் என்று திருப்பதியை சொல்லலாம். ஒரு நாளின் இருபத்தி நான்கு மணி நேரத்தில், மூன்றில் இருந்து நான்கு மணி நேரங்கள் நீங்கலாக, இருபது மணி நேரம் வரை இந்த கோவில் திறந்திருந்து சேவை செய்கிறது. இந்த இருபது மணி நேரமும் ஒரு வினாடிக்கு ஒருவர் என்று உள்ளே பெருமாளை தரிசனம் செய்கிறார். இதனால் இந்த மலை மேல் எப்பொழுதும் ஜனத்திரள் பெருகி வழிந்தபடியே உள்ளது.

உலகின் மற்ற மதங்களிலுள்ள பெரும் இறை ஸ்தலங்களிலும் கூட்டம் கூடுகிறது. ஆனால், அங்கெல்லாம் வருடத்தின் **365** நாட்களும் கூட்டம் கூடுவ தில்லை. அதற்கென்று ஒரு காலம் இருக்கிறது. ஆனால், திருப்பதிக்கு விசேஷமான நாள், விசேஷமில்லாத நாள் என்கிற பாகுபாடே இல்லை. இங்கு எல்லா மாதங்களும் எல்லா நாட்களும் ஜனத்திரள்தான். இங்கேதான் உண்டியலில் காசு போடுவதற்கு மனிதர்கள் வரிசையில் நிற்கிறார்கள். சில நாட்களில் உண்டியலுக்கான வரிசையில் ஒதுங்கி மிதிபடும் நிலை எல்லாம் மற்படுகிறது. இதெல்லாம் எதற்கு? நம்மிடம் உள்ள ளத்தை கொடுப்பதற்கு!

மனித இனத்துக்கு எதையும் வாங்கத்தான் பிடிக்கும். கொடுப்பது எனும்போது கை பின்னேசெல்லத்தான் விழையும். ஆனால், திருப்பதியில் நேர் எதிராக மக்கள் நடந்து கொள்கிறார்கள். ஒரு உலக மகா கஞ்சன் கூட திருப்பதி உண்டியலில் தன் பங்குக்கு ஒரு **50**

ரூபாயாவது போடாமல் வருவதில்லை. காரணம் ஒரு வித நம்பிக்கை என்று தீர்மானமாகச் சொல்லலாம். அந்த உண்டியலுக்குள் ஒரு ரூபாயை நாம் போட்டால் நமக்கு நிச்சயமாக பத்து ரூபாய் திரும்ப எங்கிருந்தாவது கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கை.

இப்படி ஒரு போட்டி போட்டு கொடுக்கும் செயல் பாட்டை உலகில் வேறு எங்கும் பார்க்க முடியாது. இதற்கு காரணமே ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த "தனாகர்ஷண யந்திரம்" என்பதுதான் இதன்பின் உள்ள விந்தையான உண்மை!

இந்த யந்திரத்தின் வினையால்தான் திருப்பதியே செல்வப் பட்டினமாய், பசியில்லாத பூமியாய், மிகுந்த மன நிறைவடைந்தவர்கள் நடமாடும் ஒரு பகுதியாய் விளங்கி வருகிறது என்கிறார்கள்.

*****

திருப்பரங்குன்ற மலையைவிட்டு தனஞ்ஜெயன் வீடு திரும்பியபோது வீடு வெறிச்சோடிக் கிடந்தது. சுந்தரம் பிள்ளை வந்தவர்களுக்கு ஜோதிடம் பார்த்துவிட்டு களைத்துப் போய் வீட்டினுள் ஒரு ஓரமாய் படுத்து விட்டிருந்தார். நல்லம்மை டி.வி. பார்த்தபடி இருந்தாள். தனஞ்ஜெயன் வரவும் திரும்பினாள்.

"இப்படி வீடு தங்காம எங்கிட்டாவது போயிட்றி யேப்பா...அப்பாவுக்கு துணையா இருந்து இந்த ஜோசி யத்தையாவது கத்துக்கிடலாமுல்ல?"

"ஆரம்பிச்சிட்டியா... இது ஒரு தொழில். இதை நான் வேற கத்துக்கணுமாக்கும்?"

"சரி... உனக்கு பிடிச்ச வேலை எதையாவது செய்ய லாம்ல?"

"ஏம்மா... நான் இப்ப உனக்கு பாரமாயிட்டேனா?"

"அட பைத்தியகாரா! உனக்கு நீயே பாரமாயிடக் கூடாதுன்னுதாண்டா சொல்றேன். உத்யோகம் தாண்டா புருஷ லட்சணம்?"

"சரிம்மா ஒரு பத்து நாள்... இல்லையில்ல பன் னெண்டு நாள் பொறுத்துக்க, அப்புறம் பாரு"

"அதென்னடா பன்னெண்டு நாள் கணக்கு?"

"அதெல்லாம் உனக்கெதுக்கு... பதிமூணாவது நாளே என்கிட்ட நீ பெரிய மாற்றத்த பார்ப்பே போதுமா?"

கையை வக்கணையாக ஆட்டிக் கேட்டுவிட்டு அந்த மரப்பொட்டி ஞாபகம் வந்து அதை நோக்கி போனவன், கையில் இருந்த ஏட்டுக்கட்டை அதனுள் வைத்தான். பிறகு திரும்ப எடுத்து பிரித்துப் பார்க்கவும் செய்தான்.

காலகார்ய சித்தி மந்திரம் என்கிற தலைப்புக்கு கீழ், 'ஹ்ரீம் ஹம்பட்' என்று அவன் இது நாள் வரை பயன் படுத்தியிராத சொற்களாய் இருந்தது. அப்படியே அடுத்த ஏட்டுக்கு போனபோது அமிர்தவர்ஷினி மந்திரம் என்றிருந்தது. அதற்கு அடுத்த ஏட்டில் குபேர வஸ்ய மந்திரம் என்றிருந்தது. இப்படியாக ஒவ்வொரு ஏட்டிலும் ஒரு மந்திரம்!

"நேற்று நான் பார்த்த என்னைப் பற்றிய ஏடு எங்கே?" என்கிற ஆவலோடு இன்னொரு கட்டை எடுக்க முனைந்த பொது, அந்த மரப்பொட்டி மூடி சரிந்து அவன் கை விரல்களின் மேல் விழுந்து அவனை உச்சபட்ச வலியோடு அறைவிட்டது.

அவன் போட்ட சப்தத்தில் சுந்தரம் பிள்ளையும் வித்துக் கொண்டார்.

"என்னலே பண்றே?" என்றபடியே எழுந்து அமர்ந்தார்.

"பொட்டிக்குள்ள இருக்கற ஏடுங்கள பார்த்தேன். - கை மேல விழுந்திருச்சி..." முகம் சொன்னான் தஞ்ஜெயன்

"இப்ப எதுக்குடா அதத் திறந்தே... தீட்டு கழிஞ்ச பிறகுதான் அதத் தொடலாம். அப்புட்டும் சரஸ்வதி யில்ல?!"

மலைமேல் சித்தர் சாமி சொன்னதை சுந்தரம் பிள்ளை அப்படியே எதிரொலித்தார். அப்போது நல்லம்மையும், "இங்க உனக்கு கைல அடி, அங்க விஜியை தேள் கடிச்சிடிச்சாம். ஏன் இதெல்லாம் நடக்குதுன்னே தெரியல. ஆமா, ஒரு எட்டு வாப்பா. அவளைப் போய்ப் பாத்துட்டு வரலாம்" என்று அழைத்தாள்.

விஜி என்ற பெயரால் அவனால் மறுக்க முடிய வில்லை.

***

மோட்டார் பைக்கில் அம்மாவை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு சற்று தடுமாற்றத்துடன் ஒட்டிக் கொண்டிருந்தான் தனஞ்ஜெயன்.

"வயசுப்பிள்ளை மாதிரியா ஒட்டுதே... ஏதோ எம்பது வயசுக் கெழவனாட்டம் ஒட்டுதியேப்பா..."

நல்லம்மை சலிப்போடு இகழ்ந்தாள். பக்கவாட்டில் சரவணப் பொய்கை கண்ணில் பட்டது. பாதிக்கு பாதி நீர் வற்றிப் போய் ஒரு குட்டை போல காட்சி தந்தது. அதைப் பார்த்தவள் “இந்த சரவணப் பொய்கைக்கு வந்த கேட்டை பாத்தியா. வருசம் முழுக்க தளும்பத் தளும்ப தண்ணி இருக்கற பொய்கை இது. இப்படி ஆகிப் போச்சே!” என்றாள்.

திருப்பரங்குன்ற முருகன் கோவில் சன்னதி வாசலை கடக்கும்போது பிச்சைக்காரர்கள் மொய்த்தார்கள். அதில் ஆரோக்கியமாய் இருந்துகொண்டே ஒரு பெண் குறுக்கில் வந்து பிச்சை கேட்டு நல்லம்மையின் திட்டுக்கு ஆளானாள்.

தனஞ்ஜெயன் வளைந்து வளைந்து போய் ஒரு வழியாக மாமன் வீட்டு முன் நின்றான். சப்தம் கேட்டு எட்டிப்பார்த்த விஜியின் முகத்தில் பளிச் புன்னகை.

“அம்மா அத்தை வந்துருக்காங்க...” என்று வாசலில் இருந்தபடியே குரல் கொடுத்தாள். தேவகியும் கையை துடைத்தபடியே வந்தாள்.

“வா நல்லம்மை.”

“என்னண்ணி அண்ணன் கடைக்கு போயிருச்சா?”

"ஆமா நல்லம்மை... ஆமா, யார் அது நம்ம ஊட்டுக்கு வந்து உசுரை விட்டது?”

“சொல்றேண்ணி... ஆமா விஜிக்கு தேள் கடின்னு காதுல விழுந்துச்சே..."

“ஆமாண்ணி... ராவுத்தரைப் போய்ப் பார்த்து பாடம் போட்டுகிட்டு வந்துட்டேன். இப்ப நல்லாயிடிச்சு. அடியே உங்க அத்தைகிட்ட கையைக் காட்டுடி...”

விஜியும் கையைக் காட்டினாள். வீக்கம் வற்றி லேசானச் சுண்ணாம்புப் பூச்சுடன் இருந்த இடத்தை நல்லம்மையும் லேசாக தடவி விட்டாள். பின் அப்படியே தரையில் அமர்ந்து விஸ்தாரமாய் பேசத் தொடங்கிவிட் டார்கள்.

உள்ளே முருங்கைக் கீரை வேகும் வாசம் இதமாய் வந்து மூக்கில் நுழைந்தது.

“முருங்கக்கீரை கடைஞ்சீங்களோ?”

"ஆமாம் நல்லம்மை. உங்க அண்ணனுக்குதான் தினம் ஒரு கீரை

சோத்துல இருந்தாகணுமே?”

நாத்தனாரும மதனியும் பேசத் தொடங்கவும், விஜி நனஞ்ஜெயனை இழுத்துக் கொண்டு மெல்ல மாடிப்பக்கம் சென்றாள். அவன் முகத்தில் ஒரு திருட்டுத்தனம்! அவனும் வளைப் பின் தொடர்ந்தான்.

மொட்டை மாடி!

திருப்பரங்குன்றமே பளிச்சென்று தெரிந்தது.

வெயில் வேறு உச்சியில் இருந்தது. மொட்டை பாடியில் உக்கிராண அறையின் கூரைச்சரிவுக்கு கீழ்தான்நிழல் இருந்தது. அங்கே போய் அடைப்பாக நின்றுகொண் டாள். அவனையும் அருகில் அழைத்தாள். எதனாலோ அவனுக்கு சற்று படபடப்பாக இருந்தது.

“அட வான்னா!’’ என்று அவனை இழுத்து துளியும் விகல்பமின்றி மார்பு நசுங்க அவனைக் கட்டிக் கொண்டாள்.

அவனுக்குப் புரிந்துவிட்டது.

"விஜி"

"உம்"

“வேண்டாம் புள்ள...”

“எனக்கு வேணும்...”

“யாராவது பாத்துடப் போறாங்க”

“இங்க யாரும் பாக்க முடியாது”

“நான் ஏற்கனவே குழப்பத்துல இருக்கேன்...”

“இப்ப எந்த குழப்பத்தப் பத்தியும் பேசாம நான் சொல்றத மட்டும் கேக்கணும்...” அந்த பதிலோடு அவள் அணைப்பில் அழுத்தம் கொடுத்தாள். அவனுக்கோ பற்றி எரிவது போல் இருந்தது. அப்படியே கழுத்தை வளைத்து உதட்டோடு உரச ஆரம்பித்தான்.

மின்வெட்டுக்கே இடமில்லாத ட்ரான்ஸ்ஃபார்மர் அது!

அப்போது திபுதிபுவென்று யாரோ வரும் சப்தம்! கீழே நல்லம்மையோடு பேசியபடி இருந்த தேவகிதான் விறுவிறுவென்று மேலேறி வந்தவள். சப்தம் கேட்ட நொடி விலகினாலும் இருவருக்கும் இடையே

இடைவெளி இல்லை. கண்களில் கனலோடு பார்த்த தேவகி “நெனச்சேன். நீ பூனை மாதிரி இவனோட ஒதுங்கும் போதே நெனச்சேன்” என்றாள். நல்லம்மையும் பின் தொடர்ந்து வந்துவிட்டாள்

“நல்லம்மை, சொல்றேன்னு என்ன தப்பா நினைக் காதே. உங்கண்ணன் விஜிக்கு பெரிய இடமா பாக்கபோறாரு. ஆனா இவ வயசுக்கு நல்லது கெட்டது தெரிய மாட்டேங்குது. ஒரு வேலை வெட்டி இல்லாத உன் மகனை நினைச்சு கிட்டிருக்கா பாரு. நாம கீழ இருக்கும்போதே இதுங்க வந்து என்ன பண்ணுதுங்க பாரு.”

தேவகி பானையைப் போட்டு உடைப்பதை போல உடைத்துப் பேசியதும் நல்லம்மைக்கு சற்று கண் கலங்கி விட்டது. அதிலும் வேலை வெட்டி இல்லாதவன் என்று அவள் சொன்னது ஊசியாய் தைத்தது.

“ஏண்டா இப்படி மானத்த வாங்கறே?” என்று தனஞ்ஜெயனைத் திட்டிக்கொண்டே தேவகி பக்கம் திரும்பிய நல்லம்மை,
“மன்னிச்சுக்குங்க அண்ணி. உங்க மக கல்யாணம் ஆகி போறவரை இந்த வீட்டு பக்கம் நானும் வர மாட்டேன். இவனும் வரமாட்டான்” என்றவளாக திபுதிபுவென்று அவனை இழுத்துச் செல்லத் தொடங்கினாள்.

விஜியின் முகம் இருண்டுவிட்டது. கண்களில் குபுக் கென்று கண்ணிர்.

“நான் தனா அத்தானைத்தான் கட்டிக்குவேன். நீங்க பாக்கப் போற மாப்பிள்ளையை எல்லாம் கட்ட மாட்டேன்” என்றாள் உரத்தகுரலில்,

“இதை என்கிட்ட சொல்லாதடி... உங்கப்பா வருவாரு அவர்கிட்ட சொல்லு. பெரியவங்க சொல்லு.. வேம்பாத் நான் கசக்கும். ஆனா, போகப் போகத்தான் புரியும்.”

"நீ என்ன சொன்னாலும் சரி... மீறி நீங்க எனக்கு வெளியே மாப்ளை பார்த்தா அரளி விதையை அரைச்சி குடிச்சிடுவேன்...”

உள்ளே தாயும் மகளும் பேசிக்கொள்வது வெளியே பைக்கில் ஏறிவிட்ட தனஞ்ஜெயன், நல்லம்மை காது களிலும் விழுந்தது.

விஜியின் பேச்சை கேட்டபடியே தனஞ்ஜெயனைத்தான் நல்லம்மை பார்த்தாள்.

“உன் முறைப் பொண்ணுடா இவ! ஆனா, இவகிட்ட உனக்காக பொண்ணு கொடுன்னு கேட்க முடியாம பண்ணிட்டியேடா...

உனக்குன்னு ஒரு தொழிலோ வருமானமோ இருந்திருந்தா நான் இப்ப இப்படியா உன்னை இழுத்துகிட்டு வருவேன்?”

அவன் அதைக் கேட்டவனாய் எரிச்சலோடு ஸ்டார்ட்டர் கிக்கரை மிதித்தான். பைக்கும் கிளம்பியது. திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான்.

வீட்டு மொட்டை மாடி மேல் திருப்பரங்குன்ற மலைக்குரங்குகள் சில ஏறி அமர்ந்திருந்தன. அதில் ஒரு குரங்கு அங்கே கூரைச்சரிவினுள் விஜி செருகி வைத்திருந்த ஏட்டுக்கட்டை பார்த்து அதை கையில் எடுத்திருந்தது!

11

‘திருப்பதியில் தனாகர்ஷண எந்திரம் இருந்து ஜனத்திரளை வசீகரிப்பதன் பின்னே கதிர்களின் செயல்பாடுகளே உள்ளன. கதிர்கள் இரு வித மானவை. கண்களுக்கு புலனாகுபவை, ஆகாதவை என்று அவைகளை இருகூறாக பகுக்கலாம். இதில் புலனாகாத கதிர்களையே அனைத்து எந்திரங்களும் கொண்டுள்ளன.

ஒரு ரேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, தொலைப் பேசி போன்றவைகள் எல்லாம் எப்படி கதிர்களால் இயங்குகிறதோ அப்படித்தான் இதுவும். மேற்கண்டவை களின் கதிர்வீச்சு விஞ்ஞானத்தால் உணரப்பட்டு நிர்வகிக்கப்படும் ஒன்றாகும். இந்த எந்திரங்களின் கதிர் வீச்சையும் சில விஞ்ஞான முறைகளில் ஆய்வு செய்து பார்த்துள்ளனர். ஆனால், அந்த ஆய்வுகளின் முடிவு களில் ஒரு மாறாத்தன்மை இல்லாததால் விஞ்ஞான உலகம் அந்த முடிவுகளை ஏற்கவில்லை. ஆன போதிலும் அவைகளின் கதிர் வீச்சை ஒப்புக் கொண் டுள்ளது. அவைகளுக்கு பின்னால் ஏதோ ஒன்று இருக்கிறது என்பதையும் அந்த ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஒவ்வொரு மனிதனிடமுமே கூட ஒரு வகை கதிர்வீச்சு இருப்பதையும் அவனுக்கு புறத்தில் ஒளி வட்ட அலைப்பாடுகள் திகழ்வதையும், அவை மன ஒட்டம் மற்றும் ரத்த ஓட்டத்தை பொறுத்து மாறு படுவதையும் எக்ஸ்ரே புகைப்பட ஆய்வுகளில் தெளி வாக்கியுள்ளனர். குறிப்பாக, ஒரு பெண் காது மூக்கு கழுத்தில் நிறைய கல் நகைகள் அணிந்த நிலையில் இருக்கும்போது அவளது 'ஆரா' எனப்படும் ஒளிவட்டம் ஒரு விதமாகவும், அவைகளை நீக்கிவிட்டு இருக்கும் போது அதே ஒளிவட்டம் வேறு விதமாகவும் உள்ளது. இதிலிருந்து

ரத்னக் கற்களுக்கு கதிர் வீச்சு சக்தியும் அவை பிரபஞ்சத்தின் புவி ஈர்ப்பு விசைப்பாட்டுடனும் விண்ணில் சில கோள்களின் கதிர் வீச்சுகளுடனும் தொடர்போடு இருப்பதும் தெரிய வந்துள்ளது.

அதேபோல மிகுந்த மனக்கட்டுப்பாடுள்ள ஞானி களை ஆய்வுக்கு உட்படுத்தி சோதனைகள் நிகழ்த்தி யதில், அந்த ஞானிகளின் ஆற்றல் (அ) அவர்களிடம் இருந்து உருவாகிப் பரவும் சில கதிர் வீச்சுக்கள் வெகுதூரம் வரை பரவி இருப்பதை துல்லியமான உபகரணங்களின் உதவியால் கண்டறிந்து கூறி யுள்ளனர்.

மொத்தத்தில் கண்களுக்கு புலனாகாத கதிர்வீச்சு என்னும் தளத்தில்தான் எந்திரங்களின் சக்தி உள்ளது. இந்த எந்திரங்கள் பல நூறு விதங்களில் உள்ளது. திருமந்திரம் என்னும் பெயரில் சுமார் 3000 பாடல் களைப் பாடிய திருமூலர் கூட தான் எழுதிய பாடல் களின் வாயிலாக கூறவந்த அரும்பெரும் கருத்துக் களை எந்திரத்துக்குள் சூட்சுமமாக புகுத்திக் கொடுத் துள்ளார். அதாவது திருமந்திரத்தை கசடறக் கற்று உணரும்போது ஏற்படும் தாக்கத்தையும் பாதிப்பையும் அந்த எந்திரமும் ஏற்படுத்தும். திருமந்திரம் என்பது எழுத்துக்களால் ஆனது. எனவே, அது ஒரு ஒலிவடிவில் ஆனது. இந்த ஒலி வடிவத் தாக்கத்தை எந்திர வடிவம் தன்னுள் உள்வாங்கித் தாங்கி நிற்கிறது. ஒரு குறுந் தகடுக்குள் (சி.டி) திரைப்படங்களும், பாடல்களும், அடங்கிக்கிடப்பதைப் போல்தான் இதுவும்!

*****

திருப்பரங்குன்றத்து மலைக்குரங்குகள் மிக விபரீதமானவை. மனிதக் கூட்டத்தைப் பார்த்துப் பார்த்து பயம் விட்டுப் போனவை. அதிலும் யார் எந்த விதமாகத் துரத்து வார்கள். எதைக் கொண்டு அடிப்பார்கள் என்பதெல்லாம் அவைகளுக்கு நன்றாகத் தெரியும். மாரிச்சாமி டீக்கடை பக்கம் போனால் அவன் வெந்நீர் ஊற்றுவான். பழக்கடை பாண்டியோ தராசுக் கல்லையே விட்டெறிவான். ஆகை யால் அந்தப் பக்கம் மட்டும் போகாது. மற்றபடி அவை களைப் பொருத்தவரை ஒபாமாவும் சரி, பிச்சைக்கார காத்தமுத்துவும் சரி... ஒன்றுதான்!

அவைகளின் கையில் ஒன்று சிக்கி விட்டால் அதை மீட்பது கடினம்.

விஜியின் வீட்டு மொட்டை மாடிக் குரங்கும் ஏட்டுக்கட்டை எடுத்துக்கொண்டு ஏதோ பாடம் படிக்கிற நிழலைத் தேடி அமரும் மாணவன் கணக்காய் விலகத் தொடங்கியது!

***

சன்னதி தெரு.

தெரு முழுக்க கல்யாண மண்டபங்கள்தான்! அதில் ஒரு மண்டபம் முன்னால் காவிக்கொடி பறக்க அபிராமி நாச ஸ்வாமிகள் என்கிற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது. அதற்கும் மேல் "ஓம்சக்தி' எனும் வாசகம் கொண்ட டிகைக்கர், வேனில் இருந்து காவி வேட்டியும் சட்டையுமாக பவர் இறங்கினர். இறுதியாக அந்த அபிராமிதாச ஸ்வாமிகள் மிகுந்த சிரமத்தோடும் தொண்டர்கள் உதவியோடும் இறங்கி தெருவில் நின்றார். அதற்குள் கூட்டம் கூடி அவரைப் பார்த்து எல்லோரும் வணங்கவும் செய்தனர். அவரும் அனைவரையும் தன் வலது கரத்தை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

தொண்ணுரறு வயதை அவர் கடந்து விட்டவர் என்பது அவரது தள்ளாமையிலும் தடுமாற்றத்திலும் தெரிந்தது. ஒரு பக்தர் அவர் நின்ற இடத்தில் தெரு என்று கூடப் பார்க்காமல் விழுந்து விட்டார். அவரை விலக்கி மெல்ல ஸ்வாமிகளை கல்யாண மண்டபத்திற்குள் தூக்கிச் சென்றனர்.

உள்ளே ஏராளமானோர் அமர்ந்திருந்தனர். மேடை ஒன்று பெரிய அளவில் அலங்கரிக்கபட்டு நடுவில் ஒரு பெரிய சிம்மாசனம் ஒன்று போடப்பட்டிருந்தது. அதில் சென்று அவரை அமரச் செய்தனர். அதன்பிறகு வரிசை யாக நின்று அவரிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொள்ள முனைந்தனர். கைநிறைய குங்குமமும், கொஞ்சம் டைமண்ட் கல்கண்டும் எடுத்து அவர் தன்னை வணங்கு கின்றவர்கள் கையில் அளித்தபடி இருந்தார்.

வரிசை மிக நீளமாக இருந்தது. கல்யாண மண்டபத் துக்கு வெளியேயும் அது போய்விட்டது. கூட்டம் மெல்லக் கரைந்தபடி இருந்தது.

சிலர் பரவசத்துடன் பேசிக்கொண்டார்கள்.

"ஸ்வாமிகளோட தரிசனம் கிடைச்சாச்சு... இனி கவலையில்ல. நம்ம கஷ்டங்களை அவர் எடுத்துண்டுருப் பார். நாம இனி நிம்மதியாக வேலையை பார்க்கலாம்" என்றார் ஒருவர்.

"போன தடவை ஒரு ரட்சையை வரவழைச்சுக் கொடுத்தார். இந்த தடவை குங்குமத்தோட விட்டுட்டார்."

"இந்த குங்குமம் நம்ம நெத்தியில் இருந்தாலே போதுமே. நமக்கு போற

இடமெல்லாம் ஜெயம்தான்.”

இருவரும் பரவசமாக பேசிக் கொண்ட அந்த தருணத்தில் ஒரு பெண் அபிராமிதாசரிடம் ஒரு தட்டு நிறைய ஆரஞ்சுப் பழங்களை வைத்து அவர் காலடியில் வைத்து வணங்கி எழுந்திருந்தாள். அப்போது அவள் கையில் அந்த தட்டில் இருந்தே ஒரு பழத்தை எடுத்துக் கொடுத்தார் ஸ்வாமிகள். அவள் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

“அதை உரிச்சுப்பாரு...” என்றார் அவர். உடனேயே அந்த ஆரஞ்சுப் பழத்தின் தோலை மளமளவென்று உரித்தாள். பழத்தின் சுளைகளையும் பிளந்து பார்த்த போது உள்ளே நீலக்கல் பிள்ளையார் விக்ரகம் இருந்தது. அதைப்பார்த்த நொடி அந்தப் பெண்ணிடம் ஒரு சந்தோஷத் திணறல். அவரும் புன்னகையோடு ஆசீர்வதித் தார். இந்த மாதிரி சித்துக்கள் எல்லாம் அவர் வரையில் சாதாரணம். அந்தரத்தில் கையைச் சுழற்றி ஆகாச வெளியில் இருந்து ஐந்துபவுன் சங்கிலியை வரவழைத்து அதை பல சமயங்களில் பலர் கழுத்தில் போட்டிருக்கிறார்!

அதனாலேயே அவர் வருகிறார் என்றால் அப்படி ஒரு கூட்டம். வெறும் சக்தி உபாசகரான அவரைப் பார்ப் பதையே பெரும் பாக்கியமாக பலர் நினைத்தனர். கூட்டமும் அப்படியே நகர்ந்தபடி இருந்தது. அந்த கூட்டத்தின் இறுதியில் ஒருவர் தோளில் தொங்கும் ஒரு துணிப்பை சகிதம் வந்து நின்றார். ஐம்பது வயது இருக்கலாம். தலைமுடியும் தாடியும் ஒரளவு நரைத்துவிட்டிருந்தது. நெற்றியில் பெரிதாக குங்குமத்தை வட்டப் பொட்டாக இட்டுக்கொள்ளாமல் ஒரு தீபச்சுடர் போல இழுத்து விட்டிருந்தார். இடுப்பில் சிவப்பு நிறத்தில் வேட்டி திறந்த மார்பின் மேல் கிடந்த துண்டை இடுப்பில் வளைத்து வேட்டி மேலேயே கட்டியிருந்தார். கூட்டம் மெல்ல மெல்ல நகர்ந்தது. அவர் அபிராமிதாச ஸ்வாமிகளை நெருங்கிய சமயம் ஸ்வாமிகளுக்கு பக்கத்தில் இருந்தவர் வரிசையில் வரும் அவரைப் பார்த்து அதிர்ந்தார். அதற்குள் அவரும் ஸ்வாமிகளை நெருங்கி சாஷ்டாங்கமாக காலில் விழுந்தார். நிமிர்ந்து எழுந்து குங்குமத்துக்காக கை நீட்டும் போதுதான் ஸ்வாமிகள் அவர் முகத்தை நேருக்கு நேர் பார்த்தார். பார்த்த நொடி ஸ்வாமிகள் முகத்திலும்அதிர்ச்சி பரவியது.

"குரு துரோகி... நீயா?” என்றார் கன்னக்கதுப்புகள் துடிக்க...

"ஸ்வாமிகள் என்னை மன்னிக்கணும். நான் எந்த நாளும் உங்களுக்கு துரோகம் நினைச்சதில்லை. இனியும் நினைக்கப் போறதுமிலல...”

"பேசாத... முதல்ல இடத்தை காலி பண்ணு”

"என்னை ஆசீர்வாதம் பண்ணி எப்பவும் போல என்னை உங்களோட பிரதான சிஷ்யனா ஏத்துக்கணும்..."

"என்னை விட்டு ஓடிப் போயிட்டு இப்ப எதுக்கு வந்தே?"

"நான் ஓடிப் போகலை. எல்லா சக்தி பீடங்களுக்குப் போய்ட்டு வந்தேன். உங்களுக்கும் குருவான தேவிதாச ரோட மகாசமாதில ஒரு மண்டலம் தியானம் பண்ணினேன்."

"எந்த விளக்கமும் எனக்கு தேவையில்லை. என் வரைல நீ என் பேச்சை மீறினவன். நான் உன்னை பார்ககவே விரும்பலை..." என்ற அபிராமி தாசர் அமர்ந்த நிலையில் இருந்து எழுந்து தடுமாறியபடியே அங்கிருந்து செல்லத் தொடங்கினார். வரிசையில் காத்திருந்தவர்களுக்கும் ஏமாற்றமாக இருந்தது.

அவருக்கும் ஸ்வாமிகள் விலகிச் செல்வது வருததத்தைத் தந்தது.

"ஸ்வாமி... நான் கிளம்பறேன்... என் மேல இருக்கற வருத்தத்தால வரிசைல நிக்கற பக்தர்களுக்கு உங்க ஆசீர்வாதம் கிடைச்சுடாம போயிடக்கூடாது. தயவு செய்து திரும்பி வந்து எல்லாருக்கும் ஆசீர்வாதப் பிரசாதம் கொடுங்கோ. நான் இனி உங்களைப் பார்க்க வந்து எந்த தர்மசங்கடத்தையும் உங்களுக்கு ஏற்படுத்தி மாட்டேன்..." சொல்லிவிட்டு விறுவிறுவென்று அவர் வெளியேறினார். ஆனால், அபிராமிதாச ஸ்வாமிகளுக்கு அவரைப் பார்த்த கோபம் அடங்கவேயில்லை. அதனால் திரும்பி வரவேயில்லை!

***

திருப்பரங்குன்றம் முருகன் சன்னதி!

ஆறுபடை வீடுகளில் ஒரு வீடு... அபூர்வமான ஸ்தலம். இந்த ஒரு கோவிலுக்குள் தேவருலகமே இருப்பதுதான் அறிய வேண்டிய ரகசியம். இந்து சமயத்தின் ஆறு வழிப் பாதைகளும் ஒரு புள்ளியில் சங்கமிக்கும் ஒரு கோயில் என்றும் கூறலாம். முருகன் சன்னதிலேயே ஒரு பக்கமாய் பெருமாளும், இன்னொரு பக்கம் துர்க்கையும், முருகனின் தந்தையான சிவனும், அண்ணன் விநாயகனும், முருகனை ஒட்டியே சூரிய, சந்திரர் முதல் தேவர்கள் வரை, சப்த ரிஷிகளோடு கூடி வாழ்த்தியபடியே நிற்கும் ஒரு சன்னதி.

முருகனுக்கு இங்கே திருமணக் கோலம்!

இந்த கோலமே இல்லறமே நல்லறம் என்று சொல்வதைப் போலவும், அந்த அறத்தில் இருப்பவர்களுக்கு அருள் தர வேண்டுமென்றே இந்த ஆலயம் காலத்தால் எழும்பியதோ என்றும் தோன்றும்!

இப்படிப்பட்ட முருகன் சன்னதி முன் நின்று மெய்டிருக பிரார்த்தித்துக் கொண்டிருந்தார் அவர்! அங்கேயே அப்போதே அவர் தோள் மேல் ஒரு கை விழவும் திரும்பினார். அபிராமிதாச ஸ்வாமிகளின் பிரதான சிஷ்யர்களில் ஒருவரான தேவநாதன்.

"தேவநாதா நீயா?"

"நானேதான் சந்திரமௌலி... ஸ்வாமிகள் உன்னை பார்த்துட்டு கோவிச்சுண்டு போகவும் நீ கிளம்பிட்டதைபார்த்தேன். மன வருத்தத்தோட நீ சன்னதிக்கு தான் I மந்திருக்கணும்னு நினைச்சு வந்தேன். என் யூகம் பொய் கலை..."

"எப்படி இருக்கே தேவநாதா?"

"எனக்கென்ன... வா அப்படிப்போய் அம்பாள் சன்னதி முன்னால உட்கார்ந்து பேசுவோம்..."

அவர்கள் இருவருமே நகர்ந்து சென்று முருகன் சன்னதிக்கு இடப்பக்கமுள்ள கோவர்த்தனாம்பிகை சன்னதி முன் சென்று நின்றுகொண்டனர். அவ்வளவாய் கூட்டமும் இல்லாததால் மனம் விட்டுப் பேச ஏற்றபடி ருந்தது சூழல் பேச்சும் தொடங்கியது.

"ஸ்வாமிகளுக்கு நான் அவரை விட்டு விலகிப் போனது பிடிக்கல போல இருக்கு."

"நீ அஷ்டமாசித்தியை பெருசா நினைச்சதும் அதுக்காக சக்திக் கோட்டையா இருக்கற ஸ்ரீயந்திரத்தை தேடினதும் ஸ்வாமிகளுக்கு பிடிக்கலை..."

"அந்த காரணம் இல்லை தேவநாதா! அஷ்டமா சித்திகளை அடைய நினைக்கறதுலயும் எனக்கு எந்த தப்பும் இருக்கற மாதிரி தெரியல. இந்த உலகத்துல எவ்வளவோ விஷயங்கள் இருக்கு. அவா அவா விருப்பத் துக்கு தகுந்த மாதிரியும், முயற்சிக்குத் தகுந்த மாதிரியும் அந்த விஷயங்கள் வசப்பட்றது.

பூமிக்கடியில எங்க தங்கம் கிடைக்கும். எங்க பெட்ரோல் கிடைக்கும்னு ஒரு தேடல் உலகம் பூரா இருக்கற மாதிரி நான் இந்த சித்திகளை தேடி

அடைய விரும்பறேன். அதுலயும் அம்பாளோட அந்த ஸ்ரீ யந்திரம் ஒரு மகா வரப்பிரசாதம். அது இருந்த வரை சக்தி புரம் எப்படி இருந்தது, இப்ப எப்படி இருக்குன்னு உனக்கும் தெரியும்...”

“உண்மைதான்... சக்திபுரம் லலிதாம்பிகை கோயி லோட திருக்குளத்துல கூட அவ்வளவா ஜலமில்லை. அவ்வளவு ஏன்? இந்த மதுரைல மீனாட்சி அம்மன் கோவில் பொற்றாமரைக்குளத்திலேயே கூட ஒரு பெரிய சிமெண்டு தொட்டியாதான் இருக்கு. ஜனக்கூட்டம் பெருகினதுல எவ்வளவோ கேடுகள்! அதுல தண்ணிக்கு வந்த கேடுதான் என்வரைல முதல் கொடுமை.”

“அது மட்டுமா தேவநாதா இப்பெல்லாம் பத்து பேர் கல்யாணம் பண்ணிண்டா அதுல நாலு பேருக்கு குழந்தை பாக்கியம் இல்லை. டெஸ்ட் ட்யூப் முறைல பிள்ளை பெத்துக்கறவங்க எண்ணிக்கை அதிகமாயிண்டே போறது. ஆனா, நம்ம தலைமுறையில நம்ப கூட பிறந்தவர்களே எப்படியும் ஏழெட்டு பேர் இருப்பாங்க. புத்திர பாக்யம்ங்கற சந்தான பிராப்தியும் இப்ப போச்சே. இதுவும்தானே கொடுமை?”

“வாஸ்தவம்தான். கலி முத்தும்போது இப்படித் தானே நடந்தாகணும். இதே மதுரைல ஆறு மாசத்துக்கு முன்னதான் பெத்த பிள்ளையை ஒரு தாய் கண்டதுண்டமா வெட்டி வீட்டு ஃப்ரிட்ஜ"க்குள்ள வெச்சு அப்புறமா கள்ளக்காதலனோட சேர்ந்து ஒரு சாக்கடைல தூக்கிப் போட போயிருக்கா இது எவ்வளவு பெரிய கொடுமை?”

"ஆமாம் தேவநாதா... இப்பெல்லாம் ஊழல் கூட ஆயிரம் லட்சங்கள்ல இல்ல. அது கோடிகள் லதான் நடக்குது... அதுவும் ஒரு கோடி இரண்டு கோடின்னு சொல்ற அளவுல இல்ல... நூறு. கோடி... ஆயிரம் கோடிங் கற அளவுக்கு போயிடுச்சு... ஒரு வாய் நல்ல தண்ணி ஒரு பாக்கெட் இரண்டு ரூபா! இந்த இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ வெள்ளியை என் தாத்தா வாங்கினதா சொல் வார்!”

அவர்கள் இருவரும் பேசியபடியே அங்கிருந்து நடக்கவும் செய்தனர். பேச்சில் காலம் எவ்வளவு கெட்டுக்கிடக்கிறது என்பதன் பதிவுகள். சன்னதியை விட்டு வெளியே வந்தவர்கள் லட்சுமி தீர்த்தக் குளக்கரை பக்க மாக நடந்தபோதுதான் அந்த சம்பவமும் நடந்தது. விஜயலட்சுமி வீட்டு மொட்டை மாடியில் இருந்து ஏட்டுக்கட்டை எடுத்துக்கொண்டு ஒடியிருந்த குரங்கு அங்கே ஒரு பாறை மேல் அந்த ஏட்டுக்கட்டோடு உட்கார்ந் திருந்தது. அதை பார்த்துவிட்டு பலரும் அதனிடமிருந்து

அதைப் பெற படாதபாடுபட்டுக் கொண்டிருக்க, சந்திர மௌலி என்கிற அந்த சக்தி உபாசகரும் அந்தக் குரங்கைப் பார்த்தார். அவரையும் அந்த ஏட்டுக்கட்டு ஈர்த்தது. மனதுக்குள் அனுமனின் காயத்ரியை உருப்போடத் தொடங்கினார். அந்த குரங்கும் எட்டுக் கட்டுடன் அவர் அழைத்தது போல அவரை நோக்கி வரத் தொடங்கியது!

12

‘எந்திரங்களுள் வயிரவச் சக்கரம்’ எனப்படும் எந்திரம் பற்றி திருமூலரே தன் திருமந்திரத்தில் குறிப்பிட் டிருக்கிறார். முதலில் திருமூலரைப் பற்றி நாம் சற்றேனும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவர் இந்த பூ உலகில் பிறந்து வளர்ந்த மானுடர் அல்ல... ஆதிசிவனின் கைலாயத்தில அந்த இறைவ னோடு இருந்து 'இன்பமே எந்நாளும்!” என்று அந்த இறைவனின் திருவழி நிழலில் திருத்தொண்டாற்றி வாழ்ந்தவர். இவருக்கு. பூ உலகில் மனித வாழ்வு எப்படிப்பட்டது என்பதைத் தெரிவிக்கவும், மனித வாழ்வைச் சூழ்ந்துள்ள மாயையை அவர் விளங்கிக் கொள்ளவும் அந்த கைலாய நாதனே இவரை பூ உலகுக்கு அனுப்புகிறான்.

சுந்தரர் எனும் பெயர் கொண்ட இவர், வான மார்க்கமாக வரும்போது பூமியில் ஒரு வயலை ஒட்டிய சமவெளியில் ஒருவன் இறந்து கிடக்கிறான். அவன் பெயர் மூலன். அவன் ஒரு இடையன்! அவனால் மேய்க்கப்படும் மாடுகள் அவன் இறந்து கிடப்பதால் அவனைச் சுற்றி நின்று கொண்டு கண்ணிர் உகுந்தபடி நிற்கின்றன. தேவராகிய சுந்தரர், மனம் இதைக் கண்டு உருகுகிறது. என்ன செய்தால் அந்த மாடுகளின் கண்ணிரை நிறுத்தி அவைகளை தேற்ற முடியும் என்று யோசிக்கிறார். அவன் உயிர் பெற்று எழுந்தால் மட்டுமே அது சாத்தியம் என்பதை உணரும் சுந்தரர், தானறிந்த கூடுவிட்டு கூடு பாயும் "ப்ரா காமியம்’ என்னும் திறத் தாலே தன் உடம்பில் இருந்து உயிரை விடுவித்து அவன் உடலில் புகுந்து எழுகிறார். மாடுகள் மகிழ்கின்றன. அதன் பின் அதனதன் பட்டியையும் அடை கின்றன. அதே சமயம் சுந்தரரின் மூல உடலை அந்த இறைவனே வந்து மறைத்து விட சுந்தரர் மூலன் உடலில் இருந்தே செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

பூ உலகில் அவர் கருணை காட்டியதற்காக அவருக்கு ஏற்பட்ட முதல் சோதனை இது. பூ உலகம் எப்படிப்பட்டது என்பதையும் அந்த

நொடியில் இருந்தே உணர ஆரம்பிக்கிறார்.

இடையன் மூலனின் மனைவி மூலன் உடம்போடு வந்து நிற்கும் சுந்தரரையே தன் கணவனாக கருதி ன்றாடுகிறாள். 'அம்மா நான் உன் கணவனில்லை. நான் சுந்தரதேவன்" என்று அவர் கூறுவதை நம்புவ ற்கு அவள் மட்டுமல்ல ஊர்க்காரர்களும் நம்புவதற்கு சிரமப்படுகின்றனர். இந்த சிரமங்களால் தான் அவர் வாழ்வின் எல்லாவிதமான உணர்ச்சி நிலைப்பாடுகளையும் உணரத் தொடங்குகிறார்.

அதன் பின் இவர் உலகத்தின் சகல இன்பதுன்ப மாயையும் உணர்ந்து அதைக்கொண்டு எழுதியதே திருமந்திரம். அந்த திருமந்திரத்தில்தான் நான்காம் குறிப்பிட்டிருக்கிறார்.

‘எட்டு வரையின் மேல் எட்டு வரை கீறி

கட்டு நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்

வட்டத்திலே அறை நாற்பத்தெட்டுமிட்டுச்

சிட்டஞ் செழுத்தும் செபி சீக்கிரமே!’

என்னும் பாடலின் வரிகள் சக்கரத்தை அதாவது எந்திரத்தை அமைக்க வேண்டிய குறிப்பையும் இடை வில் அமைய வேண்டிய மந்திர எழுத்தையும் குறிப் பிடுகின்றன. இந்த எந்திரத்தில் உறையும் இறைசக்தி வயிரவம்" எனப்படும் சக்தி ஆகும். அந்த ஆதிசிவனின் உதார கோலங்களில் ஒன்றே வயிரவம். இரண்யாஷன் ன்னும் அசுரனை அழிப்பதற்காக எடுத்த அவதாரகோலம் இது. இந்த வயிரவ சக்தியே இந்த வயிரவ எந்திரம் வாயிலாகவும் வெளிப்படுகிறது. இது எதிரிகளை அழிக்கும். நினைத்த காரியத்தை முடித்துத் தரும்!’

*****

'சந்திரமௌலி’ என்னும் அந்த உபாசகரின் அனுமன் காயத்ரி மந்திரம் அந்த குரங்கைக் கட்டி இழுத்தது அதுவும் தன் எஜமானரையே கண்டுவிட்டது போல சந்திரமௌலி அருகே போய் ‘இந்தா எடுத்துக்கொள் என்பதுபோல அந்த ஏட்டுக் கட்டையும் நீட்டியது.

அவரும் வாங்கிக் கொண்டார்.

அந்தக் குரங்கை ஒரு கணம் அனுமனாகவே கருதி ஏட்டுக்கட்டோடு கைகளையும் கூப்பினார்.

பார்த்துக் கொண்டே இருந்த தேவநாதனுக்கு அது ஒன்றும் பெரிய ஆச்சரியமாகப் படவில்லை. ஏனென்றால் அவரது குருவான அபிராமிதாச ஸ்வாமிகள் இதைவிடவே பெரிய வசியங்களைச் செய்திருக்கிறார். ஒரு முறை ஒரு கிராமத்தில் தங்கியிருந்தபோது அவர் தங்கியிருந்த பந்தலுக்குள் பாம்பு ஒன்று புகுந்துவிட்டது. அதை அடிப்ப தற்காக எல்லோரும் கையில் கிடைத்ததை எல்லாம் எடுத்தபோது அவ்வளவு பேரையும் அடக்கிவிட்டு அருகில் இருந்த தண்ணீர் பானையை கூட்டத்துக்கு நடுவில் வைத்து சர்ப வசிய மந்திரத்தை சற்று உரத்த குரலில் அவர் சொல்லச் சொல்ல, அந்த அதிர்வுகள் அந்த பாம்பை சுண்டி இழுத்து தண்ணீர் பானைக்குள் வரச் செய்தது பின் அதன் வாயை ஒரு துணியால் மூடி அந்த பானையை எடுத்துச் சென்று வரச் சொன்னதெல்லாம் தேவநாதனுக்கு நினைவில் வந்தது.

சந்திரமௌலியோ அந்த ஏட்டுக்கட்டை விரித்திருந் தார்.

முதல் பக்கமே அவர் புருவத்தை விரியச் செய்தது.

அந்த அதிசயத்தை ஆங்காங்கே நின்று பார்த்தவர் களும் பார்த்ததுபோதும் என்று கலையத் தொடங்கினர்.

“என்ன சந்திரமௌலி... அது. என்ன சொல்றது”

“தனஞ்ஜெயன்கற ஒரு யுவனோட நாடி இது...”

“ஓ... ஜோசிய நாடியா...”

“ஆமாம்... அபூர்வமான சக்தி நாடி...”

“சக்தி நாடியா? அகத்தியர் நாடி... பிருகு நாடி. கௌசிக நாடின்னு கேள்விப்பட்டிருக்கேன். சக்தி நாடி. நான் கேள்விப்பட்டதில்லையே?”

"வாஸ்தவம்தான். இந்த நாடி அபூர்வமான ரகம். இது பார்க்கத்தான் பனை ஏடு. இதுக்கு பின்னால ஒரு சக்தி இருந்து செயல்பட்டுகிட்டிருக்கறதுதான் நாம உணர வேண்டிய உண்மை.”

“யாரோ ஒரு சக்தி உபாசகன் எதிர்காலத்துல நிக்க வேண்டிய சில சக்தி லீலைகளின் உத்தேசம் இதை எழுதியிருக்கணும். இது என் கையில கிடைச்சது கூட ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒண்ணுதான்.”

“ஒரு தற்செயலான விஷயத்தை நீ ரொம்ப மெரு கேத்தி சொல்றதா எனக்குப் பட்றது.”

“நிச்சயமா இல்லை தேவநாதா. ஐம்பத்தி எட்டு சக்தி. ஸ்தலங்களுக்கு போய் தரிசனம் செய்து, மகா குருவான தேவிதாசரோட மகா சமாதில ஒரு மண்டலம் தியானமும் பண்ணப்போ ஒரு குரல் எனக்குள்ள, 'திருப்பரங்குன்றம் போ. திருப்பரங்குன்றம் போன்னு சொன்னது. அதுக்கு அர்த்தம் எனக்கு இப்ப புரியறது...”

“என்னென்னமோ சொல்றே... ஆனா எதுக்காக சக்தி ஸ்தலங்களுக்கு போனே... ஒரு மண்டலம் நீ தியானம் செய்ய வேண்டிய அவசியம்? அந்த அஷ்டமாசித்திகளை அடையற நோக்கத்துக்காகவா?”

“ஒரு பிரார்த்தனைதான்...”

“அப்படி என்ன பிரார்த்தனை உனக்கு...?”

“பிரார்த்தனையை வெளிய சொல்லக் கூடாதுங்கறது உனக்குத் தெரியாதா?”

“அப்ப பெரிய பிரார்த்தனைன்னு சொல்லு”

“ஆமாம்... அது பிரார்த்தனை மட்டுமில்ல. என் லட்சியமும் கூட...”

“கேக்கறேனேன்னு தப்பா எடுத்துக்காதே... உன் மனைவி இப்ப எங்க இருக்கா?”

தேவநாதன் சந்திரமௌலியின் மனைவி பற்றி கேட் கவும் சந்திரமௌலியிடம் ஆழ்ந்த பெருமூச்சு.

“என்ன சந்திரமௌலி... உன் குடும்ப விஷயம் பத்தி நான் பேசறது உனக்கு பிடிக்கலையா?”

“ஆமா... ஆனா நீ பேசிட்ட பின்னால என்ன பண்ண முடியும். இருந்தாலும் சொல்றேன். என் மனைவி கௌரி இப்ப என் கூட இல்லை. விவாகரத்து கேட்டு கோர்ட்டுல கேஸ் நடக்கறது!”

“என்னப்பா சொல்றே?”

"நீ கேட்டதுக்கு பதில் சொல்லிண்டிருக்கேன்”

“காரணம்?”

"அவ எதிர்பார்த்த எதுவுமே என்கிட்ட இல்லை யாம்...!”

"அப்படி என்ன உன்கிட்ட இல்லை. எனக்கு புரியல...?”

“லட்ச லட்சமா பணம் இருக்கா? ஆஸ்தி, சொத் துன்னு எதாவது இருக்கா? குறைஞ்சபட்சம் ஏதாவது ஒரு பதவி இல்லை... ஸ்திரமான வருமானமுள்ள வேலை இருக்கா?”

“அப்ப உன் ஆத்துக்காரிக்கு நீ ஒரு உபாசகராகவும் உபாத்யாயம் பண்றவனாகவும் இருக்கறது பிடிக்கலியா?”

“ஆமா... இந்த சிகப்பு வேஷ்டி குங்குமம் எல்லாம் ஆண்டிப் பசங்களோடதாம்! நல்ல ஆம்பளையோட லட்சணம் பொண்டாட்டியை சந்தோஷமா வச்சுக்கறது தாங்கறா...”

“கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கும்போது இது அவளுக்கு தெரியலியாமா?”

“நான் ஸ்வாமிகளோட வலது கைன்னுல்ல நினைச் சிண்டிருந்துருக்கா...”

“மொத்தத்துல உன் மனைவிக்கு பக்தியை விட பணமும் காசும் பெருசா இருக்கு... அப்படித் தானே?”

“நான் சொல்றேன்னு நீயும் தப்பா எடுத்துக்காதே... யாருக்கு அது பெருசா இல்லை?”

"நீ என்ன சொல்ல வரே?”

“மடத்துல நம்ம குருநாதர் என்ன ஆண்டிப் பண்டாரமா? லட்ச லட்சமா டொனேஷன் வாங்கலை?”

“வாங்கினாதானே மடத்தை நிர்வகிக்க முடியும்?”

“இது ஒரு சப்பையான காரணம். நீயே கூட மடத்து பனத்துல இடம் வாங்கி போட்ருக்கேன்னு கேள்விப் ட்டேன்.”

சந்திரமௌலியின் பதில் கேள்வியில் தேவநாதன் முகம் வெளிறிப் போனது.

"யா... யார் சொன்னது? அது என் மச்சினன் அமெரிக்காவுல இருந்து எனக்கு பணம் அனுப்பி நான் அவன் பேர்லதான் வாங்கியிருக்கேன். மடத்துல இருந்து யாரும் எனக்கு கால் காசு தரலை...”

"எப்படியோ... இந்த உலகத்துல நல்லபடியா வாழ விடு வாசல், பேங்குல கொஞ்சம் சேமிப்புன்னு தேவைப் டத்தானே செய்யறது?”

"அதுல என்ன சந்தேகம்?”

"பாத்தியா... கடைசில நீயும் என் வழிக்கு வந்துட்டே...”

“உன் வழி எதுன்னே நீ இன்னும் தெளிவுபடுத்தலியே சந்திரமௌலி...”

“எனக்கு இப்ப ஒரே லட்சியம்தான். ஐ வான்ட்டு பீ எ மில்லியனர்...”

“என்னது... நீ கோடீஸ்வரனாகணுமா?”

“ஆமா... தங்கமும் வைரமும் என்கிட்ட கொழிச்சி கிடக்கணும்.”

“என்ன... ஏதாவது பேங்க்கை கொள்ளை அடிக்கப் போறியா?”

"அப்ப உழைச்சா சம்பாதிக்க முடியாதுன்னு நீயும் நம்பறே அப்படிதானே?”

“பின்னே... உனக்குன்னு முழுசா ஒரு பட்டப்படிப்பு கிடையாது. சொத்து பத்தும் கிடையாது. அடாவடி பண்ணி சம்பாதிக்க உடம்பும் கிடையாது. உன் மனசும் அதுக்கு சம்பாதிக்காது. அரசியல்ல இருந்தாலாவது ஏதாவது ஊழல் பண்ணி சம்பாதிக்கலாம். நீ அதுலயும் இல்லை. சினிமாவுல பூந்தா கொஞ்சம் சம்பாதிக்க முடியும் தான். ஆனா இப்ப பெரிய பெரிய நடிகர்கள் படமே ஒரு வாரம் ஓடினா பெரிய விஷயமா இருக்கு. நீ எந்த நம்பிக்கைல கோடீஸ்வரனாவேன்னு சொல்றே?”

தேவநாதன் சரியாகத்தான் கேட்டார்.

சந்திர மௌலி முகத்தில் ஒரு சிரிப்பு மட்டும் தேங்கியது. அப்படியே பார்வை அந்த ஏட்டின் மேல் சென்றது.

“என் கேள்விக்கு பதில் சொல்லாம ஏட்டைப் பார்த்தா என்ன அர்த்தம்?”

“இப்ப நீ கிளம்பு. இதுக்கு பதிலை நான் வார்த்தைல சொல்ல மாட்டேன். நீ தானா தெரிஞ்சுப்பே...”

“நீ பேசறத பார்த்தா இந்த ஏட்டுல ஏதோ புதையல் ரகசியம் இருக்கணும் போல எனக்கு தோண்றது”

"அப்படியே நினைச்சிண்டு புறப்படு...”

சந்திரமௌலி கடைசி வரை பிடி கொடுக்காமல் பேசவும். தேவநாதனும் சற்று சோர்ந்த முகத்துடன் புறப்பட்டார். பக்கத்தில் லட்சுமி தீர்த்தத்தில் மீன்கள் துள்ளித்திரிந்து கொண்டிருந்தன.

பெரிய விஷயங்களைப் பற்றி சிந்திக்கும்போது மீனைப் பார்ப்பது தந்திர உபாயப்படி ஒரு நல்ல சகுனம். அந்த விஷயம் நிச்சயம் வெற்றியாக முடியும் என்பதற்கு அறிகுறியாகும். மீன் ஒரு குபேர சம்பத்து, குபேரன் கையிலும் மீன் இருக்கும்! சந்திரமௌலியும் மீன்களைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்தபடியே பக்கத்தில் உள்ள வேத பாடசாலை பக்கமாக சென்று ஒரு ஓரமாக உட்கார்ந்து அந்த ஏட்டில் உள்ளவைகளை வரிசையாக வாசிக்க ஆரம்பித்தார். பக்கமாய் ஒரு வில்வ மரம்! அதன் மேல் வரிசையாக ஐந்து கிளிகள் வந்து அமர்ந்திருந்தன. நல்ல ஊட்டமான பெரிய கிளிகள்!

***

மதியவேளை!

சாப்பிடுவதற்காக கடையில் இருந்து அப்பா, பிள்ளை இருவருமே வந்திருந்தனர். அப்படி வரும்போது டேபிள் மேல் கடிதம் ஏதாவது வந்திருக்கிறதா என்று பார்ப்பது தனசேகரன் பிள்ளையின் வழக்கம். அன்று ஒரு கடிதம் வந்திருந்தது. அதைப் பிரித்துப் படித்தார். மகன் இளங்கோவும் அருகில் வந்து நின்று பார்த்தான். படிக்கப் படிக்க தனசேகரன் பிள்ளை முகம் மகிழ்ச்சிக்கு வேகமாய் மாறியது.

“என்னப்பா விஷயம்?”

"மாப்ளை வீட்டுக்காரங்க லெட்டர்ப்பா... திரு நெல்வேலி பாளையங்கோட்டைல இருந்து வந்துருக்குது. சாதகம் நல்லா பொருந்திப் போவுதாம். இந்த வாரம் ஞாயித்துக்கிழமை பொண்ணு பாக்க வரவான்னு கேட்டு எழுதியிருக்காங்க...”

“நல்லகாலம்தான்... பதிலுக்கு லெட்டர் எழுதாம ஒரு போனைப் பண்ணி சொல்லுங்க...”

அவர்கள் பேச்சை கேட்டபடி வந்த தேவகி முகத்தில் எந்த சலனமுமில்லை. ஒரு இறுக்கம் வேறு.

“நீ ஏன் தேவகி ஒரு மாதிரி இருக்கே?”

“உங்க மகளுக்கு இப்ப கல்யாணம் பண்ணிக்க இஷ்டம் இல்லையாம். மீறி பண்ணுனா சரவணப் பொய் கைல குதிச்சு உசுரை விட்ருவாளாம்?”

மிக நேராக விஷயத்துக்கு வந்துவிட்டாள்.

“எல்லாம் அந்த தனா பையன் வேலையாதான் இருக்கணும். அந்த

வெறும் பயலத்தான் கட்டுவாளாமா?” என்றான் இளங்கோ,

"ஆமா..."

“இவ புத்தி ஏன் இப்படி போகுது. அவன் ஒரு சாமியார்ப்பய...”

“நான் சொன்னா தனா கேக்கும். நல்ல வேலைக்குப் போகும். நாங்க எக்கேடோ கெட்டு போறோம். நீங்க கவலைப்படாதீங்கங்கறா”

“ரொம்பப் பேசறா. சின்ன வயசு பாரு. அதான் நல்லது கெட்டது தெரியல. ஒரு பிளேட் இட்லி முப்பது ரூபா. ஒரு லிட்டர் தண்ணி பதினைஞ்சு ரூபா லட்சரூபா சம்பாதிக்கறவனே கட்டுப்படியாக மாட்டேங்குதுங்கறான். காலம் அப்படி இருக்கு. இதுல இவ அவனோட என்னத்த குடும்பத்த நடத்துவா?”

“நான் எல்லாம் சொல்லிட்டேன். இனி உங்க பாடு அவபாடு.”

“ஒரே பாடுதான். ஞாயிற்றுக்கிழமை மாப்ளை வீட்டுக்காரங்களை வரச் சொல்லப் போறேன்.”

ஒரே போடாக போட்டார் தனசேகரன் பிள்ளை!

13

சக்கரங்களில் வயிரவ சக்கரம் எதிரிகளை அழிப்ப தற்காப்பு சக்தி ஏற்றப்பட்டு வடிவமைக்கவும் படுகிறது. ஒரு அரிவாள், மரக்கிளைகளை வெட்டும் கோடாலியோ மரத்தின் பருத்த அடிப் பாகத்தை வெட்டும். கத்தியானது குத்திக் கிழிக்கவும், காய்கறி பழங்களை நறுக்கவும் பயன்படும். மொத்தத் தில் ஆயுதம் என்பது ஒன்றாக உள்ள ஒன்றை இரண்டாக்கும். துண்டிப்பது, கத்தரிப்பது போன்ற வேலைகளை ஆயுதங்கள் செய்கின்றன. அது செயல் படும் விதத்திற்கு ஏற்ப அதற்குப் பெயர் அமைகிறது.

எந்திரமாகிய சக்கரங்களும் அப்படித்தான். அந்த அளவில் குபேர யந்திரம் செயல்படத் தொடங்கும் இடத்தில் எல்லா வகையான செல்வமும் வந்து சேரும். வயிரவ எந்திரமோ எதிரிகளை வீழ்த்திக் காட்டும்.

ஒருவர் எதிரிகளின் சூழ்ச்சியால் தன் பூர்வீக வீட்டை இழந்துவிட்டார். வஞ்சகமாக அவரிடம் எழுதி வாங்கிவிட்டனர். தான் ஏமாந்தது தெரிந்து அவர் கோர்ட்டில் வழக்கு தொடுத்தார். ஆனால், ஏமாற்றிய

வர்கள்தான் இறுதியில் வென்றனர்.

வீட்டை அநியாயமாக இழந்தவர் சிவாலயத் துக்குப் போய் மனம் வெறுத்துப் புலம்பினார். அதன்

பின் அந்தத் தோல்வியைத் தாள முடியாமல் தற்கொலை செய்து கொள்வதற் காக ஒரு விவசாய நிலத்துக் கிணற் றடிக்குச் சென்றபோது அங்கே ஒரு சித்த சந்நியாசி குளித்துக் கொண்டிருந்தார். இவரின் சோகத்தைக் கேட்டறிந்த சந்நியாசி, தன் துணி மூட்டைக்குள் இருந்து ஒரு செப்புத் தகட்டை எடுத்தார். சில நிமிடங்கள் வயிரவரை தியானித்து எந்திரத்தையும் தந்து பூஜை அறையில் வைத்து பூஜிக்கச் சொன்னார். அதோடு குபேர எந்திரத்தையும் வரைந்து தந்து அதை பூஜிக்க வேண்டிய மந்திரத்தையும் காதில் ஒதி, "48 நாட்கள் நீ இதைச் செய்து முடி. உன் வாழ்க்கை மாறவில்லையானால் இதே கிணற்றில் வந்து குதித்து உயிரை தாராளமாகப் போக்கிக்கொள்" என்று கூறி விட்டு போய்விட்டார்!

அதன்பின்...

*****

தனசேகரன் பிள்ளை சொன்னது விஜயலட்சுமிக்குள் இடியாய் இறங்கியது. காலண்டரைப் பார்த்தாள். அன்று வெள்ளிக்கிழமை. இடையில் இரண்டு நாட்கள் இருக் கிறது. அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவளுக்குள் தோன்றியது. அழுது அழிச்சாட்டியம், செய்து எதையும் சாதிக்க முடியாது. புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும் என்று தோன்றியது. கண்ணிரைத் துடைத்துக் கொண்டாள். மளமளவென்று வீட்டு வேலை களை பார்க்கத் தொடங்கிவிட்டாள்.

தேவகிக்கு ஆச்சரியமாக இருந்தது.

இளங்கோவும் அவளை கவனித்தான்.

"என்னம்மா... உன் மக அப்பா பேசவும் அடங் கிட்டா?"

"அவ அடங்கலடா... பதுங்கறார்!"

"கரெக்ட்... இந்த காலத்துப் புள்ளை இல்லையா. வெட்டிச்சண்டை போட்டிகிட்டிருக்கறதுக்கு புத்திசாலித் தனமா என்ன செய்யலாம்னு யோசிக்கறா போல இருககு. அதே சமயம் எனக்குள்ளயும் சில

கேள்விங்க இருக்கு. இந்தப் பொம்பளங்களுக்கு ஒருத்தனப் பிடிச்சுட்டா அவன் எப்படி இருந்தாலும் ஏத்துக்கறாங்களே அது எப்ப டிம்மா?"

"என்னடா... பொம்பளங்க பத்தி ஒரு பொம்பள என்கிட்டயே கேக்கறியா?"

"பின்ன... நீதானே தெளிவாச் சொல்வே.. அந்த தனாவுக்கு பேர்லதான் தனம் இருக்கு. கைல கால் காசு கிடையாது. பெருசா சொத்து, பத்து, படிப்புன்னும் ஒரு எழவுமில்ல... ஆனா அவனை இவளுக்கு பிடிச்சிருக்கே எப்படி?"

"அதுக்குப் பேர்தாண்டா மனசுங்கறது. ஆண்மைங் கறது சம்பாதிக்கறதும் சோறு போடறதும் மட்டுமில்லை. கொண்டவகிட்ட பாசமாவும் அவளுக்கு ஒண்ணுன்னா உயிரை விடறதுலயும்தான் இருக்கு. காலைல தாலி கட்டிக்கிட்டு ராத்திரில புருஷன்ங்கறவன் கிட்ட முழுசா தன்னையே ஒப்படைக்கறவதான் பொம்பளங்கறவ. அப்ப அவ மனசுல எவ்வளவு கேள்விகள் இருக்கும் தெரியுமா? உனக்கு சொன்னாப் புரியாது. போய் வேலையைப் பாரு. உனக்கு பொண்டாட்டியா யார் வந்தாலும் சரி அவகிட்ட உண்மையாவும் பாசமாவும் இரு, போ!"

தேவகி ஞானி போலப் பேசினாள்! எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேதான் இருந்தாள் விஜி.

***

தன்னை மறந்து அமர்ந்திருந்தாள் நல்லம் மை. முகத்தில் வருத்தத்தின் ரேகைகள் தெரிந்தன. அதை ஆச்சரியமாகப் பார்த்தபடியே வந்தார் சுந்தரம்பிள்ளை.

"என்ன நல்லம்மா. ஏன் ஒரு மாதிரி இருக்கே?"

"ஒண்ணுமில்லீங்க..."

"இந்த ஒரு வார்த்தைக்குதான் நம்ம அகராதியிலே ஏகப்பட்ட அர்த்தம். என்கிட்ட நீ மறைக்க என்ன இருக்க முடியும்? விஷயத்துக்கு வா"

"எல்லாம் நம்ம தனாவைப் பத்திதாங்க"

"உருப்படியா ஒரு வேலைக்கு போகாமே அவன் ஊரைச் சுத்திக்கிட்டிருக்கானேன்னு வருத்தப்பட்றியா?"

"அவன் எங்க ஊரைச் சுத்தறான்? அப்படி சுத்துனா தான் வயசுப் பயலா

லட்சணமா இருக்கான்னு நினைச் சுக்குவேனே.”

“ஒ... நீ அவன் கொஞ்சம் சாமியார்த்தனமா இருக் கறதை வெச்சு என்னவோ ஏதோன்னு கவலைப்பட்றியா?”

“பொறவு... இன்னிக்கு என் அண்ணன் வீட்லயே அவனால எனக்கு எவ்வளவு அவமானம் தெரியுமாங்க!”

“உன் அண்ணன் ஒரு பணத்தாசை பிடிச்சவன். ஆமா. அங்க என்ன நடந்துச்சு?’ சுந்தரம் பிள்ளை கேட்டதும், மனதுக்குள் இருந்ததை நல்லம்மை ஆதங்கத்தோடு சொல்லி முடித்தாள். கேட்ட சுந்தரம் பிள்ளைக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

“நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே அந்த விஜி இனி இங்க வந்தா வரவேண்டாம்னு சொல்லிடு. இது மோசமான வயசுக் காலம். தப்புத்தண்டா எதுவும் நடந்துடக்கூடாது.”

“எனக்கு அந்த பயமெல்லாம் இவன்கிட்ட இல்லைங்க. இவனை ஒரு வெரும்பயன்னு எல்லாரும் பேசறதுதாங்க மனசைப் போட்டு அறுக்குது.”

“அடக் கூறு கெட்டவளே! தனஞ்ஜெயன் வெறும் பய இல்லடி... அவன்.” ஏதோ கூற வந்தவர் நிறுத்திக் கொண்டார்.

“என்னாங்க எதையோ சொல்ல வந்து சொல்லாம விட்டுட்டீங்க”

“ஒண்ணுமில்ல விடு...”

“நான் ஒண்ணுமில்லன்னப்போ நம்ம அகராதியி லேயே இதுக்குத்தான் ஏகப்பட்ட அர்த்தம்னு சொல் லிட்டு, இப்ப நீங்க என்கிட்ட மூடி மறைக்கப் பாக்க நீங்களா?”

“நல்லம்மா தயவுசெய்து என்னை வற்புறுத்தாதே. ஒரு விஷயம் மட்டும் சொல்லிக்கிறேன். நல்லாக் கேட்டுக்க இந்த உலகத்துல பொறக்கற யாரா இருந்தாலும் சரி. அவங்க தாய் தகப்பனால மட்டுமே வர்றதில்ல! எல்லாத் துக்கும் மேல ஒரு பெரிய சங்கதி இருக்கு. அதே போல இந்த பூமில வந்து விழுந்த நொடில இருந்து அந்த ஜீவராசியோட மூச்சு நின்னு போற நொடி வரைக்கும் எல்லாமே முன்கூட்டியே முடிவான ஒரு விஷயம்தான். அப்படி முடிவான ஒரு விஷயத்தை இடையில் பூந்து ஒரு நூலளவு மாத்திக்கறதுக்குக்கூட நமக்கு சக்தி கிடையாது.”

“நான் ஒண்ணு கேட்டா நீங்க என்னென்னமோ சொல்றீங்களே.”

“உன் கேள்விக்குத்தான் பதில் சொல்லிட்டிருக்கேன். யோசிச்சுப் பாரு புரியும். ஒரு நல்ல ஜோசியக்காரன்கூட கிட்டத்தட்ட சாமியார் மாதிரிதான். சாமியாருங்க மூணு காலத்தையும் பத்திச் சொல்றாங்க. அதையே ஜோசியக் காரன் கிரகங்களை வெச்சு கூட்டிக் கழிச்சு சொல்றான். நானும் எத்தன பேருக்குச் சொல்லியிருப்பேன். அதுக் கெல்லாம் அர்த்தம் என்ன?”

“நீங்க பேசறதே புரியல. நான் தனா உருப்பட என்ன வழின்னு கேட்டதுக்கு நீங்க ஜோசியக்காரன்ங்கறதுக்கு விளக்கம் கொடுத்துட்டிருக்கீங்க”

“அறிவு கெட்டவளே! யாரைப் பக்தியும் யாரும் கவலைப்படறதுல அர்த்தமே இல்லைன்னு சொல்லி கிட்டிருக்கேண்டி நீ கவலைப்பட்டாலும் படாட்டியும் எது நடக்கணுமோ அதான் நடக்கும் அப்படி நடக்க வேண்டி யதை அவங்கவங்களும் எழுதி வாங்கிட்டு வந்துட்றாங்க. இன்னும் சுருக்கமா உனக்குப் புரியற மாதிரியே சொல் றேன். ஒரு மனுஷனோட வாழ்க்கைங்கறது அச்சடிச்சு முடிச்ச ஒரு புத்தகம் மாதிரி. அப்படி அச்சடிச்ச புத்த கத்தைப் படிச்சுச் சொல்றவன்தான் ஜோசியக்காரன். அச்சடிச்ச ஒரு புத்தகத்துல ஒவ்வொரு பக்கமும் ஒரு நாள் அதுல என்ன இருக்குதோ அதன்படிதான் எல்லாம் நடக்கும். இதுல ஒரு பிழை இருந்தா இருந்ததுதான். அதை மாத்த முடியாது. ஒரு பக்கம் முழுக்க அச்சே ஆகாம வெள்ளைத் தாளாவே இருந்தாலும் இருந்ததுதான். அதையும் ஏத்துக்கத்தான் வேணும்.”

“சரிங்க. இதுக்கும் நம்ம தனாவுக்கும் என்னங்க சம்மந்தம்?”

“ஊருக்கே ஜோசியம் பாக்கற நான், ஒரு நாள் உன்னை மாதிரியே கவலைப்பட்டு அவன் ஜாதகத்தை எடுத்துப் பார்த்தேன்.”

சுந்தரம்பிள்ளை மெல்ல விஷயத்துக்கு வரவும் நல்லம்மை நிமிர்ந்தாள்.

“ஒரு ஜோசியக்காரன் தன் பொண்டாட்டி பிள்ளை களின் ஜாதகத்தைப் பார்க்கக் கூடாதுன்னு சொல்வீங் களே?” என்றும் கேட்டாள்.

“வாஸ்தவன்தான் இவன் எதனால இப்படி இருக் கான்னு பெத்த அப்பனான எனக்கு மட்டும் தோணாதா?”

“சரி சரி... அவன் ஜாதகம் என்ன சொல்லுது?”

“அதை நான் சொன்னா நீ நம்பணுமே?”

“ஐயோ... ஏன் இப்படி என்னைப் போட்டுக் குழப்ப நீங்க. முதல்ல விஷயத்தைச் சொல்லுங்க.”

“சொல்றேன். ஒரே ஒரு தடவைதான் சொல்வேன். உன் மகன்தான் இந்த பூமியில இனி குபேரன். அது மட்டுமில்ல. அவன் என்ன சொல்றானோ அதெல்லாம் நடக்கும். நீ கவலைப்பட்ற மாதிரி அவன் இப்படியே இருந்துடப் போறதில்லை. அவனுக்குக் கல்யாணம் ஆகும். உனக்கு மருமகளா வரப்போறவ ஒண்ணுக்கு மூணு பொண்ணுங்கள பிள்ளையாப் பெக்கப் போறா. இன்னிக்கு உன் பையனைப் பத்தி கேவலமாப் பேசுன உன் அண்ணி, உன் மகனுக்காக ஏங்கி தவிக்கப் போறா. அவ குடும்பமே இந்த வீட்டுல வந்து உன் கால்ல எப்படி விழப்போகு துன்னு நீயும் பாக்கத்தானே போறே?”

சுந்தரம் பிள்ளை பேசிவிட்டுப் போய்விட்டார். நல்லம்மை ஸ்தம்பித்துவிட்டாள்!

***

அழகர் மலை!

ராக்காயி கோயிலின் அமிர்த சுனையான நூபுர கங்கை வற்றாத மலை ஊற்று கங்கையாகப் பாய்ந்து வந்து விழுந்தபடி இருக்கும். அந்த ஊற்று நீருக்குப் பின்னாலே ஏராளமான ரகசியங்களும் அதிசயங்களும் பதுங்கியிருக்கின்றன. அந்தச் சுனையில் பௌர்ணமி நாளிலும் "கும்பகோணம் மகாமக நாளிலும் குளிப்பது என்பது ஒரு கொலைக் குற்றவாளி நீதிபதியாலே மன்னிக்கப்பட்டு விடுவிக்கப்படுவதற்குச் சமமான ஒன்றாகும்.

அது ஒரு அற்புத காலம்!

இதைத் தெரிந்தோ என்னவோ அந்தச் சுனை நீரில் நீராடிக் கொண்டிருந்தார் உபாசகர் சந்திரமௌலி. அப்படியே தலையை துவட்டிக்கொண்டு ராக்காயி அம்மன் முன் வந்தவர், கூட்டம் இல்லாத அந்தச் சூழலை நன்கு பயன்படுத்திக்கொண்டு கண்குளிர தரிசித்தார். பின், அங்குள்ள பூசாரியிடம் குங்குமம் வாங்கி நெற்றியில் பெரிதாக இட்டுக்கொண்டார். விபூதி இருந்தும் அதை இட்டுக்கொள்ளவில்லை.

தலையை சரியாக துவட்டியிராததால் ஈரம் சொட்டிக் கொண்டிருந்தது. இருந்தும், அலட்சியமாக சன்னதியை விட்டு வெளியே வந்தவர் இடப்பக்கம் பார்த்தபோது பழமுதிர்ச்சோலை முருகன் சன்னதியின்

கோபுரம் கண்ணில் பட்டது. மனதுக்குள்ளேயே அதை தியானித்தவர் அப்படியே வலப்புறம் உள்ள மூலிகை வனத்துக்குள் புகுந்தார். அழகர்மலைக் குரங்குகள் மனிதர்களுக்குத் துளியும் அஞ்சாதவை. ஆனாலும் அவருக்கு அஞ்சியவை போல விலகி ஓடின. மூலிகைப் பண்ணையில் ஒரு பணியாளன் இருந்து குட்டி நாற்றங்கால்களுக்குத் தண்ணீர் விட்டபடி இருந்தான். சந்திரமௌலியைப் பார்த்துவிட்டு "சாமி இந்த பக்கம் பாதை கிடையாது. திரும்பிப் போயிடுங்க..." என்றான்.

"பாதை இல்லாமதான் ராமதேவங்கற சித்தர் இந்த பக்கமாப் போய் இந்த மலைல குறிப்பிட்ட இடத்துல ஜீவசமாதியா ஆனாரா?"

"அப்ப நீங்க அந்த ஜீவசமாதியத் தேடிப் போறிங் களா?"

"நீதான் தேடணும். எனக்கு அந்த அவசியமில்லை. வழிய விடு."

"காட்டு நாய்ங்க கடிச்சா ஊசி போட்டாலும் தப்பிக்க முடியாது சாமி"

"கவலைப்படாதே. எனக்கு எதுவும் ஆகாது."

"என்னமோ பெரிய சித்து வேலைக்காரர் மாதிரி பேசறிங்க?"

அந்தப் பணியாள் கேள்வி சந்திரமௌலியைக் கீறிவிட்டது. மெல்லிய கோபமும் துளிர்த்தது. பணியாள் அவன் கையில் தண்ணீர் கசியும் ட்யூப்பைப் பிடித்திருந் தான். அதை ஒரு விநாடிதான் உற்றுப் பார்த்தார். அடுத்த நொடி அவன் கையில் ஒரு நல்ல பாம்பு நெளிந்து கொண்டிருந்தது. அவன் பதறிப்போய் கைவிடவும் தரை யில் விழுந்த பாம்பு திரும்ப ட்யூப்பானது.

"இது போதுமா உனக்கு?" சந்திர மௌலியின் கேள்வி அவன் பொட்டில் அடித்தது.

விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினார். ஒரு கட்டத்தில் பாதை முடிந்து எதிரில் ஒரே புதர். அதற் கெல்லாம் மனது அசரவில்லை. அப்படியே அங்கேயே கைகளைக் கூப்பிக்கொண்டு அபிராமிதாச சுவாமிகள் மூலம் உபதேசிக்கப் பெற்ற தேவிமந்திரம் ஒன்றை உபாசிக்கத் தொடங்கினார். சில நிமிடங்களிலேயே அதிசயம் போல எதிரில் ஒரு சர்ப்பம், 12 அடி நீளம் சாதாரணமாக இருக்கும். படம் விரித்தபடி! அதன் 'ஸ்ஸ்ஸ்' சத்தம் கேட்டுத் கண் திறந்தவர் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை. அதுவும் திரும்பி 'என் பின்னாலேயே வா' என்பது போல ஊர்ந்து செல்லத் தொடங்கியது பின் தொடர ஆரம்பித்தார் சந்திரமௌலி!

14

வயிரவ எந்திரம் மற்றும் குபேர எந்திரம் என்கிற இரண்டோடும் அந்த மனிதரும் வீட்டுக்கு வந்து அதைப் பூஜையறையில் வைத்து வழிபடத் தொடங்கினார். அதைப் பார்த்த அவருடைய மனைவி "என்னங்க இது. ஏதோ தகடு மாதிரி இருக்குது. இதைப் போய்க் கும்பிட்டுக்கிட்டிருக்கீங்க?" என்று சற்று ஏளனமாகவே கேட்டாள்.

"தகடுதான்... ஆனா இது எந்திரம்னு சொல்லி ஒரு சாமியார் கொடுத்துருக்கார். இது நம்ம கஷ்டத்தை எல்லாம் போக்கும்னு நானும் நம்பறேன்"

"எப்படிங்க? இது எப்படி நம்ம கஷ்டத்தைப் போக்கும்? இது ஏதோ செப்புத் தகடு மாதிரித் தெரியுது. செப்பு நம்ம வீட்லயே நிறைய இருக்குதுங்க..."

"செப்பு வேற... செப்புத் தகடு வேற... இது சாமியார் பூஜை செஞ்சது..."

"பூஜை செய்யறதால அப்படி என்னங்க இதுல வந்துடப் போகுது? யாரோ உங்களை நல்லா ஏமாத்தி யிருக்காங்க."

"சும்மா கேள்வியா கேட்டுக்கிட்டு இருக்காதே. நான் தற்கொலை பண்ணிக்கப் போன இடத்துல என்னைத் தடுத்து இதைக் கொடுத்துருக்கார் அந்த சாமியார்."

"தற்கொலை பண்ணிக்கப் போனிங்களா?"

"ஆமாம். நெஞ்சுல குத்திட்டாங்களே... அதோ அவ்வளவு சொத்தும்ல பறிபோயிருக்கு?"

"அதுக்காக உசுரை விடறதுதான் தீர்வா?"

"விடு... அதான் கடந்து வந்துட்டேன்ல... இதோ இந்த எந்திரம் எனக்கு எல்லாத்தையும் திரும்ப தரட்டும்..." கணவனும் மனைவியும் பேசிக்கொண் டனர்.

நாட்களும் உருள ஆரம்பித்தது. முதல் காரியமாக குபேர சக்கரம் தன் சக்தியை காட்டத் தொடங்கியது. நகைக்கடையில் போட்ட சீட்டு ஒன்றுக்கு குலுக்கலில் பத்து லட்ச ரூபாய் முதல் பரிசு விழுந்தது!

*****

அந்த சர்ப்பம் நெடுந்தூரம் வரை முன் சென்று ஒரு குறிப்பிட்ட இட நின்றது. அப்படி அது நின்ற இடத் திற்கு அருகில் துளசி மாடம் போல ஒரு சிறு கட்டடம். அதன் மேல் கொத்தாய் துளசியும் வளர்ந்திருந்தது. பின் தொடர்ந்து வந்து சந்திரமௌலி அந்த துளசி மாடத்தைப் பார்த்த மாத்திரத்தில் அது ஒரு பிருந்தாவனம் என் பதையும் கீழே ஒரு ஜீவசமாதி இருப்பதையும் புரிந்து கொண்டவர் போல கைகளை கூப்பிக்கொண்டு நின்றார்.

சில நொடிகளுக்குப் பிறகு முகத்தைத் திருப்பிப் பார்த்ததில் வழிகாட்டிய சர்ப்பத்தைக் காணவில்லை. சந்திரமௌலி முகத்தில் ஒரு புன்சிரிப்பு மட்டும் வந்து தேங்கியது.

அது அனேகமாய் ராமதேவரின் ஜீவசமாதியாகத் தான் இருக்க வேண்டும். சந்திரமௌலி அங்கே உட் கார்ந்து கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை!

வெளியே போய்விட்டு உள் நுழைந்திருந்த சுந்தரம் நல்லம்மையிடம் குடிக்க தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்தார்.

அப்படியே அவளிடம் "ஆமா... உன் அண்ணன் வீட்ல எதோ விசேஷம் போல் இருக்கு...” என்று ஆரம்பித்தார்.

“அப்படியா... என்னங்க சொல்றீங்க?”

“என்ன சொல்றேனா? சரிதான்... உன் அண்ணன் நம்ம குலக்கொழுந்து மேல இருக்கற வருத்தத்துல உனக்கு கூட தகவல் சொல்லலை போல இருக்குது.”

“நீங்க விஷயத்தைச் சொல்லுங்க”

“இன்னிக்கு உன் அண்ணன் மகளைப் பொண்ணு பாக்க வர்றாங்க போல இருக்கு”

“ஓ... அப்படியா?”

நல்லம்மை அப்படியா? என்று கேட்ட விதத்தில் கொஞ்சமும் சக்தியில்லை.

“என்ன... குரல் செத்துப் போச்சு”

“பொறவு... அவ இந்த வீட்டு மருமகளா வர வேண்டி யவங்க. அவளை

எவனோ ஒருத்தன் வந்து பாக்கறான்னா அதைக் கேக்க நல்லாவா இருக்கு?”

நல்லம்மை பொருமினாள். சுந்தரம் எந்த பதற்றமும் இன்றி சிரித்தார்.

“உங்களுக்கு வருத்தமா இல்லையா?”

“இதுல வருத்தப்பட என்ன இருக்குது? எவ்வளவு வயசானா என்ன நல்லம்மை. எல்லாருக்கும் எல்லா விஷயமும் புரிஞ்சிடுதா என்ன?”

“நீங்க என்ன சொல்றீங்க. சுத்தி வளைச்சு பேசாம நேராப் பேசுங்க...”

“என்னத்த நேராப் பேச? கல்யாணம்ங்கறது நீயும் நானும் முடிவு பண்ற விஷயம்னா நினைக்கறே?”

“போதும்... நீங்க என்ன சொல்லப் போறிங்கன்னு எனக்கு தெரிஞ்சு போச்சு. அது ஆயிரங்காலத்துப் பயிரு. அது எப்பவோ முடிவான ஒண்ணு. மனுஷங்க முடிவு பண்ற சமாச்சாரம் இல்லைன்னு சொல்லப் போறிங்க... அதானே?”

“அதானே நல்லம்மை உண்மை... ஒருத்தன் பொண் டாட்டியை இன்னொருத்தன் கட்ட முடியுமா... இல்ல யாராச்சும் கட்டியிருக்காங்களா?”

“அதுக்காக எப்படிங்க விஜி விஷயத்துல எனக் கென்னன்னு இருக்க முடியும்?”

“இருக்கணும். இருந்தாதான் அதுக்கு பேர் பக்குவம்.”

“என்னவோ போங்க. இப்போதைக்கு நம்ம பையன் நல்லா இருப்பான்னு நீங்க சொன்ன ஜோசியத்தாலதான் நான் ஏதோ கொஞ்சம் தெம்பா இருக்கேன்...”

“அதுல உனக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். போ... போய் வேலையைப் பார்...” சுந்தரம்பிள்ளை தெம்பாக பேசிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

இருவருமே உள்ளே அறையில் கட்டிலில் படுத்திருந்த தனஞ்ஜெயனை கவனிக்கவில்லை. அவனும் அப்பா அம்மா பேச்சை கேட்டபடிதான் படுத்திருந்தான்.

அதன் எதிரொலியோ என்னவோ அவன் கண்களில் கண்ணீர் பூத்திருந்தது. மெல்ல எழுந்து அமர்ந்தான். சோம்பல் முறித்துக்கொண்டு

சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டவன் வெளியே புறப்பட்டான்.

வீட்டில் இருக்க என்னவோ போல் இருந்தது. உண்மையில் சும்மா இருப்பதுதான் கஷ்டமான செயல். முதல் தடவையாக அது ஆழமாய் அவனுக்குள் உறைப்பது போல் இருந்தது. மனிதன் பரபரப்பாக ஏதாவது ஒரு வேலையை செய்தபடி இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவனையே அவனால் மதிக்க முடியாமல் போய்விடுகிறது.

தனஞ்ஜெயனும் அப்பா அம்மா கண்களில் படாதபடி வெளியில் வந்தான். எதிரில் திருப்பரங்குன்ற மலை!

கழுதைக்குக் குட்டிச்சுவர் என்றால் அவனுக்கு அந்த மலையும் மலைக்கு மேலே உள்ள அந்த சாமியாரும்தான் போக்கிடம்.

அப்போது இருந்த மனநிலைக்கு அவரை சந்திக்கப் புறப்பட்டுவிட்டான்.

மலைமேல் வெயில் காய்ந்து கொண்டிருந்தது! பாறைக்குப் பாறை அனல் காய்ந்தது. அந்த சாமியார் இருக்கும் இடத்தை நோக்கி நடக்கும்போதே சுருட்டு வாசம் மூக்கை முட்டும். அப்படி எதுவும் அன்று வர வில்லை. பாறை நிழல் அருகே போய் பார்த்தபோது அவரைக் காணவில்லை! பதில் சொல்லவும் ஒருவரும் இல்லை. ஏமாற்றமாக இருந்தது.

சாமியிடம் பேசும்போது நிறைய விஷயங்கள் புரிவது போலவும் இருக்கும். இனம்புரியாத ஒரு தெம்பும் மனதில் ஏற்படும். இன்று மனம் சோர்வில் கிடக்க வேண்டியது கட்டாயமோ என்று தோன்றியது. அப்படியே கீழே இறங்கத் தொடங்கினான்.

சாலையில் இறங்கியபோது ஒரு கார் உரசிக்கொண்டு நின்றது. அதில் இருந்து ஒரு வழுக்கைத் தலை மனிதர் எட்டிப் பார்த்தார். தனாவும் பார்த்தான்.

“எக்ஸ்கியூமீ... இங்க இருந்து அழகர்கோவிலுக்கு போக வழி சொல்ல முடியுமா?” மிகவே பக்குவமாக அவர் கேட்டார்.

“அழகர் கோவிலுக்கா. இங்க இருந்து சொல்றது கஷ்டம். நீங்க வைகைப் பாலத்தை கடந்துட்டு தேவர் சிலை கிட்ட போய் யாரைக் கேட்டாலும் சொல்வாங்க” என்றான்.

"வைகைப் பாலத்துக்கு எப்படி போகணும்?”

“இப்படியே போங்க. அப்படியே கேட்டுக் கேட்டு தான் போகணும்.

நான் இப்ப சொன்னாக்கா உங்களுக்குப் புரியாது. வடிவேலு பட காமெடி மாதிரி இருக்கும்.”

அவர் சிரித்தார். சிரித்தபடியே “அங்க எங்களுக்கு சுத்திக்காட்ட கைடுங்க இருப்பாங்களா?” என்று அடுத்த கேள்வியைக் கேட்டார்.

“கைடுங்களா... அப்படி ஒண்ணும் உங்களுக்கு தேவைப்படாது. கீழ பெருமாள் கோயிலு. மேல முருகன் கோயிலு. நீங்க பாட்டுக்கும் போய் கும்புடலாம்.”

“இல்ல... அழகர் மலைக்கு மேல மூலிகை வனம் ஒண்ணு இருக்குதாமே..?”

“இருக்குன்னு கேள்விப்பட்டிருக்கேன். அதுக்கென்ன?”

“இல்ல நாங்க கொஞ்சம் அங்க போகணும். அங்களங்களுக்கு வழிகாட்ட உள்ளூர் ஆள் யாராவது இருந்தால்நல்லா இருக்கும்.”

“மூலிகை வனத்துல உங்களுக்கென்ன வேலை?”

“அது வந்து...” அவரிடம் தயக்கம் வெளிப்பட்டது.

"பரவாயில்ல உங்களுக்கு தயக்கமா இருந்தா சொல்ல வேண்டாம். பொதுவா மதுரைல மீனாட்சி அம்மன் கோவில்லதான் கைடுங்க இருப்பாங்க. அழகர் கோவில்ல இருப்பாங்களான்னு தெரியாது. மூலிகை வனத்து பக்கம் பப்ளிக்கை விடமாட்டாங்க. பாத்துக்குங்க”

“இருக்கலாம் தம்பி. ஆனா நாங்க ஒரு பரிகாரம் பண்றதுக்காக அங்கே போக வேண்டி இருக்குது.”

“பரிகாரமா?”

தனஞ்ஜெயன் ஆர்வமானான்.

“தம்பி நீங்க மதுரைக்காரர்தானே?”

"ஆமாம்.”

“உங்களுக்கு ஏதாச்சும் வேலை இருக்குதா”

“இப்போதைக்கு ஒரு வேலையும் இல்லை. இப்படி வேலை இல்லாம இருக்கோமேங்கற கவலைலதான் நானே இப்ப இருக்கேன்.”

"அப்ப நீங்களே எங்களுக்கு உதவி செய்யலாமே?”

“அதாவது உங்க கூட அழகர் கோவிலுக்கு கூப்பிடநீங்க, அப்படிதானே?”

“ஆமாம்... எங்களுக்கும் உதவியா இருக்கும். நீங்ககேக்கற பணத்தையும் தந்துடறேன்.”

அவர் அவனுக்கு ஏதோ ஒரு புது வழிகாட்டுவது போல் பேசினார். சற்று முன்தான் வேலை இல்லாமல் சும்மா இருப்பது எவ்வளவு கொடுமையானது என்று த்ததையும் சேர்த்து சிந்தித்தவன் மளமளவென்று காரில் முன்பக்கமாய் ஏறி அமர்ந்துகொண்டான். காரும் புறப்பட்டது. அப்படியே திரும்பி பின்னால் பார்த்தான்.

அந்த பெரியவருக்குப் பக்கத்தில் ஒரு இளம்பெண் பார்க்க பளிச்சென்று குத்துவிளக்கு போல இருந்தாள். ஆனாலும் அவள் கண்களில் ஒரு சோகம்.

அவரும் அவன் பார்ப்பதை கவனித்துவிட்டுப் பேசத் தொடங்கினார்.

“தம்பி என் பேர் கல்யாண சுந்தரம்!

இது என் மகள் அருணா. எம்.சி.ஏ., முடிச்சிருக்கா. கல்யாணம் பண்றதுக்காக ஜாதகத்தை கைல எடுத்தேன். அப்பதான் ஜாதகத்துல இஷ்டத்துக்கும் செவ்வாய் தோஷம். சர்ப்ப தோஷம்னு எல்லா தோஷங்களும் இருக்கறது தெரிஞ்சது. வைத்தீஸ்வரன் கோவில் போய் நாடி பாக்கும்படி சிலர் சொன்னாங்க. சரின்னு போய் நாடி பார்த்தேன். அப்படிப் பாத்த நாடில சில பரிகாரங்களைப் பண்ணிட்டா எல்லா தோஷங்களும் நீங்கி என் மகளுக்கு வர்ற தை மாசத்துலயே நல்ல மாப்ளை அமைவார்னு வந்தது. அந்தப் பரிகாரத்துல ஒரு பரிகாரம், திருப்பரங் குன்றம் முருகன் கோவில்ல இருக்கற லட்சுமி தீர்த்தத்துல இருக்கற மீன்களுக்குப் பொரி வாங்கிப் போடறது! அதை இப்பதான் செய்துட்டு வரோம்.

அடுத்த பரிகாரம் அழகர் மலை ராமதேவர் ஜீவ சமாதியில் நெய் விளக்கேத்தணும்னு வந்தது. சொன்னா நம்ப மாட்டீங்க. பெயர்ல செல்வமும் வெற்றியும் உடைய ஒருவர் வழிகாட்டி கூட வருவார்னும் அந்த நாடியிலதான் வந்தது. இப்ப நான் உங்க பேரைத் தெரிஞ்சுக்கலாமா?”

அந்தப் பெரியவரின் நெடிய விளக்கமும் அதைத் தொடர்ந்த கேள்வியுயம் தனஞ்ஜெயனை ஒரு வினாடி. திக்குமுக்காட

வைத்து.விக்கிப்போடு பார்த்தான்.

“என்ன தம்பி பாக்கறிங்க. தான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?”

“இல்லைங்க... நானே ஒரு நாடியைப் படிச்சுட்டு வாழ்க்கைப் போக்கை நினைச்சு பிரமிப்புலயே இருக்கேன். இப்ப நீங்களும் நாடியைத் தொட்டுப் பேசவும் சிலிர்த்துப் போயிருச்சு.’’

“ஆச்சரியமாயிருக்கே... ஆமா உங்க பேரைச் சொல்ல லியே...”

“என் பேர் தனஞ்ஜெயன்...”

“தனஞ்ஜெயன்... தனஞ்ஜெயன்... அட வெற்றி, செல்வம் இரண்டும் உங்க பேர்ல இருக்கே... நாடில வந்ததும் நடக்கறதும் அப்படியே இருக்குதே!”

“ஆமாங்க... இதை எல்லாம் வெச்சுப் பார்க்கும் போது ஒரு எண்ணம் கூடவே ஏற்படுது...”

“என்ன தம்பி அது?”

“நம்ம வாழ்க்கை ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொரு நாளோட ஒவ்வொரு நொடிப் பொழுதும் கூட தீர்மானிக்கப்பட்டிருக்கிற மாதிரி தெரியல..!”

“இப்ப எனக்கும் அந்த எண்ணம்தான் தம்பி. இதைத்தான் விதின்னும், விதியை மாத்த முடியாதுன்னும் சொல்றாங்களோ?”

“இருக்கலாம்... ஆமா அந்த நாடில இன்னும் ஏதாவது செய்தி உண்டா?”

“உண்டு தம்பி... எந்திர மந்திர தந்திரராலே சுந்தரி இவளும் சுகமடைவாளேன்னு ஒரு வரி.. எந்திர, மந்திர தந்திரர்னா யார்னுதான் தெரியல... ஆனா அது ஒருத்தர் இல்ல. மூணு பேர்னு தெரியுது. அந்த மூணு பேர் யார்? அவங்களுக்கும் என் மகளோட கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம். எதுவும் புரியலை. நடக்க நடக்கப் புரியுமோ என்னவோ?’’

அவரின் பதில் தனஞ்ஜெயனை சிலிர்ப்போடு கண் களை மூடச் செய்தது. காரும் தேவர் சிலை கடந்து அழகர் மலையை நோக்கிச் சென்றபடி இருந்தது.

15

‘பத்து லட்ச ரூபாய் பரிசு விழவும் அவருக்கும் நம்பிக்கை வலுப்பட ஆரம்பித்தது. அவரைவிட அவரது மனைவி அதை ஒரு பெரும் அதிசயமாகவே கருதினாள். "இப்படி ஒரு எந்திரம் இருக்கறது முந்தியே தெரியாம போயிடிச்சே!” என்று வருத்தப்பட்டாள். அப்படியே 'இப்படி ஒண்ணு இருக்கறது தெரிஞ்சா எல்லாரும் வாங்கி இதை கும்பிட்டே பெரிய பணக்காரங்களா ஆயிட முடியுமே. யாரும் அநாவசியமா கஷ்டப்படத் தேவையே இல்லையே! என்றும் பேசினாள்.

அவருக்கும் அவள் சிந்திப்பதில் நியாயம் இருப்பது போல தோன்றியது. இப்படி எல்லாம் செல்வத்தை அடையும் வழிகள் ஏன் வெளியே தெரிவதில்லை? இதற்கான விடையை இந்த எந்திரத்தைக் கொடுத்த அந்த சாமியாரிடமே கேட்போம் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டார்.

குபேர எந்திரம் பணத்தைக் கொடுத்து கடன் பிரச்னையைத் தீர்த்துவிட்டது. வயிரவ எந்திரம் என்ன செய்தது?

*****

அழகர் மலை அடிவாரம்!

மனிதர்களுக்கு சமமாக குரங்குகளின் கூட்டம் துளியும் அச்சமில்லாத குரங்குகள். ஒருவன் இன்னொருவ னிடம் வெள்ளரிப் பிஞ்சு ஒன்றை கையில் தந்து "இதை அப்படியே வெளிய தெரியற மாதிரி பிடிச்சுகிட்டு மேல நூபுர கங்கை போய்ட்டா உனக்கு ஆயிரம் ரூபா. நடுவுல இந்த வெள்ளரிப் பிஞ்சுக்கு ஏதாவது ஆனா நீ எனக்கு ஆயிரம் ரூபா தந்துடனும்” என்று பந்தயம் கட்டிக் கொண்டிருந்தான்.

“குரங்கு கிட்ட கடிபட்டு என்னை சாகச் சொல் றியா... வேற ஆளைப்பார்...” என்று அவனும் அவனுக்கு பதிலுக்கு சொல்லிக் கொண்டிருந்தான்.

அவர்களை ஒட்டித்தான் நின்றது கல்யாண சுந்தரத் தின் கார். காரில் இருந்து தனஞ்ஜெயனும் அருணாவும் இறங்கினர். கல்யாணசுந்தரமும் இறங்கி சோம்பல் முறித்தார். முதல் தடவையாக அழகர் மலையைப் பார்க் கிறார். மலை என்ற உடனேயே திருப்பதியும் பழனியும் நினைவுக்கு வரும். அப்படி இல்லாமல் சிறிய மலையாக அது இருப்பது போல தோன்றியது அருணாவுக்கு.

அருணா காரில் உட்கார்ந்திருக்கும்போது இருந்ததை விட இறங்கி நிற்கும்போது மிக அழகாகத் தெரிந்தாள். விரல்களில் நிறைய மெஹந்தி சிவப்பு. உடல் மேலும் ஒரு வாச ஸ்ப்ரேயின் வாசம். தனஞ்ஜெயனுக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது.

“சார் நாம இப்ப அடிவாரத்துல இருக்கோம் இப்படியே இடது பக்கமாப் போனா மலைப்பாதை வரும். அதன் வழியா ஒரு அஞ்சு கிலோ மீட்டர் தூரம் போனா பழமுதிர்ச்சோலையும் அதுக்கு மேலதான் மூலிகை வனமும் அதுக்கும் மேல தான் நீங்க சொன்ன ராமதேவர் சமாதியும் இருக்கணும்னு தோணுது” என்றான் தனஞ் ஜெயன்.

“அப்ப நேரா மேலேயே போயிடலாமே?”

“நீங்க கீழே கள்ளழகரை தரிசனம் பண்ணலையா?”

“ஆமால்ல... சரி, முதல்ல கள்ளழகரை தரிசனம் பண்ணிடுவோம்.”

“அப்ப போய்ட்டு வந்துடுங்க.”

“நீங்க வரலையா?”

“நான் வரக்கூடாதுங்க. என் அண்ணன் உறவுல ஒருத்தர் இறந்து இன்னும் பத்துநாள் கூட ஆகலை. பங்காளித் தீட்டு.”

“ஒ... அப்ப கார்ல வெயிட் பண்ணுங்க. நாங்க போய் தரிசனம் பண்ணிட்டு வந்துடறோம்...” என்ற கல்யாண கந்தரமும், அருணாவும் புறப்பட்டனர். தனஞ்ஜெயனும் காத்திருக்கத் தொடங்கினான். பசித்தது. எதிரில் கொய்யாப் பழங்களை கூறு கட்டி விற்றுக் கொண்டிருந் தனர். சாப்பிடும் ஆசை எழும்பியதும் பாக்கெட்டைத் நடவிப் பார்த்தான். பணம் இல்லை. அப்போது தான் முழுக்க முழுக்க அந்தப் பணக்காரரை சார்ந்திருக்கப் போவது தெரியவந்து மனமும் வருத்தத்தில் தோயத் தொடங்கியது.

“ச்சே... இப்படி நயா பைசாவுக்கு இடமில்லாமல் வந்திருக்கிறோமே...” என்று எண்ணிய அதே சமயம் எண்ணங்கள் மாமன் மகள் விஜயலட்சுமியை நோக்கியும் செல்லத் தொடங்கின.

கைக்கடிகாரத்தை பார்த்தபோது மணி பன்னி ரண்டைத் தொட்டுக் கொண்டிருந்தது. வீட்டில் இன் னேரம் பெண் பார்க்கும் படலம் நடந்து கொண்டிருக்கும் என்று நினைக்கும்போதே அந்த எண்ணம் பாரமாகி நெஞ்சை அழுத்தியது.

விஜயலட்சுமியின் வீடு!

பெண்பார்க்கும் படலம் நடந்து கொண்டிருந்தது. மாப்பிள்ளைப் பையன் பார்ப்பதற்கு கோரமாக, மதர்ப்பான மீசை, புலி நகச் சங்கிலி என்று இருந்தான். ஒரு மெல்லிய ரவுடித்தனம் ஒட்ட வைக்கப்பட்டிருப்பது போல் ஒரு தோற்றம்.

விஜயலட்சுமியை அவனுக்கு மிகப் பிடித்துவிட்டிருந் தது. அதனால் அவளையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான். விட்டால் அப்போதே தாலியை கட்டி அவளைக் கட்டிக்கொண்டு போய்விடுவான் போல்கூடத் தோன்றியது.

அதை விஜியின் அம்மா தேவகியில் இருந்து அப்பா அண்ணன் வரை பார்த்து ரசித்தனர்.

பெரிய கை!

மூன்று ரைஸ்மில்கள், இதுபோக இரண்டு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ"கள். வாடகையே ஒண்ணரை லட்சம் வருகிறது. பையன் முழுதாக ப்ளஸ் டு கூட முடிக்கவில்லை. அதனால் என்ன? சொத்தும், அதன் மதிப்பும் எல்லா வற்றையும் மறக்க வைத்து விட்டிருந்தது. விஜியின் அப்பா தனசேகரன்பிள்ளை அப்போதே அச்சாரத்துக்கு தயார் ஆகிக் கொண்டிருந்தார்.

ஆனால், விஜயலட்சுமி 'எனக்கு இவனைப் பிடிக்க வில்லை. நான் என் அத்தை மகனைத்தான் கட்டுவேன்' என்று கூறிவிடத் துடித்தபடி இருந்தாள். அது அவள் முகத்தைப் பார்க்கும்போதே தெரிந்தது. அவள் அப்பட சொல்லிவிடக் கூடியவள் என்பது தேவகிக்குத்தான தெரியாதா என்ன? அவ்வப்போது அவள் காதோரமாய் "என்னத்தையாவது பேசி உன் தலைல மண் அள்ளிப் போட்டுக்காதே. இங்க இந்த கல்யாணத்தை மட்டும் நிறுத்துனே, நான் மண்ணெண்ணெயை ஊத்திக்க கொஞ்சம்கூட யோசிக்கமாட்டேன்..." படியே இருந்தாள்.

"எல்லாரும் இருந்து விருந்து சாப்பிட்டுத்தாள போகணும். அதுக்கு முன்ன இந்தக் கல்யாணத்துக்கு அச்சாரமா பாக்கு வெத்தல மாத்திக்குவோம்..." என்று தனசேகரன்பிள்ளை ஒரு தட்டு நிறைய வெற்றிலை பழத்தை வைத்து அதன் மேல் ஒரு பத்தாயிரம் ரூபாய்க் கட்டை வைத்து தயாராகிக் கொண்டிருந்தார்.

அதைப் பார்க்கப் பார்க்க விஜிக்கு கண்ணீர் துளிர்க்கத் தொடங்கியது.

அதை யாரும் பார்த்துவிடாத படி எழுந்து தனியே அறைப்பக்கம் போனாள்.

அவள் விலகவும் தனசேகரன்பிள்ளையும் மனைவி யிடம் சென்று "ஏலேய், அவ மேல ஒரு கண்ணு எப்பவும் இருக்கட்டும். அவ லேசுப்பட்டவ இல்லை..." என்றார்.

"எல்லாம் எனக்கும் தெரியும்... நானும் அவ மேல வெச்ச கண்ணை எடுக்காமத்தான் இருக்கேன்" என்றாள் தேவகி. தாயும் தந்தையும் பேசிக்கொள்வது விஜியின் காதிலும் விழுந்தது.

மாப்பிள்ளைப் பையன் பெயர் சந்தானம். பட்டு வேட்டி, சட்டையில் வந்திருந்தான். காலை மடக்கி அமர்ந்திருப்பது பெரும்பாடாய் இருந்தது. உட்கார்ந்தது போதும் என்று எழ முயன்றான். விஜியின் அண்ணன் கவனித்துக் கொண்டேயிருந்து "மாப்ள வாங்க... அப் படியே மொட்டை மாடிப்பக்கம் ரிலாக்ஸா நிப்போம்." என்று அழைத்துச் சென்றான்.

"ஒரு தம் போட்டுக்கலாமா?" என்று மாப்பிள்ளை சந்தானம் கேட்கவும் கொஞ்சம் சுரீர் என்றது. திகைப்பை முகத்தில் காட்டினான்.

"ஏன் நீங்க தம் கட்ட மாட்டீங்களோ?"

"இல்லை. அப்பப்ப. எப்போவாச்சும்..."

"நான் கொஞ்சம் அது கிட்ட மாட்டிகிட்டவன். எனக்கு எதையும்மறைச்சுப் பேசறதும் நடந்துக்கறதும் பிடிக்காது."

"நல்ல பழக்கம்தான்."

"அப்ப கம்பெனி கொடுக்கறது."

மாப்பிள்ளை தன் சிகரெட் பாக்கெட்டையே எடுத்து எதிரில் நீட்டினான். அதற்கு முன் விஜியின் அண்ணனும் ஒடிப் போய் மாடிக் கதவை மூடி தாழ் போட்டுவிட்டு வந்தான். மாப்பிள்ளை அதைப் பார்த்துச் சிரித்தான்.s

"யாரும் பாத்துடுவாங்கன்னு பயமோ?"

"ஆமா... விசேஷ நேரம். எங்கப்பாவைக்கூட சமா ளிச்சிடலாம். எங்கம்மாவை சமாளிக்கவே முடியாது. ஒரு ஆட்டம் ஆடிடும்"

"என் மாமி யாரை அப்படி எல்லாம் தப்பா சொல்லாதீங்க"

சந்தானம் அப்போதே உறவு கொண்டாடியது அவனை திகைக்க விட்டது.

“என்ன... மாமியார்னு இப்பவே சொல்றேன்னு பாக்கறீங்களோ?”

“ரொம்ப வேகமா இருக்கீங்களே...”

புகை கக்கியபடியே பதில் சொன்னான், “ரொம்ப ரொம்ப வேகமானவன் நான். ஒண்ணைப் பிடிச்சிப்போனா வாங்கியே தீருவேன். ஒரு காரு... பென்சோ... பொன்சோ சொல்லிட்டாங்க... நம்ம சினேகிதப் பய ஒருத்தன்து... ஒட்டிப் பாத்தேன். சும்மா ரதத்துல போற மாதிரி இருந்துச்சு. மனசும் பச்சுக்குன்னு ஒட்டிக்கிச்சு. உடனேயே வாங்க முடிவு பண்ணிட்டேன். எங்கப்பனும் கொஞ்சம் உங்க அப்பன் மாதிரிதான். அதான் மாருதி, டாடா சுமோன்னு ஏகத்துக்கும் இருக்குல்ல? எதுக்கடா இன் னொண்ணு வெட்டியான்னாரு. அதெல்லாம் முடியாது வாங்கியே தீரணும்னு அடம்பிடிச்சு வாங்கிப்புட்டேன். அப்படித்தான் உங்க தங்கச்சியையும் ஒரு நாள் தெருவுல பாத்தேன். ரொம்பப் பிடிச்சிப் போச்சு.”

சந்தானம் தான் யார் என்பதை ஒரு வித கித்தாப் போடு கூறிக்கொண்டாலும் அவனது செல்வச்செருக்கு விஜியின் அண்ணனுக்கு பிடித்துவிட்டது. உள் மனதுக்குள் “இப்படி ஒரு கொழுத்த காசுக்கார பயலுக்காகத்தானே நாங்களும் காத்திருந்தோம்” என்று கூறிக்கொண்டான். அந்த நொடி தனஞ்ஜெயன் நினைப்பும் வந்து இந்த நேரத்துல போய் இந்த வெறும் பயலை நினைச்சுகிட்டு என்று மனதை மாற்றிக்கொண்டான். மொட்டை மாடியே ஒரே புகை மண்டலமாகிவிட்டது!

கள்ளழகர் தரிசனம் முடிந்து வந்தார் கல்யாண சுந்தரம்! அருணா நெற்றியில் தாயாரின் மஞ்சள் காப்பு பளிச்சென்று மின்னியது. தலைமுடி வேறு லேசாகக் கலைந்து முன்விழுந்து ஒரு புதிய அழகை தோற்றுவித் திருந்தது.

தனஞ் ஜெயனால் அருணாவை அழுத்தமாகப் பாக்காமலோ நினைக்காமலோ இருக்க முடியவில்லை. அதே சமயம் கொஞ்சம் உறுத்தலாகவும் இருந்தது. விஜி அவனுக்குள் இருந்துகொண்டு கொன்னுடுவேன் என்று சொல்வது போல் இருந்தது.

காரில் மலைப்பாதையில் ஏறும்போதும் அவனிடம் அதே நினைப்புதான்.

“தம்பி உள்ள அழகர் தரிசனம் ரொம்ப நிறைவா இருக்கு” என்று பேச்சை ஆரம்பித்தார் கல்யாணசுந்தரம்.

"அப்படீங்களா?”

"ஆமாம். உங்களுக்குத்தான் நன்றி சொல்லணும். ஆமா நீங்க என்ன பண்றிங்கன்னு சொல்லவே இல்லையே” அவன் கேள்விக்கு பளிச்சென்று பதில் கூறிட ஒரு பயோ டேட்டா தன்னிடம் இல்லை என்பது போல் அவன் மனது எண்ணியது.

“வேலைக்காகத்தாங்க ட்ரை பண்ணிகிட்டிருக்கேன்.” என்றால் ஒரு வரியில்.

“என்ன படிச்சிருக்கீங்க”

"டிகிரிங்க...” என்றவன் கொஞ்சம் தயக்கத்தோடு “ரெண்டு பேப்பர் அரியர்ஸ் இருக்குது” என்றான்.

"ஒ... முடிச்சிட வேண்டியதுதானே?”

"என்னமோ தெரியலிங்க... எனக்கு நம்ம எஜுகேஷன் சிடைமே சுத்தமாப்பிடிக்கலை”

"படிக்க வராதவங்கதான் இப்படிச் சொல்வாங்க” அவனுக்கு சுரீர் என்றது.

***

"இல்லீங்க... எனக்கு படிப்பு நல்லா வந்தது. ஆனா இந்தப் படிப்பு நிஜமாப் பிடிக்கலை. சரித்திரம்னா அசோகர் மரம் நட்டதையும், பானிபட் போரையும் படிக்கறோம். தமிழ் னா திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம். போர் அடிக்குதுங்க...”

“என்ஜினீயரிங்குல இதெல்லாம் இல்லையே...”

“ஆனா சீட் கிடைக்கலியே...”

"அப்பா என்ன செய்யறார்...”

"அப்பா... அப்பா...”

“என்ன தம்பி... அப்பா இல்லையா?”

"இருக்காரு... ஜோசியரா...”

“ஜோசியராவா... பேரு?”

"சுந்தரம்பிள்ளை...”

“சுந்தரம்பிள்ளை... சுந்தரம்பிள்ளை... பூர்வீகம் தின்னவேலி பக்கம்தானே?”

"ஆமாம்...”

“அப்ப நீங்க சொந்தம் தம்பி... உங்கப்பா எனக்கு எங்கம்மா வழில மாமன் மகன் உறவு...”

அவர் சொல்லவும் தனஞ்ஜெயனிடம் ஒரு அதிகபட்ச ஆச்சரியம்.

“இதை நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலிங்க...” என்றான்.

“நானும்தான். அப்பா திருப்பரங்குன்றத்துலயா இருக்காரு?”

“ஆமாங்க...”

“அடடே.. அப்ப அவரை நான் பார்த்தாகணுமே.”

அவர் சொல்ல, கார் நூபுர கங்கையின் வாசல் பகுதியை எட்ட சரியாக இருந்தது.

16

அந்த மனிதரின் வாழ்வில் வயிரவ எந்திரம் வேறுவிதமாக நடந்துகொண்டது. வயிரவ எந்திரத்தைஒரு சித்தர் ‘வாத்தியார் கையில் உள்ள பிரம்பைப் போன்றது!’ என்றார். பிரம்பானது மாணவர் களுக்கு லேசான அச்சத்தை தந்து எப்போதும் அவர் களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். வயிரவ எந்திரமும் அப்படித்தான். அதை ஒருவர் பக்தி உணர்ச்சியோடு உற்றுப் பார்த்து வணங்கும்போதுதான் அதன் செயலாக்கம் தொடங்குகிறது.

ஒரு பேட்டரிக்குள் பொதிந்து கிடக்கும் சக்தியை நாம் சில புறக் கருவிகளில் பொருத்தி அதை பயன் படுத்திக்கொள்ள விழைவதைப் போன்றது இது.

வயிரவ எந்திரம் முன்னால் அமர்ந்து பூஜிக்கும் போது நமதுவினைப்பாடு மெல்ல விலகத் தொடங்கு கிறது. எவரால் நமக்கு பாதிப்பு ஏற்பட்டதோ அது உண்மையாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் சம்பந்தப்பட்டவர் பற்றிய எண்ணம் நம் மனதில் அதற்கே உண்டான வருத்த உணர்ச்சிகளோடு இருக் கும். அந்த வருத்த உணர்ச்சிக்குக் காரணமாக ஒரு கோள் இருக்கும். அந்தக் கோள்தான் சம்பந்தப்பட்ட நபரைப் பயன்படுத்தி வருத்த உணர்வைத் தந்தபடி இருக்கும்.

வயிரவ எந்திரத்தின் பூஜைக்குரிய செயல் பாட்டால் உருவாகும் சூட்சுமமான கதிர் ஆற்றல். அந்த கிரகத்தின் துன்பத்தை வலிமை இழக்கச் செய்யும். இதனால் பூஜிப்பவர் மனதில் ஒரு புது நம்பிக்கை உருவாகும். அதே சமயம் தவறு இழைத்தவரை அந்த கிரகத்தின் செயல்பாடு தாக்கத் தொடங்கும்.

இதை இப்படி விளங்கிக் கொள்ள முற்படும் போது விஞ்ஞானம் போலவும் இது விளங்கும்.

மொத்தத்தில் எண்ண அலைகளை மையமாக வைத்தே இந்த செயலாற்றல் நடைபெறுகிறது. அதற்கு பூஜையில் ஏற்படும் மன ஒருமை, அவ்வேளை சொல்லப்படும் மந்திர உச்சாடனம், அதை சப்த அலைகளாகத் தன்னுள் வாங்கி வெளிப்படுத்தும் அந்த செப்பு எந்திரத்தின் ரசாயனச் செயல்பாடு என்று இதன் பின்னாலே ஒரு பெரும் வினைப்பாடு உள்ளது.

அந்த வினைப்பாடு சொத்தை இழந்து நிற்கும் இந்த மனிதருக்குள் புது நம்பிக்கையைத் தோற்று வித்தது. அந்த நம்பிக்கையே அவருக்குள் தைரிய மாகவும் மாறிடத் தொடங்கியது. மனச்சோர்வும் நீங்கியது.

அவ்வளவுக்கவ்வளவு இவரை ஏமாற்றியவர் அச்ச மடையத் தொடங்கினார். அவர் ஆழ் மனதில் குற்ற உணர்ச்சி குடையத் தொடங்கியது!

*****

நூபுர கங்கையின் முகப்புப் பகுதி!

கார் அங்கே தேங்கி நின்றிட மூவரும் இறங்கிக் கொண்டனர்.

படிகளில் ஏறி மேலே சென்றால் நூபுர கங்கையின் ஊற்றானது இடையறாது பெருகி வழிந்தபடி இருக்கும் தண்ணீர்த் தொட்டிப்பகுதி வரும். அங்கேயே ராக்காயி அம்மனுக்குக் கோயிலும் உள்ளது.

அந்த நூபுர கங்கைக்குப் பின்னாலே ஒரு பெரிய புராணக்கதையே

உள்ளது. அதில் மகாபாரதத்து அர்ஜுனன் முதல் தர்மர் வரை நீராடியுள்ளனர் என்பார்கள்.

மருத்துவ குணமுடைய நீர்!

கல்யாண சுந்தரமும் அருணாவும் அதில் குளித்து விட்டு ராக்காயியையும் வழிபட விரும்பினார்கள் தனஞ்ஜெயன் இங்கேயும் காரிலேயே இருந்துகொள்ள அவர்கள் மேலேறிச் சென்று வழிபாட்டை முடித்துவிட்டு வந்தனர்.

அருகிலேயே இருந்தது மூலிகை வனம்!

இரும்புக் கிராதி கதவு போட்டு வேலி போடப் பட்டிருந்தது. அதன் வழியாக உள்ளே நுழைந்து வனப் பகுதிக்குள் நுழைவது எப்படி என்பதில் தனஞ்ஜெயனுக்கு குழப்பமாக இருந்தது.

அப்போது வேட்டி மட்டும் கட்டிய காட்டுவாசியைப் போன்ற ஒருவன் இரண்டு முயல்களைக் கையில் பிடித்துக் கொண்டு காட்டுப் பகுதிக்குள் இருந்து வந்துகொண்டிருந்தான்

அவனைப் பார்க்கவும் தனஞ்ஜெயனிடம் ஒரு தெம்பு.

“அய்யா... நீங்க மேல மலைக்காட்டுல இருந்து வர்நீங்களா?”

"ஆமா..."

“மேல எங்கையாவது சித்தர் சமாதி இருக்குதா?”

“எனக்குத் தெரிஞ்சு அப்படி எதுவும் இல்லீங்க. ஆனா அப்பப்ப சாமியாருங்க சிலர் கைல பூமாலையோட போவாங்க... பாத்துருக்கேன்.”

“இல்லாத சமாதிக்கு எப்படிப் போக முடியும்?”

“அது எனக்கு தெரியாதுங்க. எனக்குத் தெரிஞ்ச பதிலை நான் சொன்னேன்.”

“யாரைக் கேட்டாத் தெரியும்?”

“அதுவும் எனக்கு தெரியாதுங்க. ஆனா நான் வர்ற வழில ஒருத்தரைப் பார்த்தேன். அவரு காட்டுப் பூக்களை பறிச்சிக்கிட்டிருந்தாரு, என்கிட்ட தேன் இருந்துச்சு. பசியாயிருக்கு. தருவியான்னு கேட்டாரு. நானும் கொடுத் துட்டேன். ஏன்னா சாமியாருங்களுக்கு கோபம் வந்து சபிச்சுட்டா அது நமக்கு நல்லது இல்லீங்களே...”

“சரி... அவரைப் பாத்துக் கேட்டாத் தெரியுமா?”

“தெரியவீங்களே... போய்ப் பாருங்க. இந்த மலைக் காட்டுல எது எப்ப நடக்கும்னு சொல்ல முடியாது. வயசுப் பொண்ணுங்க சிரிச்சுப் பேசிக்கிட்டிருக்கற மாதிரி சப்தம் கேட்கும். கிட்டப் போய்ப் பாத்தா காட்டு பன்னிங்க காட்டில் புரண்டுக்கிட்டிருக்கும். திடுதிப்னு ஜவ்வாது வாசம் வரும. ஆனா எங்க இருந்து எப்படி வருதுன்னே தெரியாது. இது ஒரு வினோதமான மலைக்காடுங்க”

அந்த மனிதன் புதிராகப் பேசிவிட்டு விலகியும் செல்லத் தொடங்கினான்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த கல்யாணசுந்தரத் துக்கு சற்றுக் குழப்பமாக இருந்தது. ஆனால் அருணா தெளிவாகத் தெரிந்தாள்.

“சார், என்ன செய்யலாம்?”

“என்ன செய்யலாம்னா... அங்க போய் நாடில வந்தபடி விளக்கேத்தித்தானே ஆகணும்?”

“அதுக்கில்ல... இப்பவே மணி அஞ்சாகப் போகுது. கொஞ்ச நேரத்துல இருட்டிடும். இந்த நேரத்துல காட்டுக்குள்ள போறது எந்த அளவுக்கு சரின்னு எனக்கு தெரியலை.”

“இதுல தெரிஞ்சுக்க என்ன தம்பி இருக்கு... நிச்சயம் கஷ்டம்தான். எனக்கும் இப்ப என்ன செய்யலாம்னு குழப்பமாத்தான் இருக்குது...”

“இன்னிக்குப் போயிட்டு நாளைக்கு வருவோமா?”

“நாளைக்கா... அப்ப காலைலயே கிளம்பி வந்துடு வோம். உங்களால வரமுடியும்தானே?”

“வரேங்க... நீங்க உங்க பரிகாரத்தை செய்து முடிக் கறவரை நான் உங்க கூடவே இருக்கேன்”

தனஞ்ஜெயன் மிகுந்த நட்போடு பேசியது, அவரை விட அருணாவுக்கு மிகப் பிடித்திருந்தது.

அப்போது அதே காட்டு வழியில் தோளில் தொங்கும் பையோடும் சிகப்பு வேட்டியோடும் சந்திர மௌலி வெளிப்பட்டுக் கொண்டிருந்தார்.

அவரைப் பார்க்கவும் கல்யாணசுந்தரத்திடம் ஒரு இன்ப அதிர்ச்சி. அவருக்கும் அப்படித்தான் இருந்தது.

‘‘சாமி நீங்களா?”

“அது சரி... நீங்க எங்க இங்க?”

“நான் உங்களைக் கேட்டா நீங்க என்னைக் கேட்க நீங்களா?”

“நான் இங்க மலைமேல இருக்கற சித்தர் ஜீவ சமாதிக்கு வந்தேன்.”

“ராமதேவர் சித்தரோட சமாதிங்களா?”

“ஆமாம்... உங்களுக்கும் தெரிஞ்சிருக்கே?”

“சரிதான் போங்க. மலைமேல அது இருக்குன்னு ஒரு நாடி ஜோசியம் பாத்த ஏட்டுல வந்துச்சு. ஆனா இவ்வளவு பெரிய மலைல எங்க இருக்குது எப்படி போகணும்னே தெரியாம நான் இங்க திகைச்சு நின்னுகிட்டிருக்கேன். ஆனா நீங்களோ அந்த சமாதிக்கு போய்ட்டே வந்துட உங்க போல இருக்கு.”

“ஒ... நாடில வந்த விஷயமா? அப்ப வாங்க உங்கள நான் கூட்டிக்கிட்டுப் போறேன்.”

அதிகபட்சம் இரண்டு நிமிடத்தில் கல்யாண சுந்தரத் துக்கு வழி தெரிந்தது மட்டுமல்ல, கூட்டிச்செல்ல ஆளும் வந்துவிட்டார்.

அவருக்கு சட்டென்று உடம்பு சிலிர்த்தது.

“சாமி... இப்பதான் இடம் தெரியாம திகைச்சு நின்னேன். ஆனா கடவுளாப் பாத்து உங்கள அனுப்பி வெச்சு வழியை காட்டிட்டான். இதை என்னன்னு சொல்றது?’ என்றார். அருகிலேயே நின்று கொண்டிருந்த தனஞ்ஜெயனுக்கு சந்திரமௌலியின் தோற்றமும் புதிது.பார்வையும் புதிதாக இருந்து அவனை அப்படியே ஊடுருவியது.

“இவர் யார்னு சொல்லலையே?’’ சந்திரமௌலி கல்யாணசுந்தரத்திடம் கேட்டார்.

“தம்பி எனக்கே இன்னிக்குத் தான் அறிமுகம். தம்பி பேர் தனஞ்ஜெயன். திருப்பரங்குன்றம் தெருவுல சந்திச் சேன். நான் இங்க வரக் காரணம் இவர்தான்.”

கல்யாண சுந்தரத்தின் அறிமுகம் சந்திரமௌலியை சற்று அதிரச் செய்தது.

காரணம் அவனது பெயர்!

அவனைப் பற்றிய ஏடுகளும் இப்போது அவரிடம் தானே இருக்கின்றன.

ராமதேவரின் சமாதியில் ஆழ்ந்த பிரார்த்தனையில் இருந்து தன் தேடலுக்கு வழிகாட்டும்படி வேண்டிக் கொண்ட போது எங்கிருந்தோ ஒரு மலர் உதிர்ந்து மடிமேல் வந்து விழுந்தது.

அப்படி மலர் உதிர்ந்து விழுவது நல்ல சகுனத்தைக் குறிக்கும். அதற்குப் பொருள் சந்திரமௌலிக்கு அப்போது தெரிந்தது. தனஞ்ஜெயனைப் பார்த்து கோவிலில் உள்ள விக்கிரகங்களைப் பார்த்து கும்பிடுவது போலவே கும்பிட் டார். அவனுக்கே அது ஆச்சரியமாக இருந்தது.

“ஐயோ என்னங்க இது. என்னப் போய்க் கும்பிட்டுக் கிட்டு...”

“சக்தி சொரூபங்களை அந்த சக்தியாவே நினைச்சு வணங்குவதுதான் என் வழக்கம்.”

“நான் சக்தி சொரூபமா?”

“நிச்சயமா... உங்களைப் பார்த்த நொடி என் காதுல அபிராமி அந்தாதி ஒலிச்சது.”

“அபிராமி அந்தாதியா?”

“ஆமாம்... காலம் நினைச்சா யாரையும் எங்கேயும் சந்திக்கவைக்கும்ங்கறதுக்கு இந்த சந்திப்பு ஒரு உதாரணம். நீங்க அம்பாளோட பிள்ளை.”

“ஐயோ... நான் ஒரு சராசரி மனுஷன் அவ்வளவு தான்...”

தனஞ்ஜெயன் தன்னடக்கமாய்ச் சொன்ன பதிலுக்கு அவர் மேற்கொண்டு பதிலேதும கூறவில்லை. திரும்பவும் கைகளைக் கூப்பினார். பின் “நாம புறப்படலாம்” என்று சமாதி நோக்கி நடக்கத் தொடங்கினார். தனஞ்ஜெயனும் சற்று கூச்சத்தோடு அவரைப் பின் தொடர்ந்தான்.

வனப்பகுதியில் நடப்பது சிரமமாக இருந்தபோதிலும் முன்னால் நடக்கும் சந்திரமௌலி, வழிமறித்த கிளை களை, செடிகொடி இலைகளை அழகாக விலக்கியபடியே நடந்தார்!

தனஞ்ஜெயனின் வீட்டில் நல்லம்மையின் கண் னிரண்டும் தெருவையே பார்த்தபடி இருந்தன.

தனஞ்ஜெயனுக்காக அவள் பார்த்தபடி இருந்த போது

சுந்தரம்பிள்ளைதான் வந்தார்.

வந்தவர் முகத்தில் வாட்டம் தெரிந்தது.

“நீங்க ஏங்க ஒரு மாதிரி இருக்கீங்க?"

“உள்ள வா சொல்றேன்...” என்று மனைவியை உள்ளே அழைத்து விஷயத்தையும் சொல்லத் தொடங்கினார்.

“உன் அண்ணன் அவன் மகளுக்கு மாப்பிள்ளை பேசி அச்சாரமும் போட்டுட்டானாம். காதுல உழுந்திச்சி...” என்றார்.

அதைக் கேட்ட நல்லம்மைக்கு மளுக்கென்று கண்ணிர் துளிர்த்துவிட்டது.

“கல்யாணத்தைப் பொறுத்தவரை நான் உனக்கு முந்தியே சொல்லியிருக்கேன் ஒருத்தன் பொண்டாட்டிய இன்னொருத்தன் கட்டமுடியாதுன்னு. அவ உன் மருமகளா வரணும்னு நீ ஆசைப்பட்டே. ஆனா அதுக்கு விதி இல்லாமப் போயிடுச்சு. இதுக்காக மனசைப் போட்டுக் குழப்பிக்கிடாதே. எது நடக்கணுமோ அதான் நடக்கும்.”

‘‘அண்ணன் இவ்வளவு பிடிவாதமா நடந்துக்கும்ன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலீங்க...”

“அவன் எங்க நடந்துகிட்டான். விதி வேலை செய்யும் போது எல்லாரும் அப்படித்தான் நடந்துக்குவாங்க நல்லம்ம...”

“அந்த பொண்ணு எப்படிங்க ஒத்துக்கிச்சு...?”

“இது என்ன கேள்வி... உங்க அண்ணன் முரண்டு பிடிச்சா எப்படிப் பிடிக்கும்னு தான் எல்லாருக்கும் தெரியுமே..?”

சுந்தரம் பிள்ளை கேட்டபடியே வாசற்புறம் திரும்பிய போது நிழலாடியது!

வேறு யாருமில்லை. விஜிதான்!

17

வயிரவ எந்திரத்தையும் குபேர யந்திரத்தையும் பூஜித்த நபரின் மனதில் நம்பிக்கையும் வாழ்க்கையில் பிடிப்பும் ஏற்பட்டதற்கு எதிர் மறையாக இவரை ஏமாற்றியவரின் வாழ்வில் அச்சமும் மனப்பதற்றமும் சூழத்

தொடங்கியது.

குறிப்பாக குற்ற உணர்ச்சி குடையத் தொடங்கி யது. சொத்துக்காகப் பொய் சொல்லி, ஏமாற்றிக் கையெழுத்து வாங்கிய சம்பவ மெல்லாம் பெரிய இவறாக அவர் மனதை எண்ண வைத்தது. அதற்கேற்ப ஒரு சம்பவமும் அவர் வாழ்வில் நிகழ்ந்தது.

அவரது செக் புத்தகம் தொலைந்து போனது!

அவரது வங்கி இருப்பை அவரது செக் புத்தகத்தை வைத்தே அவரது பார்ட்னர் ஒருவர் காலி செய்து விட்டார். இவரது கையெழுத்தைப் போலவே போட்டு ஏமாற்றிவிட்டார்.

இவர் போய்க் கேட்டபோது 'நீயே ஏமாற்றிக் கையெழுத்து வாங்கி சொத்தை அபகரித்தவன்தானே! நீ என்னை கேட்க வந்துவிட்டாயா..?' என்று அவர் கேட்கவும் செருப்பால் அடிபட்டது போல் இருந்தது.

நாம் ஒருவரை ஏமாற்றினால் நம்மை இன்னொரு வர் ஏமாற்றுவார் என்பதும் உரைத்தது. அதுவே அவர் திருந்தவும் ஒரு காரணமாக அமைந்தது. அதன்பின் கோர்ட்டுக்கே அவர் வரவில்லை. அவர் வராததால் வழக்கு, சொத்தைத் தொலைத்தவருக்கு சாதகமாக முடிந்தது. சொத்தும் திரும்பக் கிடைத்தது. எப்படியோ குபேர யந்திரம் பணத்தையும் வயிரவ எந்திரம் நிலத்தையும் மீட்டுக் கொடுத்துவிட்டது. அதே சமயம் இப்படி தனக்கு உதவிய எந்திரங்களை திரும்பித்தர வேண்டுமே... அந்த சித்த சன்யாசி அப்படிச் சொல்லி அல்லவா கொடுத்திருக்கிறார்.

*****

விஜியைப் ப்பார்க்கவும் சுந்தர பிள்ளை சரி... நல்லம்மைக்கும் சரி சற்று சுருக்கென்றது.

அவர்கள் அவளைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை. பேந்தப் பேந்தப் பார்த்தனர்.

அவள் மெல்ல நடந்து வந்து அவர்களை சோகமாக ஏறிடத் தொடங்கினாள்.

"வாலே... மாப்ள ஊட்டுக்காரக வந்துட்டுப் போன தாகக் கேள்விப்பட்டேன். மாப்ள எப்படி இருக்காரு? உனக்கு பிடிச்சிருந்திச்சா?" என்று நைச்சியமாகப் பேச்சை ஆரம்பித்தாள்

நல்லம்மை.

விஜியிடம் பதிலில்லை.

“என்னலே... நான் கேக்றேன்... வாய மூடிக்கிட் டிருந்தா என்ன அர்த்தம்?”

“நீ ஒண்ணு நல்லம்ம... அதுக்குப் பிடிக்கல... மாப்ளப் பையனை மட்டுமில்ல. நீ இப்படிக் கேட்கறதும்தான்! என்ன கண்ணு நான் சொல்றது?’ சுந்தரம்பிள்ளை கேட்டது தான் விஜியிடம் வேலை செய்தது.

“மாமா... உங்களுக்குத்தான் என் மனசு எப்படின்னு தெரிஞ்சிருக்குது. அத்தைக்கு நான் அன்னியமாயிட்டேன் போல இருக்கு” என்றபடியே கண்ணிர் உகுத்தாள்.

“நீ எனக்கு அன்னியமா... அடிப்பாவி உன் குடும்பத் துக்கு நாங்கதாண்டி அன்னியமாயிட்டோம். இல்லாட்டி உன் அப்பன் எங்களுக்குத் தெரியாம இப்படி வேக வேகமா உனக்கு மாப்ளை பார்ப்பானா?”

“இதுக்கும் உங்களுக்கே பதில் தெரியும் அத்தை. நீங்க தனாவை பொறுப்பா வளர்க்கலை. வளர்த்துருந்தா என் அப்பாவ எதுக்கு எனக்கு வெளிய மாப்ளை பாக்காரு?”

“இது என்னாடி நியாயம்? கடைசில நீ என் மகனைத் தொட்டு என் மேலயே குத்தம் சொல்ற அளவுக்கு வந்திட்டியா?”

“அதானே இப்ப எனக்குப் பிரச்னையா வந்து நிக்குது. ஒழுங்கா ஒரு வேளை சோறு போடுவானான்னு என் அப்பாவும் அண்ணனும் கேக்கையில நான் என்னன்னு சொல்ல...? மாமா பாக்கற ஜோசியத்தையாவது பிடிச்சிக் கிட்டு ஜோசியம் பாக்கலாம்ல? எனக்கு என் அத்தான் ஜோசியம் பாக்கறதே போதும்னு நான் சொல்லிடு வேனே..!”

“அது என்னமோ சரிதான். நானும் தலையால அடிச்சுகிட்டேன். கேட்டாத்தானே? இவர் என்னடான்னா அவன் ஒரு குபேரனாக்கும். அவன் ஜாதகம் அப்படி இப்படின்னு அளக்கறாரு...”

நல்லம்மையிடமும் ஆதங்கம் வெளிப்பட்டது. அவள் ஜாதகம் என்ற உடனேயே விஜியிடம் ஒரு தேக்கம். நெற்றியில் யோசனை?

“என்னடி யோசனை?”

“அத்தே... நீங்க ஜாதகம்னு சொல்லவும்தான் நான் இங்க இருந்து எடுத்துகிட்டுப் போன ஏட்டுக்கட்டு ஞாபகம் வருது. அதை நான் எங்க வீட்டு மாடில ஒட்டிச் சரிவுல செருகி வெச்சிருந்தேன். ஆனா இப்ப அது அங்க இல்ல...”

“என்னம்மா சொல்றே... நீ இங்க இருந்து ஏட்டுகட்ட எடுத்துகிட்டுப் போனியா?” சுந்தரம்பிள்ளை வேகமாக முன்வந்து கேட்டார்.

“அது வந்து மாமா...” விஜியும் தன்னையும் மீறி உண்மையை சொல்ல வேண்டி வந்துவிட்டதை எண்ணி நாக்கை க் கடித்துக் கொண்டாள்.

“சொல்லு தாயி... மரப்பொட்டியில இருந்து ஏடுங் கள எங்களுக்கு தெரியாம எடுத்துகிட்டு போனியா?”

“அ... ஆமா... மாமா... தனா தான் அதை பத்தி என்கிட்ட ரொம்ப பிரமாதமாப் பேசிச்சு. எனக்கும் அதுல அப்படி என்னதான் சொல்லி இருக்குதுன்னு பாக்க ஒரு ஆசை வந்து எடுத்துட்டுப் போனேன். ஆனா, என்னால அதுல எழுதியிருந்ததை அவ்வளவு தெளிவாப் படிக்க முடியலை. வீட்ல அம்மாவும் அப்பாவும் பார்த்தாக்கா எதையாவது கேட்டு பிரச்னை வருமோன்னு மாடில ஒளிச்சு வெச்சேன். அப்புறமா மறந்தே போயிட்டேன். நேத்துதான் ஞாபகம் வந்து போய்ப் பார்த்தேன். அது அங்க இல்லை...”

விஜியின் தகவல் சுந்தரம் பிள்ளையை தீவிரமாய்

யோசிக்க வைத்தது.

“நீங்க என்னங்க யோசிக்கிறீங்க?”

“இல்ல நல்லம்மை. அது இந்த வீட்டுக்கு வந்ததே ஒரு அதிசயம். அப்படி வந்ததுல ஒரு கட்டு இப்ப காணாம போயிடிச்சுன்னா அதை எப்படிப் புரிஞ்சுக்கறது!”

“போனாப் போகட்டுங்க... தங்கமா வைரமா அதை நினைச்சு கவலைப்பட்றதுக்கு...?”

“பைத்தியம் மாதிரிப் பேசாதே. நாடிச் சுவடிங்றது தங்கம் வைரத்துக்கெல்லாம் மேல. காணாம போன ஏட்டுல என்ன தகவல் இருந்துச்சோ... அதான் இப்ப என் கவலை?”

“ஏங்க நாமளா இதை எல்லாம் கேட்டோம். அதுவா வந்துச்சு. அதுவா காணாம போயிருக்கு”

"ஆமா... அதுவா றெக்கை முளைச்சுப் பறந்து போச்சு... கேனச்சி மாறி பேசாதே நல்லம்ம. ஏ புள்ள விஜி. உன் கிட்ட தனா அந்த ஏட்டைப் பத்தி என்ன சொன்னான்?"

“சரியா ஞாபகமில்ல மாமா. ஆனா அதைப் பத்தி தெளிவா எல்லாம் இருந்ததா சொல்லுச்சு...”

“இவ கிட்ட கேக்கற நேரத்துக்கு நீங்க மிச்சம் இருக்கற கட்டுங்கள எடுத்துப் பாத்தாத் தெரியாதுங்

“அது எனக்கு தெரியாது பாரு. நாம இப்ப தீட்டு காத்துக்கிட்டு இருக்கோம். அதைப் புரிஞ்சுக்கோ. பத்து நாள் காரியம் முடிஞ்சி பதினோராம் நாள் வீட்டு கோமியம் தெளிச்சு சுப பூஜை பண்ணதுக்குப் பிறகுதான் தீட்டு விலகுது. ஏடுங்கறது சரஸ்வதி. அதுங்கள அப்பத் தான் தொடணும்.”

"அப்ப நாளைக்குத்தான் அதைப் பாக்க முடியுமா!”

"ஆமாம்... எப்படா 11-ஆம் நாள் வரும்னுல்ல உக்காந்துக்கிட்டிருக்கேன்.”

“அதான் இன்னிக்கு செய்ய வேண்டியதை எல்லாம் பகல் பொழுதுலயே செஞ்சாச்சே... இன்னும் என்னங்க?”

“இன்னிக்கு நட்சத்திரம் விலகணும். நாளைய நட்சத்திரம் காலை ஏழரை மணிக்குத் தொடங்குது. அதுக்குப் பிறகு முழுக்குப் போட்டுட்டு பொட்டிக்கும் ஒரு பூஜையைப் போட்டுட்டு அதைத் திறந்து எல்லாக் கட்டு களையும் எடுத்துப் பார்த்துட வேண்டியதுதான்...”

"மாமா... நாடில எல்லாமே வந்துடும்னு சொல் வாங்களே நெஜமா மாமா..?”

“எல்லாமேன்னு நீ எதையம்மா சொல்றே?”

"இல்ல... வரபோற பொண்டாட்டி பேரு, ஊரு முதல் கொண்டு...” அவள் சொல்லும்போதே வெட்கம் இழை யோடியது.

“அம்மாடி... நீ கேக்கறதப் பார்த்தா உனக்கு உன் அப்பன் பார்த்த மாப்ளையைப் பிடிக்கலங்கற மாதிரி தெரியுதே.”

“அதுல என்ன மாமா சந்தேகம். எனக்கு தனா அத்தான்தான் இந்த ஜென்மத்துல புருஷன்.”

"அப்ப இன்னிக்கு நடந்த நிச்சயதார்த்தம்...?"

“அதைப் பத்தி எனக்குக் கவலையில்லை...”

“இப்படி எல்லாம் நீ பேசக் கூடாது. அப்புறம் உன் அப்பனும் அம்மாவும் எங்களைத்தான் தப்பா நினைப் பாங்க”

“அதுக்காக என் ஆசையை சுட்டு பொசுக்கிக்கச் சொல்றீங்களா..? என்னால முடியாது.”

“இத பாரும்மா... உனக்கு அவன்தான் புருசன்னா யார் தடுத்தாலும் நடக்கறது நடந்தே தீரும். இல்லேன் னாலும் அதுதான் பதில்.”

“அப்படி ஒரு வேளை என் பேர் தனா ஏட்டுல வராட்டி நான் நிச்சயம் செத்தாலும் சாவேன். எங்கப்பா இன்னிக்குப் பாத்த மாப்ளையை நான் கட்ட மாட்டேன். அவன் என் கூடப் பேச வந்தப்பவே பிடிக்கல. ஒரே சிகரெட் நாத்தம்! இதுல கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுக்க வேற பாத்தான். நான் மறுத்தேன். ‘நான் கட்டப் போறவன் தொட்டாத் தப்பான்னு’ கேட்டான். நான் எதுவும் சொல்லல. உன் மனசுல வேற யாரோ இருக்காங்க போல தெரியுதேன்னான். நானும் ஆமாம். என் அத்தை மகன் தனாதான் இந்த ஜென்மத்துல என் புருஷன்னு சொல்லிட் டேன்.”

விஜி சொல்ல சொல்ல இருவருக்கும் பகீரென்றது.

“ஐயோடி... அப்புறம் என்ன ஆச்சு? உன்னைப் புடிக்கலன்னுட்டுப் போய்ட்டானா?” நல்லம்மை படு வேகமாகக் கேட்டாள்.

“அப்படிச் சொல்வான்னு தான் நானும் நினைச்சேன் அத்தை. ஆனா அவன் இப்பதான் எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்குன்னுட்டுப் போய்ட்டான்...”அவளின் பதில் இவருவருக்குமே ஒரு பகீர் உணர்வை ஏற்படுத்தியது.

“அந்தப் பய அப்ப நல்ல ரத்தம் ஒடுற பய இல்ல போலத் தெரியுதே...” முனகினார் சுந்தரம்.

“என்னங்க இது... இவ சொல்றத எல்லாம் கேட்டா அண்ணன் தப்புப் பண்ணிட்ட மாதிரித் தெரியுதுங்களே” என்றாள் நல்லம்மை. அப்போது வாயிற்புறம் கார் ஒன்று வந்து நிற்கும் அரவம்.

திரும்பிப் பார்த்தபோது கல்யாணசுந்தரத்துடன் தனஞ்ஜெயனும் இறங்கிட, கூடவே அருணாவும் இறங்கிக் கொண்டிருந்தாள்.

சந்திரமௌலியும் மறுபக்கத்தில் இருந்து இறங்கித் திரும்பி வந்தார்.

ஒருவருக்கு நாலு பேர்!

கல்யாண சுந்தரத்துக்கு புருவத்தில் சுருக்கம் விழுந்தது.

கல்யாண சுந்தரம் நெருங்க நெருங்க சுந்தரம்பிள்ளைமுகத்தில் விழுந்த சுருக்கம் ஆச்சரிய ரேகையாக மாற தொடங்கியது.

“என்னப்பா சுந்தரம்... எப்படி இருக்கே? என்னை அடையாளம் தெரியலியா?” என்று கேட்டபடியே உள்ளே நுழைந்தவரை சுந்தரம் பிள்ளையும் அடையாளம் கண்டு கொண்டார்.

“அட நீ நம்ம கல்யாண சுந்தரம் இல்ல?”

“கல்யாண சுந்தரமேதான். பரவால்லியே நல்லா ஞாபகம் வெச்சிருக்கிறே?”

“வா... வா... இது யார் உன் மவளா?”

“மவளேதான். ஆங் சொல்ல மறந்துட்டேன் பார்... இவரு சாமி... என் குருநாதர் மாதிரி... சாமி இவர்தான் என் மாமன் மவன் சுந்தரம். எல்லாம் தனா தம்பியைப் பார்த்த நேரம். உங்க தரிசனமும் கிடைச்சு. இங்க இவங்களையும் பார்த்தாச்சு.” என்று உருகினார் கல்யாண சுந்தரம்.

அதன்பின் நல்லம்மையும் வரவேற்று இருந்த நாற் காலிகளில் அமரச் சொன்னாள். அவர்கள் வரவும் விஜியோடு பேசிக்கொண்டிருந்த பேச்சும் அதன் நெருப் பான விஷயங்களும் அப்படியே திசைமாறிப் போனது.

தனஞ்ஜெயனும் விஜியைப் பார்த்து சற்று ஆச்சரியப் பட்டாலும் அருணாவை உபசரிப்பதில் குறியாக இருந் தான்.

“அருணா என்ன சாப்பிடுறிங்க...?”

“அதான் சொந்தம்னு ஆயிட்டோமே. இன்னும் என்ன வாங்க போங்கன்னு சும்மா வா போன்னே கூப்பிடுங்க”

“நான் சொந்தம்னு நினைச்சது சொந்தம் இல்லாமப் போயிடிச்சு. இப்ப நீ சொந்தம்னு சொல்லி வந்துருக்கே சந்தோஷம்...” என்ற அவன் பதிலில் விஜிக்கான ஊசிகள்!

“அது சரி... புது சொந்தத்தை விட பழைய சொந்தத் துக்குத்தான் பவர் அதிகம். உரிமையும் அதிகம்...” என்று வெகு வேகமாய் உணர்ச்சி

வசப்பட்டாள் விஜி. அது எதுவும் சுந்தரத்தின் காதுகளிலோ கல்யாண சுந்தரத்தின் காதுகளிலோ விழவில்லை. அவர்களிடம் பல வருடப் பிரிவுக்குப் பின் ஏற்பட்டிருக்கும் தொடர்பின் வாத்சல்யங்கள்! விசாரிப்புகள்...

சந்திரமௌலி மட்டும் அவருக்கு நேர் எதிரில் திறந் திருக்கும் சுந்தரம் பிள்ளையின் அலுவலக அறையில் கிடக்கும் நாடிகள் அடங்கிய அந்த மரப்பொட்டியின் மேல் பார்வையாக இருந்தார்.

மனதுக்குள் 'நான் வரவேண்டிய இடத்துக்கு வந்து விட்டேன் என்கிற முணு முணுப்பு!"

18

இரண்டு எந்திரங்களையும் தன் வசம் தந்த அந்த சன்யாசி பற்றியும் அவரிடம் இந்த எந்திரங்களைத் திருப்பித் தரும் நேரம் வந்து விட்டது என்பதையும் எந்திரங்களால் பயனடைந்த நபர் தன் மனைவியிடம் கூறினார். அவரது மனைவியால் அதை ஏற்க முடியவில்லை. அந்த எந்திரங்கள் தங்கள் வீட்டை விட்டு சென்றுவிட்டால் பழையபடி எல்லாப் பிரச்னைகளும் தங்களுக்கு வந்துவிடும் என்று பயந்தாள் அவர் மனைவி. எனவே அதைத் திருப்பித் தரவேண்டாம். அந்த சித்த சன்யாசி வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறித் தடுத்துவிட்டாள். அவருக்கும் எந்திரத்தைப் பிரிய மனமில்லாததால் மனைவியின் ஆசைப்படியே நடக்க சித்தமானார்.

மனித மனம் விசித்திரமானது என்று இதை வைத்துத்தான் சொன்னார்கள். வாக்கு காயம் இரண்டிலும் சுத்தம் முக்கியம் என்பது தான் வேதங்களும் புராணங்களும் கூறுபவை. ஒன்று பார்வைக்குப் புலனாவது. இன்னொன்று கருத்துக்குப் புலனாவது. இந்த இரண்டிலும் தூய்மையாக இருப்பதே அறம்.

அறத்தோடு இருந்தாலே திறம் வரும். அறத்தோடு வரும் திறமே கால காலத்துக்கும் வாழக் கூடியதாகவும் இருக்கும். அந்த வகையில் வந்தவை தான் திருக்குறளிலிருந்து கம்பராமாயணம் வரை உள்ளவை. இவற்றைக் காலத்தால் அழிக்கவே முடியாது. அறமற்ற திறம் தவறான விஷயத்துக்கு உதாரணமாகி விடும். சிவப்பு விளக்கு போல எச்சரிக்கையாக மாறிவிடும்.

இங்கே ஆசை மற்றும் பயத்தின் வயப்பட்டு எந்திரங்களை தன் வசமே

வைத்துக்கொள்ளப் பார்த்த வர்களின் வீட்டிற்கே ஒரு நாள் அந்த சித்த சன்யாசி தேடிக் கொண்டு வந்துவிட்டார்!'

*****

அதிசயமாக தங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் கல்யாண சுந்தரத்திற்கும் அவன் மகள் அருணாவுக்கும் தனஞ் ஜெயனின் வீட்டில் ஒரு விருந்தே தயாராகத் தொடங் கியது. விஜியோ அருணாவைப் பார்த்து பார்த்து வெந்து கொண்டிருந்தாள். தனஞ்ஜெயனும் வேண்டுமென்றோ இல்லை இல்லாமலோ அருணாவிடமே பேசிக்கொண் டிருந்தான்.

அவளிடம் மிகுந்த உரிமையுடன் "வாங்க போங்கவில் ஆரம்பித்து 'வா போ"வுக்கு மாறியிருந்தான்.

'அருணா உனக்கு நேர் வகிடைவிட இந்த சைடு வகிடு ரொம்ப அழகா இருக்கு' என்று அவள் அழகை எல்லாம் அவன் ரசிக்கத் தொடங்கவும் ஜிவு ஜிவு என்று காயத் தொடங்கிவிட்டாள் விஜி.

நல்லம்மை காய்கறிகளை நறுக்கி விருந்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

சந்திரமௌலி தான் சற்று ஒய்வெடுப்பதாகக் கூறி ஏடுகள் உள்ள பொட்டி கொண்ட அறைக்குச் சென்று படுத்துக்கொண்டார். அவருக்கு ஒரு பாயையும் தலை யணையையும் நல்லம்மை தந்தபோது உள்ளபடியே மனம் முழுக்க அந்தப் பொட்டியைத் திறந்து பார்த்து விடுவதில் தான் இருந்தது. அதற்குத் தோதாக 'நான் கொஞ்சம் கதவைச் சாத்திக்கிறேன்' என்று கதவைச் சாத்திக்கொண் டவர் சத்தமில்லாமல் உள் பக்கம் தாழ்ப்பாளும் போட்டுக் கொண்டார்.

தலைக்கு மேலே மின்விசிறிகளின் "கரக்... கரக் என்கிற சப்த சுழற்சி. சந்திரமௌலியின் மனதுக்குள் 'இதுதிருட்டுத்தனம்' என்றும் ஒரு குரல் ஒலித்தது. ஆனால் அதற்கு சக்தி இல்லை. பொட்டியின் அருகில் சென்றார். பயபக்தியோடு திறந்தார். ஏடுகளுக்கென்று ஒரு வாசம் உண்டு. அது மூக்கை நிமிண்டியது. அது உச்சி மண்டை வரை ஏறியது. கை கூப்பி ஒரு நமஸ்காரத்தைச் செய்யச் சொன்னது மனது. செய்தார். பிறகு கட்டுகளில் கையை வைத்து வெளியே எடுத்தார். அழுக்கடைந்த நூலால் பெரிதாகச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அதை அவிழ்த் தார். ஏடுகள் பொல பொலவென்று உதிர்ந்தன. திரும்ப எடுத்து அடுக்கும்போது பழைய அமைப்பு மாறிப்போனது.

பொடிப்பொடியாக சிற்றெறும்புகள் வரிசையாக ஊர்வது போல எழுத்துக்கள். நாடிச் சுவடிக்கென்றே ஒரு எழுத்து முறை உண்டு. பல நூறு ஆண்டு முன்பாக எழுதப்பட்டவை. அன்றைய லிபிதான் அதில் இருந்தது இன்றைய தமிழ்க் கவிதைகளை போல அவ்வளவு சுலப மாக அதைப் படிக்க முடியாது. அதற்குப் பயிற்சி வேண்டும். அந்தப் பயிற்சி சந்திரமௌலியிடம் இருந்தது. பொது வாக இம் முறையில் வள்ளுவக்குடி ஜனங்களுக்கு மட்டுமே பயிற்சி உண்டு. அதிலும் கூடப் பெண்களுக்குக் கிடையாது. ஆண்களிலும் மூத்தவராக இருந்தால் மட்டுமே வாசிக்கலாம் என்று கட்டுப்பாடுகள் எல்லாம் இருந்தன.

இன்று எல்லாம் மாறிவிட்டது. ஆனாலும் வள்ளுவக் குடி அல்லாதவர்களுக்கு ஏடு படிப்பது என்பது அபூர்வ மான ஒன்றுதான். சொல்லித்தர ஆள் கிடையாது. ஆகையால் பிரமாண்ட ரகசியமாகவே இருந்தாலும் அதைத் தெரிந்துகொள்ள முடியாது என்பதுதான் யதார்த்தம்.

ஆனாலும் சந்திரமௌலிக்கு சற்று அதிர்ஷ்டம் இருந்தது. ஒரு வள்ளுவக்குடியைச் சேர்ந்த நாடி ஜோதிடர் அவருக்கு நாடி படிக்கக் கற்றுக் கொடுத்தார். அதற்காக மூன்று வருடங்கள் அவரோடு இருக்க நேரிட்டது.

இதெல்லாம் கூட அவரது குருநாதருக்குப் பிடிக்காத விஷயங்கள் ஆகிவிட்டன. அடிக்கடி அபிராமிதாச ஸ்வாமிகளை விட்டு விலகிப் போய் சந்திரமௌலி இப்படி எதையாவது செய்து வந்தது அவருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆனால் சந்திரமௌலி வரையில் அவர் அப்படி நடந்து கொள்ளவும் ஒரு நாடிதான் காரணம்.

படித்துப் பட்டம் பெற்றுவிட்ட நிலையில் வேலைக்குச் செல்ல மனதுக்குப் பிடிக்கவில்லை. அதுவே கோவிலுக்குப் போவதென்றால் ஆனந்தமாக இருந்தது. வேலைக்கு ஆர்டர் வந்தது. ஆனால் போகப் பிடிக்கவில்லை. தன்னை யாரும் கேள்வி கேட்பதும் பிடிக்கவில்லை. அப்போதுதான் இப்படி இருக்கிறானே என்று சந்திரமௌலி குடும்பத்தில் அவருக்கு நாடி பார்த்தார்கள். அந்த நாடியில் இவன் வேலைக்கெல்லாம் போக மாட்டான். அதே சமயம் திருமணமாகும். ஆனால் மனைவியோடு வாழ மாட்டான். விவாகரத்து ஆகிவிடும். பின் புதிதாய் ஒரு மொழி கற்பான். அது இவனைப் பெரிய அளவில் மாற்றும் என்றெல்லாம் வந்தது. பின் அப்படித்தான் நடந்தது. புதிதாக ஒரு மொழி கற்பான் என்பது நாடி படிப்பதைத்தான் என்று சந்திர மௌலியும் எடுத்துக் கொண்டார்.

அப்படிக்கற்றது இப்பொழுது கை கொடுக்கும் போலத் தெரிந்தது.

தான் அடுக்கிய ஏட்டுக்கட்டின் தலை ஏட்டைப் பார்த்தார். 'ஸ்ரீபுரம், கோட்டை. தாயம்' என்று இருந்தது. ஸ்ரீ யந்திரத்தைதான் ஸ்ரீபுரம் என்றும் கூறுவார்கள். அந்த விஷ்ணுவுக்கு வைகுண்ட லோகம் என்றால், சிவபெருமா னுக்கு கைலாயம், பிரம்மாவுக்கு சத்யலோகம் அந்த வகையில் ஆதிசக்தி வாழும் இடம்தான் ஸ்ரீபுரம். அதைப் பல கோட்டைகளால் ஆனதாகக் கூறுவார்கள். அதில் முதல் கோட்டை குறித்த விவரங்கள் இருந்தன.

அதை வாசிக்க ஆரம்பித்தார். அதே சமயம் அறைக்கு வெளியே வீட்டுக்குள் ஒரு எதிர்பாராத சலனம்.

***

விஜியின் அண்ணன் இளங்கோ அவளைத் தேடிக் கொண்டு மோட்டார் பைக்கில் வந்திருந்தான். வந்தவன் உள்ளே வராமல் வாசலில் நின்றபடி அவளை அழைத் தான்.

நல்லம்மை அவனை உள்ளே அழைத்தாள். "உள்ள வர எல்லாம் நேரமில்லை அத்தை... அவளை வெளியே அனுப்பு..." அவளும் அவனின் குரல்கேட்டு எட்டிப் பார்த்தாள்.

"அங்க தேடிகிட்டிருக்கோம் நீ இங்க வந்துட்டியா?"

"இப்ப எதுக்கு என்னை கூப்பிடறே?"

"அப்பா கூப்ட்டாரு..."

"போ, அப்புறமா வரேன்..."

"அதெல்லாம் இல்ல, இப்பவே வா..."

"ரொம்ப அதட்டினே, நானே அப்புறம் இங்கையே இருந்துடுவேன்."

"என்ன மிரட்றியா உனக்கு பரிசம் போட்டாச்சு தெரியும்தானே!"

"அது உங்க இஷ்டத்துக்கு நீங்க செய்தது."

"வேண்டாம் விஜி... வீட்டுக்குள்ள யார் யாரோ இருக்காங்க. என்னை கத்த விடாதே. பேசாம வா..."

இளங்கோ அடம்பிடித்தான். தனஞ்ஜெயனுக்கு எரிச்சல் வந்தது.

“ஏய் இப்ப போகப் போறியா இல்லையா? அவன் தான் நீ இங்க வந்தது பிடிக்காம கத்தறான்ல...”

தனஞ்ஜெயனே விஜியை வெளியே துரத்துவது போலப் பேசவும் அவள் முகம் வாடிப்போனது. அதைப் பார்த்தபடி இருந்த நல்லம்மையும் அவள் அருகில் வந்து காதோரமாக “இப்பப் போடி. உனக்குக் குந்தகமா இங்கஎதுவும் நடந்துடாது. வீட்டுக்கு வந்துருக்கற இவங்க போகட்டும். நீ நாளைக்கு வா. நாம நமக்குள்ள பேசிக்கலாம்” என்று சமாதானமாகப் பேசி விஜியை அனுப்பினாள்.

விஜியும் வெறித்தபடியே சென்றாள்.

அதே வேளையில் உள்ளே கல்யாண சுந்தரமும் சுந்தரம் பிள்ளையும் தங்கள் பேச்சில் தனஞ்ஜெயனின் திருமணம் பற்றிப் பேச ஆரம்பித்திருந்தார்கள்.

“சுந்தரம்... காசு பணத்துக்கு என்கிட்ட பஞ்சமில்லை. ஆனா, என் மகளுக்கு நல்ல மாப்ளை அமையாம நான் ரொம்ப கஷ்டப்படறேன்பா...”

"ஏம்ப்பா உன் மக ஜாதகத்துல ஏதாவது தோஷமா?”

“கொஞ்சம் தோஷமும் இருக்கு. அதுக்குப் பரிகார மும் பண்ணியாச்சு. பரிகாரம் பண்ணும்போதே என் மக கல்யாணத்துக்கு வழி தெரியுதுன்னா பார்த்துகையேன்...”

“என்னப்பா சொல்றே?”

“நான் சுத்தி வளைச்சு மூக்கைத் தொட விரும்பலை. நேரா விஷயத்துக்கு வந்துடறேன். என் மகளை நீ பார்த்தே தானே?”

“அவளுக்கென்ன மகாலட்சுமி...”

“அந்த மகாலட்சுமிக்கு உன் மகனைக் கொடுப்பியா?”

கல்யாணசுந்தரத்தின் கேள்வி சுந்தரம் பிள்ளையை உலுக்கிவிட்டது. பேச்சே வரவில்லை.

“என்னப்பா. எதுவுமே பே சமாட்டேங்கறே?”

“எனக்குள்ள தோணிச்சு... உன் கிட்ட என்ன தயக்கம்னுதான் கேட்டுட்டேன்.”

“நல்ல விஷயம்தான்... ஆனா...”

“என்ன ஆனா..?”

“தனாவுக்கு இன்னும் ஒழுங்கா ஒரு வேலைகூட இல்லை. அதோட...”

சுந்தரம்பிள்ளை தனாவை விஜி விரும்புவதைச் சொல்ல முயன்று இளங்கோ வந்து விஜியை வலுக் கட்டாயமாக இழுத்துச் சென்றதை எண்ணிப் பார்த்து அப்படியே மனதுக்குள் பின்வாங்கி அந்த விஷயத்தைச் சொல்லாமல் விழுங்கினார்.

“தனாவுக்கு வேலை இல்லைங்கற விஷயம்தான் எனக்குத் தெரியுமே... தனா தங்கமான பிள்ளைப்பா. பழகின கொஞ்ச நேரத்துலயே நான் தெரிஞ்சுகிட்டேன். எனக்கு நல்ல மாப்ளைதான் தேவை. அப்படி கிடைச்சிட்டா அந்த மாப்ளைக்குத் தேவையான சொத்து என்கிட்ட இருக்கு. அவசியப்பட்டா என்னாலேயே ஒரு தொழில் அமைச்சுக் கொடுக்கவும் முடியும்.”

கல்யாண சுந்தரம் பேசியது நல்லம்மை காதிலும் விழுந்தது. ஒரு பக்கம் விஜி இன்னொரு பக்கம் அருணா!

இவனைப் பற்றி சற்று முன்வரை அதிர்ஷ்ட மில்லாதவனாகவும் கையாலாகாதவனாகவும் எண்ணிப் பெரிதாக கவலைப்பட்டோமே என்றும் நல்லம்மைக்குள் ஒரு கூச்சமெடுத்தது.

தனஞ்ஜெயனுக்கு ஒரு நல்ல வாழ்க்கை வரப்போவது போலவும் தோன்றியது. சுந்தரம்பிள்ளை சொன்னது போல திருமணம் என்பது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றுதானோ!

அதனால்தான் விஜிக்கு ஒரு விதமாகவும் இவனுக்கு ஒரு விதமாகவும் நடக்கிறதோ?

19

தன் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தவராக அந்த சித்தரே வருவார் என்று அவர் துளிகூட எதிர் பார்க்கவில்லை. வந்தவரை வரவேற்று அமர வைத்தார். அந்த சித்தரின் பார்வையும் அந்த நபரின் வீட்டை ஊடுருவியது.அப்படியே அவரையும் ஆசை மிகுந்த அவர் மனைவியும் ஊடுருவியது.

வீட்டில் செல்வம் நிரம்பியிருப்பதற்கான அறி குறிகளே

காணப்பட்டன. புதிய நாற்காலிகள், தரை விரிப்புகள் என்று ஒரு செழுமையை வீட்டுக்குள் பார்க்க முடிந்தது. பார்க்க பார்க்க சித்தர் முகத்திலும் ஒரு புன்னகை உருவாகத் தொடங்கியது.

அந்த நபரிடமே கேட்கவும் தொடங்கினார்.

"நான் கொடுத்த எந்திரங்கள் உனக்கு கைகொடுத்து விட்டது போல் தெரிகிறதே...?"

"ஆமாம் சாமி... இப்ப எங்களுக்கு எந்தக் குறை யும் இல்லை. என் சொத்தும் திரும்பக் கிடைச்சுடிச்சு."

"அப்ப உன் மனசுக்குள்ள இனி தற்கொலை எண்ணங்கள் வராதுதானே?"

"நிச்சயமா வராது சாமி. உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை."

"உணர்ச்சிகள்ல நன்றி உணர்ச்சி ரொம்பப் பெரியது. அதோட இருப்பதும் அதுல நெகிழ்றதும் தப்பு இல்லை.

அது உண்மையா இருக்கணும். அதுல பாசாங்கு கூடாது."

அந்த சித்தரின் பதில் எதார்த்தமாகவும் இருந்தது. அவரை சற்று குத்துவது போலவும் இருந்தது. அது அவர் முகம் போன போக்கில் தெரிந்தது. அவர் மனைவி வேகமாக அவரை சமாளிக்கத் தொடங்கினாள்.

"உட்காருங்க சாமி. இன்னிக்கு நீங்க எங்க வீட்ல சாப்ட்டுட்டுத்தான் போகணும்" என்றாள்.

"இல்லம்மா. நான் யார் வீட்லயும் கை நனைக் கறதில்லை. என் பசிக்கு ஒரு கைப்பிடி அரிசியை நானே பொங்கிச் சாப்பிட்டுக்குவேன்..." என்றார் சித்தரும்.

"நீங்க பொங்கினா என்ன... இல்ல வேற யார் பொங்கினா என்ன சாமி? அரிசி வேகப்போகுது. இதுல தானே பண்ணிச் சாப்பிட்றதுல பெருசா என்ன இருக்கு?"

அந்த பெண்மணியின் குரலில் ஒரு ஏளனம் தெரிந்தது. சித்தர் பதிலுக்கு சிரித்தார்.

"சிரிச்சா என்ன சாமி அர்த்தம்...? சாப்பிட்றேன்னு சொல்லுங்க."

"சாப்பிட மாட்டேன்னு சொன்னதுக்கு பின்னால பல காரணங்கள் இருக்கும்மா..."

"அது என்னன்னுதான் சொல்லுங்களேன்..."

"உன் கையால நான் சாப்பிட்டா உனக்கு நான் நன்றியோட இருக்கணும். எந்த நிலைலேயும் உனக்குக் கெடுதல் நினைக்கக் கூடாது. அது மட்டு மில்ல. உனக்கு நான் கடன் பட்டவனாகவும் ஆகறேன். அந்தக் கடனை நான் இந்த ஜென்மத்துலேயோ இல்லை. வேற ஏதோ ஒரு ஜென்மத்துலேயோ நான் திருப்பிச் செலுத்தியே தீரணும். இப்ப நான் துறவி. எல்லாத்தையும் துறந்தாத்தான் அவன் துறவி. அப்படி துறந்த விஷயங்கள்ல இந்தப் பற்றுதலை உருவாக்குகிற விஷயங்களுக்கு இடமே கிடையாதும்மா.“

"எல்லாத்தையும் துறந்துட்ட உங்களுக்கு எதுக்கு சாமி குபேர யந்திரமும் வையிரவ யந்திரமும்... அது எங்ககிட்டேயேதான் இருக்கட்டுமே...”

அவள் விஷயத்தின் மையத்திற்கு வந்தாள்!

*****

தன்னுடைய கல்யாணத்தைப் பற்றி பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற எண்ணமே இல்லா மல் தனஞ்ஜெயன் அருணாவோடு பேசிக்கொண்டிருந் தான். அவனுக்கு அவளோடு பேசுவது எதனாலோ மிகவும் பிடித்திருந்தது. அவளிடமிருந்து மென்மையாக ஒரு வாசனை வந்தபடி இருந்தது. அடுத்து அவள் தலை வகிடெடுத்து வாரியிருக்கும் நேர்த்தி. தலைமுடிக் கற்றைகள் புரண்டு விழும் விதம். வாளிப்பான கழுத்து. துளி கூட வியர்வை இல்லாத மென்பஞ்சு போன்ற தேகக்கொழிப்பு. அவள் வயதுக்கு ஏற்ற அளவுக்கு பூரித் திருக்கும் தனங்கள். எங்கேயும் கூடுதல் சதை என்பதே இல்லாத சீரான உடல்வாகு என்று அருணா அவன் வரையில் விஜி ஊட்டாத மயக்கத்தை ஊட்டிக் கொண் டிருந்தாள்.

வாலிபப் பிராயத்தில் இப்படிப்பட்ட தாக்கங்கள் எல்லோருக்குமே ஏற்பட்டிருக்கும். ஆனால் அதன் கால அளவு சில நிமிடங்களோ இல்லை சில மணி நேரங் களோதான் இருக்கும். எல்லா ஆண்களுக்குமே அந்த நேரமானது காலம் முழுக்க எப்போதுமே உடன் இருக்கக் கூடாதா என்கிற ஏக்கத்தையும் ஏற்படுத்தும். அப்படிப் பட்ட தருணத்தில் ஒரு கருமி கூட அந்தப் பெண்ணுக்காக எல்லாவற்றையும் இழக்கத்

தயாராகிவிடுவான்.

தனஞ்ஜெயன் அம்மட்டில் ஒரு வள்ளல்!

எனவே அருணாவிடம் உருகி வழிந்து கொண்டிருந் தான். அவளுக்கும் அவனைப் பிடித்திருந்தது. ஆனால், நல்லம் மை மட்டும் கல்யாண சுந்தரத்திடம் பிடி கொடுக்கத் தயங்கியபடியே இருந்தாள்.

“நான் இங்கே வந்தது சத்தியமா உன்னைப் பாக்கத்தான் சுந்தரம். கல்யாணப் பேச்சு பேச இல்லை. ஆனா, இங்கே வரவும் எனக்குள்ள ஏராளமான மாற்றங் கள். இந்த வீட்டுக்குள்ள நான் காலம் காலமா வாழ்ந்தா மாதிரியும் வாழப்போறா மாதிரியும் ஒரு எண்ணம். அதான் என்னையும் மீறி கல்யாணப் பேச்சை எடுத்துட்டேன்.” என்றார் கல்யாணசுந்தரம்.

“அதுல ஒரு தப்பும் இல்லை கல்யாணம்... பொண்ணும் பிள்ளையும் இருந்தா கொடுத்து வாங்கிக்கறதுல என்ன தப்பு இருந்துடப்போகுது...”

“அவுகளுக்கும் ஒருத்தர் மேல ஒருத்தருக்கு ஈர்ப்பு இருக்கற மாதிரிதான் தெரியுது. என் பொண்ணு கல கலன்னு சிரிச்சே பல வருஷமாச்சு. இப்ப அவ இப்படி சிரிச்சுப் பேசறதைப் பார்க்கையில் எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?”

“இருக்கட்டும்... இருக்கட்டும்...”

“சரி எப்ப அச்சாரத்தை வெச்சுக்கலாம்? இப்பவே வெத்தல பாக்குல ஒரு ஆயிரத்தி ஒண்ணோ இல்ல பத்தாயிரத்து ஒண்ணோ வெச்சு வெத்தலை பாக்கு மாத்திக்கலாமா?”

“அவசரம் வேண்டாம்... என் வீட்ல பங்காளி ஒருத்தன் சாவுத் தீட்டு இன்னும் முழுசா நீங்கலை. நாளைக்குக் காலைல சரவணப் பொய்கையில போய் ஒரு முழுக்குப் போட்டுட்டு வந்து வீட்டுல கோமியத்தைத் தெளிச்சுட்டா தீட்டு கழிஞ்சிடும். அப்புறம் எல்லா நல்ல விஷயத்தையும் ஸ்திரமாகப் பண்ணுவோமே?”

“அப்படியே செய்துடலாம்...” என்றார் கல்யாண கந்தரம். கிட்டதட்ட இருவரின் திருமணமும் முடிவாகி விட்டது போல்தான் தோன்றியது.

சமையல் கட்டில் நல்லம்மையிடம் மட்டும் மருகல்.அது புரிந்தது போல நெருங்கி வந்தார் சுந்தரம்பிள்ளை. கல்யாண சுந்தரம் வெற்றிலை பாக்கு போடத் தயாராகி யிருந்தார்.

“என்ன நல்லம்மை... அந்தப் புள்ளைய நினைச்சு மனசுக்குக் கஷ்டமா இருக்குதா?”

“ஆமாங்க... அத்தே அத்தேன்னு சுத்திச் சுத்தி வருவாளுங்களே... தனா விசயத்தைக் கேட்டா நெஞ்சுல அடிச்ச மாதிரி இருக்காதா?”

“இந்த புத்தி உன் அண்ணனுக்கு இல்லையே. அவனை மீறிக்கொண்டு எப்படி நல்லம்மை நாம விஜியை இந்த வீட்டுக்கு மருமகளாக்க முடியும்? அதுவும் இன் னொருத்தனுக்கு பரிசம் போட்டுட்ட பொண்ணை...?”

“பரிசம் போட்டாலும் இவ அவனைக் கட்டிக்க மாட்டாங்க. அந்த மாப்பிள்ளையும் சரி இல்லாதவன்னு அவ பேசினதுல இருந்து தெரியலையா?”

“சரி இதுக்கு என்ன செய்யலாம்? நம்ம பையனுக்கும் ஒரு வழி பொறந்துருக்கு. உன் அண்ணன் வெறும்பயன்னு தூக்கி எரிஞ்சவனை உன் அண்ணனை விடப் பத்து மடங்கு செல்வாக்குள்ள கல்யாண சுந்தரம் மாப்பிள்ளை ஆக்கிக்க றேன்னு சொல்றான். இதைத் தட்டிக்கழிக்கறது புத்தி சாலித்தனமே இல்லை.”

“அதுவும் புரியுது. ஆனா என்ன பண்றதுன்னுதான் தெரியவீங்க”

“விட்று. அப்படியே விட்று... தனாவுக்கு நல்ல எதிர்காலம்னு நான் சொன்னது ஞாபகத்துல இருக் குல்ல...”

“ஆமாங்க... அதுதான் இப்ப எனக்கு ஒரே ஆறுதல்...”

“அந்த நல்ல காலம்தான் இப்படி கல்யாண சுந்தரம் வடிவத்துல வந்து நின்னுருக்குன்னு நினைச்சுக்க...”

“ஏங்க... ஒண்ணு பண்ணின என்ன?”

“என்ன?”

“அதான் நாடி ஜோசிய ஏடுங்க நம்ப வீட்லயே இருக்குதே. அதுல தனாவுக்கு வரப்போறவ யார்னு இருக்கும்தானே?”

“இதைத்தான் நானும் நினைச்சேன். நான் தனாவோட பொது காண்டத்தை மட்டும்தான் படிச்சேன். கல்யாண காண்டத்தைப் படிக்கலை. அதனால என்ன? நாளைக்கு தீட்டு கழியவும் எடுத்துப் பாத்துட்றேன். அவ்வளவு ஏன், நம்ப வீட்டுக்கு வந்துருக்கற இந்தப் பொண்ணுக்கும் ஏடு இருந்தா எடுத்துப் பார்த்துடுவோம்.”

“ஆமாங்க. அது பார்த்த பிறகு ஒரு முடிவுக்கு வருவோங்க.”

“நல்லம்மை... என்கிட்ட ஜோசியம் பாக்க வர்றவங்க கிட்ட பேசைல நல்ல காலமோ கெட்டகாலமோ அது நாம பொறக்கற நேரத்தைப் பொறுத்ததுன்னு சொல் வேன். அப்படியே நல்ல காலம்னு ஒண்ணு வர ஆரம்பிச் சிட்டா அப்புறம் தொட்டுத் தொட்டு எல்லாமே நல்ல தர்வே நடக்கும். அதை மாத்தவோ தடுக்கவோ யாராலே யும் முடியாதுன்னும் சொல்லுவேன். இப்ப தனா வரைல அதை நினைச்சுப் பாக்கறேன். ஒரு பத்து நாளைக்குள்ள பார்த்தியா எம்புட்டு விஷயங்கள் நடந்துடிச்சி...”

உணர்ச்சி மிகுதியோடு சிலாகித்துக் கொண்டார் சுந்தரம்பிள்ளை.

வெளியே வெற்றிலை பாக்கு போட்டபடி இருந்த கல்யாண சுந்தரத்துக்கு வெகு நேரம் கழித்து அப்போது தான் சந்திர மௌலியின் நினைப்பே வந்தது.

“இந்த சாமி எங்க போனாரு? பேச்சு சுவாரசியத்துல அவர மறந்தே போனேனே...” என்று எழுந்த கல்யாண சுந்தரத்தின் முன் வந்த சுந்தரம்பிள்ளை, “அவர் வாசப் பக்கம் என் ஆபீஸ் ரூம்ல தூங்கறாரு. சாமியாருங்க உறங்கும் போதுதான் சப்தம் கூடாதே? அதான் கதவை வேற தாழ் போட்டுகிட்டிருக்காரு. அவராத் திறந்து வரும்போது வரட்டும்...” என்றார்.

“அதுவும் சரிதான்... அவர்கிட்டயும் இந்த கல்யாண விஷயத்தைச் சொல்லுவோம். ரொம்ப சந்தோஷப்படு வாரு. பெரிய சக்தி உபாசகர். எது சொன்னாலும் மந்திரம் போட்ட மாதிரி பலிக்கும்.”

“ஆமா இவர் எப்படி பழக்கம்?”

“நான் வீட்ல ஒரு சண்டி ஹோமம் பண்ணுனேன். அப்ப அதுக்கான ஆளுங்களைத் தேடினப்போ சாமி தென்பட்டார். அதுல இருந்து ரொம்ப நெருக்கமாயிட் டாரு.”

“இப்ப எங்க பார்த்தே?”

“அழகர் மலைல. இவராலதான் மலைமேல இருக்கற ராமதேவர்ங்கற சித்தர் சமாதிக்குப் போய் விளக்குப் போட முடிஞ்சிச்சு. உன் மகன் மலைக்குக் கூட்டிப்போனான். சாமி, சமாதிக்கே கூட்டிகிட்டு போயிட்டார். எப்படியோ நாங்க செய்ய நினைச்ச பரிகாரங்களை எல்லாம் செய்து முடிச்சாச்சு. அதோட பலனையும் இப்பப் பாக்கறேன். என் மகளோட கல்யாணப் பேச்சு கூடி வந்துடுச்சி பார்த்தியா?”

“ஆமாம்மா...” என்று சுந்தரம்பிள்ளை ஆமோதிக்க, தனஞ்ஜெயன் அருணாவோடு எங்கோ புறப்பட்டுவிட் டிருந்தான்.

“எங்கப்பா கிளம்பிட்டே?”

“வீட்டுக்குள்ள போரடிச்சிட்டிருக்கறதுக்கு நம்ம சரவணப் பொய்கை, சிக்கந்தர் தர்கான்னு போய்க் காட்டலாம்னுதாம்பா...”

“மலைக்கு மேல ஏறப் போறிங்களா?”

“ஆமாம்ப்பா...”

“வேண்டாம்பா... மணி நாலாச்சு... கொஞ்ச நேரத் துல இருட்டிடும்”

“இல்ல அங்க்கிள். எனக்கு அந்த உயரத்துல நின்று மொத்த மதுரையையும் பாக்கணும்னு ஆசையா இருக்கு. போயிட்டு வரேன்.” என்று அருணாவும் சற்று செல்லமாக அடம் பிடித்தாள்.

“சரி பாத்து சூதானமாப் போய்ட்டு வாங்க”

அரை மனதாக சம்மதித்தார் சுந்தரம்பிள்ளை. அந்தப் பேச்சு உள்ளே அறைக்குள் ஏடுகளை வாசித்தபடி இருந்த சந்திரமௌலி காதில் விழவும் அவர் முகத்தில் ஒரு அதிர்வு.

அதற்கு மிக மிகத் தோதாக அவர் கையில் உள்ள ஏட்டினில் எறும்பு ஊர்ந்தது போன்ற எழுத்தினில் "மைந்தன் கரம் பற்றியே இரவியொத்தவள் குன்றம் ஏகுவாள்! மைந்தனும் அறிவான் முன் ஜென்மமே. என்று இருந்தது.

மைந்தன் என்றால் தனஞ்ஜெயன். அவன் கரம் பற்றியே இரவியொத்தவள் என்றால் சூரியனை ஒத்தவள், அதாவது சூரியனுக்கு அருணன் என்றும் பெயருண்டு. அந்தப் பெயரை உடையவள் குன்றம் ஏகுவாள். அதாவது மலை மீது ஏறுவாள். அப்போது மைந்தனும் அறிவான் முன் ஜென்மமே. அதாவது தனஞ்ஜெயன் தன் பூர்வ ஜென்மத்தை அறிவான் என்பது அந்த வரிகளின் செய்தி.

மிகச் சரியாக அதை வாசித்தபடி இருக்கையில் அந்த சம்பவம் நடப்பதை ஒரு கண்கண்ட சாட்சியாக உணர்ந்த சந்திரமௌலியிடம் ஒரு பெரும் சிலிர்ப்பு.

அப்படியே அந்த ஏட்டுக்கட்டைக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அந்தப் பெட்டியையே விழுந்து வணங்கவும் செய்தார். மனதுக்குள்

குருநாதரான அபிராமிதாச சுவாமிகளையும் எண்ணியவர், ‘குருநாதா. உங்களுக்குக் கிடைக்காத பேறு எனக்குக் கிடைக்கப் போறது. இந்த மந்திரன் தேடிய எந்திரன் கிடைச்சிட்டான். எந்திரமும் கிடைச்சுட்டா இந்த உலகத்துலேயே நான்தான் பலவான். இந்த உலகமும் அம்பாள் பக்தன் உள்ளங்கைக்குள்.’ என்றும் கூறிக்கொண்டார்.

20

அந்தப் பெண் சாதுர்யமாகப் பேசிய பேச்சு, சித்தர்முகத்தில் சிரிப்பை வரவழைத்தது. அவருக்குப் புரிந்துவிட்டது.அவள் சுயநலத்தோடு சிந்திக்கிறாள் என்பது. அவள் அந்த எந்திரங்களையும் இழக்கத் தயாராக இல்லை.

ஆனால் அவரிடம் எந்திரம் பெற்றுவந்த அந்தக் குடும்பத் தலைவருக்கு தர்மசங்கடமாக இருந்தது. சித்தர் சாமியும் சிரித்தபடியே கேட்டார்.

"சரிம்மா... இப்ப உனக்கு என்ன வேணும்?"

"அப்படிக் கேளுங்க. நீங்க கொடுத்த எந்திரங் களால நாங்க இப்ப நல்லா இருக்கோம். எங்க பிரச்னை கள் தீர்ந்துருச்சி. இதைத் திருப்பி உங்களுக்குத் கொடுத்த பின்னால மறுபடியும் பிரச்னை வந்துடு மோன்னு மனசு கிடந்து பயப்படுது சாமி...”

"அதனால..?"

"இது எப்பவும் எங்க கூடயே இருக்கட்டுமே. இதுக்கு உங்களுக்கு நாங்க எவ்வளவு பண்ம்னாலும் தந்துடறோம்..." அந்தப் பெண்ணின் பேச்சைக் கேட்டுத் திரும்பவும் சிரித்தார் அந்த சித்தர்.

“என்ன சாமி சிரிக்கிறீங்க..?”

"உங்க வரைல இதை எந்திரத்தோட கடமை முடிஞ்சி போச்சும்மா. இது இனி உங்ககிட்ட இருந் தாலும் ஒண்ணுதான்... இல்லாட்டியும் ஒண்ணுதான்." என்றார்.

அந்த பதில் அவர்களுக்கு ஆச்சரியம் தந்தது. அவர்களுக்குள் பல கேள்விகளையும் உருவாக்கியது.

சித்தர் கூற்றின்படி பார்த்தால் அந்த எந்திரத்துக்கு இப்போது சக்தி இல்லை என்பது போல் ஒரு பொருள் வருகிறது. என்றால் எந்திரங்கள் தற்காலிகமாகத்தான் வேலை செய்யுமா..? நிரந்தரமான ஒரு சக்தி

அவை களிடம் கிடையாதா என்பதுதான் அது..!

அதே சமயம் சக்தி இல்லாத எந்திரத்தை இவர் எதற்குத் திருப்பிக் கேட்கிறார் என்றும் ஒரு கேள்வி எழும்பியது. எல்லாக் கேள்விகளுக்குமே அவர் பதில் கூறத் தொடங்கினார்.

அந்த பதில்களுக்குள்தான் எந்திரம் என்றால் என்ன என்பதற்கான விளக்கங்கள் மட்டுமல்ல. அவை எப்படி பயன் தருகின்றன என்பதற்கும் பொருள் இருக்கிறது! அவரது பதில்...?

*****

சந்திரமௌலி அந்த அறைக்குள் மறைந்திருக்கும் பல உண்மைகளை பற்றி எண்ணியவராக சிலிர்த்தபோது கதவு தட்டப்படும் சத்தம்!

அந்த சிலிப்போடு மரப்பெட்டியை மூடி மீண்டும் வணங்கியவர், தூங்கி எழுந்தவர் போல அறைக் கதவையும் திறந்தார்.

எதிரில் கல்யாண சுந்தரம்!

‘சாமி, தூங்கிட்டு இருந்தீங்களா? கெடுத்துட் டேனா?”

“அதெல்லாம் இல்லே. வாங்க உள்ள...”

“சாமி, நீங்க வெளியே வாங்க. எதுவும் சாப்பிடலை. ஏதாவது சாப்பிடுங்க..."

“அதுக்கென்ன சாப்பிட்டா போச்சு.” என்றபடி அறையை விட்டு வெளியேறினார். வெளியேறும் முன் திரும்ப ஒரு பார்வை. அது மரப்பொட்டியின் மேல்தான்சென்றது.

சந்திரமௌலி வரவும் சுந்தரம் பிள்ளையும் எதிர் கொண்டார்.

‘‘சாமி நல்லா தூங்கிட்டீங்க போல இருக்கு?”

ஆமாம்... உங்க வீடு அமைதிக்கு ஏத்த இடமா இருக்கு...”

“பழைய வீடுங்க...”

“வீடு பழசா புதுசாங்கறது விஷயம் கிடையாது. அது எப்படி அமைஞ்சிருக்குங்கறது லதான் அந்த வீட்ல வாழறவங்களோட எதிர்காலம் இருக்கு. யார் வந்து படுத்தாலும் ஆழ்ந்த தூக்கம் படுக்கறவங்களுக்கு வரணும். பெருமூச்சே யாருக்கும் வரக்கூடாது.”

“நீங்க வாஸ்து சாஸ்திரம் பேசlங்களா சாமி?”

“கொஞ்சம் வாஸ்து. கொஞ்சம் வாழ்க்கைன்னு கலந்து பேசறேன்.”

"அப்ப என் வீடு ஒரு நல்ல வீடுங்கறீங்க?”

“நிச்சயமா...”

“ஆனா இங்க நாங்க ஒண்ணும் ஒஹோன்னு வாழ்ந்துடலையே சாமி? இப்ப கூட எங்கிருந்தோ வந்த என் பங்காளி ஒருத்தர் இங்க வந்த பிறகு இறந்து போனார்.”

“அதுக்கு அர்த்தம் என்ன தெரியுமா?”

“என்ன சாமி?”

“இந்த வீடு ஒரு நல்ல முடிவை எதுலயும் ஏற்படுத் தும்னு அர்த்தம்.

“அவர் இறந்தது நல்ல முடிவா?”

“நிச்சயமா... இந்த உலகத்துல வாழறதுங்கறதுதான் பரீட்சை எழுதற மாதிரி கஷ்டமான விஷயம். வயிற்றுப் பாட்டுக்காகவும் போலி கௌரவங்களுக்காகவும் போராடிக்கிட்டே இருக்கணும். மரணம்ங்கறது அந்தப் போராட்டத்தோட முடிவு. போராட்டம் முடியறது நல்ல விஷயம்தானே?”

“சாவைக் கண்டு பயப்படக் கூடாதுங்கறதை உங்க பாஷைல சொல்றீங்களா சாமி...”

“நிச்சயமா இல்லை. சாவு ஒரு நல்ல விஷயம். இதை சாகாம எப்படித் தெரிஞ்சுக்க முடியும்?”

“நீங்க மட்டும் எப்படி சாமி தெரிஞ்சிகிட்டீங்க?"

“நான் யோகி... வயிறை ஜெயிச்சவன். மனசையும் ஜெயிச்சவன்! பசிக்கும்போது என் வயித்துக்கு நான் இரை கொடுக்க மாட்டேன். அதே போல என் மனசையும் நான் என் முழுக் கட்டுப்பாட்டுல வெச்சிருக்கேன். அதனால் என்னால மரணத்தைப் பத்திப் புரிஞ்சுக்க முடிஞ்சது.

என் மனசை நான் ஆசைகள்ல ஆழ்த்தினதே இல்லை. உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்றேன். ஒரு அன்பர் எனக்கு ஒரு லட்ச ரூபாயை தட்சணையாக் கொடுத்தார். அவர் கிட்ட நான் ‘இது எனக்கே

எனக்குதானே'ன்னு கேட்டேன். அவரும் "ஆமாம்'னு சொன்னார். அப்ப நான் இதை என்ன வேணா செய்துக்கலாமா'ன்னும் கேட்டேன். "ஆமாம் சாமி. இது உங்க பணம். எனக்கு இதுல எந்த உரிமையும் இல்லையே'ன்னாரு. நான் உடனேயே அந்தப் பணத்தை அவர் எதிரிலேயே தீயில் போட்டு எரிச்சு சாம்பலாக்கினேன்!"

சந்திரமௌலி சொன்ன செய்தி கல்யாண சுந்தரத்தையும், சுந்தரம்பிள்ளையையும் ஒரு உலுக்கு உலுக்கியது.

''சாமி நிஜமாவா சொல்றீங்க?" என்று சந்தேகத் தோடு திருப்பிக் கேட்டனர்.

"நீங்க இப்படித்தான் கேட்பீங்க. ஏன்னா ஒரு லட்ச ரூபாய்ங்கறது உங்களுக்கு ரொம்பப் பெருசு. அதுக்கு முன்னால உங்க மனசும் மடங்கியிருக்கு. எனக்கு அப்படி இல்லை. என் மனசை நான் அதன் மேல் ஆசைப்படாதபடி அடைக்கி வைக்கத்தான் அப்படிச் செய்தேன். யோக வாழ்க்கைல 'மனோ நாசம்'னு ஒரு விஷயம் இருக்கு. அது ஒரு யோகிக்கு கை கூடி வரணும். நான் அந்தப் பயிற்சியில் இருக்கறவன்."

"அப்ப இன்னமும் கூட பயிற்சியில் தான் இருக் கீங்களா? ஜெயிக்கலையா?" சுந்தரம்பிள்ளை தான் இந்த கேள்வியை கேட்டவர். அது சந்திர மௌலியை சற்று தைத்தது.

"நல்ல கேள்வி... மனோ நாசம் பண்றது சாதாரண விஷயமில்ல. லட்ச ரூபாயை எரிக்கற அளவு எனக்குத் துணிவு இருந்தாலும் எனக்கும் ஒரு ஆசை இருக்கு" என்று புதிர் போட்டார்.

"உங்களுக்கு ஆசையா?"

"ஆமாம்... எனக்கு ஒரே ஒரு ஆசைதான். அந்த ஆசை ஈடேறிட்டா இந்த உலகத்தோட அவ்வளவு ஆசைகளை யும் நான் ஜெயிச்சிடுவேன்."

"அது என்னன்னு நான் தெரிஞ்சிக்கலாமா சாமி?"

"ஆசைகளை எப்பவும் வெளியே சொல்லக் கூடர்து திருஷ்டித் தாக்கம் ஏற்படும். அப்புறம் இடைஞ்சல்கள் உருவாகும்."

"நிச்சயமா... எப்பவும் உங்க விருப்பங்களை வெளியே சொல்லாதீங்க... அதுக்காக மூடு மந்திரமா இருந்து அழுத்தக்காரன்னு பேர் எடுத்துடாதீங்க..."

"பின்ன எப்படி தான் இருக்கணும்ங்கறீங்க?"

“ஆசையை அடக்கி ஜெயிக்க முயற்சி செய்யுங்க. பெருசா ஒரு ஆசை மட்டும் இருக்கலாம். ஆசையே எல்லாப் பாவங்களுக்கும் காரணம்னு சொன்ன புத்தர் கூட மகா நிர்வாணம்ங்கற முக்திக்கு ஆசைப்பட்டார். முற்றும் துறந்த துறவிகளுக்குக் கூட இந்த உலகத்துல அமைதி தவழனும்ங்கற, பசி பஞ்சம் வந்துடக்கூடாதுங்கற ஆசை யும் பயமும் உண்டு. ஆகையால ஒரு ஆசை உங்களுக்கு இருக்கலாம். அது சரியான ஆசையா இருக்கணும். பேராசையா இருக்கக் கூடாது. அவ்வளவு தான் இதுல முக்கியம்.”

சந்திரமௌலியின் விளக்கங்கள் புதிதாக மட்டும் இன்றி ஏற்றுக்கொள்கிற மாதிரியும் இருந்தன.

அதே சமயம் சந்திரமௌலி தன் சரியான ஒரே ஆசை எது என்பதையும் கூறவேயில்லை!

திருப்பரங்குன்ற தெருவில் அருணாவுடன் நடந்தபடி இருந்தான் தனஞ்ஜெயன்!

“மலைக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன்னுட்டு இப்படித் தெருவுல நடந்துக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்?” என்று கேட்டாள் அருணா.

“தெரியல அருணா... அழகான உன்னோட என் ஊர்ல காலார நடக்கணும்னு மனசு விரும்புது. இதுவே ஒரு பார்க்காவோ பீச்சாவோ இருந்தா நான் உன் தோள்ல கை போட்டுக்கிட்டு நடப்பேன். ஒரு இளம் பெண்ணோட அரவணைப்போட அவள் தோள் மேல கை போட்டுகிட்டு நடக்கறதுங்கறது உண்மைல எவ்வளவு இன்பமான விஷயம் தெரியுமா?”

அவன் கேட்ட விதத்தில் காதல் வழிந்தது அவளுக்கும் புரிந்தது.

“எனக்கு ஆட்சேபணை இல்லை தனா நீங்க தாராளமா இப்பவே கூட என் தோள் மேல கை போட்டுக்கலாம்..! என்ன பாக்கறவங்க உங்களத் தப்பா நினைக்கலாம். உங்களவிட என்னை இன்னும் தப்பா நினைக்கலாம்...”

அருணா அவன் காதலை சாமர்த்தியமாக வழி மொழிந்து பேசினாள். அவனுக்கும் புரிந்தது.

அவனுக்கு உண்மையில் நோக்கமே வேறு...

அவன் மாமாவின் வீட்டுப் பக்கமாகச் சென்று அவர்கள் பார்வையில்

பட்டு அவர்களுக்கு வெறுப்பேற்ற வேண்டும் என்பதுதான் அவன் எண்ணம்.

குறிப்பாக மாமன் மகன் இளங்கோவுக்கும், மாம னுக்கும் ஒரு குமுறலை உருவாக்க வேண்டும்.

தன்னை ஒரு வெறும் பயலாகக் கருதியவர்கள் முன்னால் ஒரு கோடீஸ்வரியை அழைத்துக்கொண்டு போய் நின்று அவர்களை அதிரவிட வேண்டும்.

இதெல்லாம்தான் அவன் திட்டம்!

அது ஈடேறவும் செய்தது. இளங்கோ தனாவையும் அருணாவையும் பார்த்து அப்படியே நின்றான்.

தனா அசரவில்லை. பார்த்து பதிலுக்கு சிரித்தான்.

எதற்கோ வெளியில் வந்த விஜயலட்சுமியும் பார்த் தாள். அவளுக்கு கண்களில் தீப்பிடித்துக் கொண்டு விட்டது போல் இருந்தது.

தனாவின் உள்நோக்கம் அருணாவுக்குத் தெரிய வில்லை. உற்சாகமாக நடந்தாள்.

“நாம இப்ப மலை அடிவாரத்துக்குப் போய் அப் படியே மேல ஏறுவோம்...” என்றான்.

“இருட்டப் போகுது... இப்பப் போய் மேல் ஏறி என்னத்தப் பார்க்க!”

"ஐயோ... இருட்டும்போது மேலே இருந்து மதுரையைப் பார்க்கணும். அம்புட்டு அழகா இருக்கும்...”

“இருட்டுல வழி தெரியுமா?”

“எனக்குப் போய்ப் போய் பழக்கம்... நீ தைரியமா வா..”

அவளுக்கு தைரியத்தை தந்து அழைத்துச் சென் றான்.

வீட்டுக்குள் விஜி முகத்தை தூக்கி வைத்துக் கொண் டிருந்தாள். விட்டால் அழுதுவிடுவாள் போல இருந்தது.

இளங்கோவும் கவனித்தான். அவன் தாயும் கவ னித்தாள்.

“என்னடா... இவ எதுக்கு விளக்கு வைக்கற நேரத்துல உம்முன்னு இருக்கா?”

“அவளுக்கு பொழப்பென்ன... நமக்கு ஒரு தலைவலி தீர்ந்துச்சும்மா...”

“என்னடா சொல்றே?”

“அந்த தனா பையன் எவளோ ஒருத்தியோட ஜோடி போட்டுகிட்டு நடந்து போனான். அதுவும் நம்ம தெருவுல நாம பாக்கணும்னே. இனி அவன் நம்ம விஜி விஷயத்துல குறுக்கால வரமாட்டான். இவளும் இன்னும் அவனை நினைச்சுகிட்டு இருக்காம நாம பாத்துநிச்சயம் பண்ணி யிருக்கற மாப்பிள்ளைக்கு உடன்பட்டு நல்லபடியா வாழறதுதான் சரி...”

“நிசமாவா சொல்றே. என்னைக் கூப்பிட்டுக் காட்டுறதுக்கென்னடா?”

"ஆமா... டயானாவும் இளவரசர் சார்லஸ"ம் சாரட்டுல தெருவுல போறாங்க... நீ பாக்காமப் போயிட்டே...போம்மா... போயி பொழப்பைப் பார்... பாவம் அந்தப் பொண்ணு இவன் கிட்ட மாட்டிகிட்டு நாசமாப் போகப்போவுது”

“பொண்ணு எப்படிடா இருந்துச்சு...?”

“அது நல்லதாம்மா இருந்துச்சு. ஆனா என்ன நல்லா இருந்து என்ன புண்ணியம்? நாலு காசு கைல இருந்தால்ல ஆம்பளைக்கு மதிப்பு...”

இளங்கோ மேற்படி பேசி முடிப்பதற்குள் தான் கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்தும் மடித்தும் மடித்தும் அவிழ்த்தும் ஒரு நூறு முறையாவது விட்டிருப்பான். அவ்வளவையும் கேட்டபடி இருந்த விஜிக்குள் உறுதியாக ஒரு எண்ணம் வரத் தொடங்கியது.

எப்போது இந்த அளவுக்கு வந்துவிட்டதோ இனி வாழ்வதில் அர்த்தமில்லை என்று எண்ணியவள் மெல்ல நழுவி தெருவில் இறங்கினாள். திருப்பரங்குன்ற மலையின் ஒரு பாகம் அவள் எதிரில் வாவா என்பது போல பார்த்தது. அங்கே பலர் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர்!

21

‘’எது எந்திரம் என்பதற்கு அந்தப் பக்கிரியைப் போன்ற சித்தர் அந்த ஆசை மிகுந்த கணவன், மனைவிக்கு விளக்கம் கொடுக்கத் தொடங்கினார்.

"இடையறாது இயங்க முடிந்த எல்லாமே எந்திரம் தான். அந்த

வகையில் உயிருள்ள ஒவ்வொரு மனித உடம்பும் ஈ, எறும்பு முதலான ஜீவன்களின் உடம்பும் கூட எந்திரம்தான்! மனித உடம்புக்குள் அடிப்படையான உயிராற்றல் என்னும் சக்தி இருந்து இயக்கத்தை மேற்கொண்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து நிலை நிறுத்தத்தான் சுவாச கிரியை புரிகிறோம். உணவை உட்கொள்கிறோம்.

இதே விஷயம் ஒரு செப்புத்தகட்டில் **ogro** மந்திர சப்தங்களைப் புதைப்பதால் நிகழ்கிறது. வழவழப்பான தகட்டின் மேல் அது பதியாது. அந்தத் தகட்டின் மேலான கோடுகளின் மேல் அவை பதிந்து தங்கும். ஒரு கோடு உருவாகும்போது அதில் இரு சரிவும் ஒரு மையப் புள்ளியும் தோன்றும். இந்த சரிவில்தான் பீஜாட்சர அதிர்வுகள் தங்கும். அவை ஓடும் தன்மை உடையது. அந்த கோடுகளின் மேல் ஓடியபடியே இருக்கும்.

பீஜாட்சரம் உரிய முறையில் ஜெபிக்கப்பட்டு மிக சரியான முறையில் செப்புத் தகட்டில் வரையப்பட்ட கோடுகளின் மேல் அது பதிவாவதில்தான் அந்த எந்திரத்தின் செயல்பாடே உள்ளது. இது எல்லாமே கணித முறைக்குக் கட்டுப்பட்டது.

இப்படி பீஜாட்சர மந்திரம் மற்றும் நேர்த்தியான் வரை கோலம் அல்லது கோடுகள் உள்ளதே பூரண எந்திரம். வெறும் கோடு வரையப்பட்டது எந்திரமாகாது. அது மின்இணைப்புப் பெறப்படாத ஒரு எந்திரம் போன்றது. இப்படி சக்தி மிகுந்த ஒரு எந்திரத்தை அதன் சக்தி குன்றி விடாதபடி பாதுகாப்பது முக்கியம். அந்த எந்திரத்துக்குப் பூஜைக்குரிய சூழ்நிலையே பாதுகாப்பானது. அதன் அதிர்வுக்குச் சாதகமான அதிர்வு களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதை வைத்து நாம் வழிபடும் போது கூறப்படும் மந்திரம்! அப்போது அதன் சக்தி வெளியெங்கும் பரவும். அப்படி அதன் சக்தி பரவும் ஒரு இடத்தில் இருப்பவர்கள் மனநிலையிலும் அதன் தாக்கம் இருக்கும்.

மாறிக்கொண்டே இருப்பது தான் மனம். எப் பொழுதும் ஏதாவது எண்ணங்களோடு இருப்பதுதான் அதன் இயல்பு. அந்த எண்ணங்களும் நல்ல எண்ணம், தீய எண்ணம் என்று இரு பிரிவாக உள்ளது. எந்திரத் தாக்கம் எண்ணங்களைத் தீவிரப்படுத்தும்.

பேராசை நம் மனதில் இருந்தால் நல்லெண்ணம் வலுவாக இல்லை என்று பொருள். நம்பிக்கை மட்டுமே நம் மனதில் இருந்தால் நல்லெண்ணம் வலுவாக உள்ளதாகப் பொருள்!

எந்திர பீஜாட்சரத் தாககம் நமக்குள் இருக்கும் எண்ணம் எதுவாக

இருப்பினும் அதைப் பலப்படுத்தும். நல்லது பலப்படலாம். தீயது பலப்படலாமா?"

பக்கிரிச் சித்தர் கேள்வியைக் கேட்டு நிறுத்தினார்.

*****

கண் எதிரில் தெரிந்த மலைநோக்கி விஜி வேகமாய் நடக்க ஆரம்பித்தாள். திருப்பரங்குன்றம் மலை பார்வைக் எவ்வளவு அழகோ அத்தனைக்கு அத்தனை அதன் மேல் பாகத்தில் ஆபத்தான பள்ளங்களும் இண்டு இடுக்குகளும் உண்டு. பல காதல் ஜோடிகள் விஷத்தைக் குடித்துவிட்டு அங்கே சுருண்டு விழுந்து தற்கொலை செய்து கொண்ட துண்டு. இதை அடிவாரத்தில் குடியிருக்கும் விஜியும் கேள்விப்பட்டதுண்டு. சில சமயங்களில் ஸ்ட்ரெச்சரில் வெள்ளைத்துணியால் மூடி பிணங்களை தூக்கிச் செல் வார்கள். அதை அவள் பார்த்ததும் உண்டு.

எல்லாமாய் சேர்ந்து அவளை உந்தித் தள்ளியது. மனதுக்குள் அறிவு உணர்ச்சிகளின் பிடியில் சிக்கும்போது அது ஒரு வெறியாக உருமாறி எதிலாவது முட்டி மோதி சிதறத்தான் துடிக்கும். அப்படி ஒரு விஷயம்தான் தற் கொலையும் கூட..

விஜியையும் அந்த வெறி துரத்தியது! வெறி தலைக் கேறி விட்டநிலையில் பயம் பறந்தோடி விடும். நாடி நரம்புகளில் ஆவேசமானது குதிரை போல் ஓடியபடி இருக்கும். எதிரில் யார் வருகிறார்கள் போகிறார்கள் என்பதே தெரியாது. விஜி மட்டும் விதிவிலக்கா என்ன? ஆனால் அவள் வெறித்த விழிகளுடன் போகும் வேகம் அவளையறிந்த சிலரை லேசாகக் கலவரப்படுத்தியது.

அதிலும் திருமணம் நிச்சயமான ஒரு பெண் இப்படி எல்லாம் போக மாட்டாள். கல்யாணம் முடிகிற வரை பெரிதாக வெளியே தலைகாட்டவும் மாட்டாள். எனவே அவளைப் பார்த்தவர்களில் ஒருவர் சந்தேகத்தோடு அவளையே நிறுத்திக் கேட்டார்.

“என்னம்மா விஜி, எங்கேம்மா இருட்டப்போற இந்த நேரத்துல போய்க்கிட்டிருக்கே?”

“உம் சாகறதுக்கு...” அவள் துளியும் சிந்திக்காமல் சொன்ன பதில் அவர் கன்னத்தில் அறைந்தது. அவள் பதில் சொன்ன வேகத்தில் நடந்தாள். அடிவாரத்தில் இருந்து கார்த்திகை மகா தீபம் ஏற்றும் இடத்துக்குச்

செல்லும் பாதை மேலேறியபடி இருந்தது. அதிலும் ஏற ஆரம்பித்தாள்.

அவர் பீதியோடு விஜியின் வீடு நோக்கி ஒடத் தொடங்கினார்.

***

குன்றின் மேல் பாகம் நோக்கிய நடையில் தனஞ் ஜெயனிடமும் அருணாவிடமும் இளைப்பெடுத்தது. அருணா நின்று மூச்செறியவும் மார்பகங்கள் மேலும் கீழும் ஏறி இறங்கித் தழைந்தது தனஞ்ஜெயனை என்னவெல் லாமோ செய்தது.

பொதுவில் வாலிபத் தாக்கங்கள் இல்லாமல் பக்தி பின் பிடிக்குள் பெரிதும் சிக்கிக்கிடந்தவன் பத்து நாட் களில் பெரிதும் மாறிவிட்டான். எது இப்படி மாற்றியது என்பதும் தெரியாத நிலையில் அவர்கள் மேல் சிலு சிலுவென்று காற்றானது பெரும் முண்டுதலோடு வீசியதில் அருணாவின் தலைமுடி ஒரு கொடியானது கம்பத்தில் பறப்பது போல் பறந்தது.

மேலே ஜிகினாத் தூள் ஒட்டிய முகம் போல வானம். அதில் தூவிவிட்டாற்போல் நட்சத்திர மினுக்கல்கள். ரசனையோடு அவளையும் வானையும் மாறி மாறிப் பார்த்தான். அப்படியே அங்கிருந்தபடியே மதுரையைக் காண்பித்தான்.

பீறிட ஆரம்பித்திருந்தன மின் விளக்குகள்!

நெற்றி வகிடு போல, கறுத்த சாலை மேல் எறும்பு ஊர்வது போல வாகனங்கள்.

எப்போதும் பெரிதாய் எதைப் பார்த்தாலும் பிரமிப்பு தட்டிப்போய் மனதும் ஒரு வித ஏகாந்தத்தில் லயித்து விடுகிறது. யானை, ரயில் வண்டி வரிசையில் மலை மீதிருந்து தெரியும் ஊரின் அழகையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

தனஞ்ஜெயனும் அவைகளைப் பெரிதாய் ரசித்தான்.

அவன் எவ்வளவோ முறை அந்த மலைக்கு வந்திருக் கிறான். ஒவ்வொரு முறை வரும்போதும் சுருட்டுச் சாமியார் எங்கே என்றுதான் பார்ப்பான். அவரோடு பேசுவதும் அவருக்காக வருவதும் தான் அவனுக்கு பிடித்த விஷயமாக இருந்தது.

இப்போது அதிலும் மாறுதல்!

அவரைப் பற்றிய எண்ணமே அவனிடம் இல்லை. ஒரு அழகான பெண்ணால் இப்படி எல்லாம் கூடவா ஒரு ஆடவனை மாற்ற முடியும்?

“எப்படி இருக்கு அருணா எங்க மதுரை?”

“உங்க மதுரையா... எப்ப விலைக்கு வாங்கினீங்க.”

“உன்னைப் பார்த்த பிறகுதான்...”

“எங்கிட்ட சொல்லவேயில்லையே?”

“அதான் இப்ப சொல்லிட்டேனே...”

"அப்படியா...வேண்டாம் திருப்பிக் கொடுத்துருங்க”

“எதை?”

“மருதையத்தான்.”

அதைக் கேட்டு அவன் களுக்கென்று சிரித்தான் அவளும் சேர்ந்து சிரித்தாள். அப்போது சுருட்டுப் புகை வாசம் வந்து முகத்தில் அடித்தது.

“அய்ய... யார் இங்கேயும் சிகரெட் பிடிச்சிக்கிட்டு?" என்று தன் முகத்தை விகாரத்திற்கு மாற்றிக் கொண்டாள் அருணா. ஆனால், அந்தப் புகை அவனுக்குள் சுருட்டுச் சாமியாரை ஞாபகப்படுத்தியது.

“சாமி இருக்கார் போல” என்று சில அடிகள் நடந்து சென்று குறிப்பிட்ட திசையில் பார்த்தான். அவரும் இருந்தார். அவரைப் பார்க்கவும் ஒரு பரவசம்.

“அருணா, வா. எனக்கு ரொம்பப் பிடிச்ச சாமி ஒருத்தர் இருக்கார் அறிமுகப்படுத்தி வைக்கறேன்...” அருணாவுடன் அவரை சமீபித்தான்.

அவரிடம் அதே ரங்கநாதர் போஸ்.

விண்ணைப் பார்த்தபடியே புகை உமிழ்வு!

‘‘சாமி... வணக்கம்.”

அவன் குரல் கேட்டும் திரும்பாமல் வான் மேலேயே இருந்தது பார்வை.

‘‘சாமி உங்களத்தான் சாமி. என் கூட யாருன்னு பாருங்க. இது நான் கட்டிக்கப் போற பொண்ணு.”

அவரும் போனால் போகட்டும் என்பது போல அவனைப் பார்த்தார்.

அவளையும் பார்த்தார். முகத்தில் எந்த சலனமும் இல்லை.

“சாமி... நீங்க இங்க இருப்பீங்கன்னு நான் நினைக் கவேயில்லை.” அவன் சொன்னதைக் கேட்டு சிரித்தார்.

“என்ன சாமி சிரிக்கறிங்க... பத்து நாள்ல என்னெல் லாமோ நடந்துடிச்சு. அருணாவை நேத்துதான் பார்த் தேன். ஆனா பல வருஷம் பழகின மாதிரி ஒரு உணர்ச்சி சாமி...”

“அப்ப பல வருஷம் பழகினவ?” சாமியாரின் ஆரம்பமே அதிரடியாக இருந்தது. அவனுக்கும் திணறியது.

“சாமீஈஈ...”

“பெண்டாட்டிய நீ இப்ப முடிவு பண்ணாதே. அது ஏற்கெனவே முடிவான விஷயம்.”

“அது சரி சாமி... ஆனா விஜியை ஒருத்தருக்குப் பரிசம் போட்டுட்டாங்களே... நான் அவளை இனி எப்படி நினைக்க முடியும்?”

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒண்ணு மட்டும் நல்லாத் தெரியுது. பத்து நாளா உனக்கு பக்தி சம்பந்தம் இல்லை. தீட்டு வந்து உன்னைக் கட்டிப் போட்டுடிச்சு. அதனால நீயும் அடங்கிக் கிடந்த உன் வாலிபத்து கிட்ட சிக்கிக்கிட்டே பெரிய பெரிய கடமை எல்லாம் உனக்காகக் காத்திருக்கும்போது போனா போகட்டும்னு இந்தப் பொண்ணு ரூபத்துல காலம் உனக்கு அல்ப சந்தோ ஷத்தைத் தந்துக்கிட்டிருக்கு. உனக்கும் அல்ப சந்தோஷத் துக்கும் சம்பந்தமே கிடையாது. சின்னதாவாவது பெண்ணின்பம் தெரியணும்ங்கறதுதான் உன் விதி. போ. இன்னும் கொஞ்ச நேரம் தான். போய் நல்லா அனுப விச்சிக்கோ. போ...”

அவர் பேசியது அவனுக்கு நன்றாகவே புரிந்தது. ஆனால் அருணாவுக்குத்தான் புரியவில்லை.

“இவர் என்ன சொல்றாரு...?” என்று கேட்டாள்.

“நான் சொன்னது புரியலியா. போகப் போகப் புரியும். அதோ ஆகாசத்துல மிருகசிரிஷ நட்சத்திரம். மான் கொம்பு மாதிரி தெரியுது பார். இது முதல் சகுனம்! இந்த ஜென்மத்துல நீ யாருங்கறது அப்புறம். உனக்கு உன் பூர்வ ஜென்மம் விளங்கப் போகுது...”

அவர் பேசப் பேச அருணாவுக்குக் குழப்பம்தான் அதிகரித்தது. அவளுக்கு அந்த சுருட்டுச் சாமியாரை பிடிக்கவும் இல்லை.

“தனா... வாங்க போகலாம். இவர் பேசறதே எனக்கு புரியல.” என்று அவன் கரம் பற்றி இழுத்தாள். அப்போது சில அடி தொலைவில் விஜியும் அங்கு வந்துவிட்டிருந்தாள். அருணா அவனிடம் காட்டிய அன்யோன்யம் அவளை ஊசியாய் தைத்தது. அவனும் யதார்த்தமாய் திரும்பு கையில் அவளைப் பார்த்துவிட்டான். கொஞ்சம் போல நறுக்கென்றிருந்தது.

சாமியார் மௌனமாகி சுருட்டு புகைக்கத் தொடங்கி விட்டார். கிட்டத்தட்ட இருட்டியும் விட்டது. விஜியின் உருவம் ஒரு கறுப்பு நிழலாகத்தான் தெரிந்தது.

"விஜி நீ எங்க இங்க?” தனஞ்ஜெயன் பதற்றத்தோடு கேட்டான்.

“நீங்க ஜோடியா வரலாம். நான் வரப்படாதோ?”

‘உளறாத புள்ள உனக்கு பரிசம் போட்டாச்சு. தெரியும்ல?”

“நான் என்ன ஆடா மாடா. சவுரியத்துக்கு வெட்றதுக்கு?”

“இதை நீ உங்க அப்பன்கிட்ட கேட்கணும்?”

“உன் கிட்டயும் கேட்கலாம்... ஏன்னா நான் அவுகள நினைச்சதவிட உன்ன நினைச்சதுதான் அதிகம்.”

“இனி இப்படி எல்லாம் பேசாதே... இப்பகூட சாமி சொன்னாரு... கல்யாணம்ங்கறது நாம் ஆசைப்படறதால மட்டும் நடக்கறதில்ல. அதுக்கு விதி இருக்கணுமாம்...”

“அப்ப நான் உன் பொண்டாட்டி இல்லைங்கறே. இனி இவதான் உன் பொண்டாட்டிங்கறே. அப்படித் தானே?”

“புரியாமப் பேசாதே. நீ இனி எனக்கு இல்லைன்னு ஆனதாலதான் நான் அருணாவையே விரும்பினேன்.”

“இப்படிச் சொல்ல உனக்கு வெக்கமா இல்லை? நாளைக்கு இவங்களுக்கு ஒண்ணுன்னா மூணாவதா ஒருத்தி கிட்டப் போயிடுவியா? ஒண்ணை நினைச்சு ஒண்ணுல கிடக்கற உத்தமம் உனக்குக் கிடையாதா? நீ என்ன பூவுக்குப் பூ தேன் குடிக்கிற பட்டாம்பூச்சியா?”

“விஜி... கண்டபடி பேசாத புள்ள... உன் விஷயத் துலயேகூட நீதான் என் மேல ரொம்ப ஆசைப்பட்டே நான் எப்பவாச்சும் உன்கிட்ட ஜொள்ளு விட்டிருப்பேனா?”

“அடப்பாவி மனு சா... நீ அடக்க ஒடுக்கமா இருந்ததுதானே என்னையே

உன் பக்கம் சாச்சிட்டு... இப்ப அதையே வெச்சு என் ஆசையைக் குத்தம் சொல்றியா நீ.”

“போதும் விஜி... பேசுனா பேச்சு வளர்ந்துக்கிட்டே போவும். நான் ஒரு வேலை வெட்டி இல்லாத வெறும் பய. உன்னை வெச்சு மூணு வேளைக் கஞ்சிய என்னால் ஊத்த முடியுமோ முடியாதோ. உன் தாய் தகப்பன் உனக்கு ஒரு ஒசத்தியான இடத்தைப் பாத்து முடிவு பண்ணிட்டாங்க. எப்ப எழுதி கையெழுத்தாயிடிச்சோ பொறவு எதைப் பேசியும் பிரயோஜனமில்ல. உன் மனசை மாத்திக்கோ. அதான் நல்லது. வா அருணா நாம போவோம்.”

தனஞ் ஜெயன் அவளைக் கடந்து கீழ் இறங்கத் தொடங்கினான். ஆனால் அருணாவுக்கு மனது கலவரப் பட்டது.

“தனா... நில்லுங்க... நில்லுங்க...” என்று அவன் பின் ஒடியவள் “அவளை அப்படி விட்டுட்டு வந்துட்டீங்களே... அவளையும் கூப்பிடுங்க...” என்றாள்.

"அவளுக்கும் இந்த மலையில எல்லா பாகமும் அத்துபடி அருணா... நீ வா. அவ வந்து சேருவா...”

“அது இருக்கட்டும்... அவதான் உங்கள விரும்பி னாளா? நீங்க அவளை விரும்பவே இல்லையா?”

அருணா கேட்க வேண்டிய கேள்வியைத்தான் கேட்டாள்.

“இல்ல அருணா... அவளை நான் எப்பவுமே என் பொண்டாட்டியா நினைச் சதே இல்லை. இதான் உண்மை’’

“போகட்டும் இப்ப அவளைத் தனியா விட்டுட்டுப் போக வேண்டாம். அவளை தயவுசெய்து கூப்பிடுங்க." அருணா தூண்டினாள். அவனும் ஏறிட்டான். ஆனால் மெல்லிய இருளில் அவள் அங்கே இல்லை.

“எங்க போய்டடா இவ...”

“போங்க... போய்க் கையைப் பிடிச்சுக் கூட்டிக்கிட்டு வாங்க.” அவள் உந்தித் தள்ளினாள். அவனும் “சரி” என்று வேகம் பிடித்தான். அதே சமயம் ஒரு இடத்தில் கால் இடறி சரிந்தும் விழுந்தான். பின் மண்டையில் பொளேர் என்று ஒரு அடி. ஒரு வினாடி சர்வமும் மறந்துபோய் தான் யார் என்பதே தெரியாதபடி எண்ணங்கள் அற்ற ஒரு நிலை!

சற்று தள்ளி அந்த சுருட்டுச் சாமியார் துளிகூட அதிர்வோ பதற்றமோ இன்றி சுருட்டுப் பிடித்தபடியே இருந்தார்! தலையைத் தேய்த்தபடி எழுந்து நின்ற அவன் காதுகளில் மிக மெல்லிய ஒலியாக தூரத்தில் யாரோ ‘’லலிதா த்ரிசதி” எனும் மந்திரத்தைச் சொல்வதைப் போல் கேட்டது.

22

‘நல்லது பலப்படலாம் தீயது பலப்படலாமா என்று அவர் கேட்டது கணவர் மனைவி இருவரையும் மிகவே யோசிக்க வைத்தது. ஒரு எந்திரம் பூஜிப்பவரின் மனதுக்குள் புகுந்து எண்ணங்களின் வாயிலாகத்தான் செயலாற்றுகிறது என்கிற அவரது விளக்கமும் மிகவே புதிதாக இருந்தது. அவர்கள் வரையில் எந்திரத்தின் செயல்பாட்டை ஒரு மாயா ஜாலமாகத்தான் உணர்ந்து வைத்திருந்தனர். மனித சக்தியால் முடிக்க முடியாத, விஞ்ஞான சக்தியாலும் சாதிக்கப்பட முடியாத ஒன்று மூன்றாவதாக ஒரு சக்தியால் சாதிக்கப்படும்போது அதை மாயாஜாலம் என்று கூறுவதுதான் பொதுவான இயல்பு.

அந்த வகையில் ராமர் இலங்கை செல்லப் பாலம் கட்டியது. அப்போது அதன் நிமித்தம் பயன்படுத்திய கற்கள் கடலில் மிதந்தது முதல் வானில் நிகழும் சூரிய சந்திர கிரகண நிகழ்வு வரை எல்லாமே மாயா ஜாலமாகத்தான் கருதப்படுகிறது.

இன்றும் பாபா படத்தில் விபூதி கொட்டுவதும் நாம் தீவிரமாக ஒருவரை நினைக்கும்போது அவர் எதிரில் வந்து நிற்பதும் மாயாஜாலமாகவே உணரப் படுகிறது. அந்த வகையில்தான் இந்த எந்திரத்தையும் வைத்திருந்தனர். ஆனால் நேர் எதிராக சாமியார் கூறவும் இருவரும் தங்கள் ஆச்சர்யத்தை வெளிக்காட்டி நின்றனர். அவரும் தன் விளக்கத்தைத் தொடர்ந்தார்.

"எந்திரம் என்பது பாரபட்சமில்லாமல் சக்தியை வழங்கும் ஒன்றாகும். எனவேதான் நல்லெண்ணங் களோடு இருப்பதும் நல்லதையே எப்போதும் நினைத்தும் செயல்படுத்தியும் வாழ வேண்டும் என்றனர். எண்ணங்களாகிய வார்த்தைகளின் பொரு ளுக்குள்தான் நல்லது எது, கெட்டது எது என்பது தெளிவாகிறது என்றவர் "பேராசையோடும், சுயநலத் தோடும் இதைப் பயன்படுத்தக் கூடாது. இப்படிப் பட்ட எந்திரங்கள் கோயில்களில்தான் இருக்கலாம். கோயில் என்பது

பொதுவானது. அங்கே ஆறு காலமும் பூஜைகள் நடந்தபடியே இருக்கும். எனவே சக்தி பேணப்பட்டபடியே இருக்கும். எனவே இந்த எந்திரத் தால் நன்மை மட்டுமே விளைந்தபடி இருக்கும். வீடு என்பது அப்படி அல்ல. வீட்டில் இதை வைத்து கோயிலாக்கலாம். தவறில்லை. கோயிலைப் போலவே நம் வீட்டைப் பொது உடமையாக்கும் பெரிய மனது நமக்கிருந்தால்..?" என்று அவர் கூறவும் இருவருக்கும் திகைப்பாகவும் ஆகிற்று.

அது எப்படி ஒருவன் தன் வீட்டைப் பொது உடமை ஆக்க முடியும்? இருவருமே திகைத்ததோடு இப்படி பொதுவான ஒன்றை தங்களுக்கு அந்த பக்கிரிச் சித்தர் ஏன் தர வேண்டும் என்று நினைக்கவும் தவறவில்லை.

*****

"லலிதா த்ரி சதி" தேவிக்குரிய மந்திரங்களில் பிரதான மானது. மிகுந்த சக்தியை உடையது. த்ரிசதியைப் பாரா யணம் செய்து முடிக்கும்போது மனதுக்குள் எவ்வளவு சஞ்சலங்கள் குழப்பங்கள் இருந்தாலும் அவை அடங்கி ஒரு புதிய தெம்பை மனதானது உணர்ந்திருக்கும். சொன்னால் மட்டுமல்ல.கேட்டாலும் மனதுக்குள் தெம்பு மூளும்.

தனஞ்ஜெயனிடமும் அப்படி ஒரு தெம்பு. பின் மண்டையில் பட்ட அடியின் காயம் கூட அப்போது பெரிதாகத் தெரியவில்லை.

கோஷ்டியாக சிலர் அமர்ந்து பிசிறில்லாத குரலில் த்ரிசதியைச் சொன்னபடி இருக்கின்றனர். சுற்றிலும் பார்த்தபோது அவன் நின்றபடி இருந்த மலைப்பாகத்தில் தீப்பந்தச் சுடரொளி நாலாபுறமும் எரிந்து பொழிந்தபடி இருக்க, ஆகிருதியான சில பிராம்மண பிரம்மச்சாரி இளைஞர்கள் தோளில் சிகப்பு நிறத்தால் ஆன பட்டு அங்கவஸ்திரம், பொன்னாடை போர்த்தப்பட்டது போல விரிந்து கிடக்க மரவட்டில் மேல் த்ரிசதி அடங்கியுள்ள ஏடுகளைப் புரட்டியபடியே த்ரிசதியைச் சொல்லியபடி இருக்கிறார்கள்.

அவர்களின் தனஞ்ஜெயனும் ஒருவனாக இருக்கிறான். அவன் காதுகளில் அப்போது கலீர் கலீர் என்று சதங்கை சப்தமும் கேட்கத் தொடங்குகிறது. அந்த தீப்பந்த ஒளி பொங்கி வழிந்தபடி உள்ள மலைத்தளம் மேல் இளவரசி போல ஒரு பெண் வந்து நிற்கிறாள். பட்டுச்சேலை உடுத்தி நிறைய நகைகள் அணிந்து, குங்குமப் பொட்டுடன் அவள் நிற்கும் கோலம் அம்பிகையே நேரில் வந்தது போல்

இருக்கிறது.

எல்லோரும் அவளைப் பார்த்து கும்பிடுகின்றனர். 'ராஜமோகினி, ராஜமோகினி' என்று அவள் பெயரை சிலர் ஆச்சர்யத்துடன் உச்சரிக்கின்றனர். அவளோ தனஞ்ஜெயனையே உற்றுப் பார்க்கிறாள். முகத்திலும் சுழித்தது போல ஒரு குறுஞ்சிரிப்பு.

"மோகினி... அப்படிப் பார்க்காதே..." அவன் கூறு கிறான்.

"ராஜமோகினி என்று முழுப்பெயரை கூறுங்கள்" அவளும் கூறுகிறாள்.

"ஆம்... நீ ராஜமோகினிதான். என்போன்ற உபா சகனை உன்னால் எதுவும் செய்ய முடியாது."

"விரும்பாமல்தான் நான் இருக்கும் இடத்தைத் தேடித் தேடி வருகிறாயா?"

"நான் எதைச் செய்யவும் விரும்பவில்லையே..."

"என்ன செய்வேன்... இந்த தேவதாசியை ஊரே விரும்பினாலும் என் மனம் உன்னைத்தானே விரும்புகிறது தனரூபன்."

"போதும்... இனி ஒரு முறை என்னை விரும்புகிறேன் என்று உளறாதே..."

"உண்மை எப்படி உளறலாகும்?"

"ராஜமோகினி, உன் காதலை என்னால் ஏற்க இயலாது. இப்பிறப்பில் என் நோக்கம் பிரம்மச்சரியமும் பெருந்தவமும்தான்."

"ஒரு சக்தி உபாசகனுக்கு பிரம்மச்சரியம் அவசிய மில்லை. வாழ்வின் ஆதார சக்தியை வெறுத்து எந்த சக்தியை உபாசிப்பதாலும் பலன் இல்லை என்று உங்கள் குருநாதர் கூறவில்லையா?"

"ராஜமோகினி, நீ இப்போது வாய்மூடித் திரும்பப் போகிறாயா, இல்லை நான் இங்கிருந்து சென்றுவிடவா?"

தனரூபன் ஆவேசமாகக் கேட்கவும் அந்த ராஜ மோகினியின் முகம் சுண்டிப் போகிறது. கோவைப்பழத்தை அக்னியில் வாட்டவும் அது தன் சிகப்பு நிறத்தை இழந்து கருமைக்கு மாறினது போல அவளிடம் ஏராளமான மாற்றம்.

அப்படியே திரும்பிச் செல்லத் தொடங்குகிறாள். கலீர் கலீர் என்று காற்

சதங்கை ஒலியின் தேயும் சப்தம். முற்றாக சப்தம் அடங்கிவிட தனஞ்பனும் தலையை சிலிர்ப்பிக் கொண்டான்.

''தனஞ்ஜெயன் என்னாச்சு? அவளைப் போய்க் கூட்டிக்கிட்டு வராம இங்கே என்ன பண்றிங்க?" என்னும் குரல் கேட்டு திரும்பியவன் எதிரில் முக்காலுக்கும் மேலான இருளில் அருணா நிற்பதை நம்ப முடியாமல் பார்த்தான்.

"தனா... என்னாச்சு?"

"நான் தனரூபன்..."

"தனரூபனா... என்ன சொல்றீங்க?"

"நீ... நீ ராஜமோகினிதானே?"

"ராஜமோகினியா?" அவள் கேட்டதும் அதைத் தொடர்ந்து இருளுக்குள் இருந்து அந்த பரதேசிச் சாமியார் குபிர் என்று சிரிக்கத் தொடங்குவதும் அருணா காதில் மோதியது. சிரிப்போடு அவர் பேசவும் செய்தார்.

"எலேய்... அதிசயமானவனே! நீ இனி சாதாரண ஆள் இல்லடா. என் கிட்டயும் இனி நீ முந்தி மாதிரி வர மாட்டே. உன் கிட்ட வேணும்னா நான் வருவேன். எது தெரியணுமோ அது உனக்கு தெரியத் தொடங்கிடிச்சு.

அந்த வானம், நட்சத்திரம், வீசற காத்து, இந்த மலை, இந்த வெளி எல்லாமே அதிசயம்..!. அதோட சேர்ந்த நீயும் ஒரு அதிசயம்! எனக்கில்லையே அந்தக் கொடுப்பினை... எனக்கில்லையே..."

எக்களிப்பாய் ஆரம்பித்தவர் அப்படியே துக்கத்தில் மாறி விழுந்தார். அருணாவுக்கு எல்லாமே புதிதாய், புதிராய் இருந்தது.

நேரமோ போய்க்கொண்டேயிருந்தது. விஜி என்ன செய்து கொண்டாள் என்றும் தெரியவில்லை. தனஞ் ஜெயனோ வெறித்தபடியே நின்றான்.

அப்போது டார்ச் லைட் ஒளியோடு விஜியின் அண்ணன் இளங்கோவும் இன்னும் சிலரும் ஓடி வந்தனர். டார்ச் லைட் வெளிச்சம் பட்டு தனஞ்ஜெயன் கண் னிரண்டும் கூசியது.

"அடப்பாவி... நீ இங்கதான் இருக்கியா... உன்னைப் பாக்கதான் என் தங்கச்சி வந்தாளா? இது யாரு... ஒ நீ ஜோடி போட்டு சுத்துன பொண்ணா...? இங்க என்னடா பண்றிங்க? எங்கடா என் தங்கச்சி...?"

அலறினான் இளங்கோ.

“ஏண்டா கத்தறே? மேல போய் உடும்புக் குழியில பாரு போ...” பக்கிரிச் சாமியாரிடம் இருந்து பதில் வந்தது.

“இது யாரு?”

“உன்... உன் பாட்டன். போடா போய்த் தூக்குங்க அவளை...”

சாமியாரின் தீவிரமான குரல் இளங்கோவையும் மற்றவர்களையும் மேலே ஓட வைத்தது.

டார்ச் லைட்டின் ஒளி வட்டங்கள் பாறைகள் மேல் ஒளிப்பந்துகள் உருண்டு செல்வது போல் உருண்டு உருண்டு சென்றன. உடும்புக்குழி என்பது அந்த மலை மேலேயே சதாசர்வ காலமும் கிடப்பவர்களுக்கு மட்டுமே தெரிந்த இடம்.

மலைமேல் திரியும் உடும்புகள் அங்கேதான் அடைந்து கிடக்கும். அதைப் பிடிப்பதற்காக வேட்டைக்காரர்கள் பௌர்ணமி நாட்களில் மேலே வந்து காத்திருப்பார்கள். உடும்புக் குழிக்குள் உடும்புகளுக்கு மிகப் பிடித்தமான தட்டான் பூச்சிகளையும் வெட்டுக்கிளி, சுவர்க்கோழி போன்றவைகளில் மயக்க மருந்து கலந்து தெளித்து அதை அந்தக் குழிக்குள் வீசிவிட்டுக் காத்திருப்பார்கள். உடும்பு களும் அந்த வாடைக்கு வந்து அவைகளை விழுங்கிவிட்டு அப்படியே மேலே வரும். அப்படி வரும்போதே சுருண்டு விடும் உடும்புகளும் உண்டு.

பின் அந்த உடும்பைப் பிடித்து பெரிய பெரிய மிட்டா மிராசுகளுக்கு விற்பதற்காக எடுத்துச் செல்வார்கள். மிட்டா மிராசுகளும் உடும்புகளை வாங்கி தங்கள் வீட்டில் வைத்து வளர்ப்பார்கள்.

உடும்பும் கீரியும் குபேரனின் அம்சங்கள். இந்த இரண்டும் உள்ள ஊரிலும் சரி, வீட்டிலும் சரி செல்வம் கொழிக்கும் என்பது நம்பிக்கை.

அந்தக் குழிக்குள் ஒருவர் விழுந்து விட்டால் மீட்பது மிகவே கடினம். நூல் ஏணி கட்டி இறங்கி மூங்கில் சாரம் போட்டு பின் விழுந்தவரைக் காப்பாற்ற வேண்டும். இதெல்லாம் திருப்பரங்குன்றவாசியான இளங்கோவுக்கும் தெரியும். எனவே பதறிக் கொண்டு போய் குழிக்குள் டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தான்.

கீழே குப்புற விழுந்து கிடந்த விஜியின் உடல் டார்ச் ஒளி வட்டத்தில் அகப்பட்டது.

“ஐய்யோ விஜி...” என்று கத்தத் தொடங்கிவிட்டான். மெல்ல பின் தொடர்ந்து வந்திருந்தான் தனஞ்ஜெயன், அவனை ஆர்வமும் அவஸ்தையும் தாளாமல் அருணா தான் இழுத்து வந்திருந்தாள். பிரமை பிடித்தவர்கள் நடந்து வருவது போல் வந்தவன் எட்டிப் பார்த்தான்.

“பாவி... பாவி... பாருடா... நல்லாப் பாரு. துப்புக் கெட்டவனே. இவளை இப்படி குதிக்க விட்டுட்டியேடா... உயிர் இருக்கோ இல்லை செத்துருக்காளோ... ஐயோ...” இளங்கோ இருளைத் திருகியபடி அலறினான். உடன் வந்தவர்கள் தங்கள் வேட்டியை அவிழ்த்துக் கயிறு போல் இணைத்துக் கட்டி மளமளவென்று குழிக்குள் இறங்கத் தொடங்கிவிட்டனர்.

“பாத்து... சூதானமா... உம்... அப்படித்தான்... மெள்ள..” என்று அந்த செயலின் போது வெளிப்படும் பேச்சுக் குரல்களுக்கு நடுவில் அவள் அருகில் குதித்த ஒருவன் குனிந்து விஜியின் மூக்கருகே தொட்டுப் பார்த்துவிட்டு. “இளங்கோ. ஒண்ணும் ஆகலைப்பா. மூச்சோட்டம் இருக்கு. தைரியமா இரு” என்று குரல் கொடுத்தான்.

ஆனால் தனஞ்ஜெயனுக்கோ தாசி ராஜமோகினி அங்கே கிடப்பது போல் இருந்தது. நாயக்கரின் அரசவை வீரர்கள் அவள் உடலை எடுப்பதற்காகக் கயிறு கட்டி உள் இறங்கிட அவளை அள்ளித் தோள் மேல் போட்டுக் கொண்டு ஏறினான் ஒருவன். ராஜமோகினியிடமும் உயிர் இருந்தது. மேலே தூக்கிப்பாறை மேல் போட்ட மாத் திரத்தில் அவளது மயக்கமும் தெளிவிக்கப்பட்டது.

கண்மலர்ந்த அவள் ‘தனரூபன்’ என்றுதான் அழைத் தாள். தனரூபனும் இருந்தான். முன்வந்தான்.

“என்னை இனி இப்படி சோதிக்காதீர்கள். என் உயிர் இன்னமும் போகாமல் இருப்பதே நான் உங்களைச் சேரவேண்டும் என்று அந்த முருகன் விரும்புவதால்தான்...” என்றாள் அவள். அவளைக் கடூரமாய் வெறித்தான் தனரூபன். அதே வேகத்தில் அவள் கன்னத்தில் அறைந் தான்.

ஆனால் அவளோ மகிழ்ந்தாள்! அவன் கைப்பட்ட கன்னத்தை வருடிவிட்டுக் கொண்டாள். ஏக்கமாய்ப் பார்த்தாள். அதே பார்வை. அதே ஏக்கம். அதே பாவனைதான் விஜியிடமும். பாறை மேல் அவளைத் தூக்கிப்போட்டு தண்ணீர் தெளிக்கவும் எழுந்தவள் அவனையே பார்த்திட...

“ஏய் அறிவில்ல உனக்கு... எங்களை ஏன் போட்டு இப்படிப் பாடாப் படுத்தறே பரிசம் போட்டாச்சு புள்ள உனக்கு. இப்படியா இங்க வந்து உள்ள குதிச்சு எங்களக் கொல்லாமக் கொல்லுவே? நட புள்ள...” என்று அவளை அவள் அண்ணன் இளங்கோ அதட்டி இழுத்துச் சென்றான்.

அவ்வளவையும் பார்த்தபடி அருணாவும் தனஞ் ஜெயனை அழைத்துச் சென்றாள்!

தனஞ்ஜெயன் வீட்டு வாசலிலேயே எல்லோரும் காத்துக் கொண்டிருந்தனர். குறிப்பாக சந்திரமௌலி! இருவரும் வரவும் ஓடி வந்தாள் நல்லம்மை.

“எங்கம்மா போய்ட்டீங்க? ஊர் பூரா ஒரே பேச்சாப் போச்சு. என் மகனுக்கு என்ன ஆச்சு?”

“தெரியலம்மா... பிரமை படிச்ச மாதிரி ஆயிட்டாரு. தலை ல அடிபட்டதுல சம்திங் பிராப்ளம் மாதிரி தெரியுது” என்றாள் அருணா. சந்திரமௌலி மட்டும் அதைக் கேட்டு “தாயே... அம்மா...” என்றார் மிகுந்த சிலிர்ப்புடன்!

23

‘தங்கள் மனதில் தோன்றிய கேள்வியை அந்தப் பக்கிரிச் சித்தரிடம் கேட்கவும் செய்தனர்.

"சாமி இப்படிப் பொதுவா இருக்க வேண்டிய ஒரு எந்திரத்தை ஒரு சன்யாசி நீங்க எதுக்கு வெச்சுக் கிட்டிருக்கீங்க?" என்று கேட்ட நொடி "உன்னைப் போல மனசு ஒடிஞ்சு போய் தற்கொலை வரை போயிட்டவங்களைத் தடுத்துக் காப்பாத்ததான்பா... இதைப் பயன்படுத்தி நான் அரையனா பெற்ற தில்லை...” என்றார் மிக வேகமாக.

"சரி காப்பாத்தறதுன்னு முடிவு பண்ணிக் கொடுக் கும்போது வேலை செய்த இந்த எந்திரம் இங்கேயே என்கிட்ட இருக்கக் கூடாதுங்கறது எந்த வகையில சாமி சரி?”

"நோயாளிக்குக் குணமாக மருந்து கொடுக்க றோம். மருந்து வேலை செய்து குணப்பாடு அடைஞ்ச உடனே மருந்தை நிறுத்திடணும். நோய் இல்லாத உடம்புக்குத் தொடர்ந்து சாப்பிடற மருந்தால ஒரு பயனுமில்லை. அதே சமயம் அளவுக்கு மிஞ்சின மருந்தே விஷமா

மாறவும் வாய்ப்புண்டு. அந்த மாதிரி தான் கஷ்டமும் தீர்ந்தது. திருப்பிக் கொடுத்துடுங் கறேன்..."

"சரி சாமி... இது பொதுவா ஒரு இடத்துல இருக்கறதுதான் நல்லதுன்னு சொன்ன நீங்க மட்டும் இதை வெச்சுக்கலாமா?"

"நான் பொதுவானவன்தானேப்பா? ஆறு, குளம், ஏரி, கோயில், சன்யாசி இந்த ஐந்து பேரும் உலகத் துக்குப் பொதுவானங்க. போதும் நீ கேள்வி கேட்டது. உன் ஆசையை அடக்கி முறையா உழைச்சுப் பிழைக்கப் பாரு. உடம்பை வளர்க்க உடம்பால உழைக்கணும். உழைக்காத உணவும் கசக்காத துணியும் ஒண்ணுன்னு சொல்வாங்க. உழை, பிழை நான் வரேன்” என்று அந்த எந்திரத்தோடு அவர் கிளம்பிவிட்டார்!"

அந்தத் தம்பதியிடமும் அதற்கு மேல் கேள்வி இல்லை. ஆனாலும் எந்திரங்களுக்குப் பின்னால் நடுநிலை யோடும் நம்பிக்கையோடும் சிந்திப்பவர்களுக்கு நிறையவே கேள்விகள் உள்ளன. அவைகளுக்கு விடை காண்போம்...”

*****

வீட்டிற்குள் நுழைந்திருந்த தனஞ்ஜெயன் பேசாமல் ஒரு மூலையில் சென்று அமர்ந்துவிட்டான். அவன் முழங் காலை மடக்கி அமர்ந்த விதமே ஒரு தினுசாக இருந்தது. அது நல்லம்மையையும் அருணாவையும் மிகவே பாதித்தது.

“தனா_ டேய் தனா_.” என்று கூப்பிட்டாள் நல்லம்மை. அவளை ஏறிட்டுப் பார்த்தான். ஆனால் தொடர்ந்து பார்க்காமல் என்ன என்றும் கேட்காமல் பார்வையை மேலே உத்தரம் நோக்கி உயர்த்தினான். சுந்தரம் பிள்ளை யும் அருணாவின் அப்பாவும் மௌனமாக என்னதான் செய்கிறான் பார்ப்போம் என்பது போல் கவனித்தபடி. இருந்தனர்.

தனஞ்ஜெயன் பார்த்த இடத்தில் சுவரில் ஒரு பல்லி. அதன் எதிரில் அது விழுங்கப்போவது தெரியாமல் சிறிய அத்துப் பூச்சி ஒன்று வந்து உட்கார்ந்திருந்தது. பல்லி அதை விழுங்கத் தயாராக இருந்தது.

“உம் விழுங்கு... பூச்சிக்குப் பல்லி வயிறுதான் மோட்சம். பல்லிக்குப் பாம்பு வயிறு மோட்சம். பாம்புக்குக் கழுகு வயிறு மோட்சம். கழுகுக்கு வேடன் வயிறு மோட்சம். வேடனுக்கு காலத்தோட வயிறுதான் மோட்சம்” என்று வரிசையாக சொல்லிக்கொண்டே போனான்.

அருணா கலக்கமாய் அப்பாவைப் பார்த்தாள்.

அவரோ சுந்தரம் பிள்ளையைப் பார்த்தார்.

சுந்தரம் பிள்ளை கண்களில் கலக்கத்தைக் காட்டி னார்.

மெல்ல அருகில் வந்தார் சந்திரமௌலி. இடுப்பு வேட்டி மடிப்பில் இருந்து ஒரு சுருக்குப் பையை எடுத்தார். அதில் தேவியின் அர்ச்சனைக் குங்குமம்!

ஒரு கீறல் அளவை தனஞ்ஜெயன் நெற்றியில் இட்டார். பின் எல்லோரையும் பார்த்துப் பேசத் தொடங்கினார்.

“யாரும் பயமோ பதற்றமோ கொள்ளத் தேவையில்லை. தனஞ்ஜெயன் வரையில் இப்ப ஜென்மப் பிரக்ஞை ஏற்பட்டதாத்தான் நான் நினைக்கறேன். ஒருவருடைய சித்தம் எப்ப எப்படி விழிக்கும்னு சொல்ல முடியாது. அதுக்கு நிறைய உதாரணங்களையும் சொல்ல முடியும். ஜாலமர்னு ஒரு முனிவர் ஆத்துல குளிச்சிட்டு வரும் போது அவரை வழியில் ஒரு யானை துரத்தத் தொடங்கியது. அப்ப ஒரு கிணத்துல போய் விழுந்து அதுல மூழ்கும்போது அவருடைய ஆழ்மனசுல ஒரு விழிப்பு ஏற்பட்டு இதே போல அவர் எப்பவோ மூழ்கியது போன்ற ஒரு நினைவு தோன்றி அது வளர்ந்து வளர்ந்து அவருடைய முன்ஜென்ம நினைவுகள் முழுவதையும் அவருக்கு ஏற் படுத்தியதாம்.

அதே போல விபத்துல இறந்துட்ட நண்பன் ஒருவனுடைய இறுதி யாத்திரைல பங்கெடுத்துக்கப் போன ஒருத்தன் அந்த நண்பனைப் பார்த்தப்போ நண்பனோட கண்ணிரண்டும் திறந்தே இருந்தது. கண் வழியா உயிர் போயிருந்ததுதான் காரணம். அப்படிப் பார்க்கும்போது பினமாக இருந்தும் தன்னையே வெறித்துப் பார்ப்பது போல் உணர்ந்தவருக்குள்ளும் அகவிழிப்பு ஒரு பொறி தட்டினது போல ஏற்பட்டது. அவருடைய முன் ஜென்மத்துல அவரை அவருடைய குருநாதர் பார்வையாலேயே கண்டிச்சு வழி நடத்தியிருந்தார்.

அது ஆழ்மனசுல பதிஞ்சு ரத்தத்துல கலந்தது, அதன் ஒட்டத்தால் உருவாகற சுக்லத்துல பதிவாகி அந்த சுக்லம் வழியாப் பிறக்கும் பிள்ளை உடம்புலேயும் ஏறிடிச்சு.

அதுக்கப்புறம் அந்தப் பிள்ளை கிட்ட இருந்து அடுத்த பிள்ளை, அந்த அடுத்த பிள்ளைகிட்ட இருந்தும் அதற் கடுத்த பிள்ளைன்னு ஏழு பிள்ளைகள் வரை அந்த பதிவு துளியும் சிதிலமாகாம பயணிச்சது.

ஏழாவது பதிவுல முதல்ல உள்வாங்கினவரே இந்த நிலையில் மறுஜென்மம் காண அந்த ஏழாவது பதிவுக்குரிய உடம்புல உயிராப் புகுந்தார். உடம்பு பதிவுகளோட தொடர்ந்து வந்தது உயிர் அந்த பதிவுள்ள உடல் பிண்டமா தாய் வயித்தில் இருக்கும்போது.பற்றிக்கொண்டது.

இப்ப உடம்பும் உயிரும் ஏழு தலைமுறையைக் கடந்து திரும்ப வந்தாச்சு. இடையில் உருவங்கள் மட்டும்தான் மாறியது. அதுக்குக் காரணம் அந்த ஏழுதலைமுறையிலும் ஏழு வேறுபட்ட பெண்கள் கூட கூடியதாலேயும் அந்தப் பெண்ணுகளுடைய சுக்லாம்சமும் கலந்ததாலேயும் அதற்குத் தகுந்த உருவம் ஏற்பட்டது. ஆனால், உள்ளே சுக்லப் பதிவில் பதிவாகியிருந்த காட்சியும் சத்தமும் சிதையாம அந்த உடம்புக்குள் பயணித்தது.

இப்படித்தான் பூர்வஜென்மம் ஏற்படுது. இதை ஜாதகக் கட்டத்தைப் பார்த்தும் உணர கணக்குப் போடத் தெரியணும்.

இந்த அடிப்படைலதான் ஒரு உயிரானது புல்லாப் பிறக்கறதுல இருந்து மனுஷனாப் பிறக்கறதுவரை நடக் குது. ஒரு உயிர் என்பது ஸ்தூலம், சூட்சுமம்னு இரண்டைச் கொண்டது. ஸ்தூலம்தான் உடம்பு. சூட்சுமம்ங்கறது மனசு அதாவது சத்தம். இதைத்தான் ஆங்கிலத்தில் லைட் அண்ட் சவுண்டுன்னு சொல்வாங்க. ஒலி ஒளி

ஒளிலதான் உருவம் தெரியும். அந்த உருவத்தாலதான் ஒலியை உருவாக்க முடியும். இதுல ஒலி அழியறதே யில்லை. அதை எவ்வளவு காலத்துக்கும் பாதுகாக்க முடியும். அதனாலதான் மகாத்மா காந்தி பேசின பேச் செல்லாம் அப்படியே இருந்து இப்பவும் நம்மால கேட்க முடியுது. ஆனா உடம்பு மண்ணாவும் நெருப்பாவும் ஆயிடுது. புதைச்சா மண், எரிச்சா நெருப்பு. எரியற நெருப்பு எப்பவும் மேல் நோக்கி வான் நோக்கித்தான் எரியும். அதுல எரியற உடம்புக்குரிய ஆன்மா அதாவது உடம்புல சத்தமா வாழ்ந்த மனசும் ஆகாயத்துல போய் கலந்துடுது.

இப்படி நம்ம உடம்புக்கும் உயிருக்கும் பின்னால நிறைய புரிஞ்சுக்க வேண்டிய சங்கதிகள் இருக்கு” என்று சந்திரமௌலி அளித்த விளக்கம் அவ்வளவு பேரையும் கட்டிப் போட்டுவிட்டிருந்தது.

அருணாவுக்கு அவர் பேச்சு புரியவே இல்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிந்ததது. தனஞ்ஜெயன் இயல் பான இளைஞன் இல்லை.

அவனை விழுந்து விழுந்து காதலித்த விஜியாலேயே அவனை எதுவும்

செய்ய முடியாத போது தன்னால் மட்டும் என்ன செய்ய முடியும்? அவளுக்குள் பயம் தோன்றத் தொடங்கியது. விஜியும் இப்போது எப்படி இருப்பாளோ? என்ற கேள்வியும் அவளுக்குள் விசுவரூபம் எடுத்து நிற்கத் தொடங்கியது.

தனசேகரன், வீட்டு முற்றத்தில் கிடந்த நாற்காலியில் நிற்க முடியாதவர் போல விழுந்து கிடந்தார். நல்ல வேளை இரவு நேரம். பகலாக இருந்திருந்தால் ஊரே திரண்டு வந்து துக்கம் விசாரிப்பது போல விசாரித்துக் கொண்டிருப்பார் கள். டாக்டர் வந்து விஜியின் காயங்களுக்கு மருந்து போட்டு ஊசியும் போட்டுவிட்டுப் போயிருந்தார்.

ஒரு அறைக்குள் படுக்கையில் கிடந்தாள் விஜி. அறைக்கு வெளியே தவிப்போடு நடந்து கொண்டிருந்தான் இளங்கோ. யாரும் எதிர்பார்க்காதது போல விஜிக்கு நிச்சயம் செய்யப்பட்டிருந்த மாப்பிள்ளை காரில் வந்து இறங்கியிருந்தான்! சட்டையின் மேல் பட்டன்கள் அவிழ்ந் திருக்க, வேட்டியை ஒரு மாதிரி தூக்கிப் பிடித்தபடி அவன் வீட்டினுள் நுழைந்த கோலமே அலாதியாக இருந்தது.

தனசேகரனும் இளங்கோவும் அவனைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவேயில்லை.

“வாங்க மாப்ளை...”

“மாப்ளைதானே, அதுல மாத்தமில்லையே?”

“அய்யோ, என்ன பேசறிங்க”

“இல்ல... விஜி மலைல உடும்புப் பள்ளத்துல இறங்கிட்டான்ன உடனேயே பரிசம் போட்டதெல்லாம் வெட்டியாப் போச்சோன்னு நினைச்சேன்.”

"அய்யோ மாப்ள... விளையாட்டா மேலே போனவ கால் தடுக்கி பள்ளத்துல விழுந்துட்டா. அம்புட்டுத்தான் விசயம்...”

“அதுக்கு மேலேயே இருந்தாலும் எனக்கு கவலை இல்லை. விTதான் என் பொஞ்சாதிங்கறதுல நான் தெளிவா இருக்கேன்.”

“உங்களுக்கு யார் மாப்ளை தகவல் சொன்னது?”

“நோக்கியா செல்போன்தான். இந்த எழவெடுத்தது எப்ப பொட்டிக் கடைலெல்லாம் விக்க ஆரம்பிச்சிச்சோ அப்ப இருந்தே பம்பாய், டெல்லி, கல்கத்தாவே கூடப் பக்கத்துத் தெரு மாதிரிதானே மாமா?”

“உங்களுக்கு யார் மாப்ளை போன்ல சொன்னது?”

“அது எதுக்கு மாமா? விஜி என் பொண்டாட்டிங் கறதுல நீங்க மாறாம இருந்தா சரி...”

“மாப்ள...” என்று கை கூப்பியபடியே கண்கலங்கத் தொடங்கினார் தனசேகரன். இளங்கோவும் வந்து கைப் பிடித்து நன்றியைக் கண்களில் காட்டினான். ஆனால் தேவகிக்கு சுத்தமாய்ப் பிடிக்கவில்லை.

அப்போதுதான் அவளுக்கு அவன் ஒரு நல்ல பையனே இல்லை என்பது போல் தோன்றத் தொடங்கியது. அப்படியே படுக்கையில் கிடக்கும் விஜியைப் பார்த்தாள். அவளை ஒரு பாவியாக மட்டுமே அவளால் பார்க்க முடிந்தது.

***

அருணாவும் அவள் அப்பாவும் புறப்பட்டுவிட்டிருந் தனர். சில மணி நேரங்கள் முன் பேசிய அந்த கல்யாணப் பேச்செல்லாம் நொறுங்கிய அப்பளம் போல் ஆகிவிட் டிருந்தது.

“அருணா, தம்பி நல்ல புள்ளதான் ஆனா புருஷன்ங் கற உறவுக்கு ஒத்து வருவானான்னு சொல்ல முடியல” என்று அவர் சொன்னதும் அழுதபடி நியாயம் கேட்ட விஜியும் அருணாவை விலகிவிடச் செய்திருந்தார்கள்.

உறவுக்கு வழியில்லை என்றான உடனேயே அந்த வீடு மிக அந்நியமாகிவிட்டது அவர்களுக்கு.

"அப்ப நாங்க கிளம்பறோம். பையன் ஒரு நிதானத் துக்கு வரட்டும். பிறகு பாத்துக்கலாம்” என்றபடியே அருணாவும் அவள் அப்பா கல்யாணசுந்தரமும் புறப்பட்டு விட்டனர்.

சந்திரமௌலி அவர்களிடம் “நீங்க கிளம்புங்க என் வரைல இப்ப தனஞ்ஜெயன் ஒரு அம்பாள் உபாசகன்” என்று கூறியதுதான் ஆச்சரியம்.

தனஞ்ஜெயன் அந்த மடித்த முட்டியும் மோட்டு வளைப் பார்வையுமாய் அப்படியே இருந்தான். பல்லிக்கு அந்துப் பூச்சி உணவாகி முடிந்திருந்தது. பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தி “யக்கா யக்கா, எங்கம்மா உங்ககிட்ட மண்டவெல்லம் இருந்தாக் கொஞ்சம் கேட்டாங்க...” என்றபடி வந்தாள். அவளுக்கு மிகவே இள வயது. அவள் கால்களிலும் சதங்கை.

அந்த சதங்கை சப்தம் தனஞ்ஜெயனைச் சட்டென்று கலைத்துத் திரும்பிப் பார்க்க வைத்தது.

அவன் மனதுக்குள்ளேயும் மீண்டும் பூர்வஜென்மத்தின் தாக்கம்!

***

ஜல் ஜல் ஜல..!

சக்திபுரத்து வில்வண்டி மாடுகளின் கழுத்து மணி சப்தம் அது. உள்ளே தாசி ராஜமோகினி. வண்டிக்கு முன்னே இரு புறமும் இரு சாவடி வீரர்கள் கையில் வேல் கம்புடன் 'ஒரம்... ஒரம்... தேவதாசியார் பராக்... ஒரம்.. ஒரம்...' என்று குரல் கொடுத்தபடி சென்று கொண்டிருந்தனர். சக்திபுரத்துத் தெருவே சத்தம் கேட்டு வீட்டு வாசலுக்கு வந்து வில் வண்டியில் வந்தபடி இருக்கும் ராஜமோகினியைப் பார்க்க ஆவலாக நின்று கொண்டிருந்தது.

ஒரு இளம்பெண் தன் வீட்டு வாசலில் கையில் அகல் விளக்கு எரிய வந்து நிற்கவும் அதைப் பார்த்து வண்டி யோட்டி வண்டியைத் தேக்கி நிறுத்தினாள்.

தன் முகத்துக்குப் பின்னால் உள்ள திரைச்சீலையை விலக்கி உள்பக்கமாய்ப் பாத்து "அம்மா பிராதும்மா..." என்றான்.

"வரச்சொல்" என்றபடியே தன் பின் உள்ள திரைச் சீலையை விலக்கிப் பார்த்தாள். அந்த இளம்பென் அகல்விளக்குடன் அவள் முன் வந்து நின்றாள்.

"என்ன உன் பிரச்னை?"

"எனக்கு நிச்சயம் முடிஞ்சிடிச்சு. ஆனா, அந்த மாப்ளை மயிலாடுதுறைல ஒரு பெண்ணெடுத்துட்டார்னு தகவல். என் வாழ்க்கைக்கு ஒரு வழி தெரியணும்மா"

"தலையாரிகிட்ட பிராது கொடுத்துட்டியா?"

"அவர் விட்டுடச் சொல்றார்"

"அப்படியா சொன்னார்?"

"ஆமாம்..."

"சரி. நீ வெள்ளிக்கிழமை மண்டப நீதிக் கூட்டத்துக்கு வா. நான்

பேசிக்கறேன்.”

திரும்பவும் அவளது வண்டி ஓடி ஆரம்பித்தது. “இந்த ஆண்கள் ஏன் இப்படி வண்டுகளாகவே இருக்கிறார்கள்” அவளுக்குள் சலனம். வண்டியும் சக்திபுரம் லலிதாம்பிகை பின் திருக்கோயிலுக்குள் நுழைந்தது.

வண்டியைப் பார்த்த உடன் நாதஸ்வர வித்வான் வாசிக்கத் தொடங்கி விட்டார். நாதஸ்வர சத்தம் கேட்டு பட்டரும் சன்னதிக்குள் இருந்து வெளியில் வந்தார். கையில பூர்ண கும்பம்! வில் வண்டியை விட்டு ராஜ மோகினி இறங்கி நடந்துவரும்போது இரு மருங்கிலும் வட்டாரப் பெரியவர்கள், அதில் குறுநில அரசர்களும் இருந்து ராஜமோகினி நடந்து வருகையில் அவள் காலடிக்கு மலர் தூவினார்கள்.

பலர் அவளை ‘என்னை ஏறெடுத்துப் பார்க்க மாட்டாயா?’ என்பது போலப் பார்த்தார்கள். அவளோ நேராக சன்னதி நோக்கிக் குவிந்த கைகளுடன் நடந்தாள்.

ஊர் ஜனங்களும் திரண்டிருந்தனர். ராஜமோகினி வரவும் ஆர்ப்பரித்தனர். வயதுக்கு வந்திருந்த பெண் ணொருத்தி மல்லிகைப்பூச் செண்டை ராஜமோகினியிடம் தந்து காலில் விழுந்து எழுந்தாள்.

அவள் கழுத்தில் ராஜமோகினி தான் அணிந்திருந்த மாலை ஒன்றை கழற்றி அணிவித்தாள். தொடர்ந்து நடந்த விரலி நாட்டியம் கற்கும் பெண்கள் சிலர் சாஸ்த்ர வணக்கம் செய்தனர். ஏற்றுக்கொண்டாள். அந்தக் கூட்டத்தில் ஒரு சந்நியாசியும் இருந்தார். விபூதி, நெற்றியில் குங்குமப் பொட்டு பெரிதாக இருந்தது. அது அவர் ஒரு சக்திதாசர் என்று சொல்லாமல் சொன்னது. அவர் மட்டும் அவளை வணங்காமல் ஆசீர்வாதம் செய்தார். அவளும் "சுவாமிகளை நான் அறியலாமோ?” என்று கேட்டாள்.

“பூஜா வழிபாடுகள் முடியட்டும் பேசுவோம்”

“உத்தரவு...”

என்றபடி கருவறைக்குள் கால் வைத்தாள் ராஜ மோகினி. இந்த நாளில்தான் பட்டர்கள் மட்டும் உள் நுழையலாம் எனும் திருத்தப்பட்ட விதி. அன்று கோவில் தாசிக்குத்தான் முன்னுரிமை. அவள்தான் ஊருக்கும் தாய் தாசி அல்ல!

உள்ளே கருவறையில் லலிதாம்பிகையின் திரு உருவச்சிலைக்கு

முன்னாலே குங்கும மலர் அர்ச்சனையில் மூழ்கிய நிலையில் மகா மேருவுடன் பிந்துவில் சந்தனப் பொட்டுடன் கம்பீரமாய் காட்சி தந்து கொண்டிருந்தது அந்த எந்திரம்!

24

எந்திரங்களைப் புரிந்து ஏற்றுக்கொள்ள அறிவு மட்டும் போதாது. அதற்கு அப்பாற்பட்ட ஞானமும் வேண்டும். ஏன் என்றால் அறிவு என்பது ஒவ் வொருவருக்குப் பின்னாலும் அவரது முயற்சி, வாசிப்பு, அனுபவம் என்கிற அளவிற்கேற்ப அமைவது. அறிவு வளர்ச்சிக்கு ஒரு அளவோ எல்லையோ கிடையாது. இறக்கும் தருவாயில் கூட ஒருவர் அறிந்துகொள்ள நிறைய சங்கதிகள் இந்த உலகில் இருந்தபடி இருக்கும். இதை வைத்தே நமது சான்றோர் 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்று கூறிச் சென்றனர்.

ஆனால் ஒரு மனிதனைப் பொறுத்தவரை அது ஒரு எல்லையோடு நின்று விடுகிறது. அந்த எல்லையும் கூட ஆளுக்கு ஆள் மாறுபடும். இந்த அறிவுக்கு அறிய முடிவதே கணக்கு. புலன்களுக்குப் புலனாவதையே இது ஏற்கும்.

அதே சமயம் அறிவால் அறியவும் உணரவும் முடிவதற்கு ஒரு எல்லை உண்டு என்கிற உண்மை எவர் ஒருவருக்குப் புரியத் தொடங்குகிறதோ அங்கேதான் ஞானம் உள்ளவர்களே 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்னும் பேருண்மையை உலகிற்குச் சொல் வார்கள்.

நாம் எவ்வளவு முயன்றாலும் ஒரு அளவுக்கு மேல் கற்க முடியாது என்கின்ற உண்மையோடு இந்தப் பிரபஞ்சத்தில் நாம் ஒரு தூசு என்கிற உண்மையையும் ஒருவர் உணர்தல் முக்கியம். தூசு என்கிற வார்த்தை இங்கே தாழ்த்திக் கொள்வதற்காக சொல்லப்படுவதல்ல. அதுதான் உண்மை!

ஒரு தூசாக இருக்கும் நாம் தான் இந்த உலகத்தை விளங்கிக்கொள்ள முயல்கிறோம். நம்மைப் போல பல தூசுகளும் விளங்கிக்கொள்ள முயன்றிருப் பார்கள். அவர்கள் சொன்னதை எல்லாம் நாம் பரிசீலிக்க வேண்டும். அப்போது நமது தேடலும் குறையும். நாம் அறிவதும் அதிகரிக்கும். இதை உணர்ந்து செயல் படுவதுதான் பகுத்தறிவு. இன்றைய விஞ்ஞானம் இப்படித்தான் வளர்ச்சியைக் கண்டுவருகிறது. ஏற் கெனவே கண்டுபிடிக்கப்பட்ட ஒன்றுக்குள் அது மேலும் மேலும் புதுமைகளையும் மேன்மைகளையும் உருவாக்கி வருகிறது.

ஆதியிலிருந்தே ஒவ்வொருவரும் ஒன்றைக் கண்டறிய வேண்டும் என்றால் எந்த ஒரு கண்டுபிடிப்பும் முழுமை அடைந்திருக்காது.

விஞ்ஞானம் புலன் சார்ந்தவைகளுக்கு மிகுந்த பயன் தருகிறது. அந்தப் பயன்தான் மனதுக்குள் மகிழ்ச்சியாக மாறுகிறது. அதே சமயம் எந்த நிலை யிலும் விஞ்ஞானம் அணுகியிராத, அணுக முடியாத சங்கதிகளும் இந்த உலகில் இருப்பதுதான் விந்தை. உடம்புக்குள் உயிர் எங்கே இருக்கிறது? உடம்பை விட்டுச் சென்ற பிறகு அது என்னவாகிறது? என்பது போன்ற கேள்விகளில இருந்து மனதை வாட்டும் பல துக்கங்கள், மகிழ்ச்சிகள் நிலையின்றி **LbT gDi** வதற்குப் பின்னால் எந்தக் காரணி உள்ளது போன்ற பல கேள்விகளுக்கு விஞ்ஞானத்திடம் தெளிவான விடை இல்லை. அங்கு ஆன்மிகத்திடம்தான் விடை இருக் கிறது. விஞ்ஞானத்தை அணுக அறிவு தேவை, ஆன்மிக மான மெய்ஞ்ஞானத்தை அணுக ஞானம் தேவைப்படு கிறது. அறிவால் எந்திரத்தை விளக்க முற்படும்போது நிறைய லாஜிக் முரண்பாடுகளும் கேள்விகளும் தோன்றுகின்றன. ஞானத்தால் இந்த முரணையும் லாஜிக்கையும் கடந்துவிடலாம்.

*****

கம்பீரமாய்க் காட்சி தந்த எந்திரத்தைப் பார்த்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றாள் ராஜமோகினி, பட்டரும் தன் நித்ய அர்ச்சனையைத் தொடங்கினார்.

வெள்ளித்தட்டில் மஞ்சள் குங்குமம் எடுத்து அதைக் கொண்டு லலிதா சஹஸ்ரநாமத்தைச் சொல்லி மஞ்சள் குங்குமத்தாலே அர்ச்சனை செய்யத் தொடங்கினார்.

அந்த எந்திரம் ஒரடி அகலமும் இரண்டடி உயரமும் உடையதாக இருந்தது. மலை ஏற படிகள் இருப்பது போல அந்த எந்திரத்தின் உச்சியிலுள்ள பிந்து பாகத்தை அடைய அடுக்கடுக்காய் தளங்கள்! சாக்த சூத்திரப்படி பார்த்தால் அந்த எந்திரம் ஒரு சக்திக் கோட்டை ஆதி சக்தியாகிய அந்த பராசக்தி அதில்தான் உறைந்திருக்கிறாள். பிந்து வில்தான் அவள் சிம்மாசனம் உள்ளது. அதன்மேல் சிம்ம வாஹினியாக அவள் சேவை சாதிக்கிறாள். கீழே தாமரை இதழ் விரித்தாற்போல் முதல் தளம். அதிலேயிருந்து அடுத்த தளத்திற்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு தளமுமே ஒரு கோட்டைக்குள் நுழைந்து அரண்மனை மைய மண்டபத்தை நோக்கி நாம் செல்வது போன்றது.

ஒவ்வொரு தளத்திலும் சக்தி அம்சங்களான மோகினி கள் இருந்து

காவல் காப்பதோடு சாதகனை அவர்களே கைதுரக்கி தங்கள் ஆசிகளோடு அடுத்தடுத்த தளங்களுக்குக் கொண்டு சேர்ப்பார்கள். இறுதியாக அம்பிகையை பிந்துஸ்தானத்தில் தரிசனம் செய்து அவளோடு கலந்து விடுவதேசாக்தமுக்தி.

வரலாற்றில் அதற்கு எவ்வளவோ உதாரணங்கள். இறுதியாக உலகமே அறியும் வண்ணம். அந்த ஆதி சக்தியை அடைந்தவர் அபிராமி பட்டர். அவரது வழித் தோன்றல்களில் வந்தவர்தான் அந்த ஆலயபட்டரும்.

அவரது அர்ச்சனைக் குரல் சூழ்ந்திருப்பவர்கள் அவ்வளவு பேரையும் ஒடுக்கிய நிலையில் சன்னதி முன்னால் நின்று கைகூப்பி தரிசித்தபடி இருந்த சன்னி யாசியின் பார்வை மட்டும் அந்த எந்திரத்தின் மேலேயே இருந்தது. இமைக்காத பார்வை... இதை அவ்வப்போது ராஜமோகினியும் கவனித்தாள்.

உரிய வேளையில் பட்டரும் அர்ச்சனை முடிந்து கற்பூர ஆரத்தியைக் காட்டத் தொடங்கினார். முதல் ஆரத்தி ராஜமோகினிக்கே. கண்களில் ஒற்றிக் கொண் டாள் அந்தக் கனலை. அந்த நொடியில் ராஜராஜேஸ்வரி யானவள் அந்தக் கனலுக்குள்தான் இருக்கிறாள். ஒளியைக் கண்கள் கண்டும், இளம் சூட்டைக் கைகள் உணர்ந்தும் அவளை ஏற்க வேண்டும். எல்லோரிடமும் ஆரத்தியானது செல்லத் தொடங்க எந்திரத்தின் மீதிருந்த அர்ச்சனைக் குங்குமத்தை குனிந்து தன் கைகளால் எடுத்தாள் ராஜ மோகினி.

அந்த நொடியில் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. அப்படியே குங்குமத்துடன் வெளியே வந்தவள் முன் அந்தக் குங்குமத்திற்காக எல்லோரும் கையை நீட்டினர். சில தாய்மார்கள் தங்கள் மகள் நெற்றியில் அவள் கையாலேயே குங்குமப்பொட்டை வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். அப்படி அவள் வைத்துவிட்டால் அவர் களுக்கெல்லாம் விரைவில் திருமணம் ஆவதுடன் வரும் மாப்பிள்ளையும் கண் நிறைந்த கணவனாக இருப்பான் என்பது அவர்களது நம்பிக்கை.

ஆனால் அன்று அந்தக் குங்குமத்தை அவள் யாருக்கும் கொடுத்துவிடாதபடி தடுப்பது போல பேச முற்பட்டார் அந்த சன்யாசி.

“தாயே... அதை தயவு செய்து நீயே வைத்துக் கொள்.”

“சுவாமி... என்ன சொல்கிறீர்கள்?”

“தயவு செய்து இந்த சக்தி உபாசகன் சொல்வதை கேள். இதை நீயே

வைத்துக்கொள். இதை மட்டுமல்ல. நீ பாதுகாக்க வேண்டியது இன்னமும் எவ்வளவோ உள்ளது" அவர் பேச்சு புதிராக இருந்தது. கூட்டத்தவரும் அதிர்ச்சியோடு பார்த்தனர்.

"உன்னோடு நான் சற்று தனிமையில் பேச வேண்டும் வருவாயா?" அவர் வெளியே உள்ள நீதிமண்டபம் நோக்கி நடந்தார். ராஜமோகினியும் பின் தொடர்ந்தாள். கலீர் கலீர் என்று சப்தித்தது, அவளது கால் கொலுசு, அப் பொழுதுதான் கோவிலுக்குள் நுழைந்து கொண்டிருந்தான் ராஜமோகினி பெரிதும் மோகிக்கும் அந்த சக்தி உபாசகன். அவனை பார்க்கவும் சற்று தேங்கி நின்று சிரித்தாள். அவனோ முகத்தை திருப்பிக் கொண்டான். அவளுக்கும் புரிந்தது. வருத்தமாகிவிட்டது. இருந்தும் அதை வெளிக் காட்டாமல் நடந்து நீதி மண்டபத்தை அடைந்தாள். அந்த மண்டபத்தில் அமர்ந்துதான் அவள் ஊரிலுள்ளோர் குறைகளைக் கேட்பாள். தலையாரி முதல் ஊர்க் காவலர் களை எல்லாமும் அழைத்து அந்தக் குறைகளை நிவர்த்தி செய்யச் சொல்லுவாள். அப்படி ஒரு மண்டபத்தில் அவள் அமரும் இடத்தில் அந்த சன்யாசி அமர்ந்திருக்க ராஜ மோகினி அருகில் போய் நின்றாள். மற்றவர்கள் எட்டவே நின்றுவிட சன்யாசி பேசத் தொடங்கினார்.

"தாயே... இப்போது நான் சொல்வதை கவனமாக் கேட்டுக்கொள். இந்த ஆலயத்தில் உள்ள ஸ்ரீ எந்திரம் பற்றியே இப்போது நான் கூறப் போகிறேன். இது சாதாரண எந்திரமல்ல. இதை வடிவமைத்தவன் மயன். இவன் தேவர் உலகை சேர்ந்தவன். அந்த ஆதிசக்தியை சக்தியாக மட்டுமே காண விரும்பினார் குரூரர் என்னும் ஒரு மகரிஷி. அவரது விருப்பத்தை ஏற்று அந்த எந்தி ரத்தைக் குரூரர் வடிவமைத்து தந்த அளவில் மயன் இதைச் செய்தான். ஐம்பொன்னைக் கொண்டு மயன் செய்த இந்த எந்திரம் குரூரரால் வெகு காலம் பூஜிக்கப்பட்டது. அந்த சக்தியை உருவமாகப் பார்த்து வழிபடுவது ஒருவிதம். எந்திரமாக வழிபடுவது இன்னொரு விதம். உருவத்தை பார்க்கும்பொழுது ஒரு கணக்கிற்கு உட்படாத உணர்வு ஏற்படும். பக்தி புரிவோர் பாவனையைப் பொறுத்து உணர்வுகள் ஏற்பட்டபடியே இருக்கும்."

ஆனால் எந்திரத்திடம் ஒரு திட்டமும் கணக்கும் உண்டு. இதற்கென்று முறைகளும் உண்டு. எண்ணும் எழுத்துமாய் இருப்பவள் அவள். அதில் உருவங்களாகிய அவள் தோற்றங்கள் எழுத்தைப் போன்றது. எந்திரமோ எண்ணை உடையது. இதில் எல்லாமே கணக்குதான். இவ்வளவுதான் கோணம், இவ்வளவு தான் உயரம் என்று ஒவ்வொன்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிர்ணயம் துளி பிசகினாலும் இந்த

எந்திரம் உருப்பெற முடியாது. அப்படி செய்யப்பட்ட இந்த எந்திரத்தை வணங்கி வழி பட்டு குறிப்பிட்ட மந்திரத்தின் சப்த அலைகளால் இதை இயக்கவும் செய்தார் குரூரர்.

இது இயங்குவதிலும் இரண்டு விதங்கள் உள்ளன. ஆக்கம் ஒரு விதம். அழிவு இன்னொரு விதம். சக்தியாகிய ஆயுதம் கொண்டு தாக்க வரும் மிருகங்களைக் கொன்று நம்மைக் காத்துக்கொள்வது போன்றது ஆக்கசக்தி. அதே சக்தியால் கொலைகாரனாகி எல்லோரையும் கொல்ல விழையும்போது அது அழிவு சக்தியாகி விடுகிறது. இதில் சக்திக்கு எந்தப் பாவ புண்ணியமும் இல்லை. அதைப் பயன்படுத்துபவர்களையே பாவபுண்ணியம் சென்று சேரும்.

சக்திக் கோட்டையான இந்த எந்திரமும் இம்மட்டில் சக்தியைப் போன்றதே! இதை நலத்திற்கும் நல்லதிற்கும் மட்டுமே பயன்படுத்துவது ஒரு விதம், தவறுக்கு எக் காரணம் கொண்டும் பயன்படுத்திவிடக்கூடாது. இதைக் கொண்டு குரூரர் நல்லதையே உலகிற்கு அளித்தார். தன் காலத்திற்குப் பிறகு இதை இந்த சக்திபுர ஆலயத்திற்கு அளித்துவிட்டார்.” என்று அந்த சன்யாசி சொன்ன தகவல்கள் ராஜமோகினியை வெகுவாக யோசிக்க வைத்தன.

“சுவாமி... இதைத் தாங்கள் என்னிடம் இப்போது கூறிடக் காரணம்?”

“இருக்கிறதம்மா... இதை நீ பயன்படுத்தக் கற்றுக் கொண்டால் இந்த உலகத்திற்குப் பல நன்மைகளை ஏற்படுத்தலாம்...”

“பயன்படுத்துவது என்றால். எனக்குப் புரியவில்லை...”

“இதைப் பயன்படுத்துவது என்றால் இதன் முன்னால் முத்திரை வழிபாடு புரிந்து, உரிய மந்திரத்தை உரிய மாத்திரை அளவில் சொல்வது.”

"அப்படி செய்தால்?”

“மழை வேண்டும் என்றால் இந்த எந்திரம் மழை தரும். பொன் வேண்டும் பொன் தரும். அவ்வளவு ஏன்... இதைக் கொண்டு நீ சர்வ சித்திகளையும் அடைந்துவிடலாம்.”

“நிஜமாகவா?”

“நம்ப முடியவில்லை என்றால் இப்போதே நான் ஒரு மந்திரத்தை உபதேசிக்கிறேன். அந்த மந்திரத்தை நீ எந்திரத்தைத் தொட்டுக்கொண்டு நூற்று எட்டுமுறை கூறி விரல்களில் வருண

முத்திரை காட்டி வணங்கு. நீ வணங்கி விட்டு வந்த நொடியில் இருந்து மூணரை நாழிகைக்குள் இந்த ஊரின் மேல் மழை பொழியத் தொடங்கும். மீண்டும் நீ வழிபாடு புரிந்து நிறுத்தினால் மட்டுமே அந்த மழை நிற்கும்.”

அந்த சன்யாசி சொன்னது ராஜமோகினியை வெகுவாக சிந்திக்க வைத்தது. உண்மையில் அந்த ஆண்டு பருவ மழை தப்பிப்போய் ஊரின்ள ஊருணிகள் குளம் குட்டைகளில் துளி கூட தண்ணரே இல்லை. எனவே அந்த சன்யாசி கூறியபடி வருணமுத்திரை போட்டு எந்தி ரத்தைத் தொட்டுக்கொண்டு மழைக்குரிய மந்திரத்தைக் கூறத் தயாரானாள்.

அதைக் கூர்ந்து பார்த்தபடியே இருந்தான் இளம் சக்தி உபாசகன்!

***

மழைநீர் முகத்தில் பட்டு உடம்பெல்லாம் சிலீரிட்டது போல் ஒரு உணர்வு. பூர்வ நினைவுகளில் ஆழ்ந்து விட்டிருந்த தனஞ்ஜெயன்தான் அந்த நினைவுகள் கலைந்தவ னாக சுற்றி இருப்பவர்களை மலங்க மலங்க பார்த்தான். நல்லம் மை அவன் பார்க்கவும் வேகமாக அவனை நெருங்கியவளாக “தனா. என்னப்பா ஆச்சு. காத்து கீத்து அடிச்சிருச்சா? இப்படி தெரியாத மனுசங்களைப் பாக்கற மாதிரியே பாக்கறியேப்பா?” என்று கேட்டாள்.

“நீங்கள் யார்?’ அவன் அடுத்து அப்படிக் கேட்கவும் அவளுக்கு பகீரென்றது.

“உன் அம்மாடா...”

“அம்மாவா... நீங்களா..? என் தாய் பெயர் சுசீலை... அவள் ஒரு மாற்றுக் குறையாத தங்கம். நீங்கள் என் தாயில்லை...” அவனது பதிலால் நல்லம்மைக்கு கண்ணிரே கொட்டத் தொடங்கிவிட்டது.

25

எப்பொழுதும் ஒரு பேருண்மையை உணர வேண்டும் என்றால், திறந்த மனதோடும் துளியும் "அவ நம்பிக்கை"இன்றியும் அது தொடர்பான முன் எண்ணங் கள் இல்லாமலும் அந்த டண்மையை அணுக வேண்டும். அடுத்து எதை விளங்கிக்கொள்ள விரும்புகிறோமோ, அதற்கு ஏற்ற அணுகுமுறை என்று ஒன்று உள்ளது. அதற்கு மாறான

அணுகுமுறை என்று ஒன்று உள்ளது. அதற்கு மாறான அணுகுமுறைகள், தொடக்கமே தவறு என்று ஆக்கி விடும்.

சுத்தமான பாலை எடுத்துக்கொண்டு அதனுள் இருப்பதை ஆய்வு செய்ய விரும்பினால், அந்தப் பாலை சுத்தமான பாத்திரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது மிக முக்கியம். மாறாக ஈயப் பாத்திரத்திலும், தாமிரப் பாத்திரத்திலும், புதியதாக வினையப்பட்ட மண்பாண்டத்திலும் அந்தப் பாலை நாம் எடுக்கும் போது, அந்தப் பாத்திரத்தின் அமில குணமும், மண்ணின் குணமும் பாலில் ஏறி நாம் அறிய வேண்டிய உண்மையை அறிய முடியாதபடி செய்து விடும் இதை நாமும் அறிவோம்.

இதைப் போலத்தான் ஆன்மிக நுட்பமான விஷயங்களும்கூட! மிக உகந்த காரணங்கள் கருதியும் பொதுநலன் கருதியுமே ஆலயங்களில் கோபுரங்களை வடிவமைத்து, அதிலும் உச்சியில் கூர்மையான தாமரை மொட்டு போன்ற கலசத்தை நம் சான்றோர்கள் நிலை நிறுத்தினார்கள். அந்தக் கலசங்களையும் கூட தங்கத் திலோ இல்லை. ஐம்பொன்னிலோ தான் செய்தார்கள். கூர்மையான கலசத்தின் கூரிய பாகத்தின் வழியாக ஒரு கயிறை விட்டால், அது கீழே உள்ள இறை உருவத்தின் சிரசில் உள்ள கிரீடத்தின் கூரிய பாகத்தை வந்து தொட்டு நிற்கும். அப்படி ஒரு துல்லியமான நேர்க் கோட்டு ஓட்டம் அங்கே இருந்தது.

இறை உருவமோ கீழே ஒரு பீடத்தின்மேல் நிற்கிறது. அந்த பீடத்துக்குக் கீழேயும் எந்திரப் பிரதிஷ்டை என்று ஒன்று உள்ளது. இந்த எந்திரமும் அந்த இறை அம்சத்துக்கு ஏற்ற தன்மை கொண்ட ஒரு எந்திரமாகவே இருக்கும்.

ஒரு கோவில் எழுப்பி அங்கே இறை உருவத்தை நிலைநிறுத்தி வழிபாடு செய்யத் தொடங்குமுன், அதனுள் இப்படி எல்லாம் நுட்பமான விஷயங்கள் இருக்கவேண்டும் என்று எந்த ஒரு பக்தரும் சொன்ன தில்லை.

சொல்லப்போனால் ஆலயதரிசனம் புரியவரும் பலருக்கும், இந்த ஆலயம் பற்றி எல்லாம் தெரியவும் தெரியாது. அவர்கள் கண்களுக்குப் புலனாவது இறை உருவம் மட்டும்தான்! அதை அவர்கள் வணங்கிவிட்டு, போய்க்கொண்டே இருக்கப் போகிறார்கள்.

ஆனால், அப்படி வெறும் உருவத்தை நிலை நிறுத்துவதில் ஆற்றல் பெரிதாக ஏற்படுவதில்லை என்னும் பேருண்மையைக்

கண்டுகொண்டு, அதனுள் நுட்பமான வழிமுறைகளை உருவாக்கியே நம் சான்றோர்கள் ஆலயங்களை நிர்மாணம் செய்துள்ளனர். அதை ஆகம சாஸ்திரம் என்று கூறியபோதிலும், ஆகம விஞ்ஞானம் என்றும் கூறலாம். சொல்லப்போனால், ஆகம விஞ்ஞானம் என்பதே சரியான பதமாகும்!

*****

தனஞ்ஜெயன் நல்லம்மையை அம்மாவே இல்லை என்று சொன்னதைவிட, 'என் தாய் சுசீலை' என்றதுதான் நல்லம்மையை வெகுவாக பாதித்தது.

கண்ணீரோடு கணவனைப் பார்த்தாள்.

"ஏங்க இவன் மேல ஏதாவது காத்து கருப்பு ஏறிடிச்சுங்களா?" என்று கேட்டாள்.

"காத்து கருப்பு ஏறுனா இப்படியா பேசுவான்? இவன் பேசறத கேட்டேல்ல. ராசா காலத்து தமிழ் பாஷை! காத்து கருப்பு ஏறுனா காட்டுக்கத்து கக்தி கூப்பாடுதான் போடுவான்" என்று சற்று பலத்த குரலில் கூறினார் சுந்தரம்பிள்ளை.

"ஏதோ ஒண்ணு... நீங்க என்ன ஜோசியம் பாக்கறீங்களோ தெரியல... இவன் அப்படி இருக்கப் போறான். இப்படி இருக்கப் போறான்னு சொன்னீங்க... ஆனா, இப்படி கிறுக்கு பிடிக்கப் போவுதுன்னு சொன்னீங்களா?" என்று ஆவேசமாக அவர்மேல் பாய்ந்தாள் நல்லம்மை.

அதுவரை மௌனமாக இருந்த சந்திரமௌலி இடை யிடத் தொடங்கினார்.

"அம்மா, பதட்டப்படாதீங்க. நீங்க பயப்படற மாதிரி எதுவும் ஆயிடலை. உங்க பிள்ளையை, நீங்க ஆவி பிடிச்சவ னாவோ இல்லை சித்தம் கலங்கினவனாவோ நினைக்கத் தேவையில்லை. இவருக்கு ஏன் இப்படி ஆனதுங்கறத, இதோ இந்தப் பொட்டில இருக்கற ஏடுகளைப் பார்த்துக் கூட தெரிஞ்சிக்க முடியும். அப்படி தெரிஞ்சுக்கணும்கறத னாலதான் இது இங்கேயும் வந்துருக்கு. அழகர் மலை காட்டுல இருந்த நானும் இங்க வந்துருக்கேன். அருணா கல்யாணசுந்தரம் இவங்கல்லாம் வந்துட்டுப் போன தெல்லாமும் ஒரு கணக்கும்மா. அந்தப் பெண் வராம போயிருந்தா, இவர் மலைப்பக்கம் போயிருக்கவே போறதில்லை. அங்க

போய் இவர் தலைல தாக்கம் எற்படனும்கறதும் ஒரு விதி!

ஒரு ரயில் எப்படி தண்டவாளத்துல அதைவிட்டு விலகாம ஓடி ஊர்களை அடையுதோ அப்படிதான் இந்த விஷயங்களும். ஆகையால் நீங்க மனதைப் போட்டு குழம்பிக்காம தைரியமா இருங்க" என்றார்.

சுந்தரம் பிள்ளைக்கும் அதுதான் சரி என்று தோன்றியது.

‘‘சாமி, உங்களுக்கு ஏட்டுத் தமிழைப் படிக்கத் தெரியுமா?" என்றும் கேட்டார்.

"ஆஹா... அது ஒரு தனிக் கலையாச்சே! நான் அதுக்காகவே பயிற்சி எடுத்தவன்..." சந்திரமௌலியின் பதில் சுந்தரம் பிள்ளைக்கு சற்று அதிர்ச்சியாகக் கூட இருந்தது.

"நீங்க எதுக்கு சாமி பயிற்சி எடுக்கணும். இது பரம்பரை விஷயம். தப்பித்தவறி கூட வள்ளுவக்குடி அல்லாதவருக்கு சொல்லித்தர மாட்டாங்களே..."

சுந்தரம்பிள்ளை அதிர்ச்சியோடு கேட்டதோடு கலக்கமாகவும் சந்திரமௌலியைப் பார்த்தார். சந்திர மௌலிக்கும் தர்ம சங்கடமாகிவிட்டது.

"ஐயா! நீங்க அந்த காலத்து மனுஷனாகவே இருக் கீங்களே. இன்னிக்கு எல்லாரும் எல்லாத்தையும் கத்துக் கலாம். ஆர்வம்தான் கணக்கு. அதுலயும் நான் ஒரு சக்தி உபாசகன். கிட்டத்தட்ட சன்யாசி! எனக்கு சொல்லித் தர மறுப்பாங்களா?"

"நிச்சயம் மறுப்பாங்க. சில விஷயங்கள் ஒரு வழியா மட்டும்தான் வரமுடியும். ஒரு சிற்பி, தன் ரத்த சம்பந்தம் இல்லாத ஒருவருக்கு தன் வித்தையை கற்றுத் தரவே மாட்டான். அதேபோலதான் இதுவும். புராணத்து லேயே துரோணர் ஏகலைவனுக்கு வித்தை கற்றுத்தர மறுத்தது இப்படி ஒரு காரணத்தாலதான்..."

சுந்தரம்பிள்ளை பேசுவதைப் பார்த்தபோது, அவர் சந்திரமௌலியை சந்தேகப்படுகிற மாதிரியும் தோன்றியது. சந்திரமௌலியும் புரிந்துகொண்டு தொடர்ந்து விவாதம் செய்ய விரும்பாமல், "சரி விடுங்க... இதைப்போய் ஒரு பெரிய விஷயமா நாம பேச வேண்டாம்..." என்றார்.

தனஞ்ஜெயனோ ஒரு மூலையில் போய் உட்கார்ந்து விட்டான். அவன்

உட்கார்ந்த விதமே அலாதியாக இருந்தது. அவன் உதடுகள் லலிதா த்ரிசதி' என்னும் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தது. அது சமஸ்கிருத மொழியில் உள்ள மந்திரம். தனஞ்ஜெயன் தன் வாழ்நாளில் அதை ஒரு முறைகூடச் சொன்னதில்லை. ஆனால், இப் போது சொல்லியபடி இருந்தான். அதுவும் பிராம்மணர் கள் துளியும் சப்தப் பிசகு இன்றி உச்சரிப்பதை போலவே...!

நல்லம்மையை பிரமை கவ்விக்கொண்டது. கிட்டத்தட்ட சுந்தரம் பிள்ளையிடமும் அதே நிலைதான்... சந்திரமௌலியும் இதுதான் சமயம் என்பதுபோல, "ஐயா... நீங்க இப்படி வாங்க! நாம அறைக்குள்ள போய் உட்கார்ந்து, ஏடுகளை எடுத்துப் பார்ப்போம். குறிப்பா, தனஞ்ஜெயனோட பூர்வஜென்ம காண்டத்தை எடுத்துப் பார்த்தா, நிச்சயம் இப்ப இவர் இப்படி இருப்பதற்கான விடை கிடைக்கும்னு எனக்குத் தெரியுது" என்று சுந்தரம் பிள்ளையை அசைத்துப் பார்த்தார். "இல்ல... இப்ப வேண்டாம்... பொழுது விடியட்டும். கோமியம் தெளிச்சு, நீட்டிலிருந்து வீட்டைச் சுத்தப்படுத்திவிட்டு பிறகு இது கிட்ட வர்றேன். நீங்க கிளம்புங்க சாமி" என்றார் சுந்தரம் பிள்ளை.

அவர் அப்படிச் சொல்வார் என்று சந்திரமௌலி கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை! அதிர்வை முகத்தில் காட்டினார்.

"என்னையா கிளம்புன்னீங்க?"

"ஆமாம் எனக்கும் உங்களுக்கும் என்ன இருக்கு? கல்யாண சுந்தரத்துக்கும் உங்களுக்கும்தானே பழக்கம். அவரே போய்ட்ட பின்னால, இங்க உங்களுக்கு என்ன வேலை?"

சுந்தரம் பிள்ளையின் கேள்வி, சந்திரமௌலியை திணற அடித்துவிட்டது. இப்படி ஒருவர் சொல்லும் அளவு அவர் விட்டதேயில்லை. ஆனால், இங்கே தனஞ்ஜெயனுக்காக அவர் வெட்கத்தை விட்டிருந்தும் இறுதியில் இப்படி ஆகிவிட்டது. முகமெல்லாம் சிவந்துவிட்டது. பார்த்தபடி இருந்த நல்லம்மைக்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது.

ஆனால், சந்திரமௌலி புறப்பட்டுவிட்டார். அவர் விலகிய நொடி, நல்லம்மை சுந்தரம் பிள்ளையைப் பிடித்துக்கொண்டாள்.

"உங்களுக்கு என்னங்க வந்தது? ஏன் இப்படி சாமியை உங்க வாயாலேயே போகச் சொன்னீங்க?"

“காரணமாத்தான் நல்லம்மை”

“என்ன பெரிய காரணம்...? அவர் பிராம்மணர் பிராம்மணர்கள் மனம் கோணும்படி நடந்துக்கவே கூடாது. அது சாபத்துல முடியும்னு அடிக்கடி சொல் வீங்களே?”

“அவர் பிறப்பால பிராம்மணரா இருக்கலாம். ஆனா, இப்ப அவர் மனசுல அப்படியில்லை. அவர் ரொம்ப தப்பானவர் நல்லம்மை!’

“என்னங்க! என்னென்னவோ சொல்றீங்க!”

“என் மனசுல பட்டதைச் சொல்றேன். இவர் ஒரு காரணத்தோடதான் இங்க வந்துருக்காரு. தனாவோட இவர் இருந்தா, அதனால தனா உயிருக்கே கூட ஆபத்து வரலான்னு நினைக்கறேன்!”

“ஐய்யோடா... கொஞ்சம் புரியும்படி சொல்லுங்க!”

“வேண்டாம்... நீ ஏற்கெனவே தனாவைப் பார்த்து ரொம்ப குழம்பிப்போய் இருக்கே. இதுல, நான் வேற ஒண்ணு கிடக்க ஒண்னு சொல்லி உன்னை சஞ்சலப்படுத்த விரும்பலை.”

“முடிவா, நீங்க என்னதான் சொல்ல வர்றிங்க?”

“நல்லம்மை... உன் மகன் ஒரு அதிசயம். அவன் ஒரு பெரிய புதையல் எடுக்கப்போறான். அவன் நம்ம வயித்துல பொறந்திருக்கறதே அதுக்குத்தான். இதை மட்டும் இப்ப நீ மனசுல வெச்சுக்க. இதுக்கு மேலே நீ எதுவும் கேக் காதே!” என்று கூறிவிட்டு தன் அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார். தனஞ்ஜெயனோ துளிகூட பிரக்ஞை கலையாமல் லலிதாத்ரிசதியைச் சொல்லி முடித்திருந்தான். பார்க்கப் பார்க்க நல்லம்மைக்கு வயிறு கனத்தது!

அவனுக்குள்ளேயும் அந்த நாளைய நினைவுகள்!

சக்திபுர அப்பிகையான ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆலயத்தில், கலா மண்டபத்தில் அன்றைய தினத்திற்கான நாட்டிய நிகழ்வு தொடங்கிவிட்டிருந்தது. ஊர்க்காரர்கள் கற்றிலுமான இடங்களிலும் சுற்றுப்பிரகார மண்டபங்களிலும் அமர்நதிருக்க, கால் சலங்கை சப்தம் கலீரிட நாட்டியம் ஆட விரும்பிய இளம்பெண்களும், அவர்களுக்குப் பயிற்சியளித்த நட்டுவனார் உள்ளிட்ட இசைக் கலைஞர்களும் கலா மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

ராஜமோகினி வரவேண்டும். அவள் வந்து கைச் சைகை காண்பித்தால்

போதும், ஆட்டம் தொடங்கிவிடும். அவளுக்காகத்தான் எல்லோருமே காத்திருந்தனர். ராஜமோகினியும் தன் இல்லத்தில் இருந்து புறப்பட்டாள். குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டி காத்திருந்தது. கோச்சு ஒட்டியின் பெயர் கோட்டை வரதன். பார்க்க, மல்யுத்த வீரன்போல் இருப்பான். ராஜமோகினி வீட்டைவிட்டு வெளியேறி வரும் பட்சம் முதல் அவள் திரும்பும் வரை வரதன்தான் அவளுக்குக் காவல். அவள் மேல் ஒரு துரும்பு விழுந்தாலும் அவன்தான் பொறுப்பு! ராஜமோகினி கோச்சில் ஏறி அமரவும், லகானைச் சுண்டிவிட அந்த சிறிய கோச்சின் இரு குதிரைகளும் புறப்பட்டன.

அப்போது, அவளது வீட்டு முகப்பில் இருந்த மத்தளக்காரன் தன் பெரும் மத்தள முரசை திமுதிமுவென ஒலித்து, ராஜமோகினி புறப்பட்டுவிட்டதை ஒரு சப்தமாக வெளிப்படுத்தினான். அது வெகுதூரத்தில் சக்திபுரத்தின் எட்டுத்திக்கு மண்டபங்களில் ஒரு மண்டபத்தில் இருந்த இன்னொரு முரசொலிப்பவன் காதில் விழுந்திட, அவனும் உடனே தன் முரசை ஒலிக்கத் தொடங்கினான். அது கோவில் தெருவில் உள்ள அம்பாள் எழுந்தருளும் ஊர் மண்டபத்தில் இருப்பவன் காதில் விழவும், அவன் தன் முரசை ஒலிக்கத் தொடங்கினான். இந்த சப்தம் கோவிலுக்குள் கலா மண்டபம் முன் அமர்ந்திருப்போர் காதுகளில் விழவும், ஊரார் முகத்தில் ராஜமோகினி வந்து கொண் டிருக்கிறாள் என்பதற்கான மகிழ்ச்சி பரவத் தொடங்கியது

அதேசமயம் வானிலும் திபுதிபுவென்று மேகச் சேர்க்கை பெரும் மழை வருவதற்கு அறிகுறியாக மழை தவறிப் போய் வருடங்கள் ஆகிவிட்டது. எனவே, வானக் கருப்பைப் பார்க்கவும் ஊர்க்காரர்கள் முகத்தில் ஒரு பரவசம் பரவியது.

“இன்னிக்கு ஆட்டம் நடக்குமா?” என்று ஒருவர் ஆரம்பித்தார்.

"ஆட்டம் இன்னிக்கு நடக்கலேன்னா நாளைக்கு நடக்கலாம். ஆனா, இந்த மழை கட்டாயம் பெய்யனும் நம்ம கோவிலம்மா எந்திரபூசை செய்தது வீண் போகல" என்றார் இன்னொருவர். அப்படி ஒரு வழியைக் காட்டிய அந்த சக்தி உபாசகர், வெகுதூரத்தில் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். அவரும் அண்ணாந்து வானைப் பார்த்தார். பின் திரும்பி கருவறைக்குள் இருக்கும் பூணூரீ எந்திரத்தையும் பார்த்தார். முகத்தில் ஒரு மர்மமான புன்னகையையும் பூத்தார். மனதுக்குள், இப்போது பெய்யத் தொடங்கும் இந்த மழை நிற்கவே போவதில்லை இந்த கோவிலையும் வெள்ளம் சூழப்போவது உறுதி அப்போது தப்பிக்க இப்போதே ஆயத்தமாக வேண்டும் என்று தனக்குள் கூறிக்கொண்டவர்,

ஒரு பரிசலை எடுத்து வரக் கிளம்பினார்.

26

ஆகம சாஸ்திரம் எனப்படும் ஆகம விஞ்ஞானம் நம் ஆலயங்களில் மட்டுமல்ல; நம் வாழ்க்கை முறைக்குள்ளேயும் உள்ளது. விஞ்ஞானம் எனப்படுவது ஒரு கல்வியாக இன்று போதிக்கப் படுகிறது. விஞ்ஞானத்தோடு தொடர்புடையவர்களை 'விஞ்ஞானிகள், என்கிறோம். இந்த விஞ்ஞானிகள், தாங்கள் அறிந்தவற்றை அவ்வளவு சுலபத்தில் பிறர் அறிய விடுவதில்லை.

விஞ்ஞானத்தை அறிய மேலான கல்வியும், அதற் கென்று பிரத்யேக முயற்சியும் தேவைப்படுகிறது. இதனால், விஞ்ஞானமானது கல்வி அறிவற்றவர்கள் வரையில் ஒரு புரியாத புதிராகவே உள்ளது. ஒரு விமானம் பறப்பதைப் பார்க்கும் ஒரு விவசாயி, இதனால் தான் வாய்பிளந்து நிற்கிறான். ஆனால் ஆன்மிக விஞ்ஞானம் படித்தவன், படிக்காதவன் என்று பாகுபாடு பொருளாதார ஏற்றத்தாழ்வு எதையும் பார்ப்பதில்லை. எல்லோரும் இன்புற்றிருக்க, அது ஒரு பழக்கவழக்க மாக, சடங்காக ஆக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

இதை உத்தேசித்தே மலையகங்களில் கோவில் எழுப்பினார்கள். ஏறி இறங்கும்போது சுவாசப் பைகள் விரிந்து பிரிந்து ரத்த ஓட்டம் சீராக மொத்த உடலும் பெறும் பயிற்சிக்கு உதவுகிறது. அது ஒரு பெரும் முயற்சியாக மாறி, மேலே சந்நிதியில் சென்று நிற்கும் போது மனமும் இறைவன் முன் அமைதியாகிறது. அங்கே நிற்பவர்கள் அத்தனைபேர் மனதிலும் ஒரு நம்பிக்கை உருவாகி, அது பக்தியாக மாறி, வழிபாடாக வெளிப்படுகிறது. ஒரு தெருவில் பொது இடங்களில்

நடமாடும் மனிதக் கூட்டம், பல்வேறு மன நிலைகளில் இருக்கும்.

எல்லோருக்கும் ஒரு நோக்கம், ஒரு போக்கு இருக்கும். ஆனால், ஆலயத்துக்குள் உள்ள அவ்வளவு பேரிடமும் ஒரு பொதுவான தன்மை நிச்சயமாக இருக்கும். அதுதான் இறைமேலுள்ள நம்பிக்கை. அதன் காரணமாக ஒரு நெகிழ்ந்த மன அமைப்பு. இப்படி ஒரு நிலையில் வெளிவிடும் சுவாசத்திலும் உடலின் ஒளி வட்டமான ஆராவிலும் ஒரே சீரான தன்மை இருக்கும். சீரான இந்தத் தன்மை மிகுதியாக உள்ள இடத்தில், மனதும் எளிதில் அடங்கும். அதன் எண்ண ஓட்டத்தில் எதிர்விசையான போக்குகள் இருந்தால் அவை கட்டுப் படும். எனவேதான், ஆலயத்துக்குச் சென்றுவந்தால் அமைதி ஏற்படுகிறது

என்கிறோம். இதனாலேயே, அனைவருக்கும் பொதுவாக இதை ஆக்கினார்கள். அனைவரும் ஒன்றுகூடுவதற்கு ஏற்ப, அளவில் பெரிதாக ஆலயங்களையும் வடிவமைத்தார்கள். அதில் குளம், விருட்சம், வெளி ஆகியவைகளை பிரதானம் ஆக்கினார்கள்.

ஒரு ஆலயத்தில் எட்டுத் திசையிலும் அதன் திறப்புகள் எங்கே இருக்க வேண்டும். இருக்கக் கூடாது. 'அதில் எந்த பாகம் உயர்வாக இருக்க வேண்டும். எந்த பாகம் தாழ்வாக இருக்க வேண்டும் என்றெல்லாம் ஒரு கணக்கு இருக்கிறது. இது பூமி சுற்றும் விதம், அதன் சாய்மானம் விசைப்பாடு, அன்றைய நட்சத்திர ஆதிக்கம் உத்தராயண, தட்சிணாயன கால நிலை என்று பல சங்கதிகளை உள்ளடக்கியதாகும். இதில் நட்சத்திர ஆதிக்கத்திற்கும் மனதிற்கும் உள்ள சம்மந்தத்தை, சோதனைச் சாலை அமைத்து நிரூபிக்க இயலாது. உணர்ந்து மட்டுமே பார்க்க முடியும். இதனாலேயே, இப்படிப்பட்ட விஷயங்கள் நம்பிக்கை உள்ளவர்க் கான ஒரு கல்வியாக மாறிவிட்டது.

*****

ராஜமோகினி கோவில் வாசலை அடைந்தபோது மழை வெளுத்து வாங்க ஆரம்பித்திருந்தது. திறந்தவெளி யில் அமர்ந்திருந்தவர்கள் எல்லாம், கல் மண்டபத்துக்குள் சென்று அடைத்துக்கொண்டு நிற்கத் தொடங்கினர். ராஜமோகினியும் சாரட்டை விட்டு இறங்கி, நனைந்து கொண்டே கோவிலுக்குள் நுழைந்தாள். அப்போது ஒரு பெரும் மின்னல் கீற்று ஒன்று வானில் ஒரு ஒட்டம் ஓடியது. அதில் ஒரு மயில்போல் ராஜமோகினி ஓடிவருவதை சுற்றுச்சூழலில் அடைந்து கிடப்பவர்கள் அவ்வளவு பேருமே பார்த்தனர்.

அதில் நெல்வயல் பாளையக்காரர் பரமேஸ்வரத் தேவரும் ஒருவர். அவர் வரையில் ராஜமோகினியின் அந்த ஒட்டம் அவரைச் சுண்டி இழுத்துவிட்டது. நல்ல நாளிலேயே, ராஜமோகினி என்றால் உருகிப் போவார். அவளது அழகு, பல்போன கிழடுகளையே கனவு காண வைக்கும். பரமேஸ்வரத் தேவரோ வாலிபத்தின் உச்சியில் இருப்பவர். எனவே, அவரால் மோகத்தை அடக்க முடிய வில்லை.

ராஜமோகினியும் அவர் ஒதுங்கியிருந்த மண்டபப் பகுதிக்குள்ளேயே நுழைந்தாள். அதற்குள்ளாகவே நன்றாக நனைந்தும் விட்டிருந்தாள். பரமேஸ்வரத் தேவர் மேல் ஒரு பட்டு சால்வை இருந்தது. அவர் அதை ராஜமோகினி துவட்டிக்கொள்ள வேண்டும் என்னும் விருப்பத்தோடு

நீட்டினார். ஆனால் ராஜமோகினி, பதிலுக்கு அவரை ஒரு சுட்டெரிக்கும் பார்வை பார்த்தாள். ஏனென்றால், சால்வையைத் தரும்போது தேவரின் பார்வை, நனைந்த அவளது மார்புகளின்மேல் இருந்தது. அதற்குள் அங்கிருந்த பெண்களில் ஒருத்தியும் குருக்களுமே, அவள் துவட்டிக் கொள்ள வஸ்திரங்களை எடுத்துவந்து விட்டிருந்தனர். அதை வாங்கி, முதலில் மார்பின்மேல் போட்டுக்கொண் டாள். மழை வலுக்கத் தொடங்கிவிட்டதை காற்று வீச்சை வைத்தும் இடி சப்தத்தை வைத்தும் உள்ளிருப்போர் அவ்வளவு பேருமே உணர்ந்து நெருக்கமாக நிற்கத் தொடங்கினர்.

குருக்கள், ராஜமோகினி அமர்வதற்காக ஒரு நாற்காலியையும் எடுத்து வந்து போட்டார். ஆனால், ஊரே நிற்கும்போது அதில் அமர ராஜமோகினி விரும்பவில்லை.

“பரவாயில்லை. இருக்கட்டும்” என்றாள்.

“அம்மா! நீ செய்த எந்திரபூஜை வீண்போகவில்லை. பார்த்தாயா மழையை! உன் பக்திக்கு அம்பாள் அக மகிழ்ந்து வரம் தந்துவிட்டாள்” என்றார்.

“உண்மைதான் குருக்களே. நானே, இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அந்த சக்தி உபாசகர் நல்ல வழியைத் தான் காட்டியுள்ளார். நம் கோவிலில் உள்ள ஸ்ரீஎந்திரத்தை, ஒரு வழிபடும் வடிவமாக மட்டுமே தான் எண்ணியிருந் தேன். ஆனால், அதற்குள் இயற்கையைத் தூண்டிவிடும் ஒரு ஆற்றல் இருப்பதே அவர் சொல்லித்தான் எனக்குத் தெரியும்.”

“அதுதானம்மா உருவத்துக்கும் எந்திரத்துக்கும் உள்ள வித்தியாசம். அம்பாள் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும் வடிவாம்சமாய் சேவை சாதிப் பவள். அவளது ஆற்றலை எல்லாம் ஒன்றுபடுத்தினால், அது எந்திரமாகிறது. அப்படி அது எந்திரமாவதன் பின்னாலே பல அரிய ரகசியங்களும் உள்ளது. அதை ‘ஸ்ரீரகசியம்’ என்றே வேத பண்டிதர்கள் கூறுவார்கள்.”

“இப்போது இதைக்கூறும் உங்களுக்கு முன்பே இதுபற்றி என்னிடம் கூறத் தெரியவில்லையே?”

“அது ரகசியமானது என்றும் மட்டும்தான் எனக்குத் தெரியும். அந்த ரகசியம் என்னவென்று எனக்குத் தெரியாதே.”

“பின் எப்படி... அது அந்த உபாசகருக்கு மட்டும் தெரிந்தது?”

“நானும் உபாசகனாக மாறினால் எனக்கும் அது சாத்தியம்தானே?”

“ஒ... அதன் பின்னால் இப்படி ஒரு நிலைப்பாடு இருக்கிறதா?”

"ஆமாம்மா... உபவாசம் தவம். தானம், யாகம் இவை எல்லாமே தேவியை மிகவும் மகிழ்ச்சிப்படுத்தும். நாம் அதனுள் மூழ்க மூழ்கத் தெரியாத பல உண்மைகள் தெரியவரும். உள்ளம் தெளிவுபடும்.”

“கேட்கக் கேட்க எனக்கும் ஆவல் ஏற்படுகிறது. இப்படி ஒரு சக்தியை வைத்துக்கொண்டு இந்த சக்தி புரத்தில் வறட்சி நிலவியதை நினைத்தால் வருத்தமாகவும் இருக்கிறது.”

“எல்லாவற்றுக்கும் ஒரு சரியான காரணம் இருக் கிறதம்மா! ஒரு விஷயம் எப்போது தெரியவேண்டுமோ அப்போதுதான் தெரியும்.”

குருக்களும் ராஜமோகினியும் பேசிக்கொண்டிருக்கும் போது மழையும் வலுத்துக்கொண்டே போனது. தேர்வடம் போன்ற பருமனுக்கு மழைச்சாரல்! சுற்றிலுமுள்ள வெளியில் கணுக்கால் அளவு தண்ணீர் சூழ்ந்துவிட்டது. இடியிடமும் ஒரு குதூகலம். எல்லோரும் காதைப் பொத்திக்கொண்டனர்.

***

ராஜமோகினியைச் சுற்றி தீப்பந்தம் பிடித்துக் கொண்டு சிலர் நிற்கத் தொடங்கினர். அவள் தன்னை முறைத்துவிட்டு குருக்களிடம் பேசியது, பரமேஸ்வரத் தேவரை குமுற வைத்திருந்தது. அதைப் புரிந்துகொண்டது போல அவரை நோக்கி நெருங்கி வந்திருந்தார் வாணி பக்கார வையாபுரிப்பிள்ளை.

“என்ன தேவரே. மோகினியை எண்ணி கிறக்கமா இல்லை கோபமா?”
“மெல்ல பேசுங்கள்... இரண்டும்தான்...”

“வேண்டாம் விட்டுவிடுங்கள்!”

“எதை?”

“அவளை அடையும் எண்ணத்தை!”

“இதைச் சொல்லத்தான் நெருங்கி வந்தீர்களோ?”

“அதற்கு மட்டும் வரவில்லை. அவளது மனதில் வேறு ஒருவன்

குடிபுகுந்துவிட்டான். அது எனக்குத் தெரியும். அதனால் சொல்கிறேன்.”

“யார் அந்த அதிர்ஷ்டசாலி?”

“சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். அதிர்ச்சியும் அடைவீர்கள்!”

“முதலில் சொல்லுங்கள்!”

“நமது சக்திபுரத்தின் வேத பண்டிதர் வைத்யநாத சாஸ்திரிகளின் சீடன் தனரூபன்!’’

“தனரூபனா? யார் அவன்?”

“அதான் சொன்னேனே, சாஸ்திரிகளின் சீடன் என்று...”

“அவன் என்ன அவ்வளவு அழகானவனா. இல்லை வீரம், செல்வம் இரண்டும் உடையவனா?”

“ஒரு மடத்தின் மாணவன் எப்படி இருப்பான்? இடுப்பில் ஒரு சிகப்பு வஸ்திரம், தோளில் ஒரு துண்டு. நெற்றியில் குங்குமம், காதில் ரத்தினக் கடுக்கன் தரித்த பிராம்மண மாணவன் தேவரே...”

‘'ஓ!''

“என்ன ஒ! ஆளைப் பார்க்க வேண்டுமா?”

“இங்கு எங்காவது இருக்கிறானா?”

“அதோ..!”

வையாபுரிப்பிள்ளை கைக்காட்டிய தூரத்தில் லலிதாம்பிகையின் திருச்சந்நிதிக்கு வெளியே அமர்ந்து கொண்டு, தேவி பாகவத ஏடுகளை தீப்பந்த ஒளியில் வாசித்தபடி இருந்தான் தனஞ்பன். இடி, மழை எதையும் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. அதைப் பார்த்த பரமேஸ்வரத் தேவர்,

“இவனைப் போயா, எழில்மிகுந்த ராஜமோகினி விரும்புகிறாள்?” என்று திரும்பக் கேட்டார்.

“அவனை, சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்! மிகவும் வைராக்கியமானவன் இவன். ராஜமோகினிதான் இவனை விரும்புகிறாள். ஆனால் இவனுக்கு விருப்ப மில்லை.”

“அட... இது என்ன ஆச்சரியம்?”

“என்றால்... அவன் எவ்வளவு வைராக்கியமானவன் என்று பார்த்துக்கொள்ளுங்கள்” வையாபுரிப்பிள்ளை பரமேஸ்வரத் தேவரிடம் தனரூபன் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது ஒரு பெரிய இடி கோவில் ராஜ கோபுரத்தின் மேலேயே விழுந்தது. வானமே இரண்டாகப் பிளந்துகொண்டு தரை தட்டியது போல் ஒரு சப்தம். எல்லோரும் காதைப் பொத்திக்கொண்ட அவ்வேளையில் கோபுரமும் அப்படியே இடியின் விசை தாங்காமல் இடிந்து விழ ஆரம்பித்தது. அது நன்றாகவே, மின்னலின் வெளிச்சத்தில் தெரிந்தது. எல்லோரிடமும் திகைப்பு!

"ஐயோ..! என்ன இது!”

ராஜகோபுரம் இடிந்து விழுகின்றதே... இது நல்ல தல்லவே! என்று எல்லோரும் அதிர்ச்சியுடன் முணு முணுத்திட, மழையும் விசையோடு வலுத்துக்கொண்டே போனது.

ராஜமோகினியும், கோபுரம் இடிந்து விழுந்த அதிர்ச்சியில் குருக்களைப் பார்த்தாள்.

“குருக்களே! என்ன இது தீய சகுனம்?”

"ஆமாம்மா... எனக்கும் ஒன்றும் புரியவில்லை”

“நல்ல காலம் பிறந்துவிட்டது என்று இப்போது தானே கூறினீர்கள்?”

“மழை வரவும் அப்படி எண்ணினேன். ஆனால் இந்த மழை பிழையானது என்று இப்போதுதான் தெரிகிறது”

“என்ன கூறுகிறீர்கள்?”

“அம்மா, எந்திர பூஜையின் பயன் மிக வீரியம் மிக்கதாக உள்ளது. இது இயற்கையாய் பொழியும் மழை போலவும் தெரியவில்லை. எனவே, இது இப்போது நின்று விடுவதுதான் சரி...!”

“அது என்ன நம் கையிலா இருக்கிறது!”

“எதைக் கொண்டு இயக்கினிர்களோ, அதைக் கொண்டே... அதன் இயக்கத்தை நிறுத்த வேண்டுவதே தீர்வாகும்!”

“என்றால் முதலில் வாருங்கள்” என்று திருச்சந்நிதி நோக்கி ஓடினாள் ராஜமோகினி. குருக்களும் ஓடினார். சந்நிதி வாயிலை அடைந்தவள், அங்கே தனஞ்பனைப் பார்த்து தேங்கி நின்றாள். அவனும் அவளை வெறித்துப் பார்த்தான். பின், முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்

டான்.

“அம்மா! என்ன தயக்கம்! நீங்கள் உள்ளே நுழைந்து எந்திர பூஜையைத் தொடங்குங்கள். பெய்த அளவு மழை போதும் என்று வேண்டுங்கள்’ குருக்கள் கூறிக்கொண் டிருக்கும்போதே இன்னொரு பெரிய இடி! அது கோயில் விருட்சமான வேப்பமரத்தின் மேல் விழுந்தது. மழையில் நனைந்த அந்த மரமே தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. அது எல்லோரையுமே அதிரவும் வைத்தது. தனரூபனும் பார்த்தான்.

"ஐயோ! இது பெரும் கொடுமை. கோயில் விருட்சமே பற்றி எரிகிறது. தாயே தாமதிக்காதீர்கள். விட்டால் இந்த ஊரே பிரளயக் காடாகி விடும்” என்று படபடத்தார் குருக்கள். ராஜமோகினியும் சந்நிதியில் நுழைந்து குத்து விளக்குச் சுடர்களின் ஒளியில் காட்சிதரும் அந்த எந்திரத்தை பக்தியோடு பார்த்து, சக்தி உபாசகர் சொன்ன மந்திரத்தையும் கூறி பூஜித்து கற்பூர ஆரத்தியும் காட்டி னாள். ஆனால் மழையின் வேகம் அதிகரித்ததே அன்றி, அது துளிகூடக் குறையவில்லை. அதே சமயம் வெளியே முழங்கால் அளவைக் கடந்துவிட்டது தண்ணீர்.

தனரூபனும் நடப்பதை எல்லாம் பார்த்தபடி இருந் தான். அவனுக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. அதேவேளையில் குருக்கள், எங்கே அந்த சக்தி உபாசகர்?’ என்று உபாசகரைத் தேடத் தொடங்கியிருந்தார்.

“உபாசகரே, உபாசகரே” என்கிற அவரது குரல், காற்றோடு தேய்ந்ததுதான் மிச்சம்!

உபாசகரோ, வெகுதூரத்தில் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும் வெள்ளத்தில், பரிசல் ஒன்றில் குடை பிடித்து அமர்ந்தபடி இருக்க, அந்த பரிசலை ஒருவன் இயக்கியபடி சக்திபுர எல்லைக்குள் நுழைந்து கொண்டிருந் தான்.

27

நமது ஆன்மிக விஷயங்களே அபாரமானவை. அதைநம்பிக்கை வைத்து ஏற்கவேண்டிய அவசியமே இல்லை. ஒவ்வொன்றையும் காரண காரியங் களோடு கோடிக்கணக்கானோர் முன்னால் நிரூபிக்க முடியும் என்பதுதான் பேருண்மை! நிரூபிக்கத் தேவை யான ஞானமும் ஆழமும் உடையவர்கள் மிகக் குறை வாக உள்ளனர் என்பதுதான் துரதிர்ஷ்டம்

குறிப்பாக, நமது வேதத்திற்குள் இன்றைய ஒட்டு மொத்த கணிதம், விஞ்ஞானம், வானியல் என்று எல்லாமே உள்ளது. இங்கே இருந்துதான் அது மேல் நாட்டுக்குச் சென்றது. பின் அங்கேயிருந்து அவர்கள் வசதிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டு திரும்ப இங்கே வந்தது.

கணிதம், இன்று வியத்தகு வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதைப் பயிற்றுவிக்கும் முறைகள் இன்று பல உள்ளன. அதில அபாகஸ் எனப்படும் முறையும் ஒன்று. இந்த அபாகஸ் முறைக்கு ஒரு சதுரவடிவ சட்டமும், அதில் கம்பிகளின் குறுக்கே கண்ணிகளும் இருக்கும். அதை நகர்த்தும் விதமாக நகர்த்தி கூட்டு தல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் என்பதெல்லாம் சொல்லித் தரப்படுகிறது. இதையே வேத பண்டிதர்கள் சங்க காலத்தில் கூட்டல், கழித்தல், நீட்டல், பெருக்கல் என்றனர். இந்தக் கணக்கைச் சொல்லித்தர இரு கைகளின் பத்து விரல்களை மட்டுமே பயன்படுத்தினர். விரல்களை மடக்கிப் பிடித்தும், கையை முன்பக்கம் பின்பக்கம் காட்டியும், ஐந்து விரல்களுக்குள் உள் ளங்கை பரப்பில் இறுக்கி **14** கண்ணிகள் **(**நான்கு விரல்களுக்கு **4+3=12,** பெருவிரலில் இரண்டு ஆக மொத்தம் **14)** ஒரு கைக்கு பதினான்கு, இரு கைக்கும் இருபத்தி எட்டு என்கிற விதத்தில் நமது இரு கைகளுக் குள் உள்ளதை மட்டும் வைத்தே கோடிக்காணக்கான எண்களையும் அவர்கள் பயன்படுத்தினர். இதில் ஒரு வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால், கண்பார்வை தெரியாத அந்தகர்கள், இக்கணித முறையில் மிக வேகமாகவும் முதலாவதாகவும் வந்தனர்.

காரணம், அவர்களிடம் கவனச்சிதறல் இல்லை. மனம் ஒருமித்து இருப்பது அவர்களுக்கு மிகச் சுலபம். காட்சிகளைக் காணாத மனம் அவர்கள் மனம். சப்தம் தான் அவர்கள் உலகம்! இப்படிப்பட்ட கணித முறையை இன்று பள்ளிகளில் கற்பித்தால், ஒரு மாணவன் பதினாறு வயதில் இன்று தெரிந்துகொள் வதை எட்டு வயதிலேயே தெரிந்துகொண்டு விடுவான் என்பதே உண்மை! இப்படிப்பட்ட அபாரமான கணித ஞானத்தில் இருந்தே எந்திர வரைபடங்கள். **(**இன்றைய பிளான் பேப்பர் போல்**)** தோன்றின!

****

அந்தப் பரிசல் சக்திபுரத்தின் ஆற்று நீரை எதிர்த்து வந்துகொண்டிருந்தது. உபாசகர், தாழங்குடையைப் பிடித்தபடி அமர்ந்து கொண்டிருந்தார். ஆனால் பரிசலை ஒட்டுபவன், மழையில் நனைந்தபடிதான் இயங்கிக் கொண் டிருந்தான்.

“சாமி... இந்த மழைல துடுப்பு போட முடியலங்க! இழுவை அதிகமா இருக்கு. இப்படியே ஓரமா ஒதுங்கிட லாங்க” என்றான்.

“அப்படியே செய்! எங்கே ஒதுங்குகிறாயோ, அங்கேயே காத்துக்கொண்டிரு. நான் வருவதற்கு எவ்வளவு தாமதமானாலும், நீ எங்கேயும் போய்விடக் கூடாது” என்றார் உபாசகர்.

“இப்படி ஒரு மழையை நான் என் வாழ்நாள்ல பார்க்கலை. இந்த வேளைல கட்டாயம் மழை வரும்னு சொல்லி நீங்க என்னைக் கூட்டிக்கிட்டு வந்ததை நினைக்க, நான் ரொம்பவே ஆச்சரியப்படறேன்! நீங்க யார் சாமி?”

“நான் யாராக இருந்தால் என்ன? உனக்குத் தேவை கூலி. இப்படியே இந்த ஆற்றின் வழியாக இது கடலோடு கலக்கும் தூரம் வரை என்னை நீ அழைத்துச் சென்றால் போதும்.”

“இந்த ஆறு காவிரி ஆற்றுடன் கலந்து, பிறகு அந்தக் காவிரி ஆறு கொள்ளிடத்தில் பெருகி, இறுதியில் பூம்புகார் அருகே கடலில் கலக்கிறது. வெகுதூரம் அது! ஆற்றில் பரிசலில் செல்வதில் நிறைய ஆபத்துக்களும் உள்ளதே.” பரிசல்காரன் தயக்கம் காட்டினான்.

“கவலைப்படாதே! எதுவும் நடக்காது. உனக்கு. நான் பேசிய பொன்னைவிட இரு மடங்கு தருகிறேன்” என்றார்.

அவனும் ஒரு ஓரமாக ஒதுங்கினான். தாழங் குடையைப் பிடித்தபடியே உபாசகரும் இறங்கினார். இறங்கிய இடத்துக்குப் பக்கத்தில் ஒரு சிறு குன்று இருந்தது. அவர் அதன்மேல் ஏறுவதை பரிசல்காரன் பார்த்தான். மிகவே ஆச்சரியப்பட்டான்.

யார் இவர்! நிச்சயம் ஆபத்தானவரில்லை. கச்சக் குடுமியும் நெற்றிக் குங்குமமும் முகத்தின் தீட்சண்யமும் கையெடுத்துக் கும்பிடத்தான் தோன்றுகிறது என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டான்.

அப்போது அவர் குன்றின் உச்சியில் நின்று, மொத்த ஊரையும் பார்த்தபடி இருந்தார். சக்திபுரம் கோவிலைச் சுற்றிய மதில் சுவர்களும், உள்ளடக்கமாய் ஓங்கி வளர்ந்து திருக்கும் தென்னை மரங்களும் கோடுகளுக்கு நடுவில் பளிச்சென்று கண்ணில் பட்டன. கோபுரம் இடி பாய்ந்து விழுந்துவிட்டதால் தெரியவில்லை. ஊரைச்சுற்றி ஒரே செங்கழுநீர்த்தேக்கம்!

ஒரு மாதம் பெய்யவேண்டிய மழை, ஒரு நாளில் பெய்துகொண்டிருப்பது

போல் தோன்றியது. இது இன்னும் சிலமணி நேரங்கள் தொடர்ந்தால், மதில்.

கவர்கள் எல்லாமும் சரிந்து கோவிலும் வெள்ளத்தால் சூழப்பட்டு விடும். அதன்பின் தான் எண்ணிவந்த காரியம் நிறைவேறாமல் போய்விடும் என்பதைப் புரிந்து கொண்டவர், கோவிலை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

பரிசல்காரன், பரிசலை இழுத்து ஒரு மரத்தோடு கட்டுவதில் மும்முரமாமக இருந்தான். அவர் செல்வதைப் பார்த்து, "சாமி! இங்கேயே காத்திருக்கேன்" என்றான்.

கோவிலுக்குள் ஒரே அல்லோல கல்லோலம்... துளிகூட மழை நிற்காதது, குருக்களைக் கலவரப்படுத்தி விருந்தது.

"அம்மா... இந்த எந்திரம் மந்திரத்தால் இயக்குவது! இதை இயக்குவதற்கு ஒரு மந்திரம் இருப்பது போலவே, நிறுத்துவதற்கும் ஒரு மந்திரம் இருக்கவேண்டும். அது தெரியாமல், பெய்யும் மழையை நாம் நிறுத்த முடியாது" என்றார்.

"அந்த மந்திரம் இப்போது யாருக்குத் தெரியும்?"

"அது தெரிந்த ஒரே மனிதர், அந்த உபாசகர்தான்! ஆனால், அவரையோ இந்தக் கோவிலில் பார்க்க முடியவில்லை. ஒருவேளை இப்படி ஒரு மழை வந்து வெள்ளம் சூழ்ந்து பெரும் ஆபத்து வரப்போகிறது என்று தெரிந்துகொண்டு அவர் தப்பித்துவிட்டாரோ என்று கருதத் தோன்றுகிறது" என்றார் குருக்கள்.

"அவ்வளவு சுயநலமுள்ளவரா அவர்?"

"வேறு எப்படியம்மா எண்ணுவது? இத்தனை மழைக்கு இந்த எந்திரம் பற்றித் தெரிந்த அவர் ஓடி வந்திருக்க வேண்டாமா?"

குருக்களும் ராஜமோகினியும் மாய்ந்து கொள்ளும் போது, தனஞ்பன் அருகில் வந்தான். சந்நிதிக்குள், தீபச் சுடரொளிக்குள் தெரியும் பூஜிக்கப்பட்ட எந்திரத்தைப் பார்த்தான். அவன் கூர்ந்து பார்ப்பதையும் தீவிரமாக யோசிப்பதையும் கவனித்த ராஜமோகினி,

"இளம் உபாசகரே! உங்களின் தீவிர சிந்தனைக்கு எது காரணம் என்று நான் அறியலாமா" என்று இணக்கமாகக் கேட்டாள். அவனோ ராஜமோகினியின் கேள்விக்குப் பதில் கூறாமல் குருக்களிடம்,

“காருண்யவாருணி என்னும் மந்திரத்தால் இந்த எந்திரம் இப்போது இயங்குவது போல் தெரிகிறது. இதன் கதிர்வீச்சு நிறுத்தப்பட்டால்தான், விண்ணில் காற்றின் ஈரச்சேர்க்கை நிகழ்வதும் தாழ்வு நிலையும் விலகும் அதற்கு இப்போது நேர் எதிரான ‘சரபாக்னி’ எனும் மந்திரத்தாலும் ‘சர்வ காம்யார்த்த மந்த்ரிணி’ எனும் மந்திரத்தாலும் இதன் விசைப்போக்கை மாற்றவேண்டும் ‘சர்வ காம்யார்த்த மந்த்ரிணி’ என்னும் மந்திரங்கள் கொண்ட ஏட்டில், இதற்கான மந்திரங்கள் உள்ளன. அதில் சரபாக்னி’ மந்திரத்தை நான் அறிவேன். இப்போதே அதை உச்சரித்து இதன் விசைப்பாட்டை திசைதிருப்ப முடியுமா எனப் பார்க்கிறேன். அதற்கு எனக்கு சன்னதிக் குள் பிரவேசிக்கும் உரிமையும் அனுமதியும் வேண்டும் என்றான்.

குருக்கள் திகைத்தார். ராஜமோகினியோ துளியும் தயங்காமல், “தாராளமாக நீங்கள் கருவறைக்குள் செல்லலாம்” என்றாள். குருக்கள் அந்த நிலையிலும், “அம்மா உரிய தீட்சை பெறாமல், ஒரு பிரம்மச்சாரி இளைஞன் உள்ளே செல்வது சாஸ்திர பங்கம்” என்றார். “ஊர் இருக்கும் நிலையில் அதைப்பற்றி எல்லாம் சிந்திக்க நேரம் எது?” என்று கேட்டாள் ராஜமோகினி.

அதேசமயம், உபாசகர் கோவில் மதில் கடந்து மழை நீருக்குள் மிகுந்த சிரமத்துடன் நடந்து வந்துகொண் டிருந்தார். அப்போது சற்றும் எதிர்பாராதவிதமாக அவர் சிரம் மேலேயே ஒரு இடி பாய்ந்ததில், அவர் அப்படியே கருகிப்போனார். நொடிப்பொழுதில் நிகழ்ந்த அந்த செயல்பாடு, கோவிலில் அடைந்திருப்பவர்களை உலுக்கிவிட்டது. எல்லோரும் ஓடி வந்து கோவிலில் ஒரு பிணம் விழுந்துவிட்டது என்றனர். குருக்களுக்குள் மிரட்சி பல மடங்காகியது.

“நடக்கக் கூடாதவைகள் ஒவ்வொன்றாக நடந்து வருகின்றன. குருக்களே, அது யார் என்று போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்” என்றாள் ராஜமோகினி. குருக்களும் விலகினார்.

அந்த இடைவெளியில், ராஜமோகினியின் பார்வை தனரூபனைத் துளைப்பது போல் பார்த்தது. தனரூபனோ ராஜமோகினைப் பார்க்க விரும்பாமல் வேறு பக்கம் பார்த்தான். இதைக் கவனித்த பரமேஸ்வரத் தேவரும் வந்துவிட்டார். கூடவே வையாபுரிப் பிள்ளையும்!

“என்னைப் பார்க்க மாட்டீர்களா' ராஜமோகினி பேசத் தொடங்கினாள்.

“இந்த அலட்சியமான பதிலையோ போக்கையோ, என்னால் அலட்சியப்படுத்தவே முடியவில்லையே!”

“என்றால், உன்னிடம் தன்மானமே இல்லை என்று பொருள்” தனஞ்பன் ஈட்டியால் குத்துவது போலப் பேசினான்.

“உங்கள் வரையில் அது இல்லைதான். ஏன் என்று நான் எனக்கும் தெரியவில்லை!”

“போதும்... பேச்சு வேண்டாம்!”

“அது எப்படி? நான் ஊரைக் காப்பாற்றும் பொறுப்பில் உள்ள கோவில் தாசி!’’

“என்றால், தாச நாட்டம் இந்த இறைவனோடு மட்டும் இருக்கவேண்டும் என்போன்ற மனிதர்களிடம் கூடாது!”

“உங்களை, சாமான்ய மனிதனாகக் கருதிட என்னால் முடியவில்லை!”

“போதும் ராஜமோகினி! பேச்சுக்குப் பேச்சு என்று பேசுவதை நிறுத்து! இந்த மழை ஒரு பெரும் பிழையாகு முன் இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.”

"தாராளமாக! எனக்கு ஆட்சேபணையே இல்லை. ஆனால், குருக்கள் கூறும் ஆகம விதி பற்றியும் சிந்திக்க வேண்டி உள்ளதே.”
ராஜமோகினியின் பதிலைக் கேட்ட படியே வந்த குருக்களின் முகம் இருண்டு கிடந்தது.

“என்ன குருக்களே... யார் அது!”

“உங்களுக்கு மந்திரத்தை உபதேசித்த அந்த உபாசகர்தான் அம்மா”

“கொடுமையே! அவருக்கா இந்த கதி?”

“ஆமாம்! இப்படி ஒரு கொடிய விதியா என்று நானுப் கலங்கித்தான் போயுள்ளேன்’’ குருக்களின் பதிலைத் தொடர்ந்து மீண்டும் ஒரு பெரிய இடி. அது ஒரு கல் மண்டபம் மேல் விழுந்து, அந்த மண்டபக்கூரை இடிந்து உள்ளிருப்போர்மேல் விழுந்தது. அதன் தொடர்ச்சியாக அங்கே ஒரே மரண ஓலம்!

"அம்மா! இனி ஒரு வினாடிகூட தாமதிக்கக் கூடாது தனரூபா’ அந்த மந்திரத்தை நீ எனக்குக் கூறுவாயாக! நான் அதை அந்த எந்திரத்தின் அருகில் அமர்ந்து பிர யோகித்துப் பார்க்கிறேன்” என்றார் குருக்கள்.

"கூடாது குருக்களே! குருமுகம் உபதேசம் பெற்றே அந்த மந்திரங்களைக் கூறலாம். அடுத்து, அதற்கென்று மாத்திரை அளவுகள் உள்ளது. அதை,

பயிற்சி எடுத்த லன்றி வசப்படுத்த முடியாது.”

“என்றால், இதற்குத் தீர்வுதான் என்ன?”

“நானே உள்ளே சென்று "சரபாக்னி’ மந்திரத்தைத கூறுவது ஒன்றுதான் ஒரே வழி”

“தனரூபா, காலம் காலமாக சாஸ்திர ரீதியாகவே இந்த ஆலயம் செயல்பட்டு வருகிறது. பிரம்மச்சாரிக்கோ தீட்சை பெறாதவர்க்கோ உள்ளே இடம் கூடவே கூடாது என்பதே விதி”

“நான் ஒரு பிராமணன் என்கிற ஒரு தகுதி போதாதா?”

“பிறப்பால் பிராமணர்களை, முழு பிராமணனாக என்றுமே சாஸ்திரம் ஏற்றுக்கொண்டதில்லை. உபநயன சடங்கு நடந்த பிறகே, பிரம்மாச்சாரி ஒருவன் பிராமன னாக ஆகிறான். சம்சார பந்தத்தில் இறங்கியபிறகே கிரஹஸ்தன் ஆகிறான். கிரஹஸ்தனுக்கு நீர் வார்த்து தீட்சை தர என்னால் இயலும்!”

தனரூபன் அப்படிச் சொன்ன நொடி, அது ராஜ மோகினி காதில் விழுந்து அவளிடம் உடனே ஒரு பரவசம்..!

“குருக்களே...” என்றாள் வேகமாக!

“என்னம்மா...”

“உங்கள் பிரச்னைக்கு நான் தீர்வு காணட்டுமா?”

“எப்படி?”

“இவரை நான், இங்கேயே இப்போதே திருமணம் செய்துகொள்கிறேன். எனக்கு ஆட்சேபனை இல்லை. இவரை நீங்கள் உள்ளே அனுமதிப்பீர்கள்தானே?”

“இல்லை... முடியாது! திருமணம் என்பது பெரிய விஷயம்! இதில் என் பெற்றோரின் விருப்பங்களும் அடங்கி யுள்ளது” என்று படபடவென்று பொரிந்தான் தனஞ்பன்.

“எனக்கும் புரிகிறது. எனக்கும் தாய் என்று ஒருத்தி இருக்கிறாள். ஆனால், நான் இப்போது ஊரை மட்டுமே பார்க்கிறேன்” என்று அதற்கொரு உறுதியான பதிலைக் கூறினாள் ராஜமோகினி. ராஜமோகினி அப்படிச் சொன்ன தகவல், கூட்டத்தில் வேகமாகப் பரவியது. குறிப்பாக, பரமேஸ்வரத் தேவர் அதைக் கேட்டு

கொந்தளித்துப் போனார்.

“என்ன தேவரே..! பார்த்தீங்களா! இந்த அழகு மயில் கெஞ்சுகிறது. ஆனால், அந்த இளம் ஆண்டியோ மிஞ்சு கிறான்.”

“கொடுமை பிள்ளை, கொடுமை?”

“இங்கேதான் தோட்டமும் துரவுமாய், பொன்னும் மணியுமாய் தவம் கிடக்கின்றன. இந்த ராஜமோகினிக்கு அது கொஞ்சம் கூட கண்ணில் படவில்லையே!”

“படாது! நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். இப்போது ராஜமோகினிதான் ஜெயிப்பாள்!”

பிள்ளையின் பதிலைத் தொடர்ந்து கோவில் மதில் சுவர் ஒருபுறம் இடிந்து விழுந்து வெள்ளம் திரண்டு வரத் தொடங்கியது. குருக்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தார்.

“தனரூபா... யாகங்களிலேகூட உலக நன்மையைக் கருதி ஒரு பசுவைப் பலி கொடுப்பார்கள். 'யாகப்பசு’ என்றே ஒன்றும் உண்டு. நீயும் அதுபோல உன்னைக் கருதிக்கொண்டு இந்த ஆலயத்தை தயவுசெய்து காப் பாற்று. இந்த ஊரே இப்போது ஆலயத்துக்குள் தான் அடங்கியுள்ளது. உனது தனிப்பட்ட ஆசாபாசங்களை தயவுசெய்து விட்டுக்கொடு” என்று கெஞ்சத் தொடங்கி விட்டார் குருக்கள்.

தனரூபனும் வேறுவழியின்றி ஒரு முடிவுக்கு வந்தான். இருந்தாலும், “ஒரு நிபந்தனைக்கு ராஜமோகினி கட்டுப் பட்டால், நான் தாலி கட்டுகிறேன்” என்றான்.

“என்ன அது! நான் எதற்கும் தயார்” என்றாள் ராஜமோகினி.

“என்றால் அருகே வா! நீ மட்டும் அதை அறிந்தால் போதும்” என்று அவள் காதில், தன் நிபந்தனையைக் கூறினான். ராஜமோகினியோ விதிர்த்துப்போய் விழிகளை விரித்தாள்!

28

கணித அடிப்படையில் தோன்றிய வரைபடங்களை தலில் கற்பனைகளில் செதுக்கி, அது அழிந்திராதபடி பார்த்துக் கொண்டனர். இதன் துவக்கம் மிகவும் ஆச்சரியமூட்டுவதாகும்.

வரைபடங்களின் முன்னோடியாகத் தோன்றியது ராசிச் சக்கரங்களாகும். இன்றைக்கு ஜாதகம் கணிக்கும் போது சதுரவடிவில் பன்னிரண்டு கட்டங்களை உரு வாக்கி, அதில் முதலாவது மேஷம், அடுத்தது ரிஷபம் என்று வரிசையாக **12** ராசி வீடுகளை நாம் வகுத்து வைத்திருக்கிறோம்.

அன்று இது வட்டவடிவத்துக்குள் அடங்கி யிருந்தது. அது மட்டுமல்ல. மேஷ ராசிக்கு ஆட்டுத் தலை, ரிஷபத்துக்கு மாட்டின் தலை என்று ஒவ்வொரு ராசிக்கும் ஒரு உருவத்தைச் சின்னமாக்கி பன்னிரண்டு கட்டங்களில் அவற்றைப் பொருத்தியதன் பின்னாலே ஒரு பெரும் கணிதமுறையே ஒளிந்துள்ளது.

ஒரு வட்டத்திற்குள் **360** டிகிரி கோணங்கள் உள்ளது என்பதைத் தீர்மானித்து, அதிலுள்ள பன்னிரண்டு வீடுகளுக்கும் ஒரு வீட்டுக்கு முப்பது டிகிரி என்று வகுத்து வைத்ததெல்லாம் அதிசயமான உண்மைகள் குறிப்பாக, ராசி வீடுகளின் தோற்ற உருவங்கள் விண்மண்டலத்தில் உள்ள நட்சத்திர அமைப்பைப் பார்த்து உருவாக்கப்பட்டவையாகும்.

இந்த நாளைப்போல விண்ணில் ஏறிப் பறந்து செல்ல வசதிகள் இல்லாத நிலையில், பூமியில் விண்ணி லுள்ள நட்சத்திரக் கூட்டங்களைக் கண்டு அதற்கேற்ற வடிவத்தை உருவாக்கி, அதைக் கல்லில் கட்டி வெட்டி அழியாதபடிச் செய்ததெல்லாம் இன்றும் ஆச்சரியப் படவைக்கும் விஷயங்களாகும்.

படிப்படியாக இந்த விஷயங்கள் வளர்ச்சி கண்டு, கல்லுக்குப் பிறகு உலோகத்தில் செதுக்கப்படும்போதோ அல்லது கீறப்படும்போதோ அழியாமல் இருப்பதை வைத்தே உலோகங்களைப் பயன்படுத்தும் எண்ணம் உருவானது. அதிலும் இரும்பு, துருவேறும் குணத்தால் விலக்கப்பட்டது. செம்பும் தாமிரமும் இம்மட்டில் முன் னுரிமை பெற்றது. இவை இரண்டும் அற்புதமான மின்கடத்தி என பின்னாளில் தெரியவந்த விதமும் ஆச்சரியமூட்டும் ஒரு விஷயமாகும்!

*****

அ கண்டு விரிந்த ராஜமோகினியின் விழிகள் ஆயிரம் சேதிகளைச் சொல்லிற்று. குருக்கள் கூர்ந்து பார்த்தார்.

“தனரூபா! அப்படி என்ன நிபந்தனை விதித்தாய் ராஜமோகினி ஏன் இப்படி விழிக்கிறாள்?” என்றும் கேட்டார்.

தனரூபன் மௌனத்தைத் தொடர்ந்தான். ராஜ மோகினியும் மெல்லத் தன் நினைவை அடைந்தாள்.

“உங்கள் நிபந்தனைக்கு நான் கட்டுப்படுகிறேன்" என்று மட்டும் கூறினாள்.

‘அப்பாடா” என்று பெருமூச்ச விட்ட குருக்கள் “அம்மா, அது என்ன நிபந்தனை! நான் அறியலாமா?" என்று திரும்பக் கேட்டார்.

“இப்போது வேண்டாம் குருக்களே. நீங்கள் வேகமாய் திருமண ஏற்பாடுகளைச் செய்யுங்கள்” என்றாள் ராஜ மோகினி.

அதுவே... அது பெரிதாக ஏதோ ஒன்று என்பதை குருக்களுக்குப் புரிய வைத்துவிட்டது. ஆனால் அப் போதுள்ள நெருக்கடியில், அது தொடர்பானவைகளைப் பற்றியெல்லாம் பேசிட காலமோ நேரமோ இல்லையே குருக்கள், வேகமாய் செயல்படத் தொடங்கினார்.

“எல்லோரும் சந்நிதி வாசல்முன் திரண்டு வாருங்கள், இங்கே இப்போது, நம் கோவில் தாசியாருக்கும் உபாசகரின் சீடரான தனஞ்பனுக்கும் திருமணம் நடக்க இருக்கிறது” என்று உரத்த குரலில் அழைத்தார்.

அது அங்கிருக்கும் பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

“ராஜமோகினிக்கும் தனஞ்பனுக்கும் திருமணமா? இது என்ன விந்தை... எங்காவது காகமும் குயிலும் ஒன்றுபடுமா?” என்று சிலர் யோசிக்கத் தொடங்கிவிடக் கூட்டமும் முண்டியடித்தது. ஊடே சூரைக் காற்றும் வீசியது.

“குருக்களே, இது என்ன விந்தை? கோவில் தாசியாக ராஜமோகினியார் ஊருக்குப் பொதுவானவர். இறைவனைத் தவிர எவரையும் மணக்கக் கூடாதவர். அவர் எப்படி தனரூபனை மணக்கலாம்” என்று அந்த இடைஞ்சலிலும் பரமேஸ்வரத் தேவர் முன்வந்து கேட்டார்.

“தேவரே... இப்போது உங்கள் கேள்விக்கெல்லாம் பதில் கூறிடும் நிலையில் நான் இல்லை. இந்த ஊரைக் காப்பாற்ற வேண்டுமானால், தனஞ்பன் உள்ளிருக்கும் இயக்க கதியிலுள்ள ஸ்ரீஎந்திரத்தை நிறுத்த வேண்டும். அதற்கு தனஞ்பன் கிரஹஸ்தனாக வேண்டும். அவனை மணக்க, ராஜமோகினியும் அதன் பொருட்டே சம்ம தித்தார். இது ஊரைக் காப்பாற்ற அவர் மேற்கொண் டிருக்கும் ஒரு நடவடிக்கை” என்றபடியே சந்நிதிக்குள் நுழைந்து இரு மாலைகளை எடுத்துவந்து தந்து, இரு வரையும் மாலை மாற்றிக்கொள்ளச் செய்தார்.

“நில்லுங்கள்... ராஜமோகினியார் பிராம்மணனான தனரூபனை மணம் செய்துகொண்டுவிட்டால், அவரும் ஒரு குடும்பப் பெண்ணாகி விடுகின்றார். அதன்பின் கோவில் தாசியாக அவரால் திகழ முடியாதே'

“இப்போது அதைப் பற்றியெல்லாம் சிந்திக்க அவகாசமில்லை, வழிவிடுங்கள்!”

“முடியாது. உங்களுக்கு உங்கள் சம்பிரதாயங்களும் ஐதீகங்களும் பெரிது என்றால், இந்த ஊருக்கும் அது பெரிதுதான். எங்கள் கேள்விக்கு தெளிவான பதிலைக் கூறுங்கள்” பரமேஸ்வரத் தேவர், இதுதான் சமயம் என்று அவரும் சட்ட நியாயத்தை பேசத் தொடங்கினார். பொறுத்துப் பார்த்த தனஞ்பன் இடையிட்டான்.

“தேவர் பிரானே, கவலைப்படாதீர்கள்! என்னை கிரஹஸ்தன் ஆக்கிக்கொள்ளவே இந்த மாங்கல்யம் இங்கே கட்டப்படுகிறது. நான் எந்திரத்தை நிறுத்தி இடைவிடாத இந்த மழையும் நின்றுவிட்டால், நம் ஊருக்கு வந்த அழிவு நீங்கிவிடும். அதன்பின், நான் கட்டிய தாலியை நானே ராஜமோகினியின் கழுத்தில் இருந்து கழற்றி விடுவேன். அதன்பின், அவரும் கோவில் தாசியாகத் தொடர்வார். இதில் உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்” என்று தான் விதித்த நிபந்தனையைப் போட்டு உடைத்து விட்டான்.

அதைக் கேட்ட பிறகுதான் பரமேஸ்வரத் தேவர் மனமும் சற்று சமாதானப்பட்டது. கூடவே இருந்த வையாபுரிப் பிள்ளையோ வேறு விதமாக தனது கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

"அப்பா தனஞ்பா, ஒரு வினாடி!”

“என்ன பிள்ளைவாள்?”

“இந்த மழைக்கு இந்த எந்திரம்தான் காரணமா?”

“அதில் என்ன சந்தேகம்?”

“இதை என்னால் நம்ப முடியவில்லை. ஒரு உலோக எந்திரம், எப்படியப்பா ஆகாயத்தில் இப்படி ஒரு பிரள யத்தை உருவாக்க முடியும்?”

“இது என்ன கேள்வி? அதுதான் இந்த எந்திரத்தின் மகிமை, ஆற்றல்”

“என்றால், இந்த எந்திரம் இங்கே இருக்க இவ்வளவு நாளாக ஊரே வறட்சியில் இருந்ததே! இது எந்த வகையில் சரி?”

“பிள்ளையவர்களே... இது மந்திர சப்தத்தால் இயங்கிடும் ஒரு அற்புதம்! சக்தி உபாசகர் ஒருவரால் இது இயக்கப்பட்டுள்ளது. இதை நிறுத்திவிட்டு வந்து உங்கள் கேள்விக்கெல்லாம் பதில் தருகிறேன்” என்றான் தனஞ்பன்.

“ஒருவேளை நிற்காவிட்டால்...”

“அதற்கெல்லாம் இடமே கிடையாது. உங்களுக்கு வேதங்களைப் பற்றியோ எந்திரங்களைப் பற்றியோ தெரியாது. எனவே, தயவுசெய்து நடக்க இருப்பதைக் கவனியுங்கள்” என்று வையாபுரிப் பிள்ளையின் வாயை மூடிய தனஞ்பன், மாலைக் கழுத்தோடு ராஜமோகினி கழுத்தில் தாலியைக் கட்டிடத் தயாரானான்.

கோவில் நாதஸ்வர வித்வானும் மேளக்காரருமே கெட்டிமேளம் இசைத்திட, ராஜமோகினியும் வெட்கத் தோடு அவன்முன் தலை குனிந்தாள். அவளது நெடுநாள் கனவல்லவா அது! தனஞ்பனும் தாலியைக் கட்டி முடித் தான். மஞ்சள் கயிற்றில் இரு மஞ்சள் துண்டுகள். அவ் வளவுதான் தாலி! கூடியிருந்த கூட்டம் ஆர்ப்பரித்தது. இருவருமே குருக்கள் காலில் விழுந்து எழுந்தனர். பின் தனஞ்பன் குருக்களிடம் இப்போது நான் எந்திரத்தை நெருங்குவதற்காக கருவறைக்குள் நுழையலாமா என்று கேட்டான்.

“அவசரப்படாதே தனஞ்பா! அதற்கென நான் உனக்கு தீட்சை தரவேண்டும். அது ஒரு தனிச்சடங்கு” என்று குருக்கள் ஒரு கும்ப கலசத்தை வைத்து அந்தச் சடங்கை தொடங்கி, அவன் வலது கையில் மணிக்கட்டுப் பகுதியில் ரட்சைக்கயிறு ஒன்றைக் கட்டி, காதிலும் தீட்சை மந்திரத்தை ஒதி முடித்தார். அடுத்த நொடியே தனஞ்பன் கருவறைக்குள் நுழைந்துவிட்டான். ஒட்டுமொத்தக் கூட்ட மும் நடக்க இருப்பதைக் காணத் தயாராகியது.

தனஞ்பன் கல்யாண மாலையை கழற்றவே இல்லை. அத்தோடு அம்பிகையை உள்ளேயே ஒருமுறை வலம் வந்தான். பின் ஸ்ரீஎந்திரம் முன்னால் அமர்ந்தான். அருகில் தர்ப்பைப் புல்லால் ஆன ஒரு கட்டு இருந்தது. அதை எடுத்து எந்திரத்தின் பிந்து பாகத்தின் மேல் வைத்து, அதற்கும் தனக்குமாய் ஒரு இணைப்பைக் கொடுத்து கண்களை மூடிக்கொண்டு மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கினான். அந்த மந்திரமும் மெல்ல வேலை செய்யத் தொடங்கியது.

“பொளேர் பொளேர்’ என்று ஒலித்தபடி இருந்த இடி சப்தமானது அடங்கி, மழையின் வேகமும் மெல்லக் குறையத் தொடங்கியது. அந்த

அதிசயத்தைப் பார்த்து முதலில் வியந்தவர் பரமேஸ்வரத் தேவர்தான்! குருக் களிடம் அதைப் பகிர்ந்துகொள்ளவும் செய்தார்.

***

‘குருக்களே இது என்ன மாயம்?’

“மாயம் அல்ல. இதுதான் ஸ்ரீஎந்திரத்தின் சக்தி”

“இந்த எந்திரத்திற்கு இப்படி ஒரு ஆற்றலா?”

“இல்லாமல்தானா இதை கருவறைக்குள் வைத்தே பூஜித்து வருகிறோம்?”

“இப்படி ஒரு சக்தியை வைத்துக்கொண்டு நாம் இவ்வளவு நாட்கள் கஷ்டப்பட்டுவிட்டோமே குருக்களே!”

“எதற்கும் காலநேரம் வரவேண்டும் தேவரே! இதன் ஆற்றலை தேவியின் கைகளில் விட்டுவிடுவது ஒரு விதம்! நாமே நம் கைகளில் எடுத்துக்கொள்வது இன்னொரு விதம். இங்கே இரண்டாவது விதத்தில் எல்லாம் நடந்தபடி உள்ளது.”

“இந்த எந்திரத்தால் மழையை மட்டும்தான் வர வழைக்க முடியுமா?”

“இல்லை... இது பேராற்றல் உடையது. இதைக் கொண்டு, நாம் தேவியிடம் எதை வேண்டுமானாலும் கேட்டுப் பெறலாம்!”

“என்றால், இதை ஒரு அமுதசுரபி என்று சொல்லுங்கள்!”

“தவறு. அந்த அமுதசுரபியைக் கூட இது தந்துவிடும் என்றால், அமுதசுரபியை விடவும் பெரியது இது என்று நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.”

“அற்புதம்... அற்புதம் குருக்களே! இப்போது மழை நிற்கத் தொடங்கிவிட்டது. இந்த மழையால் பெரும் பாதிப்பை நம் ஊர் சந்தித்துவிட்டது. அதிலிருந்து இந்த எந்திரத்தின் உதவியாலேயே மீளலாம்தானே?”

“தாராளமாக! என் எண்ணமும் அதுதான். அது மட்டுமல்ல! இந்த தருணத்தைப் பயன்படுத்தி இந்த ஊரில் உள்ளோரின் கேடுகளை எல்லாமும் சரிசெய்து கொள்வதுதான் புத்திசாலித்தனம்!”

“அருமை... அருமை... அப்படியே செய்யுங்கள்! இப்போது நான்

சொல்கிறேன். சேர சோழ பாண்டிய மண்டலத்திலேயே, இல்லை. இல்லை. வடபுலத்திலுள்ள மண்டலங்களையும் விட நமது சக்திபுரம்தான் செல்வச் செழிப்பிலும் எல்லா விதத்திலும் முதல் ஊராகத் திகழ வேண்டும்" பரமேஸ்வரத் தேவர் ஆசையை அப்படியே கொட்டி முழங்கினார்.

அருகில் இருந்த வையாபுரிப் பிள்ளையோ, "என்ன தேவரே... உங்கள் ஒப்பீடு, பாரத தேசத்தைத் தாண்ட வில்லையே! இப்படி ஒரு அதிசய சக்தியைக் கையில் வைத்துக்கொண்டு உலகையே வென்று நாம் முதல் இடத்தில் இருக்கப்போகிறோம் என்று கூறாமல், இது என்ன பேச்சு?" என்று திருப்பிக் கேட்டார்.

மழையோ முற்றாக நின்றுவிட்டிருந்தது. வானமும் வெறிக்கத் தொடங்கி நட்சத்திரங்கள் தென்படத் தொடங் வின. அதிசயம் அதிசயம் என்று கூட்டம் ஆர்ப்பரித்தது. அவ்வளவு பேரும் கருவறைக்குள் தர்ப்பைக் கட்டுடன் தனரூபன் அமர்ந்திருக்கும் கோலத்தைக் காண முண்டி யடித்தார்கள்.

குருக்களும் தனஞபன் அருகில் சென்று, "தனரூபா உன் பிரார்த்தனை பலித்துவிட்டது. நீ மந்திர உச் சாடனத்தை நிறுத்திக்கொள்ளலாம்" என்றார். அவனும் நிறுத்திக்கொண்டு மெல்லக் கண் திறந்தான். குருக்களையும் பார்த்தான். கருவறை வாயிலில் கூட்டத்தவர்கள், 'தன ரூபன் வாழ்க' என்று கோஷம் போடத் தொடங்கினர்.

"குருக்களே! என்ன இது?"

"உற்சாகம், தனஞபா!"

"அதற்கு எதற்கு என்னை வாழ்த்துகின்றனர்?"

"உன்னால்தானே இந்த அதிசயம் சாத்தியப்பட்டது

"போதும் நிறுத்துங்கள்... இது தேவியின் மகிமை"

"இருக்கலாம். ஆனால், மந்திரத்தை நீ அறிந்திருக்க வில்லை என்றால், ஊர்நலன் பொருட்டு திருமணத்திற்குப் சம்மதித்திருக்காவிட்டால், இந்தக் கோவிலே இந்நேரப் அழிந்து போயிருக்குமே!"

"அதெல்லாம் பிரமை! இதோ இங்கிருக்கிறாளே தாயான லலிதா... இவள் அப்படி எல்லாம் விட்டுவிட மாட்டாள்! இது அவளது பூமி! வந்தனமும் வாழ்த்துப் அவளுக்குத்தான் சென்று சேர வேண்டும்.

எனக்கல்ல முதலில் கோஷத்தை நிறுத்துங்கள். 'ஜெகன்மாதா லலிதாம்பிகைக்கு ஜே' என்று கூறத் தொடங்குங்கள். தனரூபன் தன்னடக்கத்தோடு பேசி ஒரு உயரத்துக்கு போனான். கூட்டமும் அம்பிகையின் நாமத்தை எதி ரொலிக்கத் தொடங்கியது.

அதே சமயம் அங்கேயிருந்து மெல்ல நழுவது தொடங்கியிருந்தாள் ராஜமோகினி!

29

செம்பும் தாமிரமும் மின்னாற்றலைக் கடத்துவதை, மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டிராத அந்த நாளில் மின்னலை வைத்தே நம்மவர்கள் அறிந்தனர். பெரிய கோட்டை ஒன்றின் மேல் ஒரு மழைநாளில் பெரிய இடி விழுந்தது.

இடி விழுந்தாலே பேரழிவு நிச்சயம்! ஆனால், அன்று கோட்டையில் சிறு சேதமும் இல்லை. காரணம், கோட்டையின் மேல் யதார்த்தமாக நட்டு வைக்கப் பட்டிருந்த ஒரு செம்புக்கோல், மின்னலைத் தன் பக்கம் இழுத்து பூமிக்குள் இறக்கிவிட்டது. அதன்பின் அம் மட்டில் நிறையவே ஆய்வுகள் செய்து, செம்பினை ஒரு நல்ல மின்சக்தியாக உணர்ந்தனர்.

ஒளியில், மின்னலின் ஒளிக்கே சக்தி அதிகம்! சூரியனின் துண்டுப் பகுதி போல அது பிரகாசிக்கையில், உலகமே பளிச்சென‌த் தெரிந்திடும். எனவே, சக்தியின் உச்சமாக சூரியனை மட்டுமல்ல, மின்னலையும் கருதினர். அந்த ஆற்றலைத் தாங்கும் ஆற்றல், உலோகங்களில் செப்பு, தாமிரத்துக்கு இருப்பதால், இறை உருவங்களும் இவ்வகை உலோகங்களில் வார்க்கப்பட்டன.

உருவங்கள் மட்டுமல்ல! எந்திரங்களும் இவ் வகை உலோகங்களாலேயே வார்க்கப்பட்டன. அதில், மிக நுட்பமானது ஸ்ரீ எந்திரம் இதைப் புரிந்துகொள்ள சராசரி அறிவு போதாது. அதனைக் கடந்த சூட்சும ஞானம் வேண்டும். சூட்சும ஞானத்தோடு இதைப் புரிந்து கொண்டவர்களுக்கும் கூட இது சமயத்தில் பிரமிப்பைத் தந்து அவர்களையும் திணற அடித்து விடும்.

இதைப் புரியவும், இதை இயக்கவும் முற்பட்ட பலர் மூர்ச்சித்துப்போய் இறந்து விட்டிருக்கிறார்கள். சிலர் சித்த சுவாதீனத்தையே இழந்து பைத்தியமாகவும் ஆகிவிட்டார்கள். துளிகூட தன்னலம் இல்லாமல், நெஞ்சு நிரம்பிய பக்தியோடு இதை நெருங்கினாலே இது வசப்படும்!

ஒன்றின் மேல் ஒன்று என்று ஒன்பது அடுக்கு களை உடையது இது. இதில் அடியிலுள்ள முதல் தளத்தை 'பூபுரம்" என்று அழைப்பார்கள்! அடுத்த தளம், "ஷோடச தளம்" என்னும் பதினாறு பாகம்! அடுத்து மூன்றாவது தளம். இதில எட்டு இதழ்கள்! நான்காவதாக சதுர்த்த சாரம்! இதில்...

*****

அந்தக் கூட்டத்தைவிட்டு வெளியேறி வெளியே வந்த ராஜமோகினிக்கு கவிழத் தொடங்கிவிட்ட இருட்டு கை கொடுத்தது. அவள் அமர்ந்து வந்திருந்த கோச்சு வண்டி, அதுவரை பெய்திருந்த மழையில் அடித்துச் செல்லப்பட் டிருந்தது. அவளுக்கு அது சற்று அதிர்ச்சியாக இருந்த போதிலும், வேகமாக ஒரு முடிவுக்கு வந்தவளாக அவள், கோவிலுக்கு வெளியே இருளில் இறங்கி மறைந்து விட்டாள்.

உள்ளே ஜெயகோஷங்களை தனஞ்பன் கட்டுப்படுத்தி விட்டிருந்தான். அவனருகிலேயே இருந்தார் பரமேஸ்வரத் தேவர். அவர் வரையில் ராஜமோகினியை விடவும் அந்த எந்திரம் இப்போது அவருக்குள் பெரிதாகி விட்டிருந்தது.

அடேயப்பா, என்ன ஒரு அதிசயம்!

பாரதக் கதைக்குள் சமந்தகமணி என்னும் ஒரு அதிசயமான மணியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார். அதே பாரதத்தில் திரௌபதி வசம் வந்துசேர்ந்த அமுதசுரபியான அட்சய பாத்திரம் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறார்.

எல்லாமே கதைப் பொருட்கள்... நிஜத்தில் சாத்திய மில்லாதவை என்று ஓர் எண்ணம் இருந்தது. ஆனால், இப்போது கண் எதிரில் ஸ்ரீஎந்திரத்தின் முப்பரிமாண தோற்றத்தையும் அதன் இயக்க கதியையும் பார்த்துவிட்ட பிறகு, மனது அடங்கவே இல்லை.

குருக்களே கூட, எந்திரம் பற்றிய எண்ணத்தில் பெரிய ஆச்சரியத்தோடுதான் இருந்தார். கூடவே அவருக்குள், ஒரு அச்ச உணர்ச்சியும் ஏற்பட்டிருந்தது. இதன் சக்தியை இந்த ஊரே பார்த்துவிட்ட நிலையில், இதை இனி எப்படி பாதுகாக்கப் போகிறோம் என்கிற பயம் அவரைச் சூழ்ந்துவிட்டிருந்தது. அந்த நாளில் கோயில் நகைகளையும் விக்கிரகங்களையும் திருடும் கள்வர் கூட்டம் நிறையவே இருந்தது.

அவர்கள் இந்த எந்திரம் பற்றித் தெரிந்துகொண்டால் அது பேராபத்தில் முடியுமே என்று தோன்றியது. இப்படி ஆளுக்கு ஆள் எந்திரம் செயல்பட்டதன் தாக்கத்தில் இருந்திட, வையாபுரிப் பிள்ளைதான் ராஜமோகினி அங்கு இல்லாததை முதலில் உணர்ந்தார். தனரூபனிடமே வந்து 'அப்பனே. எங்கேயப்பா உன் மனைவி?' என்று கேட்கவும் அவனும் லேசாக அதிர்ந்து 'இங்குதானே இருந்தாள்?' என்று தேடலுடன் பார்த்தான்.

"கோவிலம்மையார் இப்போதுதான் இந்தப் மக்கமாகச் சென்றார்" என்றாள் ஒரு பெண். ஊர்ஜனங்கவின் வழக்கில் ராஜமோகினியை அவர்கள் கோவிலம்மா என்றே அழைத்தனர். கோவில்தாசி என்பது பொதுப் பெயராகவே இருந்தது.

"இந்தப் பக்கம் என்றால் எங்கே? பொழுது வேறு திருட்டிவிட்டதே! அப்பா தனஞ்பா! ஊரைச் சொன்னது போலக் காப்பாற்றிவிட்டாய். அதேபோல் கோவில் ராசியான ராஜமோகினியாரையும் தாலியைக் கழற்றச் செய்து திரும்பவும் கோவில் தாசியாக அவர்களை ஆக்கிவிடுவாய்தானே?" எனக் கேட்டார் வையாபுரிப் பிள்ளை.

"இது என்ன கொடுமை! கட்டிய தாலியைக் கழற்றுவதா? ஒரு பெண் கழுத்தில், தாலி என்பது ஒரு முறைதான் ஏறலாம்" என்று ஒரு பெண் சோகமாகக் குரல் கொடுத்தாள்.

"அதெல்லாம் ஊரைச் சார்ந்த பெண்களுக்கு! ஒரு கோவில் தாசிக்கு அது பொருந்தாது. தாசியாரும் ஊரின் நலன் கருதியே இங்கே மணமகளாகச் சம்மதித்தார் காரியமும் முடிந்துவிட்டது. எனவே, முன்பே சொன்னது போல பேச்சு மாறாமல் நடந்து கொள்வதுதான் சரி" என்றார் பிள்ளை. ஆனால் பரமேஸ்வரத் தேவரிடம் மட்டும் எந்தக் கருத்துமை இல்லை. தீவிரமாகச் சிந்தித்த படியே இருந்தார்.

தனரூபன் குருக்களிடம் சொல்லிக்கொண்டு ராஜ மோகினியைத் தேடிப் புறப்பட்டான். புறப்படும்முன் "நான் சொன்னபடி நிச்சயம் நடந்து கொள்வேன். ராஜ மோகினியைச் சந்தித்து, நான் கட்டிய தாலியை நானே கழற்றிவிடுவேன். நான் மீண்டும் பிரம்மச்சாரியாவதும் ராஜமோகினி மீண்டும் கோவில் தாசியாவதும் தவிர்க் கவே முடியாதவை. இது உறுதி" என்றான்.

ஆனால், அதைக் கேட்டு வையாபுரிப் பிள்ளை சிரித்தார். தனரூபன் அங்கிருந்து சென்றுவிட, சந்நிதி முன் ஜனக்கூட்டம் முட்டி மோதியபடி இருக்க, குருக்களுக்கு அவர்களைச் சமாளிப்பதே பெரும்பாடாக இருந்த

நிலையில் பிள்ளை, தேவரை குடையத் தொடங்கினார்.

***

‘என்ன தேவரே, பலமான யோசனை?’

“யோசனைதான்! இந்த எந்திரத்துக்குள் இன்னமும் இதுபோல, எவ்வளவு சக்தி இருக்குமென்று யோசித்தபடி இருக்கிறேன்.”

“அதிலென்ன சந்தேகம்! இதைக் கொண்டு, நாம் எதை வேண்டுமானாலும் பெறமுடியும். உங்களுக்குப் புரியும்விதமாகக் கூறுவதானால், கோவில் தாசியாரை நீங்கள் உங்கள் விருப்பத்துக்கு இணங்கவைக்க முடியும். இந்த சக்திபுரம், சோழநாட்டின் ஒரு ஊராகும். சோழ நாடோ இன்று நாயக்கர்களின் பிடிக்குள் இருக்கிறது. அந்த நாயக்கர்களிடம் இருந்து இந்த நாட்டை மீட்டு, சேது நாட்டுக்கு ஒரு சேதுபதி அரசனாக திகழ்வதுபோல நீங்கள் அரசராகவும் திகழ முடியும்!

ஒருபடி மேலே போய் சேது நாட்டு சேதுபதியில் இருந்து, மதுரை உள்ளிட்ட 72 பாளையாதிபதிகள், அது போக மைசூர் வரை உள்ள கன்னட ராஜ்ஜியம். இந்த பக்கமாக நமது செஞ்சியும், காஞ்சியும் கொண்ட தொண்டை மண்டலம் என்று எல்லாவற்றுக்கும் நீங்களே மகாராஜாவாக முடியும். இவ்வளவெல்லாம் எதற்கு? இந்த எந்திரத்தோடு டெல்லிப் பட்டணம் சென்று நிற்க, அங்குள்ள மொகலாயப் பேரரசே வீழ்ந்து, நீங்கள் இந்த பாரத நாட்டுக்கே சக்கரவர்த்தி ஆகிவிடலாம்.”

வையாபுரிப்பிள்ளைக்கு கொஞ்சம் பூகோள ஞானம் உண்டு. அதனால் அவரால் இப்படி எல்லாம் பேச முடிந்தது. அவர் பேசப் பேச, பரமேஸ்வரத் தேவர் முகத்தில் கன்னக்கதுப்புகளில் எல்லாம் துடிப்பு! கண் களிலும் ஆசை பொங்கி வழிவதுபோல் இருந்தது.

“பிள்ளை, என்னை, கனவு காண வைக்கவில்லையே?”

“கனவா... சரிதான்! அவ்வளவும் நனவு! இப்படி ஒரு அதிசயத்தை இப்படி ஒரு இறைசக்தியைக் கையில் வைத்துக்கொண்டு எந்த மடையனாவது கனவு காணா திருப்பானா? அதிலும் இந்த சக்திபுரத்திலேயே பெரும் புகழும் செல்வாக்கும் உடையவர் நீங்கள். நீங்கள் தாராள மாய் நான் சொன்னபடி செயல்பட முயலலாம்.”

“நான் தெரியாமல்தான் கேட்கிறேன். இந்த விருப்பம் உமக்கு இல்லையா?”

“ஏன் இல்லாமல்? முதலில், நீங்கள் சக்கரவர்த்தி ஆகுங்கள். உங்களுக்குப் பிறகு, நான் ஆகிவிட்டுப் போகி றேன். நமக்குள், நாம் ஒரு ஒப்பந்தம் வேண்டுமானால் போட்டுக்கொள்வோம்.”

“அப்படியா?”

“அப்படியேதான்!”

“அதற்கு இந்த குருக்களும் தனஞபனும் சம்மதிப் பார்களா?"

“என்ன அது?”

“தனரூபன், இப்போது ஊருக்காகத்தான் ராஜ மோகினி கழுத்தில் தாலியைக் கட்டினான். இப்போது அவனே அதை அவிழ்க்கவும் புறப்பட்டுவிட்டான். நாம் இந்த விஷயத்தில் ராஜமோகினியார் பக்கம் நின்று, நடந்த திருமணம் நடந்ததுதான் என்று ஊர்ஜிதம் செய்யவேண் டும்.”

“ஐயோ! அதன்பின் ராஜமோகினி... எப்படி எனக்குக் கிடைக்கமுடியும்?”

“முதலில், சக்கரவர்த்தி ஆகும் வழியைப் பார்ப்போம் சக்கரவர்த்தி ஆனபின், அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாமே!"

“ஓ! நீங்கள் அப்படி வருகிறீர்களா?”

“என்ன தேவரே! இப்போது இப்படி யோசிப்பது தானே புத்திசாலித்தனம்! நாம் நினைத்தது நடக்க வேண்டும் என்றால் தனஞபன் கிரஹஸ்தனாகத் திகழவேண்டும் அவன் ராஜமோகினியைப் பிரியக் கூடாது. ராஜ மோகினிக்கும், தனஞபன் என்றால் உயிர். இந்தத் திருமணம் பொம்மைக் கல்யாணமில்லை என்று நாம் சொல்லப் போவதைத்தான் அவளும் வரவேற்பாள். பதிலுக்கு அவள் மூலமாகவே நாம் நமது விருப்பங்களை ஈடேற்றிக்கொள்ள முயலுவோம்.”

“சரி, புறப்படுங்கள்! தனரூபன், ராஜமோகினியிடம் இருந்து, தாலியைக் கழற்றும் முன் தடுத்து நிறுத்துவோம் என்று தேவரும் பிள்ளையும் அங்கிருந்து புறப்பட்டனர் குருக்கள், ஜனங்களிடம் போராடிக் கொண்டிருந்தார்.

சில பெண்கள் தங்கள் கழுத்து தங்க நகைகளைக் கழற்றி, எந்திரத்தை அந்த ஆதிசக்தியாக எண்ணி அதன் மேல் வீசி எறிந்தனர். சிலர் கைகளைக் கூப்பிக்கொண்டு தேம்பி அழத் தொடங்கினார்கள். இன்னும்

சிலர், அங்கேயே படியில் தலையை மோதிக்கொண்டு உயிரை விடப் பார்த்தார்கள்.

ஒரு கூட்டம், கோவிலைச் சுற்றி இடிந்து கிடந்ததை யும் எரிந்து கிடந்ததையும் அகற்றிச் சுத்தப்படுத்தும் முனைப்பில் இருந்தது. அவர்களை எல்லாம் தலையாரி வேலை வாங்கிக்கொண்டிருந்தார்.

'திகு திகு' வென்று நூற்றுக்கணக்கான தீப்பந்தங்கள்! அதில் சிலர், இடி விழுந்து கருகிவிட்டிருந்த சக்தி உபாசகரை அப்புறப்படுத்துவதில் மும்முரமாயிருந்தனர்.

***

ராஜமோகினியின் மாட வீடு! உள்ளே மோகினி, அவளது தாயான சௌக்யமோகினியின் காலில் விழுந்து வணங்கிக்கொண்டிருந்தாள்.

"மோகினி! என்ன இது! உன் கழுத்தில் தாலிச்சரடு தெரிகிறதே! என்ன நடந்தது?" என்று பதற்றத்தோடு கேட்க, நடந்ததைச் சொன்னாள்.

"ஊரைக் காப்பாற்றத்தான் நாம் இருக்கிறோம். அந்த வகையில் உன் செயலில் தவறு இல்லை. ஆனால், நாம் இந்த ஆதிசிவனுக்கு நம்மை ஒப்புக் கொடுத்துவிட்ட வர்கள். நம்முன், மனிதர்கள் அற்பமானவர்கள்! அற்ப மானவர்கள் கட்டிய தாலியும் இருக்கக்கூடாது. அதைக் கழற்றிவிடு" என்ற சௌக்யமோகினியின் பேச்சு, ராஜமோகினியின் காதிலேயே விழுந்ததுபோல் தெரிய வில்லை.

"மோகினி! நான் சொன்னது உன் காதில் விழ வில்லையா?"

"விழுந்ததம்மா!"

"இன்னும் என்ன சிந்தனை? அதைக் கோவிலிலேயே கழற்றி, அங்குள்ள வேப்பமரத்தில் கட்டிவிட்டு வந்திருக்க லாமே!'

"இல்லையம்மா! இது, என் நெடுநாள் விருப்பம். அதிலும் நான் மனதார விரும்பும் ஒருவரே, என்னை இன்று இந்த ஊர்ப்பெண்களில் ஒருத்தியாக ஆக்கியிருக்கிறார். இந்தக் கோவில் தாசிப்பொறுப்பில் இருந்தும் விலகி ஒரு குடும்ப வாழ்க்கை வாழ, இது எனக்கு கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பமாகும்."

"என்ன உளறுகிறாய்?"

''உளறவில்லை... இந்த வாழ்க்கை முறையில் உங்க ளுக்கு விருப்பமா

அம்மா?”

“விருப்பமில்லாமல்தான் எனக்கு முன் பதினோரு பேர் இதே கோவிலில் கோவில்தாசிகளாகத் திகழ்ந்தார் களா... என்னைத் தொடர்ந்து பதிமூன்றாவதாக... நீ இப்போது பதவியில் இருக்கிறாய்!”

“அம்மா, இது பதவியல்ல, பணி!”

“ராஜமோகினி! நீயா இப்படிப் பேசுகிறாய். பணி தான்! நாம் தாசியாகவே காரணம், இந்தக் கடப்பாடு நமக்கு விதிக்கப்பட்டிருப்பதால்தான்! இது ஒரு இறைத் தொண்டு.”

“உண்மைதான்! ஆனால், ஊரிலுள்ள செல்வந்தர்கள் அதிகாரத்தில் உள்ளவர்களும் வளைந்துகொடுத்து போக வேண்டியுள்ளதே! இந்தத் தொண்டை நான் குலமகளாகி யும் தொடரமுடியுமே!’’

“நீ முடிவாக என்ன கூறுகிறாய்?”

“நான் இதிலிருந்து விடுபட்டு குலமகளாக, தனஞப னின் தர்மபத்தினியாக வாழவே விரும்புகிறேன்.”

“ராஜமோகினி! இதெல்லாம் சாத்தியமில்லை. அந்தப் பிள்ளை உன்னை விரும்பி மணக்கவில்லை. ஊருக் காகவும் சம்பிரதாயத்துக்காகவும்தான் இந்தத் திருமணம் நடந்துள்ளது.”

“இருக்கலாம்! ஆனால், நான் இதை உண்மையில் நடந்ததாகக் கருதுகிறேன்!”

"நீ எப்படி நினைத்தாலும சரி! தனஞபன், ஒரு அந்தணர் வீட்டுப்பிள்ளை, உன்னை ஏற்பதை, ஒருக்காலும் அவர்களது வீட்டில் விரும்பமாட்டார்கள். ஊரில் உள்ள வர்களும், உனது இந்த எண்ணத்தை ஆதரிக்க மாட் டார்கள். உன்னை கோவிலம்மா என்று கொண்டாடிய வர்களே தூற்றுவார்கள்.”

“தூற்றிவிட்டுப் போகட்டும்! நான், இனி இந்த ஊரில் வாழ்ந்தால்தானே?”

“இங்கே வாழாமல்...?”

“அவர் கட்டிய இந்த தாலியோடு, அவரை என் மனதில் சுமந்துகொண்டு நான் காசி நோக்கிச் செல்ல விரும்புகிறேன்!”

“காசிக்கா? ராஜமோகினி, என்னாயிற்று உனக்கு? ஏன்,

இப்படியெல்லாம் பேசுகிறாய்?” சௌக்யமோகினி அப்படிக் கேட்ட வேளையில் அவள் வீட்டு முன் தனஞ்பன் வந்து நின்றிருந்தான். அவன் முகத்தில், கோபத்தின் கனல்!

30

ஸ்ரீயந்திரத்தின் நான்காவது சதுர்த்த சாரத்தில் பதினான்கு கோணங்கள் உள்ளன. ஐந்தாவது அடுக்கு. பஹிர்தசாரம் என்னும் பத்து கோண அடுக்கு. ஆறாவதாக அந்தர்சாரம் எனும் தளமாகும். இதில் வெளிப்பத்து கோணங்கள் உள்ளன. ஏழாவதாக அமைந்திருக்கும் அடுக்கில் அஷ்ட கோணம் என்னும் எட்டு கோணங்கள். எட்டாவது அடுக்கில் த்ரிகோணம் அதாவது மூன்று கோணம்.

ஒன்பதாவதில்தான் பிந்து, என்னும் உச்சியில் அமைந்திருக்கும் மையப்புள்ளி. இப்படி ஒவ்வொரு அடுக்கிலும் ஒவ்வொரு வித அளவில் கோணங்க ளோடும் அப்படியே சரிந்து மேலேறி பிந்து என்னும் உச்சியோடு முடிவடைவதே ஸ்ரீயந்திரமாகும்! இதைச் சுருக்கமாக ஒன்பது ஆவரணங்கள் என்றும் கூறு வார்கள். இதை சூட்சுமப் பொருளில் 'மஹாமேரு' என்றும் அழைப்பார்கள்.

ஸ்ரீயந்திரம் எதற்காக இப்படி ஒன்பது தளங்கள் கொண்டு வடிவமைக்கப்பட வேண்டும்? அந்தத் தளங்களில் எதற்காக குறிப்பிட்ட எண்ணிக்கையில் கோணங்கள்? இதெல்லாம் என்ன கணக்கு? நிச்சயமாக இதனுள் ஒரு திட்டமிட்ட கணக்கு இருப்பது புரிகிறது. கணக்கு என்று வந்துவிட்டாலே துளியும் பிசிறின்றி சரியான விடை என்று ஒன்று வந்தாக வேண்டும்!

கணக்கை, நம் சான்றோர்கள் நீதி நியாயத்தின் வடிவம் என்றும் அழைப்பார்கள். ஆம். சமமாக ஒருவரைப் பாவிப்பது, சமமாக ஒருவருக்கு ஒன்றைத் தருவது என்பதிலதான் ஏற்றத்தாழ்வு இல்லாத நிலைப்பாடு உள்ளது. அனைவருக்கும் சமமாக ஒரே அளவாக ஒன்றைத் தரவேண்டும் என்றால், அதற்கு கணக்கு வேண்டும்!

ஒரு மூட்டை நிறைய அரிசி உள்ளது. இதை பத்து பேருக்குப் பிரித்து சமமாகத் தரவேண்டும் என்றால், அதை பத்தாகப் பகுத்து வழங்க வேண்டும். அப்படிப் பகுத்து வழங்க, அந்த மூட்டையில் முதலில் எவ்வளவு அரிசி உள்ளது என்று தெரிந்துகொள்ள வேண்டும். முப்பது படி இருக்கிறது என்றால், பத்துபேருக்கும் தலா மூன்றுபடி என்று

தரவேண்டும். இங்கே கணக்கு என்று ஒன்று இருக்கப் போய்த்தான் நியாயமாக நடக்க முடிந்தது. இல்லாவிட்டால் குத்து மதிப்பாகத்தான் தரவேண்டி இருக்கும். அதில் ஒருவருக்கு கூடலாம். ஒருவருக்கு குறையலாம் அல்லவா!

ஆக, எங்கே கணக்கு உள்ளதோ அங்கே நீதி நியாயம் உள்ளது. ஸ்ரீயந்திரமும் கணக்குக்கு உட் பட்டுத்தான் இருக்கிறது. அதன் அடி, நீளம், உயரம், ஒவ்வொரு தளமும் உள்ள விதம், அதில் உள்ள கோணங்கள், அந்த கோணங்களும் உட்புறம் பார்த்தும் வெளிப்புறம் பார்த்தும் உரிய அளவினில் உள்ள விதம் என்று இருப்பதன் பின்னால் ஒரு திட்டமிட்ட கணக்கு உள்ளது. எல்லாக் கணக்குக்கும் ஒரு விடை உண் டல்லவா? ஸ்ரீயந்திரக் கணக்கின் விடை என்பது என்ன?

*****

தனரூபன், ராஜமோகினியின் வீட்டு வாசலில் நின்று கொண்டு 'யாரங்கே?' என்று பெருங்குரல் எடுத்துக் கத்தினான். குரல் உள்ளே எதிரொலித்தது. சௌக்ய மோகினி தனஞ்பன் வந்துவிட்டிருந்ததைப் புரிந்துகொண் டாள்.

“மோகினி... இது தனஞ்பன் குரல்! அவன் வந்து விட்டான்... நீ என்ன செய்யப்போகிறாய்?” என்று கேட் டாள்.

“அவன், இவன் என்காதே... அவர் உன் மாப் பிள்ளை!”’

“போதும், உளறாதே! அந்தப் பிள்ளையின் குரலில் எதிரொலிக்கும் கோபத்தை உன்னால் உணர முடிய வில்லையா?”

"அதை நான் பார்த்துக்கொள்கிறேன்” என்ற ராஜ மோகினி, தன் வெள்ளிக் கொலுசு கால்கள் கொஞ்ச வெளியில் வந்து, தனஞ்பனை உள்ளே அழைத்தாள்.

“தயவுசெய்து உள்ளே வாருங்கள்.”

“முடியாது. உன் வீட்டுக்குள் என்னால் வரமுடியாது. அது என் வரையில் பெரும் ஆசாரபங்கம்.”

“மாமியார் வீட்டுக்குள் மருமகன் நுழைவது ஆசார பங்கமா? வேடிக்கையாக உள்ளது!”

“போதும் நிறுத்து! முதலில், வெளியில் வந்து ஊரார் பார்க்க நான் கட்டிய தாலியைக் கழற்றிக்கொடு”

“மன்னிக்க வேண்டும்! அது என்னால் முடியாது.”

“ஏன் முடியாது? நமது ஒப்பந்தம் மறந்துவிட்டதா?”

“மறக்கவில்லை. அதேசமயம் அந்த ஒப்பந்தப்படி நடக்க, நான் விரும்பவில்லை”

“இது, நீ எனக்குச் செய்யும் துரோகம்!”’

“இருக்கலாம். திருமணமாகி சிலமணி நேரத்தி லேயே தாலியைக் கழற்றித் தந்து அந்த உன்னதமான சம்பிரதாயத்துக்கு நான் செய்யப்போகும் துரோகத்தின் முன் இது சிறியது என்பது என் கருத்து!”

“நமக்கு நடந்தது திருமணமே அல்ல! அதை, முதலில் புரிந்துகொள்:”

“திருமணமே அல்ல என்றால், நீங்கள் பிரம்மச் சாரியாக கோயில் கருவறைக்குள் நுழைந்து ஸ்ரீயந்திரத்தை இயக்கியது மட்டும் குற்றமில்லையா?”

“ஊரைக் காப்பாற்ற செய்த செயல் அது! அதை விமர்சித்து, உன் முடிவை நியாயப்படுத்த முயலாதே!”

“இது, எனக்குக் கிட்டியுள்ள அரிய வாய்ப்பு. இதை நான் இழக்க விரும்பவில்லை. நான் விரும்பியவரே எனக்கு மணாளன் ஆகியுள்ளார். இப்படியே நான் இறந்துவிடவும் சித்தமாக உள்ளேன்.”

இருவரும் வீட்டு வாசலிலேயே நின்றுகொண்டு வாதப்பிரதிவாதத்தில் ஈடுபட்ட சமயம், அதைக் கேட்டு செளக்யமோகினி முதல் வீட்டிலுள்ள சேடிப்பெண்களும் மற்றவர்களும் கலங்கி நிற்கையில், இருள் சூழ்ந்த வாயில் பரப்பில் ஒரு கோச்சு வண்டியில் பரமேஸ்வர தேவரும் வையாபுரிப் பிள்ளையும் வந்து இறங்கினர்.

***

"வாருங்கள் வாருங்கள்” என்று வரவேற்றாள் ராஜமோகினி.

“இது என்ன! மாப்பிள்ளை இப்படி, வாசலில் நிற் கிறார்?’ என்று ஒன்றும் தெரியாதது போல ஆரம்பித்தார் பிள்ளை. பதிலுக்கு தனஞ்பன் அவரை முறைத்தான்.

“நல்ல நேரத்தில் வந்தீர்கள்! அவருடன் உள்ளே வாருங்கள், அமர்ந்து பேசலாம்” என்றாள் செளக்ய மோகினி.

“பேச என்ன இருக்கிறது” தேவர் பளிச்சென்று திருப்பிக் கேட்டார்.

“தேவர் பெருமானே, இது என்ன பேச்சு?” தனரூபன் அவர் மேல் பாய்ந்தான்.

“கோபிக்காதே தனரூபா! நீ இப்போது இந்த ஊரின் காவலன். ராஜமோகினியார், ஆலயத்தின் காவலர், இரண்டு காவலர்களும் ஒன்றாக இருந்து அதிசயத்துக் கெல்லாம் அதிசயமான ஸ்ரீயந்திரத்தைப் பயன்படுத்தி இன்னும் என்னவெல்லாம் சாதிக்கலாம் என்று சிந்திக் காமல், அசட்டுத்தனமாய் கோபப்பட்டுப் பேசுவது சரியா?”

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“புரியவில்லையா? நீங்கள் எதற்காகப் பிரிய வேண்டும்? ஏன் பிரிய வேண்டும்? அதை முதலில் யோசியுங்கள்”

“நானும் அதைத்தான் கேட்க விரும்புகிறேன். திரு மாங்கல்யம் என்பது விளையாட்டுப் பொருளா? நினைத்த போது அணிந்து கழற்ற!”

“போதும் நிறுத்துங்கள்! ஊரைக் காப்பாற்ற வேறு வழி தெரியாமல் அப்படி நடக்க நேரிட்டது. இது உங்க ளுக்கும் தெரியும்.”

“உண்மைதான்! அதே ஊரை, தொடர்ந்து காப்பாற்ற நீங்கள் இணைந்தே இருந்தால் என்ன?”

“இந்த ஊரைத் தொடர்ந்து காப்பாற்ற, அது என்ன இப்போது ஆபத்திலா உள்ளது?”

“ஆபத்து என்று வந்தால்தானா? வாராது வந்த மாமணியான ஸ்ரீயந்திரத்தைக் கொண்டு இந்த ஊரை, இந்த ஊர் சார்ந்த சோழநாட்டை. இந்த சோழ நாட்டை ஒரு அங்கமாகக் கொண்ட இந்த பரத கண்டத்தை, இந்த பரத கண்டத்தை தன்னகத்தே கொண்ட இந்த பூ உலகத்தை வசப்படுத்தி, இந்த உலகமே ஒரு சக்திபுரம், உலகமே ஒரு சக்திக் கோட்டை என்று ஆக்க முயற்சிக் காமல் இதென்ன பேச்சு!”

பரமேஸ்வரத் தேவர் கேட்ட விதமும், அப்போது அவர் முகத்தில் முன் மாடத்து தீப்பந்த ஒளிபட்டு ஒளிர்ந்த விதமும் அலாதியாக இருந்தது. தனரூபன் வாயடைத்து நின்றுவிட்டான். தேவரின் கருத்து ராஜமோகினியையும் கவர்ந்துவிட்டிருந்தது.

“அருமை தேவரே, அருமை! நான் கூட இவ்வளவு தூரம் யோசிக்கவில்லை.”

“மோகினியாரே! நீங்கள் இந்த ஊரின் பொக்கிஷம். அந்த பூணுயந்திரம் பொக்கிஷத்துக்கெல்லாம் பொக்கிஷம். இந்த இரண்டையும் நாங்கள் அவ்வளவு சாதாரணமாக விட்டுவிடுவோமா?” என்று வையாபுரிப் பிள்ளை இடை யில் திருவாய் மலர்ந்தார்.

தனரூபன் சற்று ஸ்தம்பித்திருந்தான். விஷயம் வேறு வடிவம் எடுத்து விபரீதமாவது போல் அவனுக்குத் தோன்றியது.

“இப்படி வாசலில் நின்று கொண்டே பெரும் ராஜ்ஜிய விஷயங்களைப் பேசுவது சரியல்ல! தயவுசெய்து உள்ளே வாருங்கள்” என்று மீண்டும் அழைத்தாள் சௌக்யமோகினி.

“இல்லை... நான் வரமாட்டேன்! உங்களிடம் நான் பேராசையைப் பார்க்கிறேன். ஸ்ரீயந்திரம் என்பது பொக்கிஷம்தான்! ஆனால், அதனிடம் ஒருவன் பக்தியைக் கேட்க வேண்டும். பணிவைக் கேட்க வேண்டும். அதைக் கொண்டு ஊர் உலகை வசப்படுத்துவது, அதை ஆள முற்படுவது என்பதெல்லாம் பேராசை, துர்புத்தி! நான் இதற்கு, ஒருகாலும் சம்மதிக்கமாட்டேன்” என்று பதிலுக்கு வெடித்தான் தனஞ்பன்.

அதே வேகத்தில், “நாளையே தஞ்சைக்குச் சென்று, நாயக்க மன்னரின் பிரதிநிதிகளிடம் இங்கு நடந்ததைக் கூறி எனக்கான நியாயத்தை அடைவேன். ராஜமோகினி! என் விருப்பத்துக்குத் துளியும் இடமில்லாத உன் கழுத்துத் தாலியை, ஊரார் முன் நீ கழற்றும்வரை நான் ஒய மாட்டேன்’ என்று கூறிவிட்டு திரும்பிச் சென்றான். தேவரும் பிள்ளையும் அர்த்தபுஷ்டியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

ராஜமோகினியின் முகமோ சுண்டிவிட்டிருந்தது.

சௌக்யமோகினியோ, “ராஜமோகினி! பேசாமல், அந்தப் பிள்ளை சொன்னபடி நடந்துகொள்” என்றாள்.

“கோவிலம்மா...”

“சொல்லுங்கள் பிள்ளை!”

“கலங்காதீர்கள்! தனஞ்பன் சற்று பிடிவாதக்காரன். அவனால் ஒன்றும் ஆகிவிடாது.”

“விஷயத்தை அரசாங்கம் வரை சொண்டுசென்றால், வழக்கு விசாரணை

என்றெல்லாம் வருமே?”

“உண்மைதான்! ஆனால், அதை தடுத்து நிறுத்தத் தான் நம்வசம் ஸ்ரீயந்திரம் என்னும் பெரும் அதிசயம் உள்ளதே!”

“எப்படி?”

“தனரூபன் நாளைக் காலை தஞ்சைக்குப் புறப்பட்டுச் சென்று அங்குள்ள நாயக்க அரசின் ராஜ்ஜியப் பிரதானி களைப் பார்த்து விஷயம் மதுரை வரை செல்லும் முன், நாம் இங்கே ஸ்ரீயந்திரத்தைக் கொண்டே தனஞ்பனை முடக்கிப் போட்டுவிடலாம்!”

“எப்படி என்று விபரமாகக் கூறுங்கள்.”

‘‘விடியற் காலை குளித்து முடித்து கோயிலுக்கு வாருங்கள். நாங்களும் வந்து விடுகிறோம். பூஜையந்திரத் திடமே நீங்கள் வேண்டுங்கள். உங்கள் எண்ணத்திற்கு மாறாக ஒருவரும் நடந்துகொள்ளக்கூடாது என்று.”

“வேண்டிக்கொண்டால் போதுமா?”

“அது எப்படி போதும்? அதற்கென்று மந்திரம் உள்ளது. அது தனஞ்பன் போல் சக்தி உபாசகர்களுக்கு மட்டுமே தெரியும்! அப்படி ஒரு உபாசகர் திருக்கடவூரில் இருக்கிறார். அவரை நாங்கள் இப்போதே சென்று அழைத்து வருகிறோம்.”

“அப்படியா? ஸ்ரீயந்திரத்தை இயக்கவல்ல இன் னொரு உபாசகரும் இருக்கிறாரா?”

“என்னம்மா, அப்படிக் கேட்டுவிட்டாய்? தனஞ்பனின் குருவான வைத்யநாத தீட்சிதரே ஒரு உபாசகர்தானே அவர் இப்போது ஊரில் இல்லாமல் யாத்திரை போய்விட் டிருக்கிறார் என்பதுதான் பிரச்னை. இல்லாவிட்டால் அவரையே, சமாதானப்படுத்தி எதையெல்லாமோ சாதிக்க லாமே?”

“என்றால், முதலில் நீங்கள் அவரை அழைத்து வாருங்கள். எக்காரணம் கொண்டும், நான் என் கழுத்தில் ஏறிய தாலியை இழக்கத் தயாரில்லை!”

“இம்மட்டில் நாங்கள் உங்கள் பக்கம் அதேசமயம் எங்கள் வரையில் ஒரு வேண்டுகோள்!”

“என்ன?”

“அந்த ஸ்ரீயந்திரத்தை நாங்கள் பயன்படுத்த தடை ஏதும் வந்துவிடக்

கூடாது.”

“அது ஊருக்குப் பொதுவானது. அம்பிகையின் சக்தி வடிவம்! அம்பிகையிடம் உங்கள் விருப்பத்தைக் கேட்டுப் பெற உங்களுக்கும் உரிமை உண்டே!”

ராஜமோகினி உற்சாகமாகக் கூறி அனுப்பிவைத் தாள். அவர்களும் குதிபோட்டபடி திரும்பினர். ஆனால், சௌக்யமோகினி முகத்தில் மட்டும் கலவர ரேகைகள்...

“என்னம்மா?”

“அந்த யந்திரத்துக்கு இப்படி ஒரு சக்தி இருப்பதும், அது இப்படியெல்லாம் சிக்கலை உருவாக்கும் என்பது இவ்வளவு நாளாக எனக்குத் தெரியாமல் போனது மட்டுமல்ல! இனி என்னாகுமோ என்பதை நினைத்தால் பயமாக உள்ளதம்மா!” என்றாள்.

“எதுவும் ஆகாதம்மா! நீயும் நானும் தாசிப்

பட்டத்திலிருந்து விடுபடவும் இது ஒரு சந்தர்ப்பம். பேசாமல் இரு!” என்று அதட்டினாள் ராஜமோகினி.

31

"ஸ்ரீஎந்திரத்தின் வடிவ அமைப்பை ஒன்பது தளங்களாகக் கண்டோம். அடிப்பாகம் ஒரு சதுர பாகமாக இருக்க, அதன்மேல், ஒவ்வொரு தளங் களும் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே சென்று உச்சியில் ஒரு புள்ளியில் பிந்து என்கிற பெயரில் அது முடிந்ததையும் பார்த்தோம்.

எதற்கு இப்படி ஒரு வடிவம் என்று ஒரு கேள்வி எழலாம். நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு வடிவம் இருக்கத்தான் செய்யும். அந்த வடிவம் இயல்பாக ஏற்பட்ட ஒன்றாகவும் இருக்கும். நாற்காலிக் கென்று ஒரு வடிவம், மேஜைக்கென்று ஒரு வடிவம், பயணிக்கும் பல்லக்குக்கு என்று ஒரு வடிவம். இந்த வடிவங்களை நாம் திட்டமிட்டு உருவாக்கியதில்லை. பயன்பாட்டு நோக்கத்திற்கு ஏற்ப தானாக ஏற்பட்டவை.

அப்படித்தான் ஸ்ரீஎந்திர வடிவமும்! வடிவ ரீதியாக இதைப் பார்த்தாகி விட்டது. இதனுள் எதற்காக தாமரை இதழ்போல வடிவம், எதற்காக முக்கோணங்கள், அவற்றுக்கும் ஏன் குறிப்பிட்ட அளவுகள் என்கிற கேள்விக்குள் அடுத்து புகுந்து விடைதேட முயல் வோம். நம் மனதில்

எழும்பி நிற்கும் பல கேள்விகளுக் கும் மெல்ல விடை கிடைப்பதை போகப் போக உணரலாம். ஸ்ரீஎந்திரம் என்பது, இன்றைய விஞ்ஞான சிந்தனைகளுக்கெல்லாம் உச்சமான ஒன்று!

இனிப்புகள் விற்கும் கடையில் அழகுக்காக மைசூர் பாக்கினை கூம்பு வடிவில் அடுக்கி, பின்பக்கமாய் ஒரு கண்ணாடியும் வைத்திருப்பார்கள். இந்தக் கூம்பு வடிவ மைசூர் பாக் மலையானது கண்ணாடியில் பட்டுப் பிரதி பலித்து இருமடங்காக கண்ணுக்குத் தெரியும். பூநீஎந்திரத்தைப் பார்க்கும்போதும், சிலருக்கு இந்த நினைவுதான் வரும். ஆனால், ஒரு ஸ்ரீஎந்திரம் என்பது ஆயிரம் அணுகுண்டுகளின் ஆற்றலை விடவும், ஆயிரம் அணு உலைகளின் ஆற்றலை விடவும் மேலான ஆற்றல் உடையது.

பௌதிக ரீதியாக இயக்க சக்தியை மொழியாகிய எழுத்தில் வைத்திருக்காமல் வடிவத்தில் கொண்டிருக் கிறது என்பதை முதலில உணர வேண்டும். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. அந்த மொழி களுக்கென்று எழுத்துக்களும் உள்ளன. அதை, அந்த மொழியை அறிந்தவரால் மட்டுமே படிக்க முடியும். ஆனால், உலகில் அனைவருக்கும் பொதுவாக எண்கள் மட்டுமே உள்ளன. மொழிகளில் ஏற்பட்ட பெருக்கம் எண்களில் ஏற்படாதது ஏன் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஒன்றிலிருந்து ஒன்பது வரையிலான எண்களே, உலகம் முழுக்க எல்லா மதத்தவர்க்கும் இனத்தவர்க்கும் பொதுவாக மாறாததாக உள்ளது.

ஒரே கணக்கை இந்தியன் கூட்டினாலும் சரி, அமெரிக்கன் கூட்டினாலும் சரி, அரேபியன் கூட்டி னாலும் சரி வரும் விடை ஒன்றுதான். மாறாதது அது!

எண்ணுக்கு இருக்கும் இதே மாறாத சக்தி, வரி வடிவத்துக்கும் உண்டு. முக்கோணங்கள், சதுர செவ் வகங்கள், அரைவட்ட முழுவட்டங்கள் என்கிற எல்லாமே கணிதத் தொடர்புடையவை எனும்போதே மாறாதவை என்றும் ஆகிவிடுகிறது. உலகிற்கே பொது வானது என்றும் ஆகிவிடுகிறது.

அந்த வகையில் ஸ்ரீ எந்திரமும் உலகிற்குப் பொது வானது. ஞானம் என்கிற ஒன்று மட்டும் இருந்தால் போதும்! இதை இந்து மட்டுமல்ல. இஸ்லாமியன், கிறித்தவன் என்று எல்லோராலும் புரிந்து வியக்க முடியும். இதை இயக்கவும் முடியும். இது மட்டும் இயங்கிவிட்டாலோ அல்லது இதை இயக்க நமக்குத் தெரிந்துவிட்டாலோ நாமும் உலகின்

மிகப்பெரும் சக்தியாகி விடுவோம்!

*****

திருக்கடவூர் எல்லையில் சுங்கச்சாவடி ஒன்றிருந்தது. அந்தச் சாவடியை ஒரு கூடாரம் போட்டு உருவாக்கி யிருந்தனர். கூடார முகப்பில் ஒரு வேப்பமரம், அந்த மரத்தில் ஒரு தீப்பந்தம் பொருத்தப்பட்டு அது அணைந்து விடும் நிலையில் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. சாவடிக் காவலாளி, பக்கத்தில் ஒரு தென்னை நார் கயிற்றுக்கட்டிலின் மேல் படுத்து உறங்கியபடி இருந்தான். மணியை அறிய ஒரே வழி வானைப் பார்த்து நட்சத்திரக் கூட்டத்தையும் நிலவையும் அது இருக்கும் இடத்தையும் வைத்துதான் அறியமுடியும்.

தேவரும் பிள்ளையும் ஆளுக்கொரு புரவியில் அங்கு வந்திருந்தனர். கிட்டத்தட்ட ஐந்து ஆறு காத தூரத்தை அந்த இரவில் அவர்கள் புரவி மேல் அமர்ந்து கடந்து வந்திருந்தனர். விடிவதற்குள் திருக்கடவூர் உபாசகரைச் சந்தித்து, அவரிடம் பூணூரீஎந்திரம் பற்றிக் கூறி அவரை அழைத்துச் சென்றுவிட்டால் அதன்பின் பிரச்னை இல்லை. எல்லாச் சிக்கல்களுக்கும் ஸ்ரீஎந்திரமே தீர்வை அளித்துவிடும். தேவருக்கு, அப்போதே உலகிற்கு சக்கர வர்த்தி ஆகிவிட்டதுபோல இருந்தது. பிள்ளைக்கோ, தன் அந்தரங்க ஆசைகளெல்லாம் நிறைவேறப்போவது போல் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

சாவடியைக் கடந்த அவர்கள் புரவி ஊருக்குள் நுழைந்தது. சில்வண்டுகள் மட்டும் இரவுப் பொழுதுதான் நாங்கள் வாழ்கின்ற காலம் என்பதுபோல சப்தமிட்டபடி இருந்தன. வழித்தடங்களில் உள்ள கல்தூண் தீவட்டிகள் அணைந்து புகைந்து கொண்டிருந்தன. இந்த இருளில் உபாசகர் வீட்டை எப்படிக் கண்டுபிடிப்பது என்று ஒரு கேள்வி எழும்பியது.

இருட்டு கண்ணைக் சுட்டும்போது என்னதான் செய்வது? நல்ல வேளையாக, கோனார் ஒருவர் தனது பசுமாடுகள் சிலவற்றோடு இடைக்காட்டு சித்தர் பாடிய 'தாம் திமிதிமி தையக் கோனாரே தீம் திமி திமி தக்கக் கோனாரே' என்னும் பாடலைப் போன்ற ஒரு பாடலை பாடியபடி வந்து கொண்டிருந்தார். பாடியபடி வருவது பல காரணங்களுக்காக! கோனார் பாடிக்கொண்டு குளத்தங் கரைக்குப் போனால், அப்போது முன் விடியல் பொழுது என்று பொருள். அதோடு, இரவு இரை தேடி திரியும் நாகங்களும் ஏனைய உயிர்களும் பாட்டுச் சப்தம் கேட்டு ஒதுங்கிவிடும். அந்தப் பாட்டு தேவரையும்

பிள்ளையையும் இழுத்து நிறுத்தி கோனாரோடு பேசவைத்தது.

“நீ... கோசாலைக் கோனார்தானே?” என்ற கச்சித மாய் கேட்டார் பிள்ளை.

"ஆமாங்க... ஐயா யாருங்க? நான் தெரிஞ்சுக்க கலாங்களா?”

“நாங்கள் சக்திபுரத்தில் இருந்து வருகிறோம்.”

“இது என்ன இப்படி ராப்போதுல வந்துருக்கீங்க! வழில, கள்ளப்பயலுங்க வழிமறிச்சா என்னாவறது?”

“அதையெல்லாம் பற்றி சிந்திக்க நேரமில்லை. இங்கே உபாசகர் வீடு எங்க என்று கூறமுடியுமா?”

“உபாசகர்... யாரைச் சொல்றீங்க?

“கோவிலில் அம்பிகையைத் துதித்து வழிபடு பவர்தான் உபாசகர்’

“ஒ! நீங்க, நம்ம சாமிய சொல்றீங்களா!”

“ஆமாம். அவர் வீடு எங்கே என்று கூறமுடியுமா?”

“சொன்னாப் புரியாது. நான் கூட வந்துதான் காட்டணும்.”

“கொஞ்சம் வந்து காட்டேன்.”

“குளத்துல மாடுங்கள இறக்கி, ஊற விட்டுட்டு வந்துடறேனே...”

“குளம் எவ்வளவு தூரத்தில் உள்ளது?”

“அதோ கூப்பிடு தூரம்தான்.”

கோனார் மாடுகளை பற்றிச்சென்று குளத்தின் ஒரு பாகத்தில் அவைகளை தண்ணிருக்குள் இறக்கிவிட்டு அப்படியே முகம் கழுவிக்கொண்டு ஒரு வாய் உமிழ்ந்து விட்டு திரும்பிவந்து இருவரது புரவிக்கும் முன்னால் நடந்தார். உபாசகர் வீடும் வந்தது உள்ளே சாம்பிராணி கந்தப் புகை உருவாகி வீட்டைச் சூழ்ந்திருந்தது.

“சாமி, பூசை செய்துகிட்டிருக்காரு போய்ப் பாருங்க” என்றார் கோனார்.

தேவர் கோனாரை நன்றியுடன் பார்த்து, “கோனாரே உன்னிடம் எவ்வளவு மாடுகள் உள்ளன?” என்று கேட்டார்.

“என்ன சாமி, ஒரு முப்பது மாடு தேரும்...”

“இவ்வளவுதானா?”

“நீங்க வேற! இதை மேய்க்கறதே பெரும்பாடா இருக்கு. உங்க ஊர்ல நேத்து சரியான மழைபோல இருக்கே. இங்க காச்சப் பாடுதான்...”

“கவலைப்படாதீர்கள். இங்கேயும் மழை பொழியும்! உங்கள் முப்பது மாடுகள் மூவாயிரம் மாடுகளாகும் நீங்கள்தான் திருக்கடவூரின் பெரும் கோசாலைக்கார ராகத் திகழ்வீர்கள்.”

“மூவாயிரம் மாடுங்களா... சாமி... அதையெல்லாம் கட்டி மேய்க்க எனக்கு இடம் வேண்டாமா? என்னை என்ன கனவு காணச் சொல்றீங்களா?”

“கனவில்லை... இன்றைய தினமே இடத்தோடு மூவாயிரம் மாடுகள் சொந்தமாகப் போவதை பார்ப்பாய். உன் பெயரை மட்டும் சொல்லிவிட்டுப் போ...

“என் பேருங்களா... ஆதிகேசவனுங்கோ...”

“ஆதிகேசவக் கோனாரே! இன்று முதல் நீ பெரும் தனவந்தன். எங்களுக்கு வழிகாட்டிய உனக்கு நாங்கள் செய்யப்போகும் உதவியைப் பார்த்து ஊர் உலகமே திகைக்கப் போகிறது பார்” என்று கித்தாப்பாகப் பேசி விட்டு உபாசகர் வீட்டினுள் நுழைந்தபோது உபாசகர் கண்களை மூடி தியானத்தில் இருந்தார். அவர் முன்னால் குத்துவிளக்கின் தீபச்சுடர்கள்! சுடரொளியில் அவர் எதிரில் சிறிய ஒரு மரத்தால் ஆன மண்டபத்துக்குள் அபிராமி அம்மனின் திருஉருவம்.

இருவருக்கும் வணங்கத் தோன்றியது. வணங்கினர். பின் செருமினர். உபாசகரும் கண் திறந்தார் ஆச்சரிய மாகப் பார்த்தார்.

“நான் சக்திபுரத்து தனவந்தன், வர்த்தகன். என் பெயர் பரமேஸ்வரத் தேவன். இவர் என் நண்பர் வையாபுரிப் பிள்ளை.”

“இத்தனை அதிகாலையில் என்னைக் காண வந்த நோக்கம்?”

“மிக அவசரம். அதேசமயம் அதிசயம்!”

“நானும் கேள்விப்பட்டேன்! ஸ்ரீயந்திர வழிபாடு நிகழ்ந்து வருணன் கொட்டித் தீர்த்துவிட்டானோ?”

“ஆமாம்! தங்களுக்கு எப்படித் தெரியும்?”

“ஒரு உபாசகரிடம் இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடாது!”

“மன்னியுங்கள். எங்களோடு சக்திபுரத்துக்கு வந்து அந்த ஸ்ரீயந்திரத்தைக் கொண்டு எங்களின் பிற தேவை களையும் நிறைவேற்றித் தாருங்கள்.”

“இது என்ன பேதமை! அது என்ன மந்திரக்கோலா? இல்லை, நடந்ததை மாயாஜாலம் என்று கருதிவிட்டீர்களா?”

“வேறு எப்படி அதைக் கருதுவது?”

“அந்த யந்திரம் வேறு அம்பிகை வேறில்லை. அம்பிகையை நீங்கள் உங்கள் ஏவலாளி போலாக்கிவிட் டீர்களே!”

“புரியவில்லை எங்களுக்கு?”

“அதை இயக்கியதே தவறு! மந்திர எந்திரத்தை தந்திரத்தால் அணுகக் கூடாது.”

“ஊரின் நன்மைக்காக மழைவேண்டி அதை இயக் கியது உங்களைப்போல் ஒரு உபாசகர்...”

“அவர் இப்போது உயிரோடிருக்க வாய்ப்பில்லை என்று கருதுகிறேன்.”

“ஆமாம்! இடிவிழுந்து கருகிப் போனார்.”

“அவர் தவறுக்கு, தண்டனையை அனுபவித்து விட்டார். போகட்டும்! அதை நிறுத்தியது யார்?”

“எங்கள் சக்திபுர உபாசகர் வைத்தியநாத தீட்சிதரின் சீடன் தனஞ்பன் என்பவன்.”

“தனரூபனா? அவன் பிரம்மச்சாரியாயிற்றே?”

“இல்லை, எந்திர இயக்கத்தை நிறுத்த எங்கள் கோவில் தாசியான ராஜமோகினியை மணந்து கிரஹஸ்த னாகி, பின்தான் எந்திரத்தை நிறுத்தினான் தனஞ்பன்.”

“சரி, என்னிடம் வந்த காரணம்?”

“சொன்னால், கோவித்துக் கொள்ளக்கூடாது.”

“முதலில் சொல்லுங்கள்.”

“அந்த எந்திரத்தை மேலும் பயன்படுத்தி இந்த உலகையே சுபிட்சமாக்க வேண்டும் என்று விரும்பு கிறோம்.”

“அது என்ன உங்கள் கோச்சு வண்டியா, உங்கள் விருப்பத்துக்கு இயக்குவதற்கு?”

“நீங்களே இப்படிப் பேசினால் எப்படி? கிடைத் தற்கரிய சக்தியாக அது கிடைத்துள்ளது. நீங்களும் அதன்மூலம் அனைத்தையும் கேட்டுப் பெறலாமே!”

‘‘உளறாதீர்கள்! தாயே, இது என்ன சோதனை? எதனால் இப்படியெல்லாம் நடக்கிறது?”

உபாசகர் பதைத்துப் போனார். பொழுதும் புலரத் தொடங்கிவிட்டது. தேவரும் பிள்ளையும் குழப்பத்தோடு பார்த்தனர்.

32

எந்திர வடிவத்தை அறிந்துகொண்ட நிலையில், ஸ்ரீ அதன் பொருளையும், அறிந்துகொள்ள வேண்டும். கூட்டுவது, கழிப்பது, வகுப்பது, பெருக்குவது என்கிற கணிதச் செயல்பாடுகளுக்குக் குறிகள் உள்ளன. அந்தக் குறியைப் பார்த்த மாத்திரத் தில், கூட்டிக்கழித்து வகுத்துப் பெருக்குவதைப் போலவே இங்கே ஸ்ரீஎந்திர வடிவத்தினுள் ஒவ்வொரு தளத்தை யும் கூர்ந்து நோக்கி அதை ஒரு குறியாக உணர்ந்து பின், பொருளையும் உணரவேண்டும்.

ஸ்ரீஎந்திர முதல் தளத்தின் பெயர் பூபுரம். இது சதுர வடிவில் உள்ளது. இதன் நான்கு பக்கத்திலும் நான்கு வாயில்கள் உள்ளன. இந்த நான்கு வாயில்கள் உள்ளன் வழியாகவே இந்த சதுர வடிவ பூபுரத்துக்குள் நுழைய வேண்டும். அப்படி நுழைந்தால், நாம் உட்புறம் அந்த சதுர வடிவ பூபுர பாகத்தின் மேல் காண்பது மூன்று வட்டங்களை... கணித பாஷையில்தான் இதற்கு வட்டம் என்று பெயர் ’த்ரைலோக்ய மோகன சக்ரம்" என்பது தான் எந்திர விளக்கத்துக்கான பெயர்.

இதில் முதல் வட்டத்தில் மகாசக்திகள் எனப்படும் அஷ்டமா சக்திகள் அணிமா, மஹிமா, லஹிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், வசியம், ஈசத்வம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. கூடவே சர்வ காமம், சர்வ லோமனம் எனும் இருசக்திகளும் சேர்ந்து மொத்தம் பத்து சக்திகள், பத்து தேவதைகளாக வாசம் செய் கின்றனர். அடுத்த வட்டத்துக்குள் சப்த மாதாக்கள் எனப்படும். பிராஹ்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி, சாமுண்டி இவர்க ளோடு மஹாலக்ஷ்மியையும் சேர்த்து எட்டு தேவதை கள் வாசம்

செய்கின்றனர்.

இதே போல மூன்றாவது வட்டத்தில் சர்வசம் ஷோபினி, சர்வ வித்ரா வினி, சர்வ காகர்ஷினி, சர்வசங்கரி, சர்வோன்மாதினி, சர்வ மஹாங்குஸா, சர்வகேசரி, சர்வபீஜா, சர்வயோனி, சர்வத்ரிகண்டா என பத்து தேவதைகள் உள்ளனர்.

இப்படி பூபுரச் சதுரத்திலுள்ள தரைலோக்ய மோகனச் சக்கரத்தில் மொத்தம் **28** தேவதைகள் உள்ளனர். எப்படி நிறத்தை வைத்து நாம் குணத்தை உணர்கிறோமோ, அதேபோல இந்த மூன்று சக்கரங் களில் முதல் சக்கரம் வெள்ளை நிறமாயும், அடுத்து சிகப்பு நிறமாயும், அதற்கும் அடுத்து மஞ்சள் நிறமாயும் இருக்கிறது. வெள்ளை நிறம் அமைதி, சிகப்பு நிறம் எழுச்சி, மஞ்சள் நிறம் முதிர்ச்சி என்கிற மூன்று குணங்களை முடிவாகக் கொண்டுள்ளது.

சுருக்கமாகக் கூறுவதானால், ஸ்ரீ எந்திரத்தின் ஒன்பது தளங்களின் அடிப்பாக தளமான பூபுரத் தளத்தில் மூன்று வட்டச் சக்கரங்களில் **28** தேவதைகள் உள்ளனர். அவர்களைப் புரிந்து அணுகுவோர்க்கு அவர்கள் வசமுள்ள சக்தியை அளித்து அமைதி, செயல்திறன், பின் இதனால் கர்வமோ ஆத்திரமோ ஏற்படாத முதிர்ச்சியை அளித்து அடுத்த தளமான ஷோடச பத்ம தளத்துக்கு ஓர் உபாசகனை ஏற்றி விடுகின்றனர்! மலையில் ஒவ்வொரு படியாக ஏறி உச்சியிலுள்ள கருவறைக்குள் இருக்கும் இறைவன் வணங்கச் செல்வதைப் போன்றது இது.

இப்படி ஒவ்வொரு தளத்திலும் தேவதைகள் இருந்து இவர்கள் கருணை என்கிற உதவியோடுதான் உச்சிப்புள்ளியில் 'பிந்து ஸ்தானம்' எனப்படும் ஆதி சக்தியின் திருவடிகளை அடைய முடியும் என்றால் மொத்தமான ஒன்பது தளங்களிலுமாகப் பலவிதமான சக்தி அம்சங்கள் கொண்ட தேவதைகள் எவ்வளவு பேர் இருப்பர் என்று எண்ணிப் பாருங்கள். அவ்வளவு பேரையும்தான், நாம் ஸ்ரீஎந்திரத்தை வணங்கும்போது வணங்குகிறோம். ஒன்றாகிய ஆதிசக்திகள்தான் அத்தனை தேவதைகளாகவும் பரிமளிக்கிறாள் என்றும் கூறலாம். ஒரே சூரியன் பல வண்ணமாகப் பிரதி பலிப்பது போன்றது இது!

மொத்தத்தில் வடிவத்தை அறிந்தோம். அத னுள்ளே தேவதைகள் பலவிதமான சக்தி அம்சங்களாக இருப்பதை அறிந்தோம். இவர்களை வணங்கினால் ஆதிசக்தியை அடையலாம் என்றும் அறிந்தோம். இவர்களைப் பயன்படுத்தினால் என்கிற ஒரு கேள்விக் குள்

புகும்போதுதான் ஸ்ரீஎந்திர இயக்கம் என்பது எப்படிப்பட்டது என்பதை உணரமுடியும். இங்கேதான் விஞ்ஞானம் ஆரம்பமாகிறது!

*****

உபாசகர் முகத்தில் தொடர்ந்து கோபமும் படபடப் பும் அலை அடித்தது. அதைப் பார்த்த தேவருக்கும் பிள்ளைக்கும் ஒன்றும் புரியவில்லை.

“உபாசகரே! தங்களின் பதற்றத்துக்கும் கோபத் துக்கும் காரணம் எனக்குப் புரியவில்லை. நாங்கள் தவறாக ஏதாவது கேட்டுவிட்டோமோ?” என்று பிள்ளை திரும்ப வும் ஆரம்பித்தார்.

“தவறாக என்ற வார்த்தையே தவறு! அதைவிட ஒரு பொருத்தமான வார்த்தை எது என்று யோசிக்கிறேன்...”

“புரியவில்லை... ஸ்ரீஎந்திரத்தின் சக்தியைப் பயன் படுத்த நினைப்பது தவறைவிடப் பெரிய செயலா?”

“உங்களுக்கு எப்படிச் சொல்லி புரியவைப்பேன்? பொன் முட்டை இடும் ஒரு வாத்தை யாராவது அறுத்துப் பார்ப்பார்களா?”

“இப்போது புரிகிறது. ஒரு உண்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த எந்திரத்தைப் பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது. மலைப்படி போல உயரமாக அது இருக்கிறது என்பதுதான் நாங்கள் புரிந்து வைத்திருந்தது. கூடவே ஆலயத்தினுள் அலங்கார ரூபிணி யாக உள்ள அம்பிகை, எப்படி இந்த வடிவமாகவும் இருக்க முடியும் என்கிற கேள்வியும் உண்டு. ஆனால், அப்படி இருப்பதில் ஏதாவது ஒரு காரணம் இருக்க முடியும் என்று நாங்கள் நம்பிக்கையோடு மட்டும் இருந்து விட்டோம். அப்படிப்பட்ட அந்த எந்திரத்தைப் பயன்படுத்தி ஒரு உபாசகர் மழையை வரவழைத்த பிறகே, அதை ஒரு சக்திப் புதையலாக உணர்ந்தோம். அடேயப்பா மழையா அது? இன்னமும் இரண்டு நாள் மழை தொடர்ந்திருந்தால், எங்கள் ஊரில் பெய்த மழையால் இங்கே உங்கள் ஊரை யும் வெள்ளம் சூழ்ந்திருக்கும். நல்லவேளையாக தனஞ்பன் இருக்கப்போய் தப்பித்தோம்.”

“அந்த தனஞ்பனிடமே உங்கள் தேவைகளைப் பற்றிப் பேசாமல் இங்கே எதற்கு வந்தீர்கள்?”

“அது... அது..."

“எது?”

“தனரூபன் இப்போது ஊரில் இல்லை...” என்று ஆரம்பித்து, அவன் தஞ்சைக்கு நாயக்கர் அவை நோக்கி சென்றிருப்பது வரை கூறி முடித்தனர்.

“தனரூபனை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். என் வயதில் பாதி கூட இல்லாத அவன், என்னைவிட முதிர்வோடு நடந்துள்ளான். அவனது குருநாதர் உண்மை யில் மிகவும் போற்றுதலுக்குரியவர். ஒரு சீடனை எப்படி உருவாக்க வேண்டுமோ அப்படி உருவாக்கியுள்ளார்.”

“உபாசகரே! தனரூபனை நீங்கள் புகழ்வது இருக் கட்டும். கற்சிலையாகவும் ஐம்பொன் வடிவச் சிலை யாகவும் ஆலயங்களில் காட்சி தரும் அம்பிகை, எதற்காக இப்போது எந்திர வடிவம் கொள்ளவேண்டும்?”

“அதை எல்லாம் விளக்குவதற்கான காலமோ நேரமோ இதுவல்ல. சுருக்கமாகக் கூறுகிறேன். இந்தப் பிரபஞ்சமே அவளால் படைக்கப்பட்டது. அதனுள் புல் பூண்டிலே இருந்து மனிதர்களான நம் வரையில் எல்லோ ரும் அடக்கம். இதில் மனிதனுக்கே ஆறாம் அறிவு உள்ளது. அதனாலேயே அவனால் உருவிலும் வலுவிலும் பெரிய யானையைப் கூட அடக்கி ஆள முடிகிறது. அப்படிப்பட்ட மனிதப் பிறப்பின் சுவாரஸ்யமே, மாயையில் சிக்கி அவன் உழல்வதில்தான் உள்ளது. ஒருவகையில் இப்பூவுலக வாழ்வு என்பது, மைதானத்தில்.விளையாடுவது போன்றது.

விளையாட்டு என்று வந்துவிட்டாலே, வெற்றி தோல்வி வந்துவிடும். கூடவே, அந்த வெற்றியை அடைய விதிமுறைகளும் வந்துவிடும். இப்படி விளையாடப்படும் விளையாட்டில் நடுவராக இருப்பவரே கடவுள். நாம் விளையாடும்வரை கடவுள் நடுவராக இருந்து நமது ஆட்டத்துக்கேற்ப வெற்றித் தோல்வியை அளித்தபடி இருப்பார். இந்த ஆட்டமும் வேண்டாம். வெற்றி தோல்வி யும் வேண்டாம், நீதான் வேண்டும், என அந்தக் கடவுளிடம் சரண் புகுந்துவிடுவதே முக்தி எனப்படுகிறது. அப்படி சரண் அடைய விரும்புகின்றவர்களுக்கு உதவுவதுதான் இதுபோன்ற ஸ்ரீஎந்திரங்கள்.”

“உங்கள் விளக்கம் புதிதாகவும், அதேசமயம் ஏற்கும் விதமாகவே உள்ளது. கூடவே, சில கேள்விகளும் எழு கின்றன. முக்தியைத் தரும் எந்திரத்தால், எப்படிக் கேட்பதை எல்லாம் தரமுடிகிறது?

இந்த எந்திரம் கேட்பதை எல்லாம் தந்துவிட்டால், யாரும் கஷ்டப்படப் போவதில்லை. கஷ்டப்படாத ஒருவன் எதற்கு முக்தியைக் கேட்கப் போகிறான்? வாழ்க்கையே வெறுத்துப் போகும்போதுதானே பக்தி, முக்தி என்ற எல்லாமே வருகிறது?"

"உங்கள் கேள்விக்குச் சுருக்கமாக நான் பதில்தர முயன்றது கூட தவறு! இந்தப் பேச்சை இத்தோடு விட்டு விடுங்கள். நான் இப்போது சொல்லப்போவதையும் நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்..."
"சொல்லுங்கள்..."

"சக்திபுர ஆலயத்தில் திருக்குளம் இருக்கிற

தல்லவா?"

"இருக்கிறதே! அதிலிருந்துதானே தினமும் அபி ஷேகத்துக்கு நீர் எடுக்கப்படுகிறது."

"நல்லதாகப் போயிற்று! நான் இப்போது உங்க ளோடு வருகிறேன். அதைப் பயன்படுத்துவதற்காக அல்ல... எந்திரத்தைத் தூக்கிக் குளத்தில் போடுவதற்காக!"

"என்னது! குளத்தில் போடப் போகிறீர்களா?"

"ஆம்! அதைவிட பாதுகாப்பான ஒரு இடம் எங்கும் இல்லை. அதைச் சிதைப்பதோ, உருக்கி அழிப்பதோ உலகையே பொடிபொடியாக ஆக்குவதற்குச் சமம்!"

"உபாசகரே! இது என்ன உளறல்? அந்த எந்திரத்தை அம்பிகை என்று கூறிவிட்டு, தூக்கி குளத்தில் போடச் சொல்கிறீர்களே! உங்களை எங்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை"

"சராசரி மனிதர்களால் எதைத்தான் புரிந்துகொள்ள முடியும்? நீங்களெல்லாம் உடம்பென்று ஒன்று இருப்ப தால், அதில் பசி என்ற ஒன்று ஏற்படுவதால் பசித்து, உண்டு உயிர் வாழ்பவர்கள். அதற்குமேல் இந்த வாழ்க்கை பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. பசிப்பதால் உண்டு, வலிப்பதால் அழுது, களைப்பதால் உறங்கி மிருகங்கள் போல வாழ்கின்றவர்களிடம் நான் பேசவும் கூறவும் எதுவுமில்லை. உங்களுக்கு இப்போதைக்கு ஒன்றை மட்டும் என்னால் கூறமுடியும். அந்த எந்திரத்தில் இப்போது அம்பிகையின் கருணையோ அருளோ இல்லை. அது இந்த உலகின் ஒரு அணுப்பொருளாகிவிட்டது. அதை ஒன்று அழிக்க வேண்டும். இல்லாவிட்டால் மறைக்க வேண்டும். அழிக்க,

என்னால் முடியாது. மறைப்பதுதான் ஒரே வழி! அதனால்தான் குளத்தில் போடச் சொன்னேன். இதைச் செய்யத் தவறினால் சக்திபுரமே வெகு விரைவில் அழிந்து விடும்" என்றார்.

"நாங்கள் சக்திபுரத்தை, இந்த உலகிலேயே உன்னத மான நகரமாக ஆக்க விரும்புகிறோம். அதற்கான சக்தியை அந்த எந்திர வடிவில் அடைந்து விட்டதகாவும் கருது கிறோம். நீங்களோ அழியப்போவதாகச் சொல்கிறீர்கள். உங்களைச் சந்திக்க வந்தது நாங்கள் மேம்பட வேண்டும் என்பதற்காக! ஆனால் நீங்களோ, தொடக்கம் முதலே பயமுறுத்துவது போலவே பேசுகிறீர்கள். இனி, உங்க ளிடம் பேசுவதில் பயனில்லை. நாங்கள் வேறு சக்தி உபாசகரை வைத்து நிறைவேற்றிக் கொள்கிறோம்." என்றபடியே பிள்ளையும் தேவரும், அங்கிருந்து விலகிட முற்பட்டனர்.

அது உபாசகருக்கு ஓர் அதிர்வைத் தந்தது. இருந் தாலும், அவரிடம் மிக வேகமாய் ஒரு மாற்றம்?

"நில்லுங்கள்" என்று அவர்களை தடுத்தார். பின் இணக்கமாய் சிரிக்கத் தொடங்கியவர், "என்ன பயந்து விட்டீர்களா?" என்றும் கேட்டார். இருவருமே திருதிருவென விழித்தனர். "உங்களை நான் சோதித்தேன். அதாவது, உங்கள் விருப்பத்தில் நீங்கள் உறுதியாக இருக்கி நீர்களா என்று பார்த்தேன்" என்றவர், "கவலை வேண்டாம். நான் இப்போதே உங்களுடன் வருகிறேன். அந்த எந்திரத்தைக் கொண்டு நாம் இந்த உலகையே ஆளப் போகிறோம்" என்றார்.

மிக வேகமாய் அவர் மனம் மாறிப் பேசினாலும் உடன்வரச் சம்மதித்தது பிள்ளைக்கும், தேவருக்கும் சற்று நிறைவைத் தந்தது. இருந்தபோதிலும் பிள்ளை தேவரின் காதில், "தேவரே. இந்த உபாசகனிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்றார் மெல்லிய குரலில்.

***

அதே விடிகாலைப் பொழுது!

கையில் கோலுடன் ஒரு யாத்ரீகன் போல நடந்து வந்திருந்த தனஞ்பன், தன் கண் எதிரில் தெரிந்த ஒரு குடிசை முகப்பில் சென்று நின்றான். வெளியே நிழல்தரும் மரங்கள் நிறைய வளர்ந்திருந்தன. குடிசைக்குள் எட்டிப் பார்த்தான். ஒருவரும் இல்லை. ஆச்சரியமாக இருந்தது தனஞ்பனுக்கு. சற்று தாகமாக இருந்தது. உள்ளே மண்பானையும் அதன்மேல் குவளையும் அதைக் கொண்டு தண்ணீர் அருந்த மனம்

விரும்பினாலும், அனுமதி இல்லாமல் அருந்துவது களவாடுவதற்கு சமம் என்று அவன் மனம் கருதியது. அதேசமயம் “யாரப்பா நீ” என்று ஒரு குரல் திரும்பினான். ஒரு தலை நரைத்த முதியவர் கைநிறைய பனை ஓலைத்துண்டுகளுடன் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் ஒரு ஜோதிடர் என்பதோ, வள்ளுவப் பரம்பரையில் வழிவழியாக வருபவர் என்பதோ, எதுவும் தனஞ்பனுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

33

மின்சாரம் என்பது கண்ணுக்குப் புலப்படாதது.ஆனால் அது இருப்பதை, அதன் செயல்பாடு களால் உணரமுடிந்தது போலவே ஸ்ரீயந்திரமும் செயல்பாடுகளால் உணரமுடிந்த ஒன்றாகும். மின்சாரத்தை உருவாக்க கருவிகள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தியே மின்சாரம் உருவாகிறது. இந்த செயல்பாடுகள் கண் எதிரில் நிதர்சனமாக நிகழ்வதால், இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இதுபோன்று ஸ்ரீயந்திரத்தின் செயல்பாட்டைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு வேள்வித் தீயில் இடப்படும் மூலிகைப் பொருட்கள் எரிந்து புகையாக வெளியைச் சூழ்ந்து கொள்கின்றன. அந்த புகையால் பல வேதியல் வினைகள் நிகழ்கின்றன.

போபால் விஷவாயு சம்பவத்தில் "அக்னிஹோத்ரம்" என்னும் அன்றாட வேள்வியைச் செய்துவந்த வீட்டில் வாழ்ந்தவர்கள் மட்டும் விஷவாயுவின் தாக்குதலில் இருந்து முடமாகாமலும் உறுப்புகள் பாதிப்பின்றியும் தப்பித்தார்கள் என்கிறது செய்தி. அக்னி ஹோத்ரப் புகையானது அந்த வீட்டைச் சுற்றி ஒரு பாதுகாப்பு அலைவரிசையை உருவாக்கி வைத்திருந்ததால் அன்றி சாத்யமே இல்லை.

மூலிகைப் புகையோடு மந்திரச் சொற்களின் சப்தமும் கலந்து அங்கே ஒருவித வினைப்பாடு உருவாகி, அதன் காரணமாகவே நல்லது நடக்கிறது.

மழை வேண்டி யாகம் புரியும்போதும் இதுதான் நடக்கிறது. மொத்தத்தில் ஆகாயம் என்னும் பூதமும், அந்த ஆகாயம் முழுக்க நிரம்பியிருக்கும் காற்று என்னும் பூதமும்தான் முதலில் பெரிதும் தேவைப்படுகிறது!

வெளியாகிய ஆகாயம் இல்லாமல் காற்று எங்கே நிலவ முடியும்? ஒரு

ஆச்சரியமான உண்மை இதில் என்னவென்றால், இரண்டுமே இருந்தும் இல்லாத தாகவே உள்ளன. அதாவது, ஆகாயம் என்று நம் பார்வைக்குத் தெரிவதில் உண்மையில் எதுவுமே இல்லை. அந்த எதுவுமே இல்லாத ஆகாயத்தில் தவழ்ந்தபடி இருக்கும் காற்றும் கண்ணுக்குத் தெரிவ தில்லை.

இந்தப் புலனாகாத பூதங்கள்தான் எந்திரச் செயல் பாட்டின் பின்னாலும் பெரும்பங்காற்றுகின்றன. புலனாக முடிந்த பூமிமேல், புலனாக முடிந்த வெளிச் சத்தில் இது இருப்பது முந்தைய இரண்டுக்கும் நேர் எதிர் நிலைப்பாடாகும். யோசிக்க யோசிக்க வியப்பாக இருக்கிறதல்லவா!

*****

அந்தப் பெரிய வரைப் பார்க்கவும் அவனுக்கு வணங்கவேண்டும் என்று தோன்றியது வணங்கினான்!

“நான் உன்னை யாரென்று கேட்டேனே?”

“ஐயா என் பெயர் தனரூபன். சக்திபுரத்தில் இருந்து வருகிறேன். பயணக்களைப்பில் மிகவும் தாகமாக இருந்தது. இந்த குடிசை கண்ணில் படவும் உள்நுழைந்து பார்த்தேன். நான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நீங்களும் வந்து விட்டீர்கள்...”

“சரி... தண்ணீர் அருந்திவிட்டாயா?”

“இல்லை.”

“அதுதான் பானையில் இருக்கிறதே! எடுத்து அருந்து வதற்கு என்ன?”

“நீங்கள் அனுமதி அளித்தால் எடுத்துப் பருகு கிறேன்.”

அவன் பதிலைக் கண்டு அவர் அர்த்தபுஷ்டியோடு சிரித்தார். பின் அவரே நெருங்கிவந்து தண்ணிரை குவளை யில் மொண்டு தந்தார்.

அவனும் வாங்கிக் குடித்தான். எப்போதும் தாகத்தில் தவிக்கும்போது தண்ணீர் குடிப்பதும், அப்படிக் குடிக்கும் போது ஏற்படும் நிறைவு உயிரின் அடியாழம் வரை சென்று தொடுவதும் சகஜமான ஒன்று. அப்படி மனம் நிறைவு கொள்ளும் வேளையில் தாக சாந்தியுடன் ஒருவர் எதைச் சொன்னாலும் பலிக்கும் என்பது ஒரு நம்பிக்கை. தனரூபன் முகத்திலும் அந்த நிறைவு தெரிவதைக் கவனித்த அந்தப் பெரியவர், “இந்த நாடும் மக்களும் நன்றாக வாழ்ந்திட வாழ்த்தப்பா.” என்றார்.

அவர் தன்னை வாழ்த்தச் சொன்னதை ஒரு அதிசயமாகக் கருதிய தனஞ்பன், "ஐயா! இளையவனான என்னைப் போய் வாழ்த்தச் சொல்கி நீர்களே! என்ன காரணம்?" என்று கேட்டான்.

"முதலில் வாழ்த்திவிடு! பிறகு கூறுகிறேன்."

"அப்படியே ஆகட்டும்! நாடும் மக்களும் நல்லவித மாக வாழ்வார்களாக!"

அவர் அதைக் கேட்டு ஒரு மாதிரி சிரித்தார்.

"என் சிரிக்கிறீர்கள்?"

"சனி ஹோரையில் மட்டும், என் விருப்பம் எப் போதுமே பலிப்பதில்லை."

"உங்கள் பேச்சு எனக்குப் புரியவில்லை"

"உன்னை நாடும் மக்களும் நன்றாக வாழத்தான் வாழ்த்தச் சொன்னேன். ஆனாலும், நீயோ நல்லவிதமாக வாழ்வார்களாக என்றாய். நன்றாக வாழ்வதற்கும் நல்லவித மாக வாழ்வதற்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு அல்லவா?"

"நீங்கள் அதைச் சொல்கிறீர்களா? ஒருவர் வாழ்த்து வதால் அவரின் நல்லெண்ணம் நமக்குத் தெரிய வருகிறது. மற்றபடி ஒருவர் வாழ்த்துவதாலேயே இன்னொருவர் வாழ்ந்துவிடப் போகிறாரா என்ன?"

"அதிலென்ன சந்தேகம்? மனம் நினைப்பதைத்தான் எப்போதும் பேசுகிறோம். மனம் எல்லா நேரங்களிலும் நிறைவோடு இருந்து விடுவதில்லை. முழு நிறைவோடு இருக்கும் ஒரு தருணத்தில் உதிர்க்கும் சொற்கள் அப் படியே பலிக்கும் என்பதுதான் என்னைப் போன்ற ஜோதிடர்களின் எண்ணம்."

"ஓ! நீங்கள் ஜோதிடரா?"

"ஆமாம்! பார்த்தால் தெரியவில்லையா?"

"ஓலையும் கையுமாய் வரவும் புலவரோ என்று நினைத்துவிட்டேன்."

"புலமையும் எங்களுக்கு வசமான ஒன்றுதான்."

"ஆச்சரியமான விஷயம்தான்!"

“சரியப்பா! சக்திபுரத்தைச் சேர்ந்த உன்னைப் பார்த்தால் நீ தவிப்போடு இருப்பது போல் தெரிகிறது. பொதுவாகப் பயணம் செய்பவர்கள் புரவி ஏறிச் செல் வார்கள். இல்லாவிட்டால் வண்டிகட்டிச் செல்வார்கள். நீ தனியாக வந்திருக்கிறாய். துணைக்கு யாரும் வரவில்லையா?”

“நான் இப்போது தனிமரம் பெரியவரே! எதிர்வரும் ஆபத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக தஞ்சை வரை சென்றுவர வேண்டியுள்ளது.”

“ஆபத்தா? புரியும்படி சொல்.”

தனரூபனும் நடந்ததை அவரிடம் சுருக்கமாகக் கூறினான். அதைக் கேட்ட பெரியவர் முகத்திலும் ஏராள மான அதிர்ச்சி ரேகைகள்.

“அந்த எந்திரம் வணங்குவதற்கு மட்டுமே பயன் படுத்தப்பட வேண்டியது. ஆனால், அதை ஒரு கருவியாகக் கருதி இயக்க சக்திக்கு மாற்றிவிட்டார்கள். அசுரன் ஒருவன் கையில் மட்டும் அது கிடைத்துவிட்டால் அவ்வளவுதான்! அப்படிப்பட்ட ஆபத்துகள் ஏற்படும் முன் அதை அரச ரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்” என்றான்.

“எல்லாம் சரி, அரசருக்குக் கிடைப்பதும் நல்ல தில்லையே!”

“ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?”

“அவர் நிலையே இன்று மிக மோசம்தானே? இன்று பாரத தேசமே சிதறித்தானே கிடக்கிறது? டெல்லியில் மொகலாயர்கள், இங்கோ ஒரு பக்கம் மராட்டியர்கள், இன்னொரு பக்கம் நாயக்கர்கள்.”

“அதனால் என்ன?”

“அதனால் என்னவா? சரிதான்! ஒவ்வொருவரும் அடுத்தவரை விழுங்க முயன்று வருகிறார்கள். இந்நிலையில் இப்படி ஒரு எந்திரம் இருப்பது தெரியவந்தால் அதைக் கொண்டு தங்களை நிலைநிறுத்திக்காள்ள விரும்ப மாட்டார்களா என்ன?”

“என்னதான் செய்யலாம் என்கிறீர்கள்?”

“நான் ஒன்று சொல்கிறேன். உன் எண்ணம் என்ன? முதலில், அதைத் தெளிவாகச் சொல்.”

“அந்த எந்திரத்தை காப்பாற்றிட வேண்டும் என்பதே என் விருப்பம்!”

“ஊரையும் உலகையும் அது காப்பாற்றும் என்று கூறிவிட்டு, அதை நீ காப்பாற்ற விரும்புகிறாயா? முடியுமா உன்னால்?”

“ஐயா... நான் காப்பாற்ற விரும்புவதாகச் சொல்வதை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளுங்கள். அது வணங்கப்பட வேண்டும். அது இயங்கத் தொடங்கிவிட்டால் எந்திரம் ஆகிவிடுகிறது. அது நாட்டுக்கு நல்லதல்ல! எனவே வணக்கத்திற்குரியதாக அதை ஆக்க வேண்டும். அதே சமயம் அதை யாரும் இனி எதிர்காலத்தில் பயன்படுத்தி விடவும் கூடாது.”

“உனனைப் பார்க்க எனக்கு மலைப்பாக இருக்கிறது. இப்படி ஒரு விஷயத்தை, அதாவது மகாசக்தியைக் கையில் வைத்துக்கொண்டு நீ உன்னை செல்வந்தனாகவோ இல்லை அரசனாகவோ ஆக்கிக்கொள்ள விரும்பாமல் அதை வணக்கத்திற்கரியதாக மட்டும் ஆக்க நினைப்பதை எண்ணி மகிழ்கிறேன். நீ பூரண சந்திர பலத்துடன் ராசியை குரு பார்க்கப் பிறந்திருக்க வேண்டும். அத்துடன் உன் பூர்வபுண்ணிய ஸ்தானமும் தோஷங்கள் எதுமின்றி இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி நினைக்க உன்னால் முடியாது.”

“பெரியவரே! இப்போது இதுவா விஷயம்!”

“இதுவும் விஷயம் தனஞபா! ஒரு வினாடி இரு. என்வசம் காலப் பிரசன்ன ஏடு ஒன்று உள்ளது. அதில் பிரசன்னம் பார்ப்போம். உன் விருப்பப்படி எல்லாம் நடக்குமா என்பது அதில் தெரிந்துவிடும்.”

“மன்னிக்க வேண்டும் பெரியவரே! நான் இந்த ஜோதிடத்தை எப்போதுமே பொருட்படுத்தியதில்லை. இதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. எனவே, விட்டு விடுங்கள். நான் என் வழியில் செல்கிறேன்.”

“அப்படிச் சொல்லதே! காரணமில்லாமல் காரிய மில்லை. தஞ்சைக்கு செல்லும் வழித்தடமே வேறு. நீ புதுக்கோட்டை மார்க்கத்தில் வந்து என்னைச் சந்திக்க காரணம் உள்ளது. நம் வாழ்வில் ஒரு சிறு அசைவுகூட காரணமின்றி நிகழ்வதில்லை. எவ்வளவோ குடிசைகள் இருக்க, நீ எதற்காக என் குடிசைக்குள் புக வேண்டும்.”

“நீங்கள் என்னதான் கூற வருகிறீர்கள்?”

“உனக்கு உதவிட, எனக்கு ஒத்துழைப்பு தா! எங்கள் குலதெய்வமும் மாகாளிதான். மகாசக்தி அவள். அவள் வசிக்கும் எந்திரமும் ஒரு வகையில் எங்களுக்குச் குல தெய்வம் போன்றதுதான். எனவே, உனக்கு உதவுவதும் என் குலதெய்வத்தை நான் வழிபடுவதும் என் வரையில் ஒன்று. தயவுசெய்து காலப் பிரசன்ன ஏட்டின மூலம் உனது இன்றைய விருப்பம் என்னாகும் என்பதை தெரிந்து கொண்டு மேற்கொண்டு செயல்படு”

என்று சொன்ன அந்தப் பெரியவர் உள்ளேயிருந்து ஒரு ஏட்டுக்கட்டை எடுத்து வந்தார். மஞ்சள் துணியாலே மூடிக் கட்டப்பட்டிருந்த அந்த ஏடும் பிரிக்கப்பட்டு அவரால் வணங்கப்பட்டது. அந்த ஏட்டுக்கட்டில் ஒரு நூற்புரி தொங்கிக்கொண்டிருந்தது. அதை தனஞ்பனிடம் தந்து ஏட்டுக்கட்டின் ஏடுகளுக்கு இடையில் இஷ்டப்பட்ட இடத்தில் பிரிக்கச் சொன்னார். அவனும் அப்படியே செய்தான். அவரும், அவன் பிரித்த ஏட்டின் பக்கத்தைப் பார்த்தார். அவர் கண்கள் அகண்டு விரிந்தன. முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது.

“என்ன பெரியவரே! உங்கள் பிரசன்ன ஏடு என்ன சொல்கிறது?”

“எந்திரத்தை ஆபத்து சூழ்ந்து விட்டதப்பா!”

“எந்திரத்துக்கு ஆபத்தா?”

"ஆமாம். அதுவும் ஒரு பெண்ணால்!”

“எனக்கு புரியவில்லை.”

“உடனே சக்திபுரத்துக்குச் திரும்பிச்செல். நீ அங்கே செல்வதற்குள் எந்தப் பேராசையும் வெற்றிபெறாமல் இருக்க அந்த ஆதிசக்திதான் அருள வேண்டும்.”

“இப்படி மொட்டையாகச் சொன்னால் எப்படி?”

“எந்திரம் களவு போகப் போகிறது. அதேசமயம் உன்.” என்று கூறவந்த அவர், தன் மனதுக்குள் தொடர்ந்து ‘உயிரும்’ என்று தனக்குள் கூறிக்கொண்டார்.

***

சக்திபுரம் ராஜமோகினியின் இல்லம். உபாசகரோடு வந்த தேவரையும் பிள்ளையையும் ராஜமோகினியே வேகமாய் முன்வந்து வரவேற்றாள். உபாசகர் அப்போது தான் ராஜமோகினியைப் பார்க்கிறார். பார்த்தவர் அப்படியே வாயைப் பிளந்துவிட்டார்.

‘அடேயப்பா என்ன ஒரு அழகு’.

மிகுந்த மனக்கட்டுப்பாடு உடைய அவராலேயே உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மனம் உடைந்துகொண்டது.
“ராஜமோகினி உன்னை அடைய என் மனம் துடிக்கிறது. என் வாழ்நாளில் உன்போல் ஒரு அழகியை நான் காணாததால்தான்

உபாசகன் ஆனேன். கண்டிருந்தால் ஆகியிருக்க மாட்டேன்” என்று கூறிக் கொண்டவரிடம் மனதுக்குள் பெரும் மாறுதல்கள்..!

34

ஐந்து பூதங்களைப் பற்றிய ஒரு தெளிவில்லாமல் எந்திரத்தைப் புரிந்துகொள்ள முடியாது. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்துமே ஐந்து பூதங்கள் எனப்படுகின்றன. இந்த ஐந்தை எதற்காக பூதங்கள் என்று கூற வேண்டும் என்பதிலும் பொருட்செறிவு உள்ளது.

பூதம் என்றாலே பெரியது. வலியது, ஒரு கட்டுக்கு அடங்காதது என்று கூறுவார்கள். இதை வைத்தே அசுர சக்திகளை, துஷ்டசக்திகளை பூதம் என்று கூறும் நிலை உருவானது.

நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கூட பெரியது. வலியது. எவர்களுக்கும் அடங் காததுதான். இதில புலனாவது மூன்று, புலனாகாதது இரண்டு. அதில் நீர், நிலம், நெருப்பு எனும் மூன்றும் புலனாகுபவை. காற்றும், ஆகாயமும் புலனாகாதவை. புலனாகாத இந்த இரண்டில் இருந்தே புலனாகும் நீர் தோன்றுகிறது. இந்த நீர் தோன்ற, நெருப்பாகிய சூரியனும் தேவைப்படுகிறான். ஒரு ஆச்சரியம். இதில் என்னவென்றால், இந்த நீரை உணர நிலம் தேவை. நிலம் என்று ஒன்று இருக்கப்போய்தான் நீரானது மழையாகப் பொழிந்து மண்மீது ஆறாக ஓடுகிறது. நிலத்துக்குள் ஊரி கிணறுகளைத் தோண்டும்போது வெளிப்படுகிறது. நிலம் என்று ஒன்று இல்லாத நிலையில், விண்ணில் நீர் தோன்ற வாய்ப்பே இல்லை. பூமிக்கு மேலான ஆகாய வெளியில்தான் புவிஈர்ப்பு விசை உருவாகி அதன் காரணமாக, பூமியிலுள்ள நீர் ஆவியாகி பின் மேகமாகி பின் குளிர்ந்து மழையாகி ஒரு இயக்கம் நிகழ்கிறது.

பூமி என்ற ஒன்றே இல்லை என்றால், நீர் என்பது தோன்ற வழியில்லை. வெறும் வெளியில் மேகங்கள் தோன்றவோ மழை பெய்யவோ வழியில்லை. மழை பொழிய ஈர்ப்பு விசை, காற்று வீச்சு, ஆவியாகும் நிகழ்வு, குளிரும் நிகழ்வு என்ற நான்குவித பூதத் தொடர்பான செயல்பாடுகள் தேவைப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால், ஐந்து பூதங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து கிடந்துதான் வினை புரிகிறது. பார்க்க தனித்தனியே பிரிந்து கிடப்பதுபோல் தோன்றி னாலும், ஒவ்வொன்றுக்குள்ளும் மற்ற பூதங்களின் இயல்பும்

குணமும் கலந்தே உள்ளது. இந்த ஐம்பூத அறிவைத் தொடர்ந்து பிரபஞ்ச அறிவும் எந்திர ஞானத்திற்கு தேவை!

*****

Lனதுக்குள் பெரும் மாறுதல்களோடும் குழப்பத் தோடும் நின்ற வரை ராஜமோகினியும் வெறித்துப் பார்த்தாள். ஒரு ஆண்மகனைப் பார்த்த மாத்திரத்தில் அவன் பார்வை நோக்கம் எப்படிப்பட்டது என்பதை உணர்வதில் ராஜமோகினிக்கு மிகவே அனுபவம் உண்டு. அந்த அனுபவம் அவளிடம் நன்றாகவே பேசியது. உபாசகரும் வழிவதை நிறுத்திக் கொள்ளவில்லை. கூட வந்த தேவருக்கும் பிள்ளைக்கும் மட்டும் ஒரு மாதிரி ஆகிவிட்டது. இருவருக்கும் இடையே ஆன தேக்கத்தை தேவர்தான் மாற்ற முனைந்தார்.

“கோவிலம்மா! இவர்தான் திருக்கடை யூர் உபாசகர். நான் கூறியது போலவே இவரை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். ஊர் எல்லை வரை சுலபமாக வந்துவிட் டேன். எல்லையில் இருந்து உங்கள் இல்லம் வருவதற்குள் தான் போதும் போதும் என்றாகிவிட்டது.”

“எதனால் அப்படி?”

“வழியெங்கும் நீரோட்டம் தண்ணீர் இன்னும் வடிய வில்லை.”

“தேவர் பேச்சை மாற்றி கவனத்தை திசை திருப்பிட... உபாசகர் அதுதான் சமயம் என்பதுபோல தன் பங்குக்கு பேசத் தொடங்கினார்.”

“கவலையே வேண்டாம் தேவரே! இப்போதே ஆலயத்துக்குச் சென்று எந்திரத்தை பூஜித்து அனலாரிஷ்ட பத மந்திரத்தைப் பிரயோகித்தால் அரை மணி நேரத்தில் அவ்வளவு நீரும் ஆவியாகி விடும்” என்று கூறிய உபாசக ரின் கூற்றைக் கேட்டு பிள்ளையிடம் ஒரு குறுகுறுப்பு.

“உபாசகரே! அந்த எந்திரத்தைக் கொண்டு இப்படி இன்னும் என்னவெல்லாம் செய்யலாம்? “இது என்ன கேள்வி? பட்டமரத்தை துளிர்க்கச் செய்யலாம். பூக்காத மரத்தை பூக்க வைக்கலாம். இங்கிருந்து எட்டு கல் தொலை வுக்குள் இருக்கும் சர்ப்பங்களை எல்லாம் எந்திரம் உள்ள இடம் நோக்கி வரவைக்கலாம். ஊர்மக்கள் அவ்வளவு பேரையும் தூங்கவும் வைக்கலாம். ஏங்கவும் வைக்கலாம். பிராந்தர்களைக் குணப்படுத்தலாம். ஸ்ரீஎந்திரத்ண்தக் கொண்டு எதைத்தான் செய்ய முடியாது?”

“குணப்படுத்துவது, தூங்க வைப்பதெல்லாம் இருக் கட்டும்.

பெருஞ்செல்வம் கிட்ட இது துணை நிற்குமா? வெல்ல முடியாத ஒரு பலசாலியாக இதைக் கொண்டு ஒருவன் வாழமுடியுமா?”

"தாராளமாக! இது ஒருவர் வசம் இருக்கிறதென்றால், வைத்திருப்பவர் பெண்ணாக இருந்தால் அவர் அவ் வுலகின் ஆதிசக்தி ஆவார். அம்பிகையின் மறுவடிவம் என்று கூறலாம். அதுவே என்னைப் போல ஆண் என்றால் அவரே சிவம்.”

“அடேயப்பா! இது ஒருவரை கடவுளாகவே ஆக்கி விடும் என்று கூறுங்கள்.”

“அதில் சந்தேகமே வேண்டாம். இந்த உலகின் அதிசயங்கள் எனப்படும் கற்பகவிருட்சம், காமதேனு, உச்சைசிரவஸ் எனும் வெள்ளை குதிரை, ஐராவதம், மகாலட்சுமி தேவியார் போன்ற அனைத்தும் அமுதம் கடைந்தபோது கிடைத்தவையாகும். இதில் மகாலட்சுமி தேவியார் ஸ்ரீமன் நாராயணனைச் சென்று சேர்ந்து விட்டார். மற்றவை எல்லாம் இந்திரலோக இந்திரனுக்கு உரித்தாகிவிட்டன.

பூவுலகில் பாரத காலத்தில் அட்சய பாத்திரத்தை திரௌபதி அடைந்தாள். சமந்தக மணியை சத்ராஜித் என்பவன் அடைந்தான். அதன் பிறகு ஒரு அதிசயமும் ஆற்றலும் மிக்கதாக ஒன்றை இந்தப் பூவுலகம் காணவே யில்லை. ஆனால் நான் மேலே சொன்ன அவ்வளவையும் உள்ளடக்கியதுதான் இந்த ஸ்ரீஎந்திரம். தோற்றத்தில் இது மேருவைப் போன்றது. பூஜிக்கப்படும் வரை இது வெறும் தத்துவம். செயல்படத் தொடங்கிவிட்டாலோ மிகப் பெரும் இயக்கம்” உபாசகரின் விளக்கம். அவர்கள் இருவர் முகத்தையும் பிரகாசப்படுத்தியது.

“உபாசகரே! இப்போது நீங்கள் முதலில் செய்ய வேண்டியது ஒன்றைத்தான். அதாவது இந்த எந்திரம் பற்றி தகவல் கூறச் சென்றிருக்கும் தனஞபனை முதலில் தடுத்து நிறுத்த வேண்டும். அடுத்து இந்தத் தென்புலத்துக்கே அதிகாரம் மிக்கவர்களாகவும், எவர் வந்தாலும் எதிர்த்து நிற்கும் சக்தி படைத்தவர்களாகவும் நீங்கள் எங்கள் இருவரையும் ஆக்க வேண்டும்” என்றார் தேவர்.

“கவலையே வேண்டாம். நீங்கள்தான், இனி இந்த தேசத்துக்கே அரசர்கள். உங்களில் யார் சக்கரவர்த்தி, யார் மந்திரி என்பதை நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள். அதேசமயம் உங்களின் ராஜகுருவாகவும் உங்களின் மூளையாகவும் நானே இருந்து வழி நடத்துவேன். என் இஷ்டபத்தினியாக ராஜமோகினியார் விளங்கலாம்” என்று அதற்கு பதில் கூறிய உபாசகரை ராஜமோகினி திகைப்புடன் பார்த்தாள்.

“அருமை... அருமை... இதுதான் இப்போதைக்கு மிகச் சரியான முடிவு. கோவிலம்மா, இனி உங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை.”

“ஆமாம். தேவதாசி என்கிற இவளது இந்நிலையை நான் மாற்றி, என் பத்தினி என்று கூறிக்கொள்ள அனுமதி தருகிறேன். உம் புறப்படு” உபாசகர் முடிவே செய்து, அதை அங்கே அறிவித்த விதமே அலாதியானதாக இருந்தது.

“உபாசகரே! என்ன இது உளறல்? உண்மையில் நீங்கள் அம்பாள் உபாசகர்தானா என எனக்குச் சந்தேக மாக உள்ளது” என்று பதிலுக்குக் கத்தினாள் ராஜ மோகினி.

’‘உளறலா! என்னிடமா” உபாசகரிடமும் பதில் கேள்வி.

“இது உளறலில்லாமல் வேறு என்ன? நான் இப் போது ஒரு அந்தணனின் பத்தினி. அடுத்தவன் மனைவி, என்னைப் பார்த்து இப்படியா பேசுவது!”

“இவர்கள், அதை ஒரு நாடகம் என்றார்களே!”

“அது இவர்கள் வரையில். என் வரையில் அதுதான் நிஜம்!”

“ராஜமோகினி, எதற்கு இந்த கோபம்? நீ அந்தணன் என்று கருதும் தனஞ்பன், இப்போது நமக்கெல்லாம் எதிரி! இப்போது நம்வசம் இருக்கும் ஸ்ரீஎந்திரம் ஓர் அற்புதம். அதைக் கொண்டு நாம் நம்மை வளப்படுத்திக்கொள்ள வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்!”

“இல்லை... தனஞ்பன் பயந்தது மிகச் சரி! அது உங்களை பேராசையில் விழவைத்து நீங்கள் உளறுவதைப் பார்க்கும்போது அவர் எத்தனை பெரிய தீர்க்கதரிசி என்று எண்ணிப் பார்க்கிறேன். அம்பிகையை சதாசார்வ காலமும் தியானித்த அவளது உபாசகரான நீங்களே அதை வணங்க விரும்பாமல் பயன்படுத்தி வளப்படுத்திக் கொள்ள கருது வது பெரும் பேராசை! என்னைப் பார்த்து மயங்கிவிட்டது பெரும் கொடுமை!”

“அதனாலென்ன? இந்த உலகில் ஆசைப்படாத வர்கள் யார்? ஆசையே அனைத்துக்கும் காரணம் என்று கூறிய புத்தபிரான்கூட ஆசைப்படாமல் இருக்க ஆசைப் பட்டார்.”

“போதும்... வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள். உங்களுக்கு நான் ஒரு நாழிகை அவகாசம் தருகிறேன். அதற்குள் நீங்கள் இந்த ஊர் எல்லையை

தாண்டிவிட வேண்டும்.”

“உபாசகரே! இனி, இவளிடம் பேசிக் கொண்டிருப் பதில் அர்த்தமில்லை. வாருங்கள். நாம் ஆலயம் செல் வோம். எந்திரத்தைப் பயன்படுத்தி இவளை வசியப் படுத்தும் வழியைப் பாருங்கள். இப்போது இவ்வளவு அலட்சியமாகப் பேசும் இவள், தினமும் உங்கள் கால் களைக் கழுவி அந்த தண்ணிரைக் குடிக்கும்படி செய்ய வேண்டும் எங்களில் தேவர்தான் சக்கரவர்த்தி, நான் மகா மந்திரி” என்றார் பிள்ளை.

அந்தக் காலை வேளையில் சொற்ப நேரத்தில் அவர்களிடம் பெரும் மாற்றம். உபாசகரும் ராஜ மோகினியை வெறித்திட, சௌக்யமோகினி குறுக் கிட்டாள். “ராஜமோகினி... பிடிவாதம் பிடிக்காதே! உபாசகர் கூறுவதுதான் சரி... நமக்கு இது நல்ல சந்தர்ப்பம்” என்றார்.

“அம்மா! நீ இப்படித்தான் பேசுவாய். நீ பொன்னை யும் பொருளையும் நேசித்தே வளர்ந்தவள். ஆனால், நான் அப்படியல்ல. யார் செய்த புண்ணியமோ, நான் இப்போது அந்தண பத்தினியாகவும் உள்ளேன். இந்நிலைக்கு ஒரு சிறு இழிவு நேரவும் சம்மதிக்க மாட்டேன். அந்த எந்திரத்தை நான் இவர்கள் பயன்படுத்த அனுமதிக்கவே மாட்டேன்’ என்று கத்தினாள் ராஜமோகினி.

“உபாசகரே... காலம் கரைந்துகொண்டே இருக் கிறது. நீங்கள் வாருங்கள். ஊரிலும் இவளுக்குத்தான் ஆதரவு! எனவே, முதற்காரியமாக ஊர் பந்தனம் செய்யவும் தாங்கள் தயங்காதீர்கள்” என்று தேவர் அழைத்திட... உபாசகரும் அவர்களுடன் புறப்பட்டார். ராஜமோகினி முன்சென்று தடுக்கப் பார்த்தாள். பிள்ளை ஒரே தள்ளாக தள்ளிவிட்டவராய்.

“சௌக்யமோகினி... உன்மகளை சற்று அடங்கி யிருக்கச் சொல். உனக்கு இருக்கும் புத்தி இவளுக்கு இல்லவே இல்லை. இன்னும் சில நாழிகை நேரங்கள்தான். உன் மகளே மனம் மாறப்போவதை நீ பார்ப்பாய்” என்று கூறிவிட்டு பிள்ளை புரவிமேல் ஏறிக்கொள்ள, தேவரும் தனது புரவியில் உபாசகை ஏற்றிக்கொண்டு சாலையில் புரவியைச் செலுத்தினார்.

அதேவேளையில் ராஜமோகினிக்குள் பளிச்சென்று ஓர் எண்ணம். அந்த நொடியில் ஆபத்து காலங்களில் பயன்படுத்தும் சுரங்கவழிப்பாதையின் நினைவு அவளுக்கு வந்தது. அதன் வழியாகச் சென்று எந்திரம் அவர்கள் கைகளில் சிக்கிவிடும்முன் அதைத் தன்வசப்படுத்த எண்ணி யவள், வேகமானாள். சௌக்யமோகினியாலும் அவளைத் தடுத்திட

முடியவில்லை.

***

ஆலயத்தின் பிரதான கதவு திறந்துதான் இருந்தது. சேறும் சகதியுமான வழித்தடத்தில் நடந்து பட்டைக் கற்களால் வேயப்பட்ட பாதையைப் பிடித்து முகப்பு முன்மண்டபம் கடந்து வேகமாய் ஆலயத்துக்குள் நுழைந்தனர் மூவரும். கோவில் குருக்களும், காலை பூஜை நிமித்தம் பூக்குடலையோடு வந்த படி இருந்தார். அவர் வசம் கருவறைச் சாவி! தேவரும் பிள்ளையும் குருக்களுக்காக சற்று தேங்கி நின்றிட அவரும் அருகில் வந்தார்.

‘அடடே தேவர் அவர்களா!’

“ஏன், பிள்ளை நான் கண்ணுக்குத் தெரியவில்லையா?”

“மன்னியுங்கள் பிள்ளை. இவர் யார் என்று கூற வில்லையே!”

“திருக்கடையூர் உபாசகர் தேவநாத சர்மா”

“அடடே! தாங்களா? தங்களுக்கு என் திவ்யமான நமஸ்காரங்கள்.”

“குருக்களே! சம்பிராயப் பேச்செல்லாம் பிறகு வேகமாய் சென்று கருவறைக் கதவைத் திறவுங்கள். உபாசகர், எந்திரபூஜை செய்வதற்காக வந்திருக்கிறார்.”

“எந்திர பூஜையா! என்ன கூறுகிறீர்கள்?”

“அதைப்பற்றிப் பேச நேரமில்லை. நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள்தான் இந்த ஆலயத்துக்கே இனி போஷகர். இந்த ஆலயச் சொத்துக்கள் அவ்வளவும் உங்களுக்கே சொந்தம்! உங்கள் பரம்பரையைச் சேர்ந்தவர் களே எதிர்காலத்தில் இந்த ஆலயத்தை நிர்வாகம் செய்ய லாம்...

“தேவரே! என்ன இது உளறல்? ஆலயச் சொத்துக்கள் எனக்குச் சொந்தமா? அபச்சாரம் அபச்சாரம்! இப்போது எதற்காக இந்தப் பேச்சு?”

“குருக்களே! உமக்கு விளக்கமளிக்க அவகாசமில்லை எங்கே சாவி?” என்று கேட்ட தேவர், குருக்களின் இடுப்பில் தெரிந்த சாவியை வெடுக்கென்று பிடுங்கியவராக நடந்தார். பிள்ளையும் உபாசகரும் பின்தொடர குருக்கள் அலறினார்.

“இது மகாபாதகம். ஆகமப்படி கருவறைக் கதவை நான்தான் திறக்க

வேண்டும். தவறு செய்யாதீர்கள் அதிலும் ஸ்ரீஎந்திரம் இப்போது இயக்க கதியில் உள்ளது அதன்படி பார்த்தால், அம்பாள் இப்போது ஸ்ரீசக்தி லோகத்தில் இல்லை. இங்கேதான் இருக்கிறாள். நாம் இப்போதுதான் மிகப் பணிவோடு பக்தியோடும் நடக்க வேண்டும்" என்று குருக்கள் கத்திக்கொண்டே சென்றும் பயனில்லை. தேவர் கருவறைப்பூட்டை வேகமாய் திறந்தார் மணிகள் சப்தமிட கதவும் திறந்துகொண்டது. ஆனால் உள்ளே எந்திரம் இருக்கவேண்டிய இடத்தில் அது இல்லை!

35

'எது பிரபஞ்ச அறிவு'

இது ஒரு பிரதான கேள்வி. பூமி உருண்டையானது. அது சுழன்றபடியே இருக்கிறது. அதனாலேயே இரவு பகல். உண்டாகி பருவமாற்றங்கள் ஏற்படுகின்றன என்ப தெல்லாம் அடிப்படையான விஷயங்கள். ஆனால் இதிலேயே குழப்பம் இருந்தது. கலிலியோ போன்ற அறிஞர்கள் இந்தக் கருத்தை முதலில் சொல்லி கல்லடி பட்டார்கள்.

நம்மவர்களோ இம்மட்டில் அந்த நாளிலேயே வெகுதூரத்துக்குச் சென்றுவிட்டனர். பூமி உருண்டை யானது என்று மட்டுமல்ல. பூமியைச் சுற்றும் கோள்கள் எவை...? அவைகளின் தன்மை எப்படிப்பட்டது. அதனால் பூமிக்கு நேரிடும் தாக்கங்கள் எந்த வகையைச் சேர்ந்தது? அந்தக் கோள்களுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் எவ்வளவு? அதனுடைய பெயர் என்ன என்று சகலத்தையும் கண்டறிந்து அதைக் கொண்டு பஞ்சாங்கம் என்கிற ஒன்றையே கண்டறிந்து விட்டனர்.

இதுதான் உண்மையான பிரபஞ்ச அறிவு.

இதன்படி சூரிய சந்திரர்கள் பற்றியும் அவர்களின் குணப்பாட்டையும் கண்டறிந்து மனித வாழ்வோடு பொருத்தி கோள்களின் மாற்றங்கள் மனிதவாழ்விலும் மாற்றங்களை உண்டாக்குவதைக் கண்டறிந்தனர். கருவில் உள்ள உயிரைக்கூட கோள்கள் தாக்கு வதையும் அறிந்தனர்.

இப்படி தாம் அறிந்ததை வைத்து நூல்கள் பலவற்றையும் எழுதினர். அவைகளே இன்று ஜோதிட சாஸ்திரத்துக்குப் பெரிதும் வழிகாட்டியாக உள்ளது. இவை அனைத்தையுமே குரு என்று ஒருவர் மூலம் ஒரு மனிதன் கசடறக் கற்க முடியும். அப்படிக் கற்ற நிலையில் பிரபஞ்சம் குறித்தும், உயிர்கள் குறித்தும், அனைத் துக்கும்

பொதுவான சக்தி குறித்தும், ஒரு தெளிவு ஏற்படும். இந்தத் தெளிவின் முற்றிய நிலைப் பாட்டையே ஞானம் என்கிறோம். ஸ்ரீ எந்திரத்தை விளங்கிட இந்த ஞானமும் மிக முக்கியம். இதோடு பூகோள ரீதியாக உள்ள வாஸ்து, ஞானமும் ஸ்ரீஎந்திரம் வரையில் பெரும் பங்காயிற்று.

*****

எந்திரம் இல்லாததைக் கண்ட உபாசகருக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதைவிட பேரதிர்ச்சி, தேவ ருக்கும் பிள்ளைக்கும்தான்!

குருக்களோ காத்திருக்காமல் உள்ளே சென்று அம்பிகையின் ஸ்தூல உருவுக்குப் பின்னால் சுவரை ஒட்டி அமைந்திருக்கும் சிறிய கதவுப் பகுதியைப் பார்த்தார். அது உடைக்கப்பட்டு வழி தெரிந்தது. அவர் அதைப் பார்த்து ராஜமோகினி எந்திரத்தை எடுத்துச் சென்றுவிட்டதை யூகிக்கவும் பின்னாலேயே வந்து நின்றனர் பிள்ளையும் தேவரும்...

“இப்போது புரிகிறது. இங்கே வந்து செல்ல ஒரு சுரங்கவழி, அதன் வழியாக ராஜமோகினி வந்து எந்திரத் தையும் எடுத்து சென்றுவிட்டாள். உபாசகரே! கவலை வேண்டாம். நாமும் இதன் வழியாகச் சென்றால் அவளைப் பிடித்துவிடலாம் வாருங்கள்” என்ற தேவரிடம் ஒரு அசாத்திய வேகம்!

பிள்ளையும் சளைக்கவில்லை. உபாசகரும் அவர்களை அந்த சுரங்க வழிக்குள் பின்தொடர்ந்தார். குருக்களுக்கோ கண்ணிரே வந்துவிட்டது.

தூய்மையான கருவறைக்குள் இப்படி ஒன்றுக்கு மூன்று பேர் நுழைந்து சான்னித்தியத்தையே குலைத்து விட்ட செயல் அவரை மிகவே வருத்தியது. அம்பிகையை தான் பார்த்தார்.

“அம்மா... லலிதா தேவி!”

இது என்ன சோதனை! எதற்காக இப்படி எல்லாம் நடக்கிறது? யாரை யார் ஆட்சி செய்வது? நீ இப்படியா இவர்கள் வசம் சிக்கவேண்டும்?

அன்று மகிஷாசுரன் உன் மகிமை தெரியாமல் உன்னோடு மோதினான். உன்னையே பெண்டாளவும் முனைந்தான். இறுதியாகதான் உனக்கு சம்காரம் செய்யும் எண்ணமே ஏற்பட்டது. இப்போதும் அப்படித்தான் விட்டுப் பிடிக்கப் போகிறாயா?

உன் எந்திரம் ஒரு பிரபஞ்ச அதிசயம்.

அது வணங்க மட்டுமே பயன்படவேண்டும்.

அதற்கு நீ தான் வழி வகை செய்யவேண்டும்” என்று பிரார்த்தித்தபடியே நின்றுவிட்டார்.

***

அந்த சுரங்க வழித்தடம் கோவிலுக்குத் தென்புறத்தில் குளத்தங்கரையை ஒட்டி முடிந்துவிட்டிருந்தது. அதன் வழியே ஸ்ரீ எந்திரத்தைச் சுமக்க முடியாதபடி சுமந்து கொண்டு வெளியே வந்த ராஜமோகினியை ஊருக்குள் நுழைந்த வேகத்தில் தாகம் தீர்த்துக்கொள்வதற்காக குளத்தில் இறங்கியிருந்த தனஞ்பனும் பார்த்தான்!

ராஜமோகினியை எந்திரத்தோடு பார்க்கவும் தலை யில் இடி விழுந்ததுபோல் இருந்தது.

“ராஜமோகினி...”

"நீங்களா?”

“இது என்ன அநியாயம்... உன் பேராசைக்கு ஒரு அளவேயில்லையா? இறுதியில் எந்திரத்தை திருடும் அளவு சென்றுவிட்டாயா?”

“இல்லை நான் களவாடவில்லை. நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள்.”

“போதும் நிறுத்து... கையிலே எந்திரத்தை வைத்துக் கொண்டு களவாடவில்லை என்றால் என்ன பொருள்?”

ஐயோ... நான் சொல்லப்போவதை சற்றுக் கேளுங்கள்.” என்று அவள் கூறும்போதே சுரங்க வழிக்குள் தேவரும் பிள்ளையும் உபாசகரும் வரும் அரவம் கேட்டது.

“ஐயோ... அவர்கள் வந்துவிட்டார்கள். என் கையில் எந்திரம் இருப்பதை பார்த்தால் நிச்சயம் அபகரித்துவிடு வார்கள்” என்றபடியே “என்னை மன்னியுங்கள்... அந்த ஆதி சக்திமேல் ஆணை என்னைப் பற்றியோ எந்திரம் பற்றியோ ஒரு வார்த்தைகூட எவரிடமும் நீங்கள் பேசக் கூடாது. வருகிறேன்” என்றவள் மளமளவென்று எந்திரத்துடன் குளத்தில் இறங்கினாள். அப்படியே மூழ்கியும் போனாள். எந்திரத்தை இறுக அணைத்த படி அதோடு தன் ஆடையைச் சேர்த்துப் பிணைத்துக் கொண்டபடியே அவள் மூழ்குவதைப் பார்த்த தனரூபன் “நில் நில்” என்று கத்தியும் பயனில்லை.

அதுதான் சமயம் என்று பிள்ளையும் தேவரும் உபாசகரும் வந்து

சேர்ந்தனர். தனரூபனைப் பார்க்கவும் அதிர்ந்தனர்.

“என்ன தேவரே... என்ன நடக்கிறது இங்கே?”

“அதெல்லாம் பிறகு... நீ ராஜமோகினியைப் பார்த் தாயா?"

“அவளை எதற்கு தேடுகிறீர்கள்?”

“அவள் ஆலயத்து எந்திரத்துடன் ஓடிவிட்டாள்.”

“ராஜமோகினி எதற்கு ஓடவேண்டும்? இந்த ஆலயமே அவர்களுக்கு கட்டுப்பட்டதுதானே?”

“உனக்கு பதில் கூற அவகாசமில்லை. நீ ஒரு விதத்தில

மூடன் என்றால் அவளும் உன்னைவிட பெரிய மூடச்சி.’’

“இப்போது எதற்கு இந்த வியாக்யானம்!”

“போதும் பேசியது... அவள் இங்கிருந்து வெகுதூரம் போயிருக்க முடியாது. ஆளுக்கு ஒரு பக்கமாகத் தேடு வோம். உபாசகரே நீங்களும் தேடுங்கள். இல்லாவிட்டால் கைக்கு. எட்டியும் வாய்க்கு எட்டாதவர்கள் ஆகிவிடுவோம். நாம் எப்பாடு பட்டாவது அதை அடைந்துவிட வேண்டும்.”

“உண்மைதான். அது அகப்பட்டமூன்று நாழிகைக் குள் முதலில் இந்த ஊரையே நம் அடிமைகளாக ஆக்கி விடுவேன். பிறகு நான் வைத்ததுதான் சட்டம்.” என்றார் உபாசகர்.

உபாசகர் அப்படிப் பேசிய மறுநொடியே தனஞப னுக்குப் புரிந்துவிட்டது.

“உபாசகரே, நீங்கள் யார் என்ற நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று கேட்டான்.

'திருக்கடையூர் தேவி உபாசகன். சந்திரமௌலீஸ் வரன் என்று நீ கேள்விப்பட்டதில்லையா?”

“புரிகிறது... நீங்கள் எப்படி இந்தப் பேராசைக்காரர் களோடு சேர்ந்தீர்கள்?”

“யாரும் யாரோடும் சேர்வது என்பது விதி வழிச் செயல்பாடு என்பது உனக்குத் தெரியாதா?”

“உங்கள் விதி மிக மோசமான விதி என்று கருது கிறேன்” தனரூபன் பதில் அந்த உபாசகர் நெஞ்சை எரியச் செய்தது. அப்போது குளத்து நீரிலும் சலனம். நீர் குமிழிகளைத் தொடர்ந்து ராஜமோகினியின் உயிர் இல்லாத உடல் நீர்மேல் வந்து மிதக்கத் தொடங்கியது.

உடம்பைப் பார்த்த நொடி யூகித்துவிட்டார் தேவர்.

“பிள்ளை... பிள்ளை... ராஜமோகினி நம்மிடம் இருந்து தப்பிப்பதற்காக எந்திரத்தோடு குளத்துக்குள் இறங்கி விட்டிருக்கிறாள். குளத்துக்குள்தான் ஸ்ரீ எந்திரமும் இருக்கவேண்டும்” என்றார் தேவர்.

"அப்படியானால் இறங்கிப் பார்த்துவிடுவோம்” என்று குளத்தில் இறங்கப் பார்த்த பிள்ளையை தனஞ்பன் ஆவேசமாய் முன்வந்து தடுத்தான். அவன் தடுத்த வேகமே அவர்களுக்கு குளத்துக்குள்தான் எந்திரம் இருக்கிறது என்பதை நிரூபிப்பது போல் இருந்தது.

“தேவர் அவர்களே, உங்கள் யூகம் மிகச் சரி. குளத்துக்குள்தான் எந்திரம் உள்ளது. நீங்கள் குளத்தில் இறங்குங்கள் நான் இவனைப் பார்த்துக் கொள்கிறேன்” என்ற பிள்ளை, ஒரு சண்டைக் கோழி போல தனரூப னோடு மோதத் தயாரானார். தனரூபனும் ஆவேசத்தின் உச்சத்தில் இருந்ததால் பிள்ளையோடு மோதத் தயா ரானான். இருவரும் குளக்கரையில் கட்டி உருளும்போது தேவரும் உபாசகரும் குளத்தில் இறங்கினர். மூழ்கி மூழ்கித் தேடத் தொடங்கினர். முதல் நாள் பெய்த அசுர மழையில் குளத்தில் நீர் மிகுந்து சமுத்திரம் போல காணப்பட்டது. எனவே அடியாழம் வரை சென்று தேடுவதில் இருவ ரிடமும் பெரிதும் சோர்வு ஏற்பட்டது. தேவர் மட்டும் ஒரு மாதிரி அடியாழத்திற்குச் சென்று எந்திரத்தையும் தீண்டிவிட்டார். தூக்க முயன்று முடியாமல் போய் மூச்சின்றி மேலேற முனைந்தபோது தாமரைக் கொடி ஒன்று காலை வளைத்தது.

அவ்வளவுதான்...

அவரால் அதன்பின் மேலேறவே முடியவில்லை. மார்புக் கூட்டுக்குள் நீர்புகுந்து நுரையீரல் முழுக்க நீர் நிரம்பி இதயம் இயங்குவதும் நின்று போனது.

உபாசகருக்கு அந்தக் காட்சி ரத்தத்தை உறைய வைத்துவிட்டது. தனரூபன் அவர் மீதும் பாய்ந்து தண்ணி ருக்குள் அவரை அமுக்கிப் பிடித்தான்.

சில பல நொடிகளில் அவர் உயிரும் பிரிந்தது. ஒன்றுக்கு நான்கு பிணங்கள், தேவியின் அபிஷேகத்துக்கு நீர் தரும் குளத்தில்தான் ஒன்றுக்கு நான்கு பிணங்கள். அதில் மிதந்தபடி இருந்த ராஜமோகினி உடம்பை இழுத்து வந்து மடிமேல் போட்டுக்கொண்ட தனஞ்பன், "ராஜ மோகினி, நீ உத்தமி. உன் தியாகம் ஈடு இணையற்றது. உன்னை நான் புரிந்துகொள்ளும் முன் உயிரை விட்டு விட்டாயே..." என்று கதறி அழுதான். "எப்படியோ... எந்திரத்தை எவர் பார்வையிலும் படாதபடி இந்த திருக் குளத்துக்குள் போட்டுவிட்டாய். அவளது குளத்திலே அவளே மூழ்கிப் போனாள். இனி அவளே அவளைக் காத்துக் கொள்ளட்டும். நீ உயிரோடு இருந்தவரை என்னோடு வாழ மிகவே ஆசைப்பட்டாய். ஆனால் நானும் அனுமதிக்கவில்லை. காலமும் அனுமதிக்கவில்லை. வாழ்வில் உன்னோடு இணை சேர்ந்திடாத நான் சாவி லாவது சேர விரும்புகிறேன்" என்றவன் ராஜமோகினியின் கையில் மின்னிய வைர மோதிரத்தைப் பார்த்தான். அதை எடுத்து அருகில் கிடந்த கற்படி மேல் வைத்து தூளாக்கி னான். பின் அதை அள்ளி வாயில் போட்டுக்கொண்டான். பின் மடிமேல் ராஜமோகினியோடு கைகளைக் கூப்பியபடி தேவிக்கு மிக உகந்த லலிதா சகஸ்ர நாமத்தைக் கூறத் தொடங்கினான். கோவில் குருக்களும் அப்போது அங்கே வந்து சேர்ந்திருந்தார். குளத்தங்கரைக் காட்சியில் உறைந்து போய் நின்றார்.

"தனரூபா, நடக்கக் கூடாததெல்லாம் நடந்து விட்டது..." என்று விசும்பி அழுதார்.

"ஆனாலும் காப்பாற்ற வேண்டியதைக் காப்பாற்றி விட்டோம்" என்றான் தனஞ்பன்.

"இருக்கலாம். அது இப்போது எங்கே என்று நானும் கேட்கமாட்டேன். ஆனால் தலை இல்லாத உடல் போல எந்திரம் இல்லாமல் இந்த ஆலயம் போற்றப்படுமா?"

"நிச்சயம் போற்றப்படும். இந்த திருக்குளத்து நீர் இனி வெறும் நீரல்ல, திவ்ய மதுர நீர்..."

"என்றால் எந்திரம் இந்தக் குளத்துக்குள்தான் உள்ளதா?"

"ஆம்... ஆனால் அதை நீங்கள் உங்கள் மனைவி மக்களிடம்கூட கூறக்கூடாது. இது நான் கற்ற வேதம் மேல் சத்தியம்."

"அந்த சத்தியத்தை என் உயிர் உள்ளவரை காப்பேன் தனரூபா."

“அது போதும் எனக்கு. நான் இப்போது ஆத்ம ஹாத்தி செய்துகொண்டுவிட்டேன்.”

“ஐயோ... இது பெரும் பாவமாயிற்றே...”

“ஏன்... ராஜமோகினிக்காக நான் செய்திருக்கும் சிறு தியாகம் இது. பாவம் அவள். எந்திரம் அவள் வாழ்வைச் சிறியதாக்கிவிட்டது. ஆனால் அவளும் சரி, நானும் சரி, திரும்பப் பிறப்போம். இப்போது வாழாததற்கும் சேர்த்து வாழ்வோம். அம்பிகை நிச்சயம் அதற்கு வழி வகுப்பாள் “குருக்களே!” என்றவன் அப்படியே உயிர் மூச்சை விட்டவ னாக ராஜமோகினி மேலேயே விழுந்தான்.

குருக்கள் உறைந்து போகத் தொடங்கினார்..!

36

வாஸ்து விஷயத்தில் இன்று மிகவே கேள்விகள் உள்ளன. இது சிலரால் கேலிக்குரியதாகவும், மிக மூடமாகவும் கூட பார்க்கப்படுகிறது. அதற்குக் காரணமில்லாமல் இல்லை.

இதை ஒரு கலை என்றும் அறிவு என்றும் கூறு வதுகூட தவறு. இது ஒரு ஞானம் என்பதே உண்மை. இந்த உண்மை தெரியாமல் இதைக் கூட்டிக்-கழிக்க முடிந்த ஒரு விஷயமாகக் கருதிக்கொண்டும், தங்கள் கற்பனைகளை இதில் சேர்த்தும் பலர் இன்று இதைக் கொண்டு பணம் பண்ணப் பார்ப்பதால் இன்று அது சிலரால் மிகவும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

உண்மையில் இது மிகப் பெரிய பிரபஞ்ச ஞானம் பூகோளம் என்றால் என்னவென்பதையும், தட்பவெப்பம் என்றால் என்ன என்பதையும் அடிப்படையாகக் கொண்டது. இந்த ஞானத்துக்கும் பூமியில் சுழற்சி, புவியீர்ப்பு, விசை, கோள்களின் சுழற்சி மற்றும் இடப்பெயர்ச்சி போன்றவற்றுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு.

இதில் துளியும் புரிந்துகொள்ள இடமில்லாத மாயா ஜாலம் என்கிற மித்தோ, அல்லது அதையும் கடந்த மகாசக்தியோ எல்லாம் இல்லை.

ஓடிவரும் அருவி நீரையும் ஆற்று நீரையும் தேக்கி அதன் விசைச் சக்தியைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க முடிவதுபோல, மண்மேலே நாம் கட்டிக் கொள்ளும் வீடுகளிலும் சில நல்ல சக்தியை உருவாக்கி அதை நம் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்வதே வாஸ்துவாகும்.

ஒரு வீடோ, கோயிலோ, தொழிற் சாலைகளோ, இல்லை கல்வி நிலையங்கள், உணவுச் சாலைகளோ பிரத்யேகப் பயன்பாடும் நோக்கமும் கொண்டவையாகும். எல்லாமே பொதுவாக கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டாலும், கட்டடம் என்று கூறப்பட்டாலும், அவை பயன்பாட்டால் மிகவே மாறுகின்றன. வீடு என்பது உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே வந்து செல்லும் இடமாகும். கல்வி நிலையம் என்பது மனம் ஒன்றி வயதில் இளையவர்கள் மட்டும் கூடி கற்குமிடமாகும். கோயில் எல்லோருக்கும் பிரபஞ்ச சக்தியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கூறுவதே வாஸ்துவாகும். இதன் பின்னால் மண்ணின் கூறு, வானின் வீச்சு, காற்றின் செரிவு, திசைகளைப் பற்றிய தெளிவு, சூரிய சக்தியைத் தேவைக்கேற்ப உள்வாங்கும் அறிவு என்கிற ஐவகைப் பிரிவு உள்ளது. இதையெல்லாம் தேர்ந்து தெளிந்த ஒருவர் ஒரு கட்டடம், அதன் நோக்கம், தன்மைக்கேற்ப எப்படி உருவாக வேண்டும் என்று கூறி, அதற்கேற்ப வரைபடம் உருவாக்கித் தரும்போது அங்கே நூற்றுக்கு ஐம்பது சதவிகிதம் வெற்றி வந்து அமர்ந்துவிடுகிறது.

ஆம்... மனித வாழ்வின் உயர்வுகள், உன்னதங் களுக்குப் பின்னால் வாஸ்து பலம் ஐம்பது சதவிகிதம் உள்ளது. இந்த ஐம்பதில், சிலருக்கு இருபது சதவிகிதம் என்றே உள்ளது. சரி இதற்கும் ஸ்ரீ எந்திரத்துக்கும் என்ன சம்பந்தம்?

*****

உறைந்துபோன குருக்கள் அப்படியே நின்ற படியே குளத்தையே பார்க்கத் தொடங்கினார். அது இப்போது அவர் வரையில் குளம் மட்டுமல்ல, அதுதான் தேவி வாசம் செய்யும் அவளது சக்திபுரம். அவரது காலிரண்டும் குளத்தங்கரை படிகளில் நீரில் நனைந்தபடி இருந்தன. அதை உணர்ந்தவர் ஐயோ தேவியை மிதித்துக் கொண்டிருக்கிறேனே என்பது போல் வேகமாக படிகளை விட்டு மேலேறி நின்றுகொண்டார்.

அதே வேளையில் காலை நேர பூஜைக்காக ஊரின் ஜனங்கள் பலர் குளத்தங்கரை வழியாக வந்தபடி இருந் தனர். அவர்கள் பிரமை பிடித்ததுபோல் நிற்கும் குருக் களையும் குளத்தில் பிணங்களாக மிதக்கும் தனஞ்பன், ராஜமோகினி, தேவர், பிள்ளை என சகலரையும் பார்த்து வாயைப் பிளந்துவிட்டனர்.

சிலர் அவரைச் சூழ்ந்துகொண்டு 'என்ன நடந்தது' என்று கேட்டு

உலுக்கி எடுத்தனர்.

என்னவென்று சொல்வது?

இதுவரையில் பளிச்சென்று ஒரு பொய்யைக்கூடச் சொல்லியிராத அவரது மனம் கிடந்து அலை மோதிற்று. வெளியே மௌனமும் உள்ளே போராட்டமுமாக இருந்த வரை சிலர் வேறுமாதிரி அர்த்தப்படுத்திக்கொள்ளத் தொடங்கினர்.

“எனக்குப் புரிகிறது... இங்கே ஒரு பெரிய போராட் டமே நடந்திருக்கிறது. எவனோ ஒரு மந்திரவாதி நம் ஆலயத்து எந்திரத்தைக் களவாட முயன்றுள்ளான். இவர்களெல்லாம் தடுக்கப் பார்த்துள்ளனர். ஆனால் அவனது மந்திரசக்தி முன்னால் எதுவும் எடுபடவில்லை. இவர்களை எல்லாம் அவன்தான் கொன்றிருக்க வேண்டும்...” என்றார்.

“என்ன குருக்களே... வாயைத் திறந்து சொல்லுங்கள். இவர் சொல்கிறபடிதான் நடந்ததா?” என்று கேட்டார் இன்னொருவர்.

“இவரிடம் என்ன கேள்வி? சந்நிதிக்குப் போய்ப் பார்த்தால் தெரிந்துவிடுகிறது” என்று அவர் கூறவும் எல்லோரும் சந்நிதி நோக்கி ஓடினார்கள்.

இறுதியில் மந்திரவாதி எந்திரத்தைக் கவர்ந்து சென்று விட்டான் என்கிற ஒரு எண்ணம் பரவலாக உருவாகி அதுவே நிலைக்கத் தொடங்கியது.

குருக்களுக்கும் ஊரார் அப்படி எண்ணுவது வசதி யாகப் போய்விட்டது. அதே வேளையில் குளத்தில் யாரும் அடியாழம் வரை எதற்காகவும் இறங்கி சென்றுவிடக் கூடாது என்றும் ஒரு எச்சரிக்கை உணர்வு தோன்றியது.

ஊரும் குளத்தில் இறங்குவதைத் தவிர்த்திருந்தது. காரணம், அதில் பிணங்கள் கிடந்ததால் குளம் தீட்டாகி விட்டது. கூடவே ஒரு இனம் புரியாத அச்ச உணர்வு. அதை அப்படியே நீடிக்க வைக்க என்ன வழி?

குருக்களின் யோசனையில் இறுதியில் ஒரு வழி புலனானது. ஒரு ஓலை ஒன்றை எடுத்து வந்து ஆலயத்து லலிதாம்பிகையே அருள்வாக்கில் வந்து சொன்னதைப் போல ஒரு பாடலை எழுதி கோயிலுக்குள் சந்நிதியில் காலடியில் வைத்துவிட்டார்.

மறுநாள் எல்லோரும் பார்த்திட கதவைத் திறக்கும் போது எல்லோர் முன்னாலும் ஓலையை எடுத்துப் படித்து குளத்தில் யாரும் இறங்காதபடி

செய்துவிட வேண்டும் என்பது திட்டம். அதற்கான பிரார்த்தனைகளோடு அவர் ஒலையை காலடியில் வைத்துவிட்டு வரவும், அன்று இரவே அவர் கனவில் அந்த ஆதிசக்தியின் குரல் ஒலித்தது.

“நீ வைத்த ஒலைக்கு அவசியமில்லை.”

“ஆலயத்தில் நடந்த அவ்வளவும் வினைப்பாடுகளே! கலியுகத்தில் என் மாயை காரணமாக இப்படி நிகழ்வதும் சகஜம். வரும் காலத்தில் இதன் பொருட்டு உயிரிழந்தவர் களாலேயே நான் உறையும் எந்திரமானது உலகம் பார்க்க பூஜைகளைத் தொடரும். அதுவரை அந்தக் குளமும் வற்றாது. என் அம்சமான சர்ப்பமொன்று குளத்தைக் காவல் காத்திடும். நடந்த இந்தச் சம்பவங்களை நீயே நாடி ஏட்டில் எழுதி வள்ளுவக்குடிகளிடம் சேர்த்துவிடு. அவர்களில் ஒருவர் உன்னைச் சந்திப்பார்” என்று ஒலித்து அடங்கியது.

அதற்கேற்பவே அடுத்தடுத்த சம்பவங்கள் நடக்கத் தொடங்கின. வெளியூரில் இருந்து சக்திபுரம் வந்த ஒரு பிராம்மணர் குளத்தின் அன்றைய நிலை தெரியாமல் கிணற்றில் இறங்கி நீராட முனைந்தபோது குளத்தின் நடுவில் உள்ள நீராழி மண்டபத்தின் நடுவில் ஐந்து தலை நாகம் ஒன்று படம் விரித்து அவர் பார்க்க நிமிர்ந்து நின்றது. அடுத்த நொடியே அவர் கையெடுத்து கும்பிட்டு விட்டு எடுத்தார் ஓட்டம்!

அந்தச் செய்தியும் பரவிட்டது.

குளமும் ஆகாயம் பார்க்க பச்சை பூத்து இன்றளவும் சலனமின்றி உள்ளது!

***

விடிந்துவிட்டது!

அதிகம் தூங்கிவிட்டது போன்ற பதைப்புடன் கண்விழித்த குருக்கள் தனக்கே உண்டான விதத்தில் இரு கைகளையும் பரபரவென்று தேய்த்துக்கொண்டார். பின் உள்ளங்கையில் உள்ள ரேகைகள் மேல் கண் விழித்தவர் அம்பாள் கனவில் வந்து கூறியதை நிறைவேற்றத் தொடங்கி னார். ஏடெடுத்து அவ்வளவையும் எழுதுவது என்பது அவர் வரையில் அனுபவமில்லாத செயல். அம்மட்டில் ஊருக்கு ஊர் எழுத்தாணிகள் என்பவர்கள் இருந்தனர். அவர்களிடம் எழுத்தாணியும் பனை ஏடும் எப்போதும் இருக்கும். அப்படி ஒருவனை அழைத்து

அவனை வைத்தே எழுதலாமா என்று யோசித்தார். ஆனால் அவனுக்கு விஷயம் தெரிந்து அது பின்னாளில் பலரிடம் பரவும் ஆபத்தை உணர்ந்தவர். சரியோ தவறோ தானே அதைச் செய்வது என்கிற முடிவிற்கு வந்தார்.

செப்புக் கம்பியை வாங்கி வந்து கொல்லனிடம் கொடுத்து எழுத்தாணியாக்கிக்கொண்டார். பனை ஏடு களையும் தேடிச் செல்லும்போது எதிரில் ஒரு சக்தி உபாசகர் ஒரு மூட்டை நிறைய ஏட்டுக்கட்டுகளுடன் வந்தபடி இருந்தார்.

வந்தவர் ஒரு பனை மரத்து நிழலின் கீழ் குருக்களைப் பார்த்து வணங்கினார். குருக்களும் வணங்கினார்.

“நீங்கள் சக்திபுரத்து கோயில் குருக்கள்தானே?”

“நானேதான்...”

“நான் திருக்கடவூர் அபிராமியை உபாசிக்கும் உபாசகன். என் பெயர் ஜெயசந்திரன்’

“மிகவும் சந்தோஷம்... இது என்ன உங்கள் கையில் ஏடுகள்?”

“கூறுகிறேன். அதற்கு முன் உங்களிடம் ஒரு கேள்வி...”

"தாராளமாய் கேளுங்கள்.”

“உங்கள் கனவில் அன்னையின் குரல் ஒலித்ததா?”

அவர் கேட்ட நொடி கோயில் குருக்களிடம் திகைப்பு. அது முகத்தில் தெரிந்தது.

“என்ன குருக்களே, திகைத்துவிட்டீர்களா?”

“திகைக்காமல் என்ன செய்வது. எனக்கு கனவு வந்தது உங்களுக்குத் தெரிந்துள்ளதே?”

“எனக்கும் கனவு வந்தது. அதில் அன்னையின் குரல் ஒலித்தது. நான் உபாசகன் மட்டுமல்ல. அன்னையின் மேல் பாடல்கள் புனையும் கவிஞனும் கூட. இதனால் ஏடெழுத வும் நான் பழகிக் கொண்டேன். அனைத்தும் அறிந்த அன்னைக்கு இதுதானா தெரியாது. எனவே அவள் என் கனவிலும் தோன்றி உங்களுக்கு உதவிடக் கட்டளையிட் டாள்.”

“உங்களால் சக்தி நாடி என்று ஒன்று பிறக்கும். அது பல அதிசயத்

தகவல்களைக் கொண்டுமிருக்கும் என்றாள்” என்றார்.

“ஆஹா... என்ன ஒரு அதிசயம் இது! அவளுக்கும் அவளது எந்திரத்துக்கும் ஆறு காலமும் நான் பூஜித்தது கொஞ்சமும் வீண் போகவில்லை. அன்னை என்னை ஒரு கருவியாக்கிக் கொண்டதோடு உதவிக்கு உங்களையும் அனுப்பி வைத்துவிட்டாள்...”

‘'உண்மைதான்... நேற்று இரவுதான் அவளது பீஜாட்சர மந்திரத்தை ஒன்பது கோடி முறைகள் ஜெபித்து நிறைவு செய்திருந்தேன். என் ஜெப பூஜைக்கு கிடைத்த பெரும் வரம்தான் என் கனவிலும் அவள் குரல் ஒலிக்க காரணம்..”

“நல்லது. நாம் அவள் இட்ட பணியைச் செய்ய முனைவோம்...” என்ற குருக்கள் அந்த உபாசகரைத் தன் இல்லத்திற்கே அழைத்துச் செல்லத் தொடங்கினார். தெருவில் நடந்து செல்லுகையில் ஊரில் ஒரு அமைதி நிலவுவது தெரிந்தது. குருக்களைப் பார்ப்பவர்கள் எல்லாம் வணங்கினார்கள்.

“ஊர் அடியோடு மாறிவிட்டதே?”

“ஆம்... பேராசைப் புயல் வீசிச் சென்றதன் விளைவு”

“பேராசைப் புயலா?”

“ஆமாம், அவ்வளவையும் நான் விரித்துச் சொல்லும் போது நீங்கள் எழுதுவீர்கள் அல்லவா. அப்போது புரிந்துவிடும்” என்ற குருக்கள் தன் வீட்டுக்குள் அவரை அழைத்துச் சென்று குளிக்க வைத்தார். அவரும் குளித்து விட்டு வந்து பூஜை அறைக்குள் ஐந்து திரி விளக்கை ஏற்றி வைத்துவிட்ட நிலையில் அம்பிகையை வணங்கச் சித்த மானார். பின் குருக்கள் சொல்லத் தொடங்கிட உபாசகரும் எழுதத் தொடங்கினார்.

முதல் எட்டில் “சக்தி நாடி’ என்று எழுதியவர் மறு ஏட்டில் அந்த சக்திக்கான வணக்கப் பாடலை பாடிய படியே எழுதி முடித்தார்.

மூன்றாம் பக்கத்தில் குருக்கள் சொன்னது ஆரம்ப மானது. அதே சமயம் குருக்களிடமும் அருள் வந்ததுபோல ஒரு உணர்வு. அவர் அப்படியே தன்னை மறந்தார். குரல் மட்டும் தங்குதடையின்றி ஒலிக்கத் தொடங்கியது.

வியாசர் சொல்லச் சொல்ல பிள்ளையார் மகா பாரதத்தை எழுதியதுபோல குருக்கள் சொல்லச் சொல்ல

உபாசகர் எழுதத் தொடங்கிய சக்தி நாடியானது அது வரை நடந்து முடிந்ததை மட்டுமல்ல... அதன் தொடர்ச்சி யையும் கூறத் தொடங்கியது. அதை எழுதும் சமயம் அந்த வீட்டுக்கு வெளியே ஒரு ஜோதிடரும் வந்து சேர்ந் திருந்தார். வைத்தீஸ்வரன் கோயிலை பூர்வீகமாகக் கொண்ட அவரும் ஒரு அம்பாள் பக்தர். நெற்றியில் விபூதியைவிட குங்குமத்துக்கு நிறைய இடம் அளித்திருப் பவர். அவர் காதுகளிலும் குருக்கள் சொல்வது விழத் தொடங்கியது!

37

“வாஸ்து பலத்துக்கும் எந்திரத்துக்கும் மிக நெருங்கிய சம்பந்தம் உண்டு. ஸ்ரீ எந்திரம் என்பதே ஒரு கோணத்தில் ஸ்ரீ எனப்படும் அந்த ஆதி சக்தி வாழ்ந்திடும் (அ) உறைந்திடும் கோட்டையைத்தான் குறிக்கிறது.

கோட்டை என்பதோ ஒரு கட்டுமானம் ஆகும்.

கட்டுமானம் என்றாலே இடம் என்று ஒன்று அதாவது பஞ்ச பூதத்தில் ஒரு பூதமான நிலம் என்பது இல்லாமல் கோட்டையை வடிவமைக்க முடியாது.

அந்த நிலமும் மிகுந்த சக்திச் செறிவுடையதாக இருக்கவேண்டும். அப்படி ஒரு நிலத்தில்தான் உன்னத மானவைகளை நிலைநிறுத்த முடியும்.

ஸ்ரீ எந்திரக் கோட்டை என்பதோ எல்லா வகை யிலும் எல்லா கோணங்களிலும் சக்தி மிக்க ஒன்று. ஆக கூடி சக்திச் செறிவுடைய நிலத்தின் மேல் சக்திச் செறிவுடைய கோட்டையாகிய ஸ்ரீ எந்திரம் உள்ளது என்பது இதன் அடிப்படையான கருத்து.

இதை சற்று மாற்றி இப்படியும் கூறலாம். ஒரு இடத்தில் ஸ்ரீ எந்திரம் உள்ளது என்றால், அந்த இடம் வாஸ்து பலம் உள்ள இடமாகும்

இப்படிச் சொல்லும்போது வாஸ்து பலம் இல்லாத இடம்கூட இருக்கிறதா என்கிற ஒரு வினா எழும்பும்.

வாஸ்துபலம் இல்லாத இடமே இந்த உலகில்

இருக்க முடியாது என்பதுதான் அடிப்படையான உண்மை.

அப்படியானால் இதற்கு எப்படி பொருள் கொள்வது என்கிற கேள்வி

எழலாம். வாஸ்து பலம் என்பது உலகம் முழுக்க உள்ளது. அது எந்த அளவுக்கு நல்லவிதமாக, தீயவிதமாக உள்ளது என்பதில்தான் சிக்கலும் உள்ளது.

இன்று வீடு கட்டவோ, இல்லை தொழிற்சாலை அமைக்கவோ இடம் வாங்கும்போது ஒரு நல்ல வாஸ்து நிபுணர் என்பவர் இடத்தைத் தேர்வு செய்து தருவார். அப்படி அவர் தேர்வு செய்யும்போது நிறைய விஷயங் களை கவனித்துத்தான் செய்வார். குறிப்பாக வட திசையில் மலைகள் அல்லது உயரமான மேடுகள் இல்லாதபடியும், தெற்கில் பள்ளம் இல்லாதபடியும், இடத்துக்கான பாதை பாம்புபோல வளைந்து வளைந்து செல்லாதபடியும், இடமானது சதுரமாகவோ (அ) செவ்வகமாகவோ துல்லியமாக இருக்கும் படியாகவும் தேர்வு செய்வார்.

இப்படி ஒரு இடத்தில் கட்டப்படும் கட்டடமே காலாகாலத்துக்கும் நிலைத்து நின்று பயன்தரும். ஆக ஒரு இடம் என்பது எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு வாஸ்து இலக்கணம் வழிகாட்டுகிறது. அப்படி இருக்கும் இடத்தில் ஒரு கட்டடம் எழும்பும்போது அது எப்படி எழும்பவேண்டும் என்று வழிகாட்டுகின்றது. அப்படி எழும்பி நிற்கும் ஒரு இடம் பூரண இயற்கை பலம் உள்ள இடமாகும்.

இப்படி ஒரு இடத்தில்தான் ஸ்ரீ எந்திரமும் கோவில் கொள்ள முடியும். மற்ற இடங்களில் ஸ்ரீ எந்திரம் இருக்கவே முடியாது என்பதுதான் ஆச்சரியமான ஒரு உண்மையாகும்.

*****

அந்த ஜோதிடர் முகம் குருக்கள் சொல்வதைக் கேட்டு ஆச்சரியமும் ஆவலாதியும் கொண்டது. ஏற் கெனவே நாடி ஜோதிடத் தொடர்பு இருப்பதால் தேர்ந்த மொழியறிவும் அவரிடம் இருந்ததால் குருக்கள் கூறுவது அவர் மனதிலும் ஆழமாகப் பதியத் தொடங்கியது.

குருக்களும் சக்திபுரத்து ஸ்ரீ எந்திரமானது தன் இயக்க கதியை ஒரு முறைக்கு இருமுறை காட்டிவிட்டு இறுதியாக பல உயிர் பலிகளுடன் சக்திபுரத்து திருக்குளத்தில் தஞ்ச மடைந்துவிட்டதைக் கூறி, முன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு அது ஒருவருக்கு இருவரால் அறியப்பட்டு திரும்பவும் ஒரு இயக்க கதிக்கு ஆளாகும் என்று கூறியதைக் கேட்ட அந்த ஜோதிடர் அதை அழுத்தமாக மனதில் குறித்துக் கொண்டபோது அங்கே அவர் நின்றுகொண்டு குருக்கள் சொல்வதை எல்லாம் கேட்டபடி

இருக்கிறார் என்பதை உள்ளே இருக்கும் குருக்களுக்கு உணர்த்த விரும்புவது போல் ஒரு நாயொன்று அங்கு வந்து பெரிதாகக் குலைக்கத் தொடங்கியது.

நாயின் குலைப்பு சப்தம் குருக்களின் பேச்சைத் தடைப்படுதுவது போல் தடுத்து நிறுத்தியது. நிமிர்ந்தார்.

நாயின் குலைப்பு ஜோதிடரையும் சற்று தர்ம சங்கடப்படுத்தியது. ஜோதிடர்களுக்கு நிமித்திகம் என்கிற ஒருவித ஞானமும் வசப்பட்டிருக்கும். அந்த நிமித்திகம் என்பது சுற்றுக் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், தோற்றங் களை வைத்து அடுத்து நடக்க இருப்பதை எடுத்துச் சொல்வதாகும்.

அதன்படி ஒரு இடத்திற்கு நாம் சென்றபடி இருக்கும் போது சுடுகாட்டுக்கு காரியம் செய்யச் செல்பவர்கள் கண்ணில் பட்டால் நம் உறவினர்களில் ஒருவர் இறக்கப் போகிறார் என்று பொருள். அதுவே கல்யாண ஊர்வல மாக இருந்தால் நம் உறவுகளில் ஒரு புது உயிர் துளிர்க்கப் போவதாக அர்த்தம். கிளியின் சப்தம், காக்கையின் சப்தம் என்று பறவைக் குரல்களுக்கெல்லாமும் பொருள் உண்டு. அந்த வகையில் நாய் குலைப்பது என்பது ஒரு வித எச்சரிக்கை ஆகும்.

குருக்களுக்கும் அந்த எச்சரிக்கை ஒலி புரிந்தது. கவனம் கலைந்து வெளியே பார்த்தபோது ஜோதிடர் தெரிந்தார். சற்று சுருக்கென்றது.

ஜோதிடரும் குருக்கள் பார்க்கவும் கை குவித்து வணங்கினார்.

“உள்ளே வாருங்கள்... நீங்கள்?”

“என் பெயர் மருதமுத்து... நாங்கள் ஜோதிடம் கூறும் வள்ளுவக்குடியில் வந்தவர்கள்.”

“இங்கு என் இல்லம் வந்த காரணம்?”

“எங்கள் குலதெய்வம் திருவக்கரை காளி ஆவாள். அவளை வழிபட்டுவிட்டுத் திரும்பும் சமயம் வழி தெரியாமல் நான் இந்த ஊருக்குள் வரநேரிட்டது. என் வரையில் இன்று சந்திராஷ்டமம் நடக்கிறது. ஆதலால் நான் சற்று சிரமப் பட வேண்டும் என்று தெரியும். அதே சமயம் என் ஜாதகப் படி கேதுவின் திசையும் அதன் அந்தரமும் நடக்கும் சமயம் நான் ஞானாந்தரமான ஒரு பெரும் ரகசியத்தையும் அறிந் தாக வேண்டும். இரண்டுமே இப்போது நடந்துவிட்டதாக கருதுகிறேன்.”

"அப்படியானால் நான் உபாசகரிடம் கூறியதை நீங்கள் கேட்டுவிட்டீர்கள் என்று சொல்லுங்கள்..."

"அவ்வளவையும் கேட்கவில்லை. ஆனால் ஸ்ரீஎந்திரம் எப்படித் திருக்குளம் சேர்ந்தது என்பது எனக்கு இப்போது தெரியும்."

அதைக் கேட்ட நொடி குருக்கள் முகம் மாறிப் போனது. அவரது பூஜை அறையில் மரச்சிற்பமாய் வீற்றிருக்கும் ராஜராஜேஸ்வரி உருவைக் கலக்கமுடன் பார்த்தார்.

உபாசகரோ ஜோதிடரை சுட்டுவிடுவது போல நோக்கினார்.
"பெரியவரே என்னை அப்படிப் பார்க்கா தீர்கள்... நான் எந்தத் தவறையும் செய்யவில்லை..."

"ஒட்டுக் கேட்டபடி நின்றது தவறில்லையா?"

"சரி... இனி என்ன செய்வதாக உத்தேசம்?"

"இது என்ன கேள்வி... எனக்கு விளங்கவில்லையே...?"

"ஜோதிடரே, ஸ்ரீ எந்திரம் ஒரு உலக அற்புதம். உலக அதிசயமும் கூட! அது இப்போது உலகைப் பொருத்த வரையில் களவு போன ஒரு அதிசயம். ஆனால் உங்கள் வரையில் அது இருக்குமிடம் தெரியும். இந்த உண்மை தெரிந்த நீங்கள் இனி என்ன செய்யப் போகிறீர்கள்?"

"எனக்கு தெரியவில்லையே..."

"இப்படிச் சொன்னால் எப்படி? அந்த அதிசயத்தை அடைய விரும்பியும், பயன்படுத்த முனைந்தும் தங்க ளையே இழந்தவர்கள் ஒருவருக்கு அறுவர்... அப்படி இருக்க அதை குறைந்தபட்சம் தரிசிக்க வேண்டும் என்று கூடவா உங்களுக்குத் தோன்றவில்லை."

"இப்போது நீங்கள் எடுத்துக் கூறவும் அப்படி ஒரு எண்ணம் தோன்றுகிறது. மற்றபடி இம்மட்டில் நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படி கேட்க நான் சித்தமாக உள்ளேன்."

"அப்படியானால் இங்கே அம்பிகை மேல் சத்தியம் செய்யுங்கள். உங்கள் காதில் விழுந்த உந்த உண்மைகள் எதையும் இந்த உலகோர் அறிய விடமாட்டேன் என்று..."

"வேடிக்கையாக உள்ளது தங்கள் விருப்பம்."

"வேடிக்கையாக உள்ளதா?"

"ஆமாம்... எழுத்தாணி கொண்டு எழுதியே பதித்து விட்டு யாருக்கும் அது தெரியக்கூடாது என்றால் என்ன அர்த்தம்?"

“இது தேவியின் கட்டளை..."

“என்றால் தேவியே தொடர்ந்து இதை கவனித்துக் கொள்வாள்.”

“நீங்களோ நானோ இதைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை.”

“உண்மைதான். ஆனாலும் இந்த உண்மைகள் இன் றுள்ள நிலையில் எவருக்கும் தெரியக்கூடாது. இது இப்போது கட்டிக் காக்கப்படவேண்டிய ரகசியம்.”

“சரி எழுதுவதை என்ன செய்யப் போகிறீர்கள்?”

“தெரியவில்லையே...” குருக்களும் உபாசகரும் அப்படி ஒரு பதிலைக் கூறவும் சிரிப்புதான் வந்தது. நாடி ஜோதிடனான மருதமுத்துவுக்கு.

“இந்தச் சிரிப்புக்குப் பொருள்?”

“சற்றுமுன் நான் சொன்ன பதிலையே நீங்களும் சொல்லும்போது சிரிக்காமல் எப்படி இருக்க முடியும்?”

“உண்மைதான் இலக்கில்லா பயணம்போல இந்த விஷயமும் நடந்தபடி உள்ளது. ஆனாலும் அந்த ஆதிசக்தி தேவியே வழி நடத்துகிறாள் என்பதையும் மறுப்பதற் கில்லை...”

“உண்மைதான்... ஜோதிடரை அனுப்பி வைத்து அவளே இந்த கேள்விகளை எழுப்பியுள்ளாள். இதற்கான பதிலையும் அவளே கூறட்டும்...” என்றார் உபாசகர்.

“நல்லது... நீங்கள் தேவியை பிரார்த்தனை செய்து கொண்டு கூறவேண்டியதைக் கூறி சக்தி நாடியை எழுதி முடியுங்கள். ஒரு வேளை உங்கள் வாக்கிலேயே அவள் விடையைக் கூறலாம்” என்ற ஜோதிடனின் கருத்துப்படி குருக்கள் தேவியைப் பிரார்த்தித்துக் கொண்டுவிட்ட இடத்தில் இருந்து கூறத் தொடங்கினார்.

"ஆதிசக்தி தேவியுடை வாசத்தல கோட்டமதும்...’ என்று வார்த்தைகளும் குதித்து வரத் தொடங்கின. அந்த வார்த்தைகளே வழியையும் காட்டின. அதன்படி அந்த சக்தி நாடியானது ஜோதிடர் மருதமுத்துவைச் சேர வேண்டும்.

***

மருதமுத்துவின் குடும்பத்தினர் வசிஷ்ட நாடியை வைத்தே ஜோதிடம் கூறி வருகின்றனர். அந்த நாடிகளோடு இந்த சக்தி நாடியும் சேர்ந்தே இருக்க வேண்டும். இந்த நாடியைத் திறக்கும் காலமும், வாசிக்கும் காலமும் பின் னாளில் வரும் அதற்குள் ஆறு தலைமுறைகளை ஜோதிடர் குடும்பமும், உபாசகர் குடும்பமும், குருக்களின் குடும்பமும் கண்டுவிடும். ஏழாம் தலைமுறையில் இதை வாசிக்க வேளை வரும். இந்த சக்தி நாடி கூறும் விஷயத்தின் பின்புலத்தில் ஸ்ரீ எந்திர நிமித்தம் மரித்துப் போவார்கள். அடுத்தடுத்த ஆறு பிறப்புகளில் தங்களின் எஞ்சிய கர்மங் களை கொஞ்சம் கொஞ்சமாய்த் தொலைப்பார்கள். ஏழாம் பிறப்பில் இவர்களே திரும்பவும் ஒன்றுபடுவார்கள். அவ்வேளையில் இந்த ஸ்ரீ எந்திரம் ஒரு பெரும் அருளை வெளிப்படுத்தும். அதன் பிறகும் இதன் பயணம் தொடரும். அனைத்துக்கும் காரணமான மாயையும் தேவியும் ஒரு அம்சமே... அந்த மாயை அவ்வேளையில் அனைவரையும் ஆட்டுவித்து ஒரு அருட்பதிவைத் தோற்றுவித்துச் செல்லும்.' என்னும் பொருளோடு குருக்களிடம் இருந்து வந்த வார்த்தைகள் முற்றுப் பெற்றன. முன்னதாக மறித்த வர்கள் எவ்வப்பொழுது எந்தவாறு பிறப்பெடுப்பார்கள்? அப்பிறப்பில் அவர்கள் ஜாதக அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதையும் குருக்களே கூறிய நிலையில் ஸ்ரீ சக்தி நாடி முற்றுப்பெற்றது. கிட்டத்தட்ட ஒரு கட்டுக்கு முப்பத்தி இரண்டு ஏடுகள் என்கிற கணக்கிலும் முன்னும் பின்னுமாய் நூற்றி எட்டுக்குக் குறையாத சொற்களுடன் மொத்தமாய் 48 கட்டுகள்! அதை அப்படியே ஒரு மரப்பொட்டிக்குள் வைத்து குருக்களும் உபாசகரும் தேவி யின் உத்தரவுப்படியே ஜோதிடர் மருதமுத்துவிடம் தந்தனர். அவரும் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு வணங்கியவராக விடைபெற்றுக்கொண்டார்.

ஜோதிடர் மருதமுத்துவும் அந்த சக்தி நாடியுடன் தான் வசிக்கும் வைத்தீஸ்வரன் கோயிலை ஒட்டிய 'தேவிப் பாக்கம்' என்னும் ஊர் நோக்கி நடையிடத் தொடங்கினார்.

குருக்களுக்கும் உபாசகருக்கும் அவர் தலையில பொட்டியோடு நடந்து செல்லும் காட்சி நெஞ்சை என்னவோ செய்தது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே துக்கமும் வந்தது. இருவரும் நின்ற இடத்தில் முதலில் அமர்ந்தனர். பின் சரிந்தனர். தூங்கத் தொடங்கிவிட்டனர்.

அருகில் பஞ்ச திரி போட்ட விளக்கொளியில் தேவியின் மரச்சிற்பம் ஒரு விளையாட்டை சுவாரஸ்யமாக வேடிக்கை பார்ப்பதுபோல பார்த்துக் கொண்டிருந்தது.

அதிலும் இது மிகப்பெரும் மாயா விளையாட்டு.

சரி... அடுத்து என்னவாகும்?

38

வாஸ்து பலமுள்ள இடத்தில்தான் ஸ்ரீ எந்திரம் இருக்க முடியும் என்பது எப்படி ஒரு அடிப் படையான விஷயமோ அதே போன்றதுதான் மற்ற இறை சாந்நித்யங்களும். இது பிரபல சேஷத்திரங் களுக்கும் மிகவே பொருந்தும். மக்கள் கூட்டம் அலை மோதும் எந்த ஒரு ஆலயத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அதுவும் வாஸ்து பலம் சார்ந்து பலமுள்ளதாக இருக்கும். வாஸ்து பலத்திற்கு பெரிய உதாரணமாக திருப்பதி ஆலயத்தைக் குறிப்பிடுவார்கள். இங்கே ஆதிசங்கரர் செல்வத்தை ஈர்த்துத் தரும் தனாகர்ஷண எந்திரத்தை ஸ்தாபித்திருக்கிறார். அதனால்தான் வரிசை யில் நின்று இங்கே மக்கள் கூட்டம் உண்டியலில் பணம் செலுத்துகிறது என்போர் உண்டு.

மதுரை மீனாட்சி ஆலயமும் வாஸ்து சக்திககு ஒரு உதாரணம். இந்த ஆலயத்திற்கு வடக்கு திசை யில்தான் வைகை பாய்கிறது. வைகைக் கரையின் மறு புறத்தில் திருவாப்புடையார் கோயில் என்னும் புராணச் சிறப்புமிக்க கோயில் ஒன்று ஆற்றின் கரையிலேயே இருக்கிறது. ஆனால் அந்த ஆலயத்திற்கு செல்லும் மக்கள் எண்ணிக்கை மிகவே சொற்பம்.

திருவரங்கம், ஸ்ரீசைலம், பத்ராசலம், பழனி, திருச்செந்தூர் என்று பிரசித்தி பெற்ற க்ஷேத்திரங்கள் அவ்வளவிலும் வாஸ்து பலம் மிகவும் உள்ளது. இந்த வாஸ்து பலம் என்பது காலத்தால் மாறக்கூடிய ஒன்றா கவும் இருப்பதுதான் விந்தை. நிலையான ஒன்று எப்படி மாறும் என்கிற கேள்வி எழலாம். வாஸ்து பலத்தில் ஒரு பாதியே நிலையானது. மறுபாதி மாறக் கூடியது அல்லது மாறிக்கொண்டே இருப்பதாகும்.

உதாரணமாக நம் வீடும் வீடு இருக்கும் நிலப் பரப்பும் வாஸ்து சார்ந்ததே. இதில் நிலம்மாறாதது. அதன்மேல் கட்டப்படும் வீடு மாறக்கூடியது. ஒரு முறை கட்டிவிட்ட வீட்டை நாம் காலப்போக்கில் அடிப்படை வசதிகள் அதிகரிக்கும்போது மாற்றிக் கட்டுவோம். அதனால் அந்த கட்டுமானத்திற்கு ஏற்ப வாஸ்துவானது மாறிவிடும்.

எனவே வாஸ்து பலம் என்பது ஒரு ஊர் வரையில் கோயில் வரையில்

நிலப்பரப்பின் மேல் மாறுவது பாதி யாகவும் மாறாதது பாதியாகவும் இருக்கும்.

ஒரு இருபது வருடங்களுக்கு முன்பு வரை திரு வண்ணாமலை கிரிவலம் என்பது வெகுசிலர் மட்டுமே செய்கின்ற ஒரு விஷயமாக இருந்தது. இன்று கோடிக் கணக்கிற்கு அது உயர்ந்துவிட்டது. இதனால் திருவண்ணா மலையின் பொருளாதார அடிப்படையே மாறிவிட்டது. நிலத்தின் மதிப்பு நூறுமடங்குக்கு மேலெல்லாம் உயர்ந்துவிட்டது.

எப்படி ஏற்பட்டது இந்த மாற்றம்?

வாஸ்து மாற்றமே காரணம். இந்த மாற்றம் நல்ல விதமாக மட்டுமல்ல, நேர் எதிராகவும் எதிரொலிக்கும். பல சுற்றுலாத் தலங்கள் இன்று மக்களால் மறக்கப் பட்டுவிட்டன. கூர்ந்து கவனித்தால் வாஸ்து பலம் கூடியது அல்லது குறைந்தது காரணமாக இருக்கும். வாஸ்து பலம் என்பதற்குள் பஞ்ச பூத சக்திதான் அடைந்துள்ளது. ஐந்து பூதங்களின் சக்தி அளவு கூடிக் குறையும் தன்மைக்கேற்ப பலமும் கூடிக் குறையும்.

இது மாய மந்திரம் சார்ந்த, அமானுஷ்யமல்ல... இது விஞ்ஞானம்! இந்த விஞ்ஞானம் இந்த உலகைப் படைத்த உயிர்களைப் படைத்த கடவுளைக் கூடவா கட்டுப்படுத்தும் என்று ஒரு கேள்வி இவ்வேளையில் எழலாம்.

இந்தக கேள்விக்கான விடை மிக சூட்சுமமானது!

அது?

*****

திருப்பரங்குன்ற கோயிலின் பெரியமணி என்பது அபூர்வமாகவே ஒலிக்கக்கூடியது விசேஷ நாட்களில்தான் ஒலிக்கும். அதன் சப்தம் கேட்டு கண் விழிப்பது என்பது ஊரில் பலருக்கு வழக்கம். அதன்பின் அவர்கள் மளமள வென்று ஒரு எந்திரம் போல இயங்கத் தொடங்கிவிடு வார்கள்.

வயலோரம் ஒதுங்கிவிட்டு, சரவணப் பொய்கைப் பக்கம் சென்று நீராடி முடித்து, உடுத்தியிருக்கும் ஆடை யையும் அலசிப் பிழிந்து தோள் மேல் போட்டுக்கொண்டே நடந்தால் வீடு வருவதற்குள் காய்ந்துவிடும்.

வீட்டிற்குள் நுழைந்த மாத்திரத்தில் விபூதியை எடுத்துப் பூசிக்கொண்டு

பூஜை அறையில் விளக்கை ஏற்றுவது என்பது பல வீடுகளில் வழக்கம். பின் ஆடையை மாற்றிக்கொண்டு பொழுது விடிவதற்குள் திருச்சன்னதிக்குப் போய் காலையின் முதல் ஆரத்தியுடன் கூடிய விசுவரூபத்தை சேவிப்பதை பலரும் ஒரு வழக்கமாய்க் கொண்டிருக்கின்றனர்.

அவர்களில் சுந்தரம் பிள்ளையும் ஒருவர்!

ஆயிரத்தெட்டு விசுவரூபம் சேவித்தவர்களுக்கு ஏழு தலைமுறைக்கு இஷ்ட கல்யாண சித்தி உண்டாகும் என்பது நம்பிக்கை. சுந்தரம் பிள்ளை ஆயிரத்தெட்டை எப் போதோ கடந்துவிட்டார்.

அன்றும் எழுந்திருந்தவர் கொட்டாவி பிரிய பாத் ரூமிற்குப் போய் வந்தார். வரும்போதே முகத்தைக் கழுவிக்கொண்டு வந்திருந்தார்.

அதே சமயம் வெளியே அவர் ஜோதிடம் பார்க்கும் அலுவலக அறையில் விளக்கு எரிந்தபடி இருந்தது. ஆச்சரியத்தோடு வந்து எட்டிப் பார்த்தார். அவருக்கு ஒரு விதமான அதிர்ச்சி காத்திருந்தது.

தனஞ்ஜெயன் அந்த மரப்பொட்டி ஏடுகளை எல்லாம் எடுத்து வாசித்துக்கொண்டிருந்தான். பார்ப்பதற்கும் குளித்து முடித்து விபூதி தரித்தவனாக திவ்யமாக காட்சி தந்தான்.

எதிரில் சுந்தரம் பிள்ளை வந்து நிற்கவும் நிமிர்ந்தான். மெல்லிசாக சிரித்தான்.

“தனா...”

“என்னப்பா?”

“என்ன பண்ணிக்கிட்டிருக்கே?”

“ஏடு வாசிக்கறேன் மருதமுத்து.”

“என்னது... மருதமுத்தா?”

“அதாம்பா உங்க பூர்வ ஜென்மப் பேரு”

“ஏடு சொன்னிச்சா?”

“ஆமாம்ப்பா...”

“தெளிவாயிட்டியா?”

“ஆயிட்டேம்பா...”

“என்னல்லாம் தெரிஞ்சிக்கிட்டே...?”

“எல்லாம் தெரிஞ்சிக்கிட்டேன்பா...”

“எல்லாம்னா?”

“எல்லாம்னா எல்லாம்தான்...”

“அப்ப ராத்திரி எல்லாம் இதைதான் பண்ணிக் கிட்டிருந்தியா?”

“முதல்ல சொப்பனம் மாதிரி பல விஷயங்கள் மனசுக்குள் வந்துட்டு போச்சு. பிறகு இதை எடுத்து வாசிச்சேன். நான் யார்? நீங்க யார்? அம்மா யாரு. விT யாரு? இப்படி எல்லாத்துக்கும் விடை தெரிஞ்சிடிச்சிப்பா...”

“நல்லதப்பா... நான் ஒரு ஜோசியனா இருக்கறதால இப்படி நீ சொல்றத புரிஞ்சிக்க என்னால முடியுது. என் இடத்துக்கு வேற யார் இருந்தாலும் உன்னை சித்தம் கலங்குனவனாதான் பாப்பாங்க...”

“இல்லப்பா... வேற யாரா இருந்தாலும் நான் இந்த விஷயத்தைப் பேசமாட்டேன். உங்ககிட்ட மட்டும்தான் பேசுவேன்.”

“நல்லதப்பா... என்ன செய்யப்போறே?”

“சக்திபுரத்துக்கு போகப்போறேம்பா.”

“போயி...?"

“அங்க ஜல வாசம் பண்ணிக்கிட்டிருக்கிற ஸ்ரீ எந்திரத்தை எடுத்து ஒரு மண்டலம் பூஜை செய்யச் சொல்லி இதுல உத்தரவுப்பா..!”

“நெஜமாவா?”

“ஒரு ஜோசியரான உங்களப் பார்த்துதான் எல்லாரும் இந்தக் கேள்வியைக் கேட்பாங்க. நீங்க அவங்கள எல்லாம் நம்புங்கன்னு சொல்வீங்க. நீங்க இப்ப என்னப் பாத்து கேக்கறீங்களேப்பா...”

“நீ ஒரு அதிசயமான பிறவின்னு தெரியும்பா... ஆனா ஸ்ரீ எந்திரத்தை பூஜை செய்யப் போற அளவுக்குன்னு எனக்கு கணக்கு போடத் தெரியலப்பா...”

“விடுங்கப்பா... ஏடு வழியக் காட்டிடுச்சு. நானும் அதுல போகப்போறேன். இனி எல்லாம் நல்ல விதமா மட்டும்தாம்ப்பா

நடக்கும்.”

அந்த அதிகாலையில் அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதை மூன்றாவதாக எழுந்து வந்திருந்த நல்லம்மை யும் கேட்டபடி இருந்தாள்.

அவள் முகத்தில் இனம்புரியாத ஒரு கலக்கம்.

“அம்மா...”

“சொல்லு கண்ணு...”

"நீயும் முழிச்சிட்டியா?”

“தூக்கத்துலயா... இல்ல உன் விஷயத்துல கேக்கறியா கண்ணு!”

“உன் பதிலே நீ ரெண்டுலயும் முழிச்சிட்டதைச் சொல்லுதும்மா...”

“கண்ணு... உன்னை நான் என் மகனா மட்டும்தான் பாக்கறேன். நீ வேற எந்த விதமா மாறுனாலும் அது எனக்கு பிடிக்காதுங்கறத புரிஞ்சுக்க...”

“நீ உன் ஆசையைச் சொல்றே... ஆனா விதிப்படி தானே எல்லாம் நடக்கும்?”

“நீ என்னய்யா சொல்றே?”

“கவலப்படாதேம்மா... நான் உன் மகனா உனக்கு பேரன் பேத்தியை எல்லாம் பெத்துத் தருவேன். இந்த ஜென்மத்துக்கு எனக்கு விஜிதான் பெண்டாட்டி. இதுக் காக நீயோ நானோ, இல்ல இன்னொரு மூணாம் மனுஷனோ கொஞ்சம்கூட சிரமப்படவேண்டாம்.”

“நெசமாவா... என் அண்ணன் மவ விஜயலட்சுமியே இந்த வீட்டு மருமகளாவும் வந்துடுவாளா?”

“அதான் எல்லாமே தெரிஞ்சு போச்சே...” தனஞ் ஜெயன் ஏட்டுக்கட்டுகளைக் காட்டினான்.

“எப்படிப்பா... அவளுக்குதான் அந்த திருநெல்வேலிக் காரனோட நிச்சயமே முடிஞ்சிடிச்சேப்பா...”

“அது நிச்சயம் இல்லை... தோஷம்!”

“தோஷமா?”

“ஆமாம்... இந்த பூமில இன்பத்தைக்கூட தோஷமா தான் சொல்றோம்.

அதாவது சந்தோஷம்னு...”

“புரியற மாதிரி சொல்லுப்பா...”

“அனுபவிச்சு நீங்கற விஷயம்னு ஒண்ணு, பரிகாரத் தால நீங்கற விஷயம்னு ஒண்ணு, எதாலையும் நீங்காத துன்னு ஒண்ணு இப்படி மூணு விஷயங்களால ஆனது தாம்மா வாழ்க்கை. அதனாலதான் ஈஸ்வரனும் சரி, ஈஸ்வரியும் சரி, திரிசூலத்தைப் புடிச்சிருக்காங்க”

“தத்துவமா பேசறே... ஆனா நீ சொல்றதக் கேக்க நல்லா இருக்கு.”

“போதும்மா நீ கேட்டது. நான் போய் ஆகவேண்டி யதைப் பாக்கறேன்.”

“ஆகவேண்டியதுன்னா...”

“நடக்க நடக்க தெரிஞ்சிக்கப் போறிங்க... என்ன இப்ப?” அவன் பதில் சொன்ன விதமே அலாதியாக இருந்தது!

***

கல்யாணப் பத்திரிகையின் மாதிரி வடிவம் வந்திருந்தது. பிரெஸ்ஸுக்கு போய் இளங்கோவே வாங்கி வந்திருந் தான்! கிட்டத்தட்ட நான்கைந்து மாதிரிகள். அதில் ஒரு மாதிரியை விஜியின் அப்பாவான தனசேகரன் பிள்ளை தேர்வு செய்திருந்தார்.

“இதே இருக்கட்டும். போய் நுறு காப்பி அடிக்கச் சொல்லிடு.”

“நூறெல்லாம் எந்த மூலைக்குப்பா... ஆயிரமாச்சம் வேணும்.” இளங்கோ சடைத்தான்.

“ஆயிரமில்ல, ஐயாயிரத்துக்கு திட்டம் போட்டிருந் தேன். ஆனா உன் தங்கச்சி எல்லாத்தையும்தான் கெடுத் துட்டாளே... இப்போதைக்கு இவளை நல்ல விதமா கட்டிக் கொடுத்தா அதுவே பெருசு, நூறே என் வரைல அதிகம் போ... போய் சோலியப் பாரு...”

அப்பனும், மகனும் பேசிக்கொள்வது உள்ளே இருந்த விஜியின் காதிலும் விழுந்தது. அவள் கண்களில் கண்ணிர். அப்போது வாசல்புறமாக நிழலாடியது.

எட்டிப் பார்த்தாள் விஜியின் தாயான தேவகி.

சந்திர மௌலி நின்றுகொண்டிருந்தார்.

“யார் நீங்க?”

“நன் ஒரு உபாசகன்மா... இந்த வீட்ல நல்ல காரியம் நடக்கப்போறதா அம்பாள் கனவுல வந்து சொன்னா...” அவர் தொடக்கமே சற்று புதிராக இருந்தது. தேவகியும் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

“உள்ள கூப்பிடமாட்டீங்களா... உட்கார்ந்து பேசினா பல விஷயங்கள் சொல்வேன்...”

அவர் சொன்னதை கேட்டபடியே வந்த இளங்கோ, சந்திரமௌலியைப் பார்க்கவும் “நீங்கதானே என் அத்தை வீட்ல இருந்தது” என்று கச்சிதமாகக் கேட்டான்.

“ஆமாம்ப்பா...”

“என்ன... உங்கள விட்டு சமாதானம் பேசச் சொல்லி யிருக்காங்களா?”

“இல்லப்பா... நான் வந்துருக்கறதே வேற விஷயத் துக்குப்பா...”

“வேற விஷயத்துக்குன்னா?”

“உன் தங்கைக்கும் அந்த தனஞ்ஜெயனுக்கும் எந்தக் காரணம் கொண்டும் கல்யாணம் நடக்கக்கூடாது. அதே சமயம் உன் தங்கையால செய்யவேண்டிய சில பரிகாரங் களை நீங்க சரியா செய்துட்டா இங்க கல்யாணம் ஒரு குறையுமில்லாமல் நடக்கும்.”சந்திரமௌலியிடம் ஒரு மாறுபட்ட அணுகுமுறை.

39

வாஸ்து பலம் என்பது இந்த பிரபஞ்சத்தையே படைத்த கடவுளர்களின் கோயில்களைக்கூட கூட்டுப்படுத்துமா என்றால் கட்டுப்படுத்தும் என்பதே விடையாகும்.

ஏனென்றால் கோயிலில் உள்ள அருட்சக்தியை விட வாஸ்து சக்தி பெரிதா என்று கேட்கத் தோன்றும். இது நல்ல கேள்வியும் கூட ஒரு வகையில் வாஸ்து சக்தி என்பதே அருட்சக்தியைப் போன்றதுதான். இரண்டும் வேறு வேறில்லை. எனவே வாஸ்து பலமில்லாத ஒரு இடத்தில் முதலில் ஆலயம் அமைவதே மிக சிக்கலான ஒன்றாகும்.

ஏனென்றால் ஆலயம் என்பது ஒரு பொதுவான விஷயம். அடுத்து இதற்கு மேலான ஒன்று இல்லை என்பதே உண்மை. எனவே

மேலானதாகவும், பொது வானதாகவும் உள்ள ஒன்று சரியில்லாத வாஸ்து, பலமில்லாத (அ) தவறாக உள்ள ஒரு இடத்தில் எழும்பாது.

ஏனென்றால் வாஸ்துபலமில்லாத ஆலயங்களே இருக்க வாய்ப்பில்லையே என்று கேட்கலாம். இங்கே தான் சூட்சுமம் ஒளிந்துள்ளது.

ஊருக்குப் பொதுவான ஒரு ஆலயம் பொதுநோக் கோடு நல்ல விதமாய் எழும்பிவிட்ட நிலையில், காலப் போக்கில் அந்த ஆலயத்துக்குள்ளும், ஆலயத்தைச் சுற்றியும் ஏற்படும் கட்டட வளர்ச்சியும் மாறுபாடுகளும் வாஸ்து சக்தியின் மாற்றத்துக்குக் காரணமாகி குறிப் பிட்ட ஆலயம் பெரிதாக புகழ் பெறவோ இல்லா விட்டால் புகழ் குன்றவோ காரணமாகிவிடுகிறது!

இதற்கு இன்று பலநூறு ஆலயங்களை உதாரணமாய்ச் சொல்லலாம். இதனால் ஆலயத்தில் உறையும் இறைவ னுக்கு எந்த ஏற்ற இறக்கமும் ஏற்பட்டுவிடுவதில்லை. அந்த இறைவனை நாடிச் செல்வோரிடம்தான் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன.

வாஸ்துபலம் குறைந்தால் சான்னித்ய குறைபாடு ஏற்படும். சான்னித்யம் குறையும்போது அந்தக் கோயி லுக்குச் செல்லவேண்டும் என்று எண்ணுகிற எண்ணத் தில் நமக்கும் ஒரு வேகக் குறைபாடு தோன்றும்.

பிறகு போய்க்கொள்ளலாம் என்று நினைத்து அங்கு போவதைத் தள்ளிப் போடுவோம். பிறகு சுத்தமாய் போவதை நிறுத்திக்கொண்டுவிடுவோம். இதனால் தெய்வத்துக்கு எது குறைந்துவிடும்?

நமக்குதானே இதனால் குறைவு?

*****

சந்திரமௌலி பேசியது தேவகியை யோசிக்க வைத் தது. ஆனால் இளங்கோவிடம் கோபம் மூளத்தொடங் கியது. தனசேகரன் பிள்ளையும் எழுந்து வந்து, "யார் இவரு... என்ன சத்தம்?" என்று கேட்டார்.

"அப்பா இந்தாள் ஒரு சாமியார். போனவாரம் நம்ம சன்னதி தெருவுக்கு ஒரு வயசான சாமியார் வந்திருந் தாருல்ல?"

"அவருக்கென்னடா... அதான் இந்த திருப்பரங்குன்றத் துல திரும்பின பக்கமெல்லாம் சாமியாருங்க கத்திகிட்டு திரியறாங்களே..."

"நீ சொல்ற சாமியாருங்க பண்டார பரதேசிங்க. தம்மு, தண்ணின்னு கெடக்கறவங்க. நான் சொன்னது ஒரு அய்யமார் சாமியாரை..."

"விஷயத்துக்கு வா... அவருக்கென்ன இப்போ?"

"இந்தாள் அவர் கூட்டத்தைச் சேர்ந்தவரு. அத்தை ஊட்டுல இவரைப் பாத்துருக்கேன். இப்ப இங்க வந்துருக் காரு."

"உங்களுக்கு என்ன சாமி வேணும். இங்க எங்க வந்தீங்க?" தனசேகரன் நேராக சந்திர மௌலியையே கேட்டார்.

"நான் அம்பாள் அனுப்பி வந்துருக்கேன். உங்களுக்கு நல்லது பண்றதுதான் என் நோக்கம்."

"அம்பாள்னா... சாமியா?"

"சந்தேகமே வேண்டாம்... அம்பாளேதான்..."

"நம்பற மாதிரி பேசுங்க சாமி... இங்க நாங்க யாரும் உருக்கமா சாமி கும்புட்றவங்களே கிடையாது. கும்புடு கும்புடுன்னு கும்புட்றவங்களையே அந்த சாமி கண்டுக்கறது கிடையாது. இதுல எங்க குடும்பத்துக்காக உங்களை அனுப்புனான்னு அளந்துவிட்றீங்களே..?" தனசேகரன் கேள்வியில் இருந்த நியாயம் சந்திரமௌலியைச் சற்று திணற அடித்தது.

"நீங்க ஒண்ணு... அவர் என்ன சொல்றார்னுதான் கேட்போமே... நீங்க உள்ள வாங்க" என்று அவரை உள்ளே அழைத்தாள் தேவகி. சந்திரமௌலியும் உள்ளே நுழைந்து ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தார்.

"என்ன சாப்பிட்றீங்க?"

"ஒண்ணும் வேண்டாம்மா... நான் சொல்லப் போறத நீங்க புரிஞ்சிக்கிட்டா போதும்."

"சொல்லுங்க..."

"உங்க பொண்ணுக்கு இப்ப நீங்க பாத்துருக்கற மாப்பிள்ளையோட கல்யாணம் நடக்கறதுல நிறையவே சிக்கல்கள் இருக்கு..."

“அதை எல்லாம்தான் கடந்துட்டோமே...”

“இல்லை... நீங்க இன்னும் கடக்கலை...”

“யோவ் சாமி... உன் வாயை மூடு! என்ன? பரிகாரம் அது இதுன்னு சொல்லி பணம் பிடுங்க வந்துருக்கியா?” இளங்கோ காட்டமாக இடையிட்டான்.

“சத்யமா இல்லை. என் பேச்சைக் கொஞ்சம் கேளுங்க. நான் சொல்ற எதுவுமே என் அபிப்ராயமில்லை. எல்லாமே நாடில நான் படிச்சது...”

சந்திரமௌலி நாடி என்ற நொடி உள்ளே மரவட்டை போல சுருண்டு படுத்திருந்த விஜி எழுந்து வந்து அறை வாசல் அருகே நின்றுகொண்டு சந்திரமௌலி சொல்லப் போவதைக் கூர்ந்து கவனித்தாள்.

“நாடியா... நாங்க யாரும் நாடி ஜோசியமே பாக் கலையே?’ என்று தாடையை வருடிக்கொண்டார் தன சேகரன்.

“நீங்க பாக்கலை, ஆனா அந்த தனஞ்ஜெயன் வீட்ல இருக்கற மரப்பொட்டில நாடி இருக்கு. அதை நான் பாத்ததால சொல்றேன்.” சந்திரமௌலி நாடி என்றது இளங்கோவையும் கட்டிப்போட்டது. ஏன் என்றால் வீட்டு மொட்டை மாடியில் கூரைச்சரிவில் அதைச் தற்செயலாக அவன் பார்த்ததெல்லாம் நினைவுக்கு வந்தது. அதைக் குரங்கு கொண்டுபோனது அவனுக்கும் சரி, அவர்களுக்கும் சரி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவனிடம் அமைதி வரவுமே சந்திரமௌலிக்கும் அது வசதியானது.

“நான் இப்ப சொல்லப் போறத நல்லா கேட்டுக்குங்க. சக்திபுரம்கற ஊர்ல இருக்கற குளத்துல குளிச்சிட்டு அங்க இருக்கற லலிதாம்பிகைக்கு சஹஸ்ர நாம அர்ச்சனையை உங்க மகள் செய்யணும். அப்பதான் நீங்க நிச்சயம் பண்ணியிருக்கற கல்யாணம் நடக்கும். இல்லேன்னா நீங்க தலைகீழா நின்னாலும் நடக்காது. அது மட்டுமில்ல. உங்க பொண்ணு என் பேச்சைக் கேட்டா உங்க பொண்ணை நான் இந்த உலகமே திரும்பிப் பார்க்கும்படி செய்வேன். அதுமட்டுமில்ல. இந்த உலகமே உங்க பொண்ணு சொல் றதைக் கேட்கும்படி செய்வேன்...” சந்திரமௌலி சொல்லிக் கொண்டே போனது தனசேகரன் பிள்ளைக்கே எரிச்சலை ஏற்படுத்திவிட்டது.

“ஐயா சாமி... நாடி ஜோசியம்னு சொல்லி எங்கள மிரட்டப் பாக்கறிங்களா?” என்று ஆரம்பித்தவர்,

“என் பொண்ணு கல்யாணம் கண்ணிகிட்டு பிள்ளை குட்டின்னு வீட்டுக்கு அடக்கமா இருந்தா போதும். நீங்க இடத்தை காலி பண்ணுங்க முதல்ல...” என்று கையைச் சொடுக்க ஆரம்பித்தார்.

“நான் இப்ப போறேன். நான் திருப்பரங்குன்றம் கோயில் மண்டபத்துலதான் படுத்துருப்பேன். நீங்க என்னை நிச்சயம் தேடி வருவீங்க. உங்க பொண்ணு யாரோ இல்லை. பூர்வ ஜென்மத்துல ஒரு கோயில் தாசியா இருந்தவ. அதுவும் சக்திபுரத்துல..!. அவளுக்குப் பின்னால் ஒரு பெரிய கதையே இருக்கு. அது தெரிஞ்சா நீங்க இப்ப இப்படி பேசமாட்டீங்க. ஆனா நீங்க என்னைக் கூப்பிடு வீங்க. என்கிட்ட பேசுவீங்க... இது நிச்சயம். இது சத்தியம்.” என்றபடியே சந்திரமௌலி புறப்பட்டுப் போனார். இளங்கோ எதுவும் பேசவில்லை. ஆனால் இந்தக் கல்யாணம் நடக்காது என்று அவர் சொன்னதில் மனதைப் பறிகொடுத்து விட்டிருந்தாள் விஜி. அவளுக்கு அவரைப் பார்த்து யாருக்கும் தெரியாமல் பேசவேண்டும் என்று தோன்றியது. அதற்கு என்ன செய்யலாம் என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

***

திருப்பரங்குன்ற மலை!

தனஞ்ஜெயன் அந்த மலைமேல் ஏறிக்கொண்டிருந் தான். எப்பொழுதும் விறுவிறுவென்று நடந்து பாறைகள் மேல் ஸ்டைலாக தாவிக் குதித்து, வழியில் வளர்ந்திருக்கும் செடிகளின் கிளைகளை ஒடித்து ஆட்டம் போட்டபடி நடப்பவன் அன்று மிக நிதானமாகவே மேல ஏறிக்கொண் டிருந்தான். அவனிடம் ஒரு தேடல்... குறிப்பாக அந்த சுருட்டு பிடித்தபடி பாறை நிழலில் படுத்திருக்கும் அந்த சித்த பரதேசியைப் பார்க்கத்தான் வந்துகொண்டிருந்தான்.

அவர்தான் அவன் உள்ளுணர்வை பதமாகத் தட்டியும் தூண்டியும் வழி நடத்தியவர். அவனை மிகவே ஆச்சரியப் படுத்தியவரும் கூட. ஆனால் அந்தப் பாறை நிழலுக்கு அவன் வந்து சேர்ந்தபோது அவர் மிகுந்த அதிர்ச்சியை அவனுக்கு அளித்தார்.

அவர் இருந்த கோலம் அப்படி!

காலில் ஒரு பெரிய மாவுக்கட்டுடன் ஈக்கள் மொய்த்த படி இருக்க இன்றோ நாளையோ என்பது போல் கிடந் தார்.

“சாமி...”

“யா... யாரு?

“நான் தனா சாமி... என்ன சாமி இது கோலம்? என்ன ஆச்சு உங்களுக்கு” அதற்கு அவர் விரக்தியாக சிரித்தார். அப்போது அவர் சாப்பிட வாழைப்பழம் வாங்கச் சென் றிருந்த ஒருவன் கச்சிதமாக வந்தான். நான்கு பழங்கள் அவன் கையில்! அதை அவரிடம் தந்தவன் தனஞ் ஜெயனைச் சற்று ஆச்சரியமாகப் பார்த்தான்.

“நீ யாருப்பா?”

“நான் சாமியோட சிஷ்யன். ஆமா நீ?” அவன் அலட்சியமாகக் கேட்டான்.

“நானும் சிஷ்யன் மாதிரிதான். நான் உன்னை இங்க இவர் கூட பார்த்ததே இல்லையே?”

“அது போகட்டும். என்ன விஷயமா பாக்க வந்தே?”

“இல்ல சாமிக்கு என்ன ஆச்சு? சாமி ஏன் இப்படி இருக்காரு?”

“நடக்கும்போது கால் தடுக்கி விழுந்துட்டாரு. விழுந்ததுல கால் எலும்பு முறிஞ்சு போச்சு. அதனால நடமாட்டமே இல்லாமப் போயிருச்சு”

“கட்டு போட்டுருக்கே?”

“நான் போய் எலும்பு வைத்தியரை இங்க கூட்டிகிட்டு வந்தேன்.” அவன் விளக்கமளித்துவிட்டு அவரைப் பார்த் தான். அவர் அவனைப் போகச் சொன்னார். தனஞ் ஜெயனை அருகில் உட்காரச் சொன்னார்.

தனாவும் உட்கார்ந்தான்.

“உனக்காகத்தான் காத்திருந்தேன்...” அவரிடம் பேச்சு ஆரம்பமானது.

“நெஜமாவா சாமி!”

"ஆமாம்... உன் கடமை முடிஞ்சுதா?”

“நீங்க எதைச் சொல்றீங்க சாமி?”

“உன் வீட்டில் ஒரு மரணம் நடந்ததே. அது தொடர் பானத தான் கேட்டேன்...”

“அந்த வகைல முடிஞ்சது சாமி... நான் இப்ப பிரமிப்புல இருக்கேன். இப்படி எல்லாம் கூட நடக்க முடியுமாங்கற ஆச்சரியத்துலயும்

அதிர்ச்சியிலயும் இருக் கேன் சாமி...”

“அப்ப உனக்கு நீ யார்னு தெரிஞ்சு போச்சுன்னு சொல்...”

“தெரிஞ்சிடிச்சு சாமி. ஒரு பெரிய ரகசியமும் தெரிய வந்திருக்கு. ஆனா இதெல்லாம் எனக்கு எதுக்கு இப்ப தெரிய வந்துருக்குன்னுதான் தெரியல..”

“அதைச் சொல்லத்தானே நான் காலை ஒடிச்சு கிட்டும் காத்திகிட்டிருக்கேன்.”

“என்ன சாமி சொல்றீங்க?”

"நீ இப்ப யார் தெரியுமா?”

“தெரியும் சாமி...”

“எங்க சொல்லு பார்ப்போம்...”

“எந்திரன்!”

“சபாஷ்... உனக்கு இன்னொரு பேரும் இருக்கு...”

“அது என்ன சாமி...?”

“முதல்ல அபிராமி அந்தாதி நூறு பாட்டையும் சொல்லி முடி, பிறகு சொல்றேன்.”

“இப்பவா சாமி?”

“இங்கேயே... இப்பவே...”

“புத்தகம் கைல இல்லையே சாமி...”

“அவசியம் இல்லை. நீ சொல்ல ஆரம்பி... அது தானா உன் நாக்குல வரும்...”

அவனும் சொல்லத் தொடங்கினான்.

"தாரமர் கொன்றையும், சாத்துந்தில்லையும்.’ என்கிற அந்த அந்தாதிப் பாடல் அவன் நாவில் உருவாகத் தொடங்கியது. அதைக் கேட்க விரும்புவது போல் ஒரு மயில் ஒன்றும் அருகாமைப் பாறைமேல் வந்து அமர்ந்தது. அந்த பரதேசி சித்தர் கண்களை மூடிக்கொண்டு அந்தாதிப் பாடலுக்கு தன் மனதைப் பறி கொடுத்துவிட்டார்.

அதே சமயம் கீழே தனசேகரன்பிள்ளை வீட்டுத் தொலைபேசி அநியாயத்துக்கு அலறியது. எடுத்துக் காதைக் கொடுத்த தனசேகரன் பிள்ளை முகம் அதிர்ச்சி யில் இருண்டு போனது. தேவகி நெருங்கி வந்து கேட்டாள்.

“யாருங்க போன்ல, என்னா விஷயம்?”

“என்னன்னு சொல்வேன் தேவகி...”

“எதா இருந்தாலும் சொல்லுங்க.

“நாம நிச்சயம் பண்ணியிருக்கற தின்னவேலி மாப்ளைக்கு ஆச்சிடெண்ட் ஆயிடிச்சாம் தேவகி. மாப்ளை ஆஸ்பத்திரியில் ஐ.சி.யு.வில இருக்காராம்...” தேவகிக்கு பக்கென்றது. விஜியோ ஒரு புதுசக்தி உடம்பில் ஏறியது போல நிமிர்ந்தாள். சந்திரமௌலியைப் பார்க்க கோயில் மண்டபம் நோக்கி புறப்பட்டுவிட்டாள்.

40

வாஸ்து பலம் குறையும்போது அது குறைவு கோயிலாகவே இருந்தாலும் அதனால். சான்னித்யம் குறைந்து. ஜனக் கூட்டம் வருவதும் குறைந்து அந்த ஆலயம் மெல்லப் புகழ் குன்றி காலப் போக்கில் இடிந்த கோயில் ஆகிவிடும்.

இதனை கடவுள் மறுப்பாளர்கள் வேறுவிதமாகப் பேசுவார்கள்.

இதுபோன்ற கோயில்களில் களவுகளும் நிகழும் போது இந்த உலகையே கட்டிக்காக்கும் கடவுளால் தன் கோயில் சொத்தை மட்டும் காப்பாற்றிக்கொள்ள முடிய வில்லையா? என்று கேலியும் செய்வார்கள்.

இதற்கும் கடவுள் நம்பிக்கைக்கும் இதற்கும் கடவுளின் புகழுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. ஒரு வகையில் சூரியனைப் பார்த்து நாய் குலைப்பதைப் போன்ற ஒரு செயல்தான் இது.

ஒரு கோயில் என்பது ஊருக்குப் பொதுவானது.

ஒரு தனிமனிதன் தன் செலவில் கட்டினாலும் அது ஊருக்குப் பொதுவானதே. எனவே அது ஊரின் சொத்து.

அந்த ஊருக்குள் மாற்றங்கள் ஏற்படும். அது கோயிலிலும்

பிரதிபலித்தே தீரும். அதே போல் கோயிலில் ஏற்படும் நிகழ்வுகள் அதாவது பூசனைகள், ஆராதனை அபிஷேகங்கள், திருவிழாக்கள் ஊருக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். மொத்தத்தில் ஊர் வேறு கோயில் வேறு இல்லை என்று கூட கூறலாம். கோயில் ஜெகஜ்ஜோதியாக நன்றாக இருந்தால் ஊரும் நன்றாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால் மொத்த ஊரை அருள் மயத்தோடு வைத்திருப்பது சற்று சிரமமான விஷயம். எனவே கோயிலில் அருளைக் குன்றாமல் வைத்துக்கொண்டு அதன் மூலம் ஊரை அருள் மயமாக்குவார்கள். ஒரு குளம் ஊரின் தாகத்தை தீர்ப்பதுபோல, ஒரு கோயில் ஊரை அருளில் வைக்கிறது.

இருப்பினும் காலமாற்றம் ஜனப்பெருக்கம் ஊர் சார்ந்த நாட்டில் ஏற்படும் மாறுபாடுகளால் இந்த அருள் மயத்துக்கு சில சோதனைகள் ஏற்படும். அப்போ தெல்லாம் துளியும் சளைக்காமல் அருள் மயத்தைக் காப்பாற்றிவிட்டால் ஊர் காப்பாற்றப்பட்டுவிடும்.

பல கிராமங்களில் மழை பொய்த்து பஞ்சம் தோன்றும்போது அந்த கிராம தேவதைக்குக் கோபம். அதனால்தான் இவ்வாறு ஆயிற்று என்று ஒரு சாமியாடி குறி சொல்லிட... உடனே ஒன்று கூடி விரதம் இருந்து பூஜைகளை நிகழ்த்துவார்கள். இதன் விளைவாக மெல்ல ஒரு மாற்றம் ஏற்பட்டு உடனேயே மழை பெய்யாவிட்டாலும், போகப் போக பெய்வதற்கான தடைகள் நீங்க அந்தச் சிக்கலும் சரியாகிவிடும்.

ஒரு வகையில் ஊருக்கென்று ஒரு மனது உள்ளது. அந்த மனதை ஆங்கிலத்தில் **‘Collective Mind?** என்பார்கள். அதை உருவாக்கி அதில் உள்ள இருள் சார்ந்த விஷயங்களை நீக்குவதே இந்தச் செயல் பாடாகும்.

இதை உளவியல் ரீதியாகப் புரிந்துகொள்ளும் போது இதனுள் ஒரு விஞ்ஞான ஓட்டம் இருப்பது தெரிய வரும். ஆனால் இந்த விஞ்ஞான ஓட்டத்தை நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஏற்க முடியும்.

இன்றும் உலக விஞ்ஞானிகள் வானியலில் பல ஆய்வுகளை நம்பிக்கையின் அடிப்படையில்தான் நிகழ்த்தியபடி உள்ளனர். இதே அடிப்படையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று நிரூபிக்க முடிந்ததாக இன்று மாறியுள்ளன், ஒரு நாள் இந்த **‘Collective Mind’ &** சமா சாரமும் நிரூபணம் அடையும்!

*****

விஜி கோயில் மண்டபம் நோக்கிப் புறப்பட்டபோது அவளுக்குள்ளே ஒரு சின்ன எச்சரிக்கையும் ஏற்பட்டது. அதே வேளையில் அவள் அப்பாவும் அம்மாவும் அண்ண னும் மாப்பிள்ளையை ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்க்கும் முனைப்பில் பரபரப்போடு இருந்தனர்.

அப்பா தனசேகரன் மாப்பிள்ளையின் அப்பாவுக்கே போன் செய்து விசாரித்தபடி இருந்தார். அவர், "என் மகன் உசுர் பொழைக்கறதே பெரும்பாடுங்கறாங்க..." என்று போனிலேயே கண்ணிரோடு புலம்பிக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் இருந்து ஒரு பெண் குரல். "எல்லாம் அந்தப் பொண்ணைக் கட்டப் பார்த்த நேரம்தான்... அவுகளோட என்னா பேச்சு வேண்டிக் கெடக்கு" என்று சொல்வதும் காதில் விழவும் சுருக்கென்று ஆகிப்போனது. அதற்கு மேல் பேசப் பிடிக்காமல் அவராக போனை கட் செய்தார்.

"என்ன சொல்றாங்க?" என்று கேட்டாள் தேவகி. "சுரைக்கா கறிக்கு உப்பில்லையாம்! இந்த நாய் தண்ணி அடிச்சிட்டு காரை ஒட்டி ஆக்சிடெண்ட் ஆனதுக்கு நம்ம மவ என்ன பண்ணுவா? அங்க எவளோ ஒருத்தி இவளக் கட்டப் பார்த்த நேரம்தான்னு ஒப்பாரி வைக்கறா..." என்றார்.

தேவகிக்கும் அண்ணன் இளங்கோவுக்கும் புரிந்துவிட் டது. தேவகி அடுத்த நொடியே சந்திரமௌலியைத்தான் தொட்டாள்.

"வீடுதேடி வந்து விபரம் சொன்ன சாமியை நீங்க அநியாயத்துக்கு பேசி அனுப்பிட்டீங்க... ஆனா... அவரு

கோயில் மண்டபத்துலதான் இருப்பேன்னு சொன்னாரு, போங்க... போய்ப் பாருங்க... இதை இப்படியே விடமுடி யாது. அவரு நம்ம விஜி பத்தி ஏதேதோ சொன்னாரு இந்த கல்யாணம் நடக்காதுன்னும் சொன்னாரு போங்க... எலே இளங்கோ, அவரைப் போய் கூட்டிகிட்டு வாடா..." என்று சப்தமிட்டாள்.

இளங்கோ தனசேகரனைப் பார்த்தான். அரைமன தாக போய் அழைத்து வா' என்பதைப்போல பார்த்தார் அவரும். இளங்கோ புறப்படும்போது விஜியும் புறப்பட்டு விட்டிருந்தாள். அவன் வாசலில் நிற்கும் பைக்கை உதைத்து கிளம்பத் தொடங்கினான். விஜிக்கு இனிதான் செல்வதில் அர்த்தமில்லை என்பது புரிந்தது. ஆனால் மனதுக்குள் ஒரு இனம் புரியாத உணர்ச்சி... எங்கோ யாரோ ஒரு மலை உச்சியில் இருந்து மந்திரம் சொல்வது போலவும் அதைக் கேட்டு மனம் உருகுவது

போலவும் உணர்ந்தவள், மெல்ல தன்னை மறக்கத் தொடங்கினாள்.

அவளையுமறியாமல் அவள் கால்கள், தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தன. அதற்கேற்ப வீட்டில் தன சேகரனும் தேவகியும் வேறு கவனத்தில் இருந்தனர். கால் கொலுசு சப்திக்க விஜி வீதியில் இறங்கி ஒரு நேர்கோட் டின் மேல் நடப்பதைப்போல் நடந்து செல்வதை சிலர் பார்த்து ஆச்சரியமும் அடைந்தனர்.

அவள் அப்படி நடந்து செல்கிறவளே அல்ல. பெரும் ஒய்யாரம் எப்போதும் அவள் நடையில் இருக்கும். அதிலும் சில நாட்களாக வீட்டைவிட்டே வெளியே வராதவள் வெளியே வருவதைப் பார்த்தவர்களிடம், “இந்த பொண்ணு எங்க போவுது? ஒரு மாதிரி போகுதே...” என்கிற விமர்சனம்.

அவளுக்குள்ளோ அந்த மந்திர சப்தம் சற்றுத் தெளிவாகக் கேட்பது போலவும் இருந்தது. அது அபிராமி அந்தாதியின் வரிகள்.

‘என் குறை தீர நின்று ஏத்துகின்றேன்

இனி யான் பிறக்கின்

நின்குறையே அன்றி யார் குறை காண்

இரு நீள் விசும்பின்...’

என்று அந்தாதியின் 72வது பாடல் வரிகள் துல்லியமாக காதில் விழுந்து அவளையும் பரவசத்தோடு வழி நடத்தி யது. அவளது நடை திருப்பரங்குன்ற மலை அடிவாரத்தை எட்டி மேலேயும் ஏறத் தொடங்கியது.

***

கோயில் மண்டபம்!

தூண் ஒன்றின் மேல் சாய்ந்தபடி சற்றே சரிந்த நிலையில் அமர்ந்துகொண்டு ஒரு காலை உயர்த்தி மடக்கி, அதன்மேல் இன்னொரு காலைப் போட்டுக்கொண்டு தன் பலநாள் தாடி முடியை வருடிக்கொண்டே இருந்தார் சந்திரமௌலி. அவர் பார்க்க எதிரில் ஒருவன் 'ரசமணி’ என்று சொல்லி அதை விற்க முனைந்துகொண்டிருந்தான்.

அதை இடுப்பில் கட்டிக்கொண்டால் உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

அதிர்ஷ்டம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும் அபூர்வமான ரசமணி' என்று கூறி அதை விற்க சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தான்.

ரசமணிகள் சித்தர்கள் சமாசாரம்.

இன்று கோலி குண்டுபோல சாதாரணமாக விற் பனைக்கு வந்துவிட்டது. அவருக்குச் சிரிப்புதான் வந்தது. மனிதர்களின் தேவை மனிதனின் எல்லா பலனினங்களிலும் புகுந்து விளையாடத் தொடங்கிவிட்டதன் எதிரொலி.

அவன் சந்திரமௌலியிடம் வந்தான்.

''சாமி, ரசமணி வேணுமா?"

"கோலி குண்டு வேணுமான்னு கேள். ஏண்டா இது ரசமணியா?"

"மலை மேல இருக்கற ஒரு சாமிதான் இதைக் கொடுத்து, 'வித்து காசாக்கி நீ பாதி எடுத்துகிட்டு, மீதியை எனக்குக் கொடு'ன்னு சொன்னார் சாமி..." அவன் அசராமல் கூறவும். அவரும் அதை வாங்கிப் பார்த்தார். உள்ளங் கையில் கனத்தது. ஒரு இரும்பு குண்டின் கனத்திற்கும் அதற்கும் நிறைய வித்தியாசம் இருப்பது தெரிந்தது. சாம்பல் நிறம் கொண்டு சற்று சொரசொரப்பாகவும் இருந்தது. அது உண்மையான ரசமணிதான் என்றும் தோன்றியது. எதற்கும் அதைப் பரிசோதிக்க மனது எண்ணியது.

எந்திர மந்திர தந்திரத்தில் தாந்திரீகம் என்பது தந்திர முறைக்குள் வரும் ஒன்று. இது தெரிந்தவர்களுக்கு அபூர்வ மான விஷயங்களைப் பயன்படுத்துவது எப்படி என்றும் தெரிந்திருக்கும். ஒரு டிரான்சிஸ்டர் ரேடியோவை ஒரு மனிதன் பயன்படுத்துவதற்கும் ஒரு குரங்கு தூக்கிச் சென்று பயன்படுத்துவதற்கும் நிறைய வேற்றுமைகள் இருப்பது போன்றது இது.

ரசமணியைப் பற்றி தெரியாவிட்டால் நாமும் அதன் முன்னால் ஒரு குரங்குதான். ஆனால் அது பற்றி தெரிந்த காரணத்தால் சந்திரமௌலி உடனே ஒரு வேலை செய் தார். சற்றுத் தள்ளி ஒரு பிச்சைக்காரன் துண்டை விரித்த நிலையில் அருகில் புழுபோல சுருண்டு படுத்திருந்தான். அந்தத் துண்டில் சில்லறைகள் விழுந்திருந்தன. சந்திர மௌலி அந்த ரசமணியைத் தூக்கி சில்லறைகளோடு சேர்த்துப் போட்டார். அதை விற்க எண்ணியவனுக்கு பகீர் என்றது.

''சாமி... என்ன இது? இதைத் தூக்கி பிச்சைக்கார னுக்குப்

போட்டுட்டீங்க...”

“பதட்டப்படாதே... கொஞ்ச நேரம் அப்படியே நின்னு கவனி...”

“அட என்ன சாமி நீங்க... உங்களுக்கு வேணாம்னா திருப்பிக் கொடுக்காம இப்படிப் பண்ணிட்டீங்களே..?”

“கொஞ்சம் பொறுமையா இருன்னு சொல்றேன்ல...”

“என்னத்த பொறுமையா இருக்கறது... இன்னிக்கு முழிச்ச நேரமே சரியில்ல...”

“அதைதான் இப்ப பரிசோதனை பண்ணிக்கிட்டிருக் கேன்...” சந்திரமௌலி சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஒருவர் வந்து பிச்சைக்காரனை எழுப்பினார்.

“யோவ் எழுந்திரிய்யா... பக்கத்துல ஒரு சினிமா ஷூட்டிங் நடந்துகிட்டிருக்கு. அதுல கதாநாயகன் பிச்சைக் காரங்களுக்கு வேட்டி, சட்டை எல்லாம் கொடுக்கற மாதிரி சீன் எடுக்கப் போறாங்க. நீயும் வந்து வாங்கிக்கோ... அதுபோக ஒரு முன்னூறு ரூபா கைல தருவோம்...” என்றார்.

அடுத்த நொடி வேகமாக எழுந்திருந்த சந்திரமௌலி அந்தப் பிச்சைக்காரனை நெருங்கி காசுகள் கிடந்த துண்டையும் எடுத்து காசுகளை அவன் வசம் தரும் சாக்கில் ரசமணியை லாகவமாக எடுத்துக்கொண்டு “புறப்படுய்யா... உனக்கு காசு துணிமணியோட சேர்ந்து வருது” என்று அனுப்பிவிட்டு ரசமணியை விற்க முனைந்த வனைப் பார்த்தார்.

அவனிடம் ஒரு விதமான பரபரப்பு.

“இது உண்மைல ரசமணிதான். இது இருக்கறவன் அவனுக்கு ஏற்றவிதத்துல நல்லபடியா இருப்பான். இது எவ்வளவு விலைன்னு சொன்னே?”

“இரண்டாயிரம்...” அவன் அதுதான் சமயம் என்று வாயில் வந்த தொகையைச் சொன்னான். சந்திரமௌலி சிரித்தபடியே, “இரு, பணம் வந்துகிட்டிருக்கு” என்றார். “வந்துகிட்டிருக்கா?’ அவன் ஆச்சரியமாகப் பார்த்திட கச்சிதமாய் இளங்கோ தேடியபடி வந்து நின்றான். சந்திரமௌலி அவனை சற்று எகத்தாளமாய்ப் பார்த்தார்.

“சாமி.”

“என்னப்பா, கல்யாணம் நடக்காதுன்னு தெரிஞ்சி போச்சா?'

“அ... ஆமாம்.. சாமி...”

“சரி, இனி நான் சொல்றதக் கேட்பேதானே?”

“குறிப்பிட்ட முகூர்த்தத்துல என் தங்கச்சி கல்யாணம் எப்படியாவது நடக்கணும் சாமி...”

“நிச்சயமா நடக்கும்... ஆனா நான் சொல்றத நீ கேட்கணும்...”

“அது என்னன்னு சொல்லுங்க...”

“இன்னும் நீ சந்தேகப்பட்றியே...”

“சந்தேகப்படாம எப்படி இருக்க முடியும்? உங்கள மாதிரி ஜோசியம், மாயம் மந்திரம்னாலே கொஞ்சம் சுருக்குன்னு இருக்கு... டிவில வேற "நிஜம், நடந்தது என்ன'ன்னு தினசரி உங்கள மாதிரி ஆளுங்களையா காட்டி மிரட்டிகிட்டு இருக்காங்க...”

“அதெல்லாம் என்கிட்ட பேசாதே... இதோ இவன் கிட்ட ஒரு இரண்டாயிரத்தைக் கொடு, புறப்படு. இன் னொரு பக்கத்துல மந்திரம் ஒடிசிட்டு இருக்கு. அது முடிஞ்சிட்டா ஒட்டம் துவங்கிடும்...”

“என்ன சாமி சொல்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியல...”

“நான் சொல்றத முதல்ல செய். இவன் கைல இரண்டாயிரத்தைக் கொடு...” இளங்கோவும் எடுத்துக் கொடுத்தான்.

“புறப்படு...” இருவரும் புறப்பட்டனர். அந்த ரச மணியை விற்றவனுக்கு ஒன்றும் புரியவில்லை. பணத்தை கையில் வைத்தபடி அவர்களையே பார்த்தான். மலையில் அவனிடம் அதைத் தந்திருந்த பரதேசி சித்தர், “நீ சொல்ற விலைக்கு இது போகும்” என்று சொன்னதையும் எண்ணிப் பார்த்தான்.

அவனுக்குள் அது ஒரு அதிசயமாக, அறிவுக்கு அகப்படாத ஒன்றாக இருந்தது.

மலையில் தனஞ்ஜெயன் அபிராமி அந்தாதியின் நூறாவது பாடலைச் சொல்லி முடித்த நிலையில் கச்சித மாய் விஜி அவன் முன் நின்றாள்...

லெக்டிவ் மைண்ட் விஷயத்தில் எல்லா மதங் ளுமே ஒன்று போலத்தான் இருக்கின்றன.

41

கலெக்டிவ் மைண்ட்விஷயத்தில் எல்லா மதங்களுமே ஒன்று போல தான் இருக்கின்றன் கலெக்டிவ் மைண்ட் காரணமாகவே பாரத தேசத்துக்கு வெளியிலும் திருவிழாக்கள் மற்றும் திருநிகழ்வுகள் கொண்டாடப்படுகின்றன.

உலகின் மிகப்பெரிய கலெக்டிவ் மைண்ட் கொண் டாட்டமாக கிறிஸ்துமஸ் உள்ளது. அதே போல புத் தாண்டு கொண்டாட்டமும் உள்ளது. இந்த இரு நிகழ்வு களும் மதாபிமானம் கடந்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறது.

தீபாவளியோ, பொங்கலோ, இல்லை ரம்ஜானோ, பக்ரீத்தோ அதுவுமல்லாது குட்ஃப்ரைடே எனப்படும் நிகழ்வோ, குருத்தோலை திருவிழா மற்றும் புத்த பௌர்ணிமா போன்றவை அவைகளைச் சார்ந்தவர் களால் கொண்டாடப்படுகின்றன.

ஆனால் கிறிஸ்துமஸும் அந்த மதம் சார்ந்தவர்களால் கொண்டாடப்பட்டாலும் அடுத்த வாரமே புத்தாண்டு பிறப்பதால் எல்லோரது மனமும் அந்த நாளை வருடத்தின் முதல் நாளாக அந்த ஆண்டு முழுவதும் மகிழ் வோடு இருக்க வேண்டும் என்பதற்காக மதமாச்சரியம் யின் கடந்து பொதுமையோடு ஒன்றுபடுகிறது. எனவே ச்சித இன்றைய தினத்துக்கான சக்தி மிகவே அதிகம். இந்தநாளில் உலக மக்களாகிய **700** கோடி பேரின் கோரிக்கையும் ஒரு விஷயம் குறித்து இருந்தால் அது நிச்சயம் ஈடேறியே தீரும் என்பதுதான் இந்த கூட்டு மனதின் அற்புத சக்தியாகும்.

சக்தியை ஒருங்கிணைக்க திருநாள் அமைவது போலவே எந்திரமும் அதன் வடிவமாய் இருப்பதுதான் சூட்சுமமான ஒரு பேருண்மை!

*****

அங்கு வந்து நின்று விஜி ஒரு வினாடி தனஞ்ஜெயன் கண்களுக்கு ராஜமோகினியாகவும் தெரிந்ததுதான் விந்தை. முதல் முறையாக அவளும் தனஞ்ஜெயனை தனஞபனாகப் பார்த்தாள், இருவரும் அப்படியே பரதேசிச் சித்தரைப் பார்த்தபோது சித்தர் ஒரு வினாடி பரமேஸ்வரத் தேவராய் மனதுக்கு தோன்றி மறைந்தார். அதை உணர்ந்த நொடி “சாமி நீங்க தேவராத் தெரிஞ்சீங்க...” என்றான் தனஞ் ஜெயன்

மிகுந்த பரவசத்தோடு...

“இதுக்கு தானே நான் அந்தாதியை சொல்லு சொல்லுன்னு சொல்லிகிட்டே இருந்தேன். இப்ப உங்க ளுக்குள்ள உங்க பூர்வஜென்மம் வெளிச்சமாகியிருக் கணுமே?”

“சொல்லி முடிக்கவும் இப்படி எல்லாம் கூடவா உணர முடியும்?”

“உணர்ந்த நீயே இப்படி கேட்டா எப்படி?”

“நான் உணர்ந்ததும் உண்மை. அதே சமயம் அது விஞ்ஞானமா இல்லாததாலயும், விஞ்ஞான உலகத்துல வாழறதாலயம் இது எப்படிங்கற கேள்வியும் ஏற்பட்றத தவிர்க்க முடியல சாமி.”

“ஆமாம் சாமி... எனக்கும் என்ன சுத்தி நடக்கற எல்லாமே புதிராதான் இருக்கு... திடீர்னு ஒரு ஐயர் ஒருத்தர் உபாசகர்னு சொல்லிகிட்டு வீட்டுக்கு வராரு. என்னைப் பார்த்து நீ தாசிகுலத்துல பிறந்தவ...இப்ப இந்த குடும்

பத்துல வந்து பிறந்திருக்கேன்னு சொன்னாரு. அது மட்டுமல்ல எனக்கு நிச்சயமான கல்யாணம் நடக் கறதுல தடை ஏற்படும்னும் சொன்னார். அதேமாதிரி எனக்கு பார்க்கப்பட்ட மாப்பிள்ளை ஆக்சிடெண்ட் ஆகி இப்ப ஆஸ்பத்திரில உயிருக்குப் போராடிகிட்டு இருக்கார். இதை எல்லாம் எப்படி எடுத்துக்கறதுன்னே தெரியல. ஆனா எப்பவும் இல்லாதபடி என் காதுல அபிராமி அந்தாதி மந்திரம் கேட்டுத்தான் நான் இங்க என்னையு மறியாம வந்தேன். இதை வெளியே சொன்னா எங்களுக்கு பைத்தியம் பிடிச்சிருக்கறதா தான் சொல்வாங்க...” என்று விஜியும் தன் மனதில் இருந்ததை எல்லாம் கொட்டினாள்.

சிரித்தார் அந்த பரதேசிச் சித்தர்.

“அம்மாடி... இதுக்கு நான் உனக்கும் உங்களுக்கும் புரியறமாதிரி எனக்குத் தெரிஞ்ச விதத்துல சொல்றேன். புரிஞ்சுக்க முடிஞ்சா புரிஞ்சுக்குங்க...”

“இந்த உலகத்துல பிறக்கற ஒவ்வொரு உயிருக்கும் ஒரு காரணம் இருக்கு. சரித்திரத்தைத் திரும்பிப் பார்த்தாபல ஆயிரம் கோடி பேர்களை இந்த பூமி பார்த்துடிச்சிங்கறது தெரியும். ஆனா அவ்வளவு பேர்ல சிலர் மட்டும்தான் வரலாற்றுல மறக்கப்படாம இருக்காங்க. பல ஆயிரம் கோடி எங்கே, சிலர் எங்கே? யோசிச்சு பார். இங்க ஏன் அவ்வளவு பேரையும் வரலாற்றுல பதிவு செய்து வெச்சுக்க முடியலன்னு கேட்க

முடியுமா?

சராசரியா வாழ்ந்தா வரலாற்றுல பதிவாக முடியாது. ஆயிரத்துல ஒருவனா, லட்சத்துல ஒருவனா இருந்தா மட்டும்தான் அந்தப் பதிவு கிடைக்கும். எப்படி ஆயிரத்துல ஒருத்தன் லட்சத்துல ஒருத்தன்னு சிலர் இருக்காங்களோ அப்படிதான் அதிசய சம்பவங்களும். இது எப்பவும் கூட்டத்துக்கானது கிடையாது. சிலருக்கும் மட்டும்தான். அந்த சிலர்தான் இப்ப இங்க நாம..!

நீ உன் வீட்டுக்கு வந்ததா சொன்னியே ஒரு பிராம்மணன். அவனும்! நமக்கெல்லாம் ஒரு கடமை இருக்கு. காலம் ஏழு தலைமுறையா நம்மை பல்வேறு கர்ப்பங்கள்ள தூக்கிப் போட்டு இப்ப ஒரு முனைல கொண்டுவந்து நிறுத்தியிருக்கு. இது தெரியணும்னுதான் ஒரு ஒலைப்பொட்டியே இந்த திருப்பரங்குன்றத்துக்கு வந்து சேர்ந்தது. அதைக் கொண்டுவந்து சேர்த்த ஜோதிடனும் நம்மோட சேர்ந்தவன்தான். அன்னிக்கு அவன் வையாபுரி பிள்ளையா என் கூட இருந்து எந்திரத்தை அடைய ஆசைப்பட்டவன். இப்ப அதுக்கு பரிகாரமா வாழ்ந்து. அவன் கடமையைச் செய்துட்டுப் போயிட்டான்.

ஆனா நமக்கு பாக்கி இருக்கு!

குறிப்பா உங்களுக்கு...

தனஞ்ஜெயா, இந்தப் பெண்ணோட இப்பவே சக்தி புரத்துக்குப் புறப்படு. மழை இல்லாம இந்த பூமில வறட்சி பரவத் தொடங்கியிருக்கு. இந்த ஆவணி புரட்டாசியில காவேரியில வெள்ளம் கரைபுரண்டு ஓடணும். ஆனா கால் நனையற அளவுக்குக்கூட தண்ணி இல்லை. மழை இப்ப முதல் தேவை!

அது மட்டுமில்ல, சனியும் செவ்வாயும் ஒரு வீட்ல சேரும் காலகட்டம் இது. இவங்க சேர்க்கைதான் உலக யுத்தமா வெடிக்குது. கோடிக்கணக்கான உயிர்களும் மடியற நிலை ஏற்படுது. சிவகாசில பார்த்தியா வெடி விபத்தை? ஆகாய வெளியில நிகழற இந்த சம்பவம் தடுக்க முடியாத ஒண்ணு. ஆனா இதோட தாக்கத்தை பூமி வாங்கிக்காம இருக்கவும், பெரிய யுத்தம் ஏற்படாம இருக்கவும் ஸ்ரீ எந்திரம் வெளிப்பட்டு அதுகிட்ட அமைதிக் கும் சமாதானத்துக்குமான கோரிக்கை வைக்கப்படனும்.

மிகச்சரியா வரப்போற நவராத்திரி காலத்துல அந்த எந்திரத்தை வெளியே எடுத்து ஒன்பது நாளும் நீயும் இந்தப் பெண்ணும் பூஜை

செய்யணும். சக்தி உபாசகன்கறவன் சக்தி அம்சமான மனைவி கையால குங்குமம் வாங்கி அந்தக் குங்கு மத்தால் அர்ச்சனைகளைச் செய்யத் தொடங்கும்போது ஸ்ரீ எந்திரமும் மெல்ல செயல்படத் தொடங்கும். அது செயல்பட செயல்பட வானில் மழை மேகம் திரண்டு மழை பொழியும். கோபமும் குரோதமும் உள்ள ராஜாக்கள் மனசுக்குள்ள ஒரு அமைதி எண்ணம் ஏற்பட்டு யுத்தம் பற்றிய எண்ணங்களில் மாற்றம் ஏற்படும். பஞ்சபூதங்கள் கிட்டயும் சமநிலை ஏற்படும்.

அதே சமயம் கோள்களோடு தாக்கத்தை ஸ்ரீ எந்திரம் தனக்குள் வாங்கிகிட்டு இந்த பூ உலகத்தைக் காப்பாத் திட்டு அதோட பயணத்தை அது தொடரும். அது ஒரு அருள்பயணம். அது காலகாலமா பயணிச்சுகிட்டு இருக்கு. நாம அதோட பயணத்துக்கு நடுவுல வந்துட்டு போயிடப் போறவங்க, ஒரு விதத்துல இதுக்கு நாம கொடுத்து வெச்சிருக்கணும்.

நாம கொடுத்துவைக்க நம்முடைய முன் ஜென்ம கர்ம வினைகள் காரணம். அந்தப் பிறப்புல ஒண்ணு சேராத நீங்க இப்ப ஒண்ணு சேர்ந்து ஒரு நல்ல வாழ்க்கை வாழ் வீங்க. உங்க வயித்துல ஒரு பொண்ணு பிறக்கும். அவ வயித்துல ஒரு பொண்ணு, அப்புறமா அது வயித்துல ஒரு பொண்ணுன்னு உங்க தொடர்ச்சியும் ஏழு தலை முறையைக் காணும். அந்த ஏழாவது தலைமுறைல இதே போல ஒரு அதிசயத்தை இந்த எந்திரம் நடத்தும். இது ஒரு மாயா விளையாட்டு. சக்தி விளையாட்டு.

இந்த விளையாட்டுல என்காலம் வரும் நவராத்திரி யோட முடியப்போகுது. ஸ்ரீ எந்திர தரிசனம்தான் என் லட்சியம். உன்மூலமா நான் அதைக் கண்டுட்டா என் ஜீவன் அப்புறம் தானா அந்த சக்தியோட போய் கலந் துடும்.

புறப்படு சக்திபுரத்துக்கு...

இப்பவும் ஒரு சோதனை அதுக்கு பாக்கி இருக்கு...

எப்பவும் தேவர்கள்னு சிலர் இருந்தா அசுரர்கள்னு சிலர் இருந்தே தீருவாங்க. வெயில்னா நிழல் இருக்கற மாதிரி கசப்புன்னா இனிப்பு இருக்கற மாதிரி ஒரு விஷயம் தான் இதுவும்... போனமுறை அதை அடையப் பார்த்த உபாசகன் இப்பவும் அதே உபாசகனா அதை அடையத் துடிக்கறான். அவன் முந்தறதுக்குள்ள நீ முந்து.

இவ்வளவு தூரம் உணர்த்தவேண்டியதை உணர்த்தி உனக்கு வழிகாட்டின அந்த சக்தியே உனக்கு இனியும் வழி காட்டுவா...”

பரதேசிச் சித்தரின் நீண்ட பேச்சு இருவரையும் அவரை நோக்கி கும்பிட வைத்தது.

“நாங்க கிளம்பறோம், உத்தரவு கொடுங்க...” என்றான் தனஞ்ஜெயன்,

“ஒரே ஒரு காரியம் பாக்கி இருக்கு. இவளை இங் கேயே நீ மானசீகமா உன் மனைவியா ஏத்துக்கிட்டாகணும். ஆகாசத்தைப் பார், உச்சியில சூரியன்...”

பரதேசிச் சித்தர் மேலே காட்டினார். பின் பேசினார்.

“சூரியன் உச்சி மையத்துல இருக்கும் நேரமும் முகூர்த்தத்துக்கு சமமான காலம்தான். இதை அபிஜித் முகூர்த்தம்னு ஜோதிடசாஸ்திரம் சொல்ற முகூர்த்த காலமா சொல்லலாம்.”

“இந்த நொடிப் பொழுதுல இந்த பூமிமேல மிக அதிக வெளிச்சம் இருக்கு எல்லோர் நிழலாகிய இருளும் அவங்க உடம்புக்குள்ளேயே சுருண்டு அடங்கி நிழல் இருட்டு கூட இல்லாத ஒரு காலம் இது. இந்த நேரத்துல இவ கழுத்துல தாலிய கட்டு முதல்ல... இந்தா...” என்று தன் வசம் உள்ள ஒரு மஞ்சள் கயிற்றை எடுத்து நீட்டினார்.

‘‘சாமி... வீட்ல அப்பா அம்மான்னு எல்லாரும் இருக்கும்போது...?” தனஞ்ஜெயன் இழுத்தான்.

“கவலைப்படாதே. இது நீ ஸ்ரீஎந்திரத்தை எடுக்கற கடமைக்கான சக்தியைத் தர ஒரு குருவா உனக்கு நான் காட்ற வழி. இதுல எந்தத் தவறும் கிடையாது. உங்க இரண்டுபேருக்கும் உங்க குடும்பங்கள் கூடி ஊரறிய நடத்தப் பேற்ற கல்யாணமும் உங்களுக்கு நடக்கும். உம்... சில நொடிகள்ள நிழல் தோன்றத் தொடங்கிடும்... சீக்கிரம்...” அவர் பேச்சை அதற்குமேல் தட்டாமல் தனஞ்ஜெயன் அந்த மஞ்சள் கயிற்றை விஜியின் கழுத்தில் கட்டினான். திருப்பரங்குன்ற கோவிலில் இருந்தும் வாழ்த்துவது போல் மணி ஒலிக்கத் தொடங்கியது. “அருமையான சகுனம் தனஞ்ஜெயா... தாமதிக்காம புறப்படு.

சக்திபுரம் குளத்துல இறங்கி ஸ்ரீஎந்திரத்தை விஜிதான் எடுக்கணும். அது இன்னிக்கு இரவு நேரம் நடக்கட்டும். அந்த எந்திரம் வெளிப்பட்ட உடனேயே நீ மனசுக்குள்ள அபிராமி அந்தாதியை சொல்லத் தொடங்கிடு. உனக்கு அபிராமிபட்டரின் அருளாசி வழி காட்டத் தொடங்கும். அது உன்னை எங்க கூட்டிகிட்டு போகுதோ அங்க போ. நாளை மறுநாள் நவராத்திரியும் ஆரம்பம். உன் பூஜையும்

தொடங்கட்டும். மற்றதை இந்த உலகம் பார்த்து தெரிஞ்சுக் கட்டும். புறப்படு...” அவரது உத்தரவை அப்படியே ஏற்றுக்கொண்டு விஜியின் கரத்தைப் பிடித்தான். அவளுக் குள் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது.

வாழ்வில் சில அதிசயங்கள் நிகழ சில நிமிடங்கள், இல்லையில்லை, சில நொடிகள் கூட போதுமானது என்பது அவளுக்கு அப்போது புரிந்துபோயிற்று!

***

இளங்கோ உபாசகர் சந்திரமௌலியோடு வீட்டுக் குள் நுழைந்தபோது விஜியைக் காணவில்லை என்கிற பரபரப்பு அங்கே...

சந்திரமௌலி அந்த நொடி நெற்றிப்பொட்டில் கை வைத்து தியானித்தவராக ஒரு சிரிப்பு மட்டும் சிரித்தார்.

‘‘சாமி நாங்க பதறிப் போயிருக்கோம். நீங்க சிரிக்கி றிங்களே...” என்று கேட்டாள் தேவகி.

“ஒரு பதட்டமும் வேண்டாம். உங்க பொண்ணு இப்ப அந்த தனஞ்ஜெயன் கூடத்தான் இருக்கா. அவங்க ரெண்டு பேரும் இப்ப இந்த ஊரைவிட்டும் கிளம்பிட்டாங்க...”

“ஐயோ என்ன சொல்றீங்க... இந்த ஒடுகாலி திரும்ப அவனைப் போய் பார்த்து அவன்கூட சேர்ந்து ஊரை விட்டே ஓடிப்போயிட்டாளா?”

"ஆமாம். ஆனா அதுக்காக பதட்டப்பட வேண்டாம். அவங்க எங்க போவாங்க, என்ன பண்ணுவாங்கன்னு எனக்கு நல்லா தெரியும்”.

“இப்ப நாம என்ன பண்றது?”

“எதுவும் பேசாம என் கூட புறப்படுங்க... அவங்க என்ன செய்யப் போறாங்கன்னு நான் உங்களுக்கு காட்டித் தரேன். அதுமட்டுமல்ல உங்க பொண்ணை நான் உங்க ைகல கன்னித் தன்மை கலை யாதவளாக பிடிச்சுத் தரும்போது பதிலுக்கு அப்ப நான் ஒண்ணு கேட்பேன். அப்ப நீங்க மறுக்கக் கூடாது.”

“பூடகமாவே பேசறிங்களே... எங்களுக்கு எங்க பொண்ணை விட எதுவுமே பெருசு கிடையாது. நீங்க என்ன கேட்டாலும் செய்யறோம். போதுமா?”

“ஒரு நிமிஷம்...” என்ற உபாசகர் தன் இடுப்பு மடிப்பில் இருந்து ரசமணியை எடுத்தார். பின் அதன்மேல் குங்குமம் வைத்தார்.

“இப்ப இந்த நொடி இந்த ரசமணிதான் அம்பாள். இவள் மேல சத்தியம் பண்ணி என் பக்கம் நிப்பேன்னு சொல்லுங்க...” அவர் செயல் வினோதமாக இருந்தது. அவர் பேச்சு, கோரிக்கை எல்லாமே புரியாத புதிராகவும் மௌடீகமாகவும் இருந்தது. ஒப்புக்கொள்ளவும் முடிய வில்லை, மறுக்கவும் முடியவில்லை. அப்போதைய நெருக் கடி அவர்களை சத்தியம் செய்யவைத்தது. சந்திரமௌலி முகத்தில் அப்போதே வெற்றிபெற்றுவிட்டது போல் ஒரு புன்னகை!

***

தனஞ்ஜெயன் வீடு!

விஜியுடன் தனஞ்ஜெயன் ஓடிவிட்டான் என்கிற செய்தி சுந்தரம்பிள்ளையையும் நல்லம்மையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டிருந்தது.

“ஏங்க, என்னங்க இது... நம்ம பையன் இப்படி பண்ணிட்டான். என் அண்ணன் குடும்பம் அவனை பிடிக்கப் போயிருக்காங்களாமுல்ல?” என்று கேட்டு நல்லம்மை கண்ணிர் விட்டாள்.

“நல்லம்மை, உன் மகன் இப்ப எதுக்கும் உதவாத வெட்டிப்பய கிடையாது. அவன் அபூர்வமானவன். அவனுக்கு தனஞ்ஜெயன்கறது நாம வெச்ச பேரா இருக்க லாம். ஆனா அவன் இப்ப எந்திரன் மந்திரன்! இவனை ஒரு தந்திரன் சந்திக்கப் போறான். அப்ப நிறைய மாய்மாலங் கள் நடக்கப்போகுது. அதை எல்லாம் நினைச்சு நீ கவலைப்படாதே. எல்லாம் நல்லபடியாவே முடியப் போகுது. இந்த உலகமும் காப்பாத்தப்பட்டு எல்லாரும் நல்லா வாழப் போறாங்க...”

நீ வேணா பார், நம்ம வீட்டு கிணத்துல இப்ப கணுக்கால் தண்ணிதானே இருக்கு... அது கங்கையா பொங்கப் போகுது. இந்தக் கிணறு பொங்கி வழியணும்னா எவ்வளவு பெரிய மழை பெய்யணும்னு யோசிச்சுப் பார்...” சுந்தரம்பிள்ளை பேச்சு நல்லம்மையை ஆச்சரியம்தான் படுத்தியது.

“நீங்க இவ்வளவு நேரம் அந்த மரப்பொட்டி ஏடுங் கள்ள படிச்ச விஷயமா இதெல்லாம்?” என்று கேட்டாள்.

“சரியா சொன்னே...”

“அதைப் படிச்சவங்க இப்ப மூணே பேர், ஒண்ணு உன் மகன், அடுத்து அந்த உபாசகன், இப்ப நான், மகன் படிச்சதால அவனுக்கு யார்னு தெரியவந்தது. உபாசகனும் தன்னைத் தெரிஞ்சுகிட்டான். நானும் பல விஷயங்களை தெரிஞ்சுகிட்டேன். நமக்கும் ஒரு கடமை இருக்கு...”

“என்னங்க அது?”

“நீ கும்புட்ற அந்த சக்தி வரபோறா, அவளுக்கு உன் கையாலயும் பூசை இருக்கு. தயாரா இரு. இந்த நவ ராத்திரிதான் இந்த உலகம் புது சக்தி பெறப்போற மகா நவராத்திரி!”

“மகா நவராத்திரியா?”

“ஆமாம், மகாசிவராத்திரி வருஷாவருஷம் வரும். மகாநவராத்திரி இந்த பூமிக்கு ஆபத்து வரும்போதுதான் வரும். இப்ப வரப்போகுது...” அவர் அப்படிச் சொல்லும் போது அவர் முகத்தில் பெரும் பிரகாசம்!

42

மிக மிகச் சரியான துல்லியமான கணித முறையில் வடிவமைக்கப்பட்ட எந்த ஒரு எந்திரமும் இயங்கும் தன்மை கொண்டவையாகும். இந்த எந்திரத்தினுள் உள்ள சதுர, செவ்வக, முக்கோணங் களிலும், அதன் உயரத்திலும்தான் இந்த கணித அளவுகள் ஒளிந்துள்ளன. அடுத்து இதன் உலோகத் தன்மை!

ஒலி அலைகள் ஓர் உலோகத்தின்மேல் படும் போது அந்த எதிரொலியானது உலோகத்தின் தன்மைக் கேற்பவே இருக்கும். எனவே எந்திரம் முன்னால் ஜெபிக்கப்படும் அல்லது உச்சரிக்கப்படும் மந்திர ஒலி எந்திரத்தின் மேல் பட்டு எதிரொலிப்பதிலும் அதன் இயக்கத் திறம் ஒளிந்துள்ளது.

அடுத்து அந்த எந்திரம் பூஜிக்கப்படும் இடம்!

இந்த இடமானது வாஸ்து பலமுள்ள இடமாக இருக்க வேண்டியது மிக முக்கியம். மிகச் சிறந்த வாஸ்து பலமுள்ள இடம் எனப்படுவது ஓர் ஊரின் நான்கு திசைகளில் இயற்கை வளம் அமைந்துள்ளதை வைத்தே முடிவாகும். உதாரணமாக ஓர் ஊரின் தரைப்பரப்பு மேடு பள்ளங்கள் கொண்ட அமைப்பாக இல்லாமல் சம தரையாக இருக்க வேண்டும். அடுத்து அதன் மையப்பகுதி வீடுகள் மற்றும் கட்டிடங்கள் மரம் செடிகள் இல்லாமல் ஒரு மைதானமாக இருக்க வேண்டும். அதன்

வடதிசையில் ஆறு ஓட வேண்டும், தென் திசையில் மலைகள் இருக்கலாம். கிழக்குப் பக்கம் சூரியக் கதிர்களை மறைக்காதபடி ஏற்ற தாழ்வுள்ள கட்டிடங்கள் இல்லாமலிருக்க வேண்டும். மேற்கு திசையில் சூரியன் மறையும்போது நாம் அதைப் பார்க்க முடிய வேண்டும். இப்படி ஒரு அமைப்புள்ள ஊர் வாஸ்து பலம் மிகுந்த ஊராகும். இந்த ஊரில் இந்த வாஸ்து பலத்தைப் பயன்படுத்தி வட கிழக்கில் வாசல், தென் மேற்கில் உயரத்தில் தண்ணீர் தொட்டி, அக்னி மூலையான தென் கிழக்கில் சமையலறை, வட மேற்கான வாயுமூலையில் நீட்சி இல்லாதபடி சச்சதுரத் திலோ இல்லை சரியான செவ்வகத்திலோ ஒரு மனை அமையும் போது அதுமிகுந்த வாஸ்து பலமுள்ள மனை யாகும்.

இங்கே ஊரும் பலம்; வீடும் பலம்! இப்படி ஒரு வீட்டில் அல்லது கோவிலில் மையப் பகுதியான பிரம்மபாகத்தில் எந்திரத்தை வைத்து பூஜித்து அதற்குண்டான மந்திரங்களை உச்சரிப்புப் பிழை இல்லாமல் ஜெபிக்கும்போது அங்கே வினைப்பாடு ஆரம்பமாகிறது.

மந்திர அலைகள் எந்திரத்தின் மேல் எதிரொலித்து வெளியெங்கும் அலை அலையாக (குளத்து நீரில் ஒரு கல் விழவும் உருவாகும் வட்ட அலை வடிவம் போல்) பரவ ஆரம்பிக்கிறது. பின் அதன் தொடர்ச்சியில் அனேக மாற்றங்கள் ஏற்பட்டு அந்த இடத்தின் ஆகாயம், பின் அவ்வூரின் ஆகாயம், பின் அது சார்ந்த பகுதிகள் என்று வினைப்பாடு விரிவடைகிறது. நோய்க்குக் காரணமான கிருமிகள் நசிகின்றன. மழைக்குக் காரணமான அதிர்வு கள் தூண்டப்படுகின்றன. காற்றிலும் இது எதிரொலிப்ப தால் அதை உட்கொள்ளும் தாவரம் முதல் மனிதர்கள் வரை அவர்களின் ரத்த ஓட்டம் வரை இதன் தாக்கம் சென்றடைகிறது. இதன் காரணமாக எண்ண ஓட்டத்தில் ஓர் அமைதியும், விழிப்பும் அதில் கூர்பை "பும் உரு வாகிறது. இதன் காரணமாக தவறான முடிவெடுத்து செயல்படுவது தடுக்கப்பட்டு சரியான முடிவுகள் மட்டுமே செயலாகின்றன.

ஓர் எந்திரத்தின் செயல்பாட்டை இந்த அளவிற்கே வார்த்தைகளால் விளக்க இயலும். எந்த விளக்கமும் இன்றி அனுபவத்தால் மட்டுமே அறிந்து உணரும்போது இதை விடவும் ஒரு மேலான நிறைவு உண்டாகும். விளக்க நேரிடும்போது ஒன்றோடு ஒப்பிட்டுப் பேசுவது நிகழும். அது விளக்க முற்படுபவரின் அறிவாற்றல், கற்பனை செய்யும் திறன் சார்ந்த ஒன்று. அது ஆளுக்கு ஆள் மாறுபடும். எனவே, எந்திரம் எப்படி செயல் படுகிறது என்பதை விளக்க முற்படும்போது பல விதமான விளக்கங்களில் எதை எடுத்துக் கொள்வது என்கிற

குழப்பத்தைத் தரலாம்.

நம்பிக்கையை மட்டும் நெஞ்சில் நிரப்பிக் கொண்டு, உணர்வை முன் வைத்து இதனிடம் சரணாகதி அடையும்போது இதனால் உருவாகும் பூரண பலா பலன்களை ஒருவரால் முழுவதுமாகப் பெற முடியும்!

*****

சக்திபுரம் செல்வதற்காக தனஞ்ஜெயனும் விஜியும் பேருந்து நிலையம் நோக்கிச் செல்ல முற்பட்டபோது முன் போலவே அந்த அதிசயம் நடக்கத் தொடங்கியது. ஒரு படகு காரில் ஒரு பெரும் தொழிலதிபர் தன் மனைவியுடன் திருப்பரங்குன்ற முருகனை தரிசனம் செய்ய வந்திருந்தார். அப்படி வந்தவர் தரிசனம் முடித்துவிட்டு திரும்பும் போது தனஞ்ஜெயன் கண்ணில் படவும் அவனிடம் வழி கேட்டார்.

“தம்பி தஞ்சாவூர் எப்படிப் போகணும்!” என்று கேட்டவருக்கு அவனும் வழியைக் காட்டினான். உள்ளே கார் டேஷ்போர்டின் மையத்தில் சக்திபுர லலிதாம்பிகை யின் சிறு படம் பிளாஸ்டிக் மோல்டில் கண்ணில் பட்டது. அதைப் பார்த்து சிலிர்ப்போடு கன்னத்தில் போட்டுக் கொண்டான். அவரும் அதை கவனித்து, “இது எந்த ஊர் அம்மன்னு தெரியுமா? என்று கேட்டார்.”

“சக்திபுரம் லலிதாம்பிகைதானே...?”

"பரவாயில்லையே... தெரிஞ்சிருக்கே..!”

“இப்ப கூட நாங்க சக்திபுரத்துக்குதான் போய்கிட்டு இருக்கோம்.”

ஓ... எங்களுக்கும் சக்திபுரம்தான் சொந்த ஊர். திடீர்னு கனவில் திருப்பரங்குன்ற முருகன் வா வான்னு கூப்பிட்ட மாதிரி ஒரு காட்சி. கிளம்பி வந்துட்டோம்.”

"அப்படி நீங்க வந்தது எங்களுக்காகதான்” என்றான் தனஞ்ஜெயன் மிக வேகமாக.

“நீங்க...?”

“நான் யாருங்கறது முக்கியமில்லை. நிறைய நல்ல காரியங்கள் நடக்க வேண்டியிருக்கு. உங்களோட நாங்க வரலாமா?”

"ஆஹா... இது யார் உங்க மனைவியா?”

"ஆமா...இப்பதான் எங்க கல்யாணம் முடிஞ்சது. சக்திபுரம் அம்பாளை

தரிசிக்கறதுக்காகப் போயிட்டிருக் கோம்.”

“ஏறிக்குங்க...” என்றவர் அதன்பின் காருக்குள் பேசிய பேச்சுக்கள் அவ்வளவும் ஆச்சரியமான ஆச்சரியம்.

“தம்பி...நான் சக்திபுரம் ஊராட்சி மன்றத் தலைவர்.

ஊரே மழையில்லாம கஷ்டப்படுது. கோயில் குளத்துல மட்டும் கொஞ்சம் தண்ணி இருக்கு. ஆனா, காலம் காலமா அதை ஊரைச் சேர்ந்த யாரும் பயன்படுத்தறது கிடையாது. அது ஒரு ஆச்சரியமான குளம்! பல பைத்தியங்கள் அதுல மூழ்கி பூரணமா குணமாகியிருக்காங்க. அதே சமயம் நல்லா இருக்கறவங்க இறங்கினா சித்தம் கலங்கிடுது. கோவில் குருக்களே கால் கூட தண்ணில படாமதான் அபிஷேகத்துக்கு தண்ணி எடுப்பார்”

தான் யார் என்பதில் தொடங்கி குளம் பற்றித்தான் நிறைய பேசினார். தனஞ்ஜெயன் மௌனமாக கேட்டுக் கொண்டான். அவ்வப்போது விஜியையும் பார்த்தான். அவளிடமும் ஒரு ஆழ்ந்த மௌனம்.

“எங்க ஊர் குளத்துல அஞ்சு தலை நாகம் இருக்கற தாகவும் ஒரு நம்பிக்கை. அதை எப்படியாவது போட்டோ எடுத்துடனும்னு ஒருத்தர் மாசக் கணக்குல கேமராவோட குளத்தையே சுத்தி வந்தார். ஆனா அவர் கண்ணுல அது படவே இல்லை. ஒரு நாள் கேமரா இல்லாம யதார்த்தமா வந்தப்போ கண்ணுல பட்டு அரண்டுபோனார். இது எங்கப்பா காலத்துல நடந்தது” என்று குளம் தொடர்பாய் அடுத்த செய்தியை சொன்னவர்,

“அது என்னமோ தெரியல இந்த 2012-ல ஒரு பெரிய அதிசயம் நடக்கப் போகுதுன்னு எங்க ஊர்ல ஒரு பேச்சு இருக்கு. கொஞ்ச நாளா காசியில இருந்து, இமயமலைப் பக்கம் இருந்தும் ஏன் நேபாளத்துல இருந்தும் கூட நிறைய சன்யாசிகள் வர்றாங்க. எல்லாரும் திரும்பிப் போகாம ஊரையே சுத்தி வர்றதைத்தான் புரிஞ்சுக்க முடியல” என்றபோது மட்டும் தனஞ்ஜெயனுக்கு சுருக்கென்றது.

“ஆமா நீங்க என்ன பண்றிங்கன்னு சொல்லவே இல்லையே...” என்று அவர் கேட்கவும் “நான் ஒரு அம்பாள் உபாசகன். இந்த நவராத்திரி ஒன்பது நாளும் மந்திர மலையான மஹா மேருவை பூஜிக்கணும்கறது எங்க விருப்பம்” என்றான் தனஞ்ஜெயன்,

“மந்திரமலை, மஹாமேருன்னு நீங்க எதைச் சொல் நீங்க?”

"அப்ப எந்திரம் உங்ககிட்ட இருக்கா?" அவர் கேள்விக்குப் பதில் சொல்ல சற்றுத் தயங்கினவனை விஜி கையால் அழுத்தித் தடுத்தாள். பின் "இருக்கு" என்று அவள் கூறவும் அவனிடம் ஆச்சரியம்.

"இப்பல்லாம் பவித்ரமான விஷயங்கள் ரொம்ப மலிஞ்சிடுச்சி. காயத்ரி மந்திரத்தை பெண்கள் சொல்லக் கூடாது. ஆனால் சொல்றாங்க. அது சிடியா வந்து எல்லா நேரமும் ஒலிபரப்பாகுது. அதுபோல எல்லா எந்திரத்தை யும் இஷ்டத்துக்கும் செய்து விக்கறாங்க" அவர் கருத்துக்கு தனஞ்ஜெயன் பதிலேதும் கூறவில்லை.

"இப்ப கூட நான் ஒரு எந்திரம் வாங்க வேண்டிய நிலையிலதான் இருக்கேன்" அவருடைய அடுத்த பதில் அவனை ஆச்சரியமாக பார்க்க வைத்தது.

"என்ன பாக்கறிங்க... அபிராமி தாச சுவாமிகள்னு ஒரு அம்பாள் உபாசகரை தெரியும்தானே?"

"கேள்விப்பட்டுருக்கேன்."

"நான் அவரோட பரம சிஷ்யன். அவரும் இந்த நவராத்திரியில் ஒன்பது நாளும் மஹாமேரு பூஜை செய் யணும். புதுசா ஒச்சமில்லாம ஒரு எந்திரம் வாங்கிக் கொடுன்னு சொன்னார். தஞ்சாவூர்ல ஒருத்தர் கிட்ட சொல்லியிருந்தேன். ஆனா அவசரத்துககு அவரால செய்ய முடியல. அவர் ஒருத்தர்தான் தப்பில்லாம துல்லிய மாக புரிஞ்சு மேருவை செய்யறவர். கொஞ்சம் தப்பாயிட் டாலும் அவ்வளவுதான். எல்லாமே விபரீத பலனாயிடும் இல்லையா?"

அவர் எந்திரம் பற்றியே பேசிக் கொண்டு வந்ததெல் லாம் எந்த கணக்கோடு சேர்ந்தது என்று தெரியவில்லை. தேவியானவள் வகுத்துக் கொடுத்த பாதையில் எல்லாமே செல்கிறது. அதில் நூலளவு பிழைக்கும் மாற்றத்துக்கும் இடமில்லை என்பதை உணர்ந்தவர்கள், இதுபோல தம்மைச் சுற்றி நடப்பதையும் மௌனமாக கவனித்தார்கள். தனஞ்ஜெயனும், விஜியும்.

"என்னமோ தெரியல... நீங்க என் கார்ல வரலா மான்னு கேட்டப்போ மறுக்க மனசு வரலை. முன்பின் தெரியாதவங்களை கார்ல ஏத்திக்கறதுல நிறைய சிக்கல்கள் இருக்கு. ஆனா உங்கவரைல என்னால மறுக்க முடியல..." என்று அவர் சொல்லவும் தனஞ்ஜெயனுக்கு தன்னை தேவியின் சக்தி வழி நடத்துவது ஊர்ஜிதமாகிவிட்டது!

***

ஒரு காரில் உபாசகர் சந்திரமௌலி முன்னால் அமர்ந்திருக்க பின்புறமாய் தனசேகரன் பிள்ளையும் இளங்கோவும் அமர்ந்திருந்திருக்க காரும் சக்தி புரத்தை அடைந்து நின்றது. இருட்டிவிட்டது. கோவில் கோபுரத்தின் உச்சியில் மின் விளக்கு எரிந்து கொண் டிருந்தது.

மூவரும் காரை விட்டு இறங்கினர்.

‘‘சாமி... இதானா சக்திபுரம்?” என்று கேட்டான் இளங்கோ.

“ஆமாம்பா... உலகத்துக்கே சக்தியைக் கொடுக்கற புரம் இதுதான்...”

“ஆனா பார்த்தா அப்படி தெரியலியே... ஒழுங்கா’ ஒரு தெரு இல்ல... எல்லா ஊரையும் போல இங்கேயும் சாக்கடை தெருவிலேயே வழிஞ்சு ஓடுது பாருங்க...” என்று இளங்கோ குத்தலாக ஒரு இடத்தை காட்டினான்.

சந்திரமௌலிக்கும் சுருக்கென்றது.

“இதோ பாருப்பா... உன் கிட்ட ஒரு மிஷின் இருக்கு உனக்கு ஒட்ட தெரியாததால அது ஓடாம அப்படியே இருந்தே அதுவும் கெட்டுப்போற மாதிரிதான் இந்த ஊரும்...”

“இந்த ஊர்க்காரங்க மனசு வெச்சா உலகத்தையே ஆட்டிப் படைக்க முடியும். ஆனா அவங்க கண்ணை ஒரு சக்தி மூடி மறைச்சு கிட்டிருக்கு...” என்று ஒரு மாதிரி சமாளித்தார்.

“சரி... ஊர் பெருமையை நீங்களே வெச்சுக்குங்க... எங்களுக்கு எங்க பொண்ணு வேணும். அவங்க மட்டும் இங்க இல்லாட்டி உங்கள நான் சும்மாவிடமாட்டேன் ஆமா.” இளங்கோ கொஞ்சம் துடுக்காகவே பேசினான்.

“வாங்க குளத்தங்கரைக்கு போவோம்.”

“அங்க எதுக்கு?”

“உன் தங்கையையும் அவனையும் நீங்க பார்க்க வேண்டாமா?” என்று சற்று அதட்டி அவர்களை குளத்தங் கரைக்கு அழைத்துச் சென்றார்.

வானில் பௌர்ணமிக்கு முதல்நாள் நிலவின் பிம்பம். அது குளத்தில் பட்டு பிரதிபலித்தது. குளத்தைச் சுற்றி வேலி போட்டிருந்தார்கள். ஓர் இடத்தில் வேலியை வளைத்து ஒருவர் உள்ளே செல்ல முடிந்த அளவு

வழி இருந்தது. ஒரு இடத்தில் போர்டில், இந்தக் குளத்தில் குளிக்கவோ இந்த நீரைப் பயன்படுத்தவோ கூடாது' என்கிற வாசகங்கள் ஏறத்தாழ உதிர்ந்த நிலையில் இருந்தன. ஆனால் , இளங்கோ அதைப் பார்க்கவில்லை. குளத்தைப் பார்க்கவும் இளங்கோ குஷியானான். மளமளவென்று இறங்கி முகம் கழுவப் பார்த்தான். அப்போது சந்திரமௌலியும் சிறுநீர் கழிக்க ஒதுங்கிவிட்டிருந்தார். இறங்கிய இளங்கோ படியில் பாசம் படிந்து இருப்பதை உணரவில்லை. வழுக்கி விழுந் தான். விழுந்த வேகத்தில் அப்பா என்ற குரல் கொடுக்க தனசேகரன்பிள்ளையும் போய் கைக்கொடுக்க முனைந்து அவரும் விழுந்தார்.

திரும்பி வந்திருந்த சந்திரமௌலியிடம் அதிர்ச்சி.

"ஐயோ யாரைக் கேட்டு இறங்கினிங்க... இதுல கால் கூட நனைக்கக் கூடாதுங்கறது தெரியாதா?" என்றபடி அருகே சென்று துண்டை வீசி அவர்களை பிடித்துக் கொண்டு ஏறச் சொன்னார். ஆனால், அவர்கள் அவரை யும் தண்ணிருக்குள் இழுத்ததில் அவரும் குளத்துக்குள் விழுந்தார்.

அப்போது பார்த்து அந்த பக்கமாய் வந்த ஒருவர் கவனித்து அவர்களுக்கு கரையில் இருந்தபடியே ஒரு மூங்கிலை எடுத்து பிடித்துக்கொள்ளச் செய்து கரை ஏற வைத்தார் பின் மூவரையும் உற்றுப் பார்த்தார்.

"என்ன அப்படி பாக்கறீங்க?"

"சீக்கிரமா உங்க ஊருக்கு போற வழியைப் பாருங்க..."

"ஏன்?"

"சொல்றதைச் சொல்லிட்டேன்.அப்புறம் உங்க தலையெழுத்து. இப்படியா இந்த குளத்துல வந்து விழு வீங்க..." என்ற அவர் குரலில் ஒரு எச்சரிக்கையும் பயமும் தெரிந்தது. அதன் பின் அவர் சென்றுவிட மூவரிடமும் குளிரின் தாக்கம். காரில் இருந்த துண்டை எடுத்து துவட்டிக் கொண்டனர். இருந்தும் தலையில் ஒரு கிறு கிறுப்பு. எதற்கு வந்தோம் என்பதே அவர்களிடம் மறந்து போகத் தொடங்கியது.

சந்திரமௌலிக்கு குளத்து நீரின் குணம் வேலை செய்வது புரியத் தொடங்கியது மளமளவென்று காயத்திரியை ஜெபிக்க முயன்றார். ஆனால், ஜெபிக்க முடியவில்லை. சித்தம் மெல்ல கலங்கி மனம் என்ற ஒன்றே இல்லாமல் போகத் தொடங்கியது!

அப்போது கச்சிதமாக விஜியும் தனஞ்ஜெயனும் கோவிலில் அம்பாள் தரிசனம் முடிந்து அங்கு வந்திருந் தனர். மூவரையும் பார்க்கவும் அவர்களிடம் விதிர்ப்பு. ஆனால், அவர்களோ தனஞ்ஜெயனையும் விஜியையும் மலங்க மலங்கப் பார்த்தனர். காரை ஒட்டிவந்த டிரைவரோ ஆச்சரியப்பட்டு,

“என்ன இவங்க இப்படி திருதிருன்னு முழிக்கறாங்க. நீங்க யாரு?" என்று கேட்டான்.

விஜி தனசேகரன்பிள்ளையை "அப்பா” என்றழைக் கவும் புரிந்து கொண்டான்.

“அம்மா உங்கள தேடிகிட்டுதான் வந்துருக்கோம், வந்தவங்க குளத்துலு இறங்கிட்டு வந்தாங்க. இப்படி முழிக்கிறாங்க” என்றான்.

தனஞ்ஜெயன் அதைக் கேட்டு சிரித்தான்.

"விஜி... அம்பாள் இப்ப இவங்களக் கட்டி போட் டுருக்கா... இதுவும் நமக்கு எந்த சிக்கலும் வரக்கூடாதுன்னு தான் நடந்திருக்கு” என்றான்.

கோவிலின் அர்த்த ஜாம பூஜை மணி ஒலித்து ஆமோதித்தது. அவர்கள் மூவரும் எதுவுமே பேசாமல் வெறித்தபடியே நின்றனர்.

“இப்ப என்னங்க பண்றது?” டிரைவர் கேட்டான்.

“நீ போய் நாங்க சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வா. இவங்களோட நாங்களும் உன் கூடவே ஊருக்கு வர்றோம்” என்ற தனஞ்ஜெயனை சரி என்பதுபோல் பார்த்தபடியே டிரைவர் விலகிப் போனான்.

“விஜி... போ உன் கடமையை செய்” என்றான் தனஞ்ஜெயன். அவளும் எதுவும் பேசாமல் நடந்தாள். குளத்து நீரின் படிகளில் இறங்கினாள். மெல்ல நீரிலும் இறங்கி நிற்கத் தொடங்கினாள். நீரைத் தொட்ட வினாடி அவளுக்குள் ராஜமோகினி போல் ஒரு உணர்வு. பழைய சம்பவங்களின் அலைபாய்ச்சல்...

அப்படியே மூழ்கினாள். கழுத்தளவுக்கே நீர் இருந்த தால் மூச்சுகட்டும் சிரமம் ஏற்படவில்லை. அதே சமயம் சிறு வயதில் திருப்பரங்குன்ற சரவணப் பொய்கையில் நீச்சலடித்த அனுபவம் கை கொடுத்தது. அப்போதெல் லாம் தண்ணிரில் மூழ்கி அதிக நேரம் அவளால் மட்டுமே இருக்க முடிந்தது. எதற்கு என்பது அப்போது புரிந்து போனது.

குளத்தின் மைய மண்டபம் வரை சேறு பாவ நடந் தாள். தனஞ்ஜெயன்

கரையில் நின்றபடி அந்தாதி சொன்ன படி இருந்தான். சுற்றிலும் ஒருவருமில்லை. வானில் நிலா மட்டும் ஒளியைச் சொறிந்தபடி.

குளத்தில் விஜியும் ஒரு இடத்தில் காலில் ஏதோ இடர்வதுபோல் உணர்ந்து அங்கே மூழ்கினாள். அன்று விழுந்து மூழ்கிப்போன ஸ்ரீ எந்திரம் வழவழப்பான பாசி களோடு அவள் கைகளில் தஞ்சமானது.

தொட்ட நொடி ஒரு சிலிர்ப்பு. தொட்டு எடுத்து வந்து படிகளில் நின்றபோது வானில் ஒரு மின்னலின் ஒட்டம் கணத்தில் வானிலை மாறி மழை பெய்வதற்கான அறிகுறிகள்.

தனஞ்ஜெயன் அருகில் வந்து அவள் வசமிருந்த எந்திரத்தை தன் வசப்படுத்திக் கொண்டான். நெற்றிக்கு கொண்டு சென்று வணங்கினான். நடந்தான். காரின் பின்னால் டிக்கியைத் திறக்கச் சொல்லி வைத்தான். மூடினான். அதற்குள் டிரைவரும் கையில் வாழைப்பழம் பிஸ்கட் என்று வந்து நின்றான்.

விஜி, தனஞ்ஜெயனை ஆச்சரியத்தோடு பார்த்தாள். “நீங்களும் குளிச்சீங்களா?”

"ஐயோடா... உங்களுக்கும் ஏதாவது ஆயிடப் போகுது. ஒருத்தர் இப்பதான் சொல்லிட்டு போனாரு...”

“எதுவும் ஆகாது. இந்த பழம், பிஸ்கட்டை சாப்ட் டுட்டு காரை எடு. இது திருப்பரங்குன்றத்துல என் வீட்டு வாசல்ல தான் நிக்கணும்...”

“இது எனக்கா?”

"ஆமாம்... சாப்பிடு...”

“அதுசரி... குளிக்கவா இவ்வளவு தூரம் வந்தீங்க?”

“பேசாதே சொன்னதைச் செய்.” அதட்டவும் டிரைவரும் சாப்பிட்டு முடித்தான். காரும் புறப்பட்டது!

***

அதிகாலை!

'தாயி கதவைத்திற...’ என்று ஒரு பெண் குரல் வாசல்புறத்தில் இருந்து கேட்டது. ‘யாரது?’ எனும் கேள்வியோடு கண் திறந்தாள் நல்லம்மை. ஆனால், ஒரு வரும் இல்லை. அவளுக்குள் ஆச்சரியம். சரி எழுந்துவிட்டோம் திரும்பப் படுக்க வேண்டாம் என்று எண்ணியபடி

வாசல் தெளித்துக் கோலம் போட்டாள்.

கோலம் போட்டு முடித்த நொடி அதன்மேல் தனஞ் ஜெயன் வந்த காரின் தேக்கம் விஜியும் தனஞ்ஜெயனும் இறங்கினர். நல்லம்மை அதிசயித்தாள்.

“தனா... நீங்களா?” தனஞ்ஜெயனோ பதிலேதும் கூறாமல் டிக்கியைத் திறந்தான். ஸ்ரீ எந்திரத்தையும் எடுத்தான். டிரைவரோ முன்புறம் பார்த்தபடி சீட்டிலேயே கவனமாக இருந்தான்.

தனஞ்ஜெயன் அந்த எந்திரத்தோடு வீட்டினுள் நுழைந்தான்.

எந்திரத்தை ஏட்டுக் கட்டுகள் உள்ள மரப்பொட்டி மேல் வைத்துவிட்டு திரும்பி வந்தவன் டிரைவரிடம் “இவங்கள இவங்க வீட்ல விட்டுட்டு நீ போய்கிட்டே இரு” என்றான். டிரைவரும் மந்திரித்தவன் போல சரி என்று காரை கிளப்பினான்.

நல்லம்மை மலங்க மலங்க பார்த்தாள்.

சுந்தரம்பிள்ளையும் எழுந்து கொண்டார்.

அவரும் வந்து ஸ்ரீஎந்திரத்தைப் பார்த்தார்.

பார்த்த நொடி அப்படியே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். அதைப் பார்த்து நல்லம்மையும் வணங்கினாள்.

“நல்லம் மை... ஆத்தா வந்துருக்கா... அழுக்கா இருக்கா! நல்லா தேச்சு துடைச்சு அலங்காரம் பண்ணி பொட்டு வை” என்றார். விஜியும் நல்லம்மையும் எந்திரத்தை தேய்த்துத் துடைத்து சுத்தப்படுத்தத் தொடங்கினர். அரைமணியில் எந்திரம் மின்னத் தொடங்கியது.

பிந்து பாகத்தில் நல்லம்மை பொட்டு வைக்கவும் மின்சாரம் தாக்கியது போல் இருந்தது. பின் விஜியும் தனஞ்ஜெயனும் குளித்துவிட்டு வந்தனர். கழுத்தில் மஞ்சள் சரட்டைப் பார்த்து நல்லம்மை அவளை மார்போடு கட்டிக்கொண்டு “நாங்க செய்து பாக்க வேண்டியதை காலம் செய்துடிச்சா?” என்று கேட்டாள். பின் உச்சி மோந்தாள். சுந்தரம்பிள்ளையும் பரவசம் விலகாமல் தனாவைப் பார்த்தார்.

“இந்த அதிசயத்தை எங்க வெச்சு பூசையைத் தொடங்கப் போறே?” என்று விஷயத்தை தொட்டார்.

“தெரியலப்பா...”

“உனக்கு தெரியாதது இப்ப எதுவுமில்ல... நீயா இப்படி பேசறே?”

“ஆமாம்... இப்போதைக்கு பக்கிரிச் சித்தர் சாமி இதை தரிசனம் பண்ணணும். அவர்தான் அடுத்து என் செய்யணும்னு சொல்வார்...”

“அப்ப அவர் இங்க வரப் போறாரா?” கேட்கும் போதே “வந்துட்டேன்” என்கிற குரலோடு பக்கிரிச் சித்தர். தன் வீட்டுக்கே வந்து விட்டவரை பரவசத்தோடு வர வேற்றான் தனா.

வந்தவரும் குங்குமப் பொட்டுடன் காட்சி தந்த எந்திரத்தை நெடுநேரம் உற்றுப் பார்த்தார். பின் தன் வசம் வைத்திருந்த பூக்களை தூவினார்.

“இதைப் பாக்கற விருப்பம் என்ன நடக்க வெச் சிடிச்சு! இனி இது முறையா பூசையைக் காணணும். அதேசமயம் இதோட அபார சக்தி பத்தி யாருக்கும் தெரியக்கூடாது. இது பூஜிக்க படுற இடத்துக்கு போயிட்டா போதும். சக்திபுரம் கோவில்ல பல காலம் இருந்த மாதிரி இதுவும் இருந்துக்கும். அபிராமிதாசன் இன்னிக்கு நவ ராத்திரி பூஜையை தொடங்கறான். நீ இதோட போய் அவன் கிட்ட கொடுத்து இதை உன் காணிக்கைன்னு மட்டும் சொல். இது மாதிரி ஒண்ணுக்காக அவன் காத்திருக்கான். ஆனா அது உருவாகலை. நீ போகவும் அம்பாளே தேடிவந்துட்டதா நினைப்பான். இதை காணிக் கையா கொடுத்துட்டு, ‘என்னை சிஷ்யனாக்கிக்குங்க சாமின்னு சொல்லு. பாக்கலாம்னு சொல்வான். அங் கேயே தங்கிடு. அவன் பூஜை செய்யும்போது நீயும் சேர்ந்து செய். நீ நினைக்கறதும் கேக்கறதும் நடக்கும். ஆனா அவனுக்கும் எந்திரத்துக்கும்தான் பேர் கிடைக்கும். அதனால் பாதகமில்லை. அவன் ஆயுள் இன்னும் சில மாதங்களே. அப்புறம் அந்த மட்மே உன் கைக்கு வரும். அதுக்குள்ள உனக்கு இன்னமும் பக்குவம் ஏற்பட்டு இதை நீ எப்ப எப்படி பயன்படுத்தணுமோ அப்ப அப்படி பயன்படுத்துவே. பேராசையும் சுயநலமும் சந்திரமௌலி மாதிரி சித்த பிரமைல ஆழ்த்திடும். ஜாக்கிரதை” என்றார். அதன் பின் அவர் சொன்னபடியே எல்லாம் நடந்தது.

பூஜையும் தொடங்கியது. மழையும் ஆரம்பித்தது. ஒன்பது நாட்களும் மழை. சொல்லி வைத்த மாதிரி மாலை வேளையில் மட்டும் வானம் வெறித்து வழிவிட்டது. சுந்தரம்பிள்ளை சொன்னதுபோல அவர் வீட்டு கிணறு மொண்டு அள்ள முடிந்த அளவு பொங்கி வழிந்தது. பாரதம் முழுக்கவே சரியான மழை. எல்லா ஆறுகளிலும் புதுப்புனல்.

இடையே சந்திரமௌலி சித்தபிரமை விலகாமல் எங்கே போனார் என்றே தெரியவில்லை.

தனசேகரன் பிள்ளையும், இளங்கோவும் பூஜையில் கலந்துகொண்டு மெல்ல மீளத் தொடங்கிவிட்டனர்.

தனஞ்ஜெயனை தன் மடத்தின் மேலாளராகவே நியமித்துவிட்டார் அபிராமி சுவாமிகள். விஜி நல்ல மருமகளாக நல்லம்மைக்குத் துணையாக இருக்கிறாள். பக்கிரிச் சித்தரும் விஜயதசமி அன்று முக்தி அடைந்து அவருக்கு ஒரு ஜீவ சமாதியையும் தனஞ்ஜெயன் கட்டி விட்டான். இவை அத்தனைக்கும் நடுவில் பெரும் மழையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மரப்பொட்டி ஏடுகள் அவ்வளவும் நசிந்து வெள்ளத்தோடு வெள்ளமாய் எங்கோ போய்விட்டன.

அந்த ஸ்ரீ எந்திரம் மிகுந்த ஆற்றலுடையது. அதனால் உலகையே அழிக்கவும் செய்யலாம். காப்பாற்றவும் செய்யலாம் என்று தனஞ் ஜெயன் கூறினான். அதை நம்பிக்கை அடிப்படையில் ஏற்கத்தான் முடியுமே அன்றி ஆதாரங்கள் அழிந்துவிட்டன.

தனஞ்ஜெயனாலேயே கூட உரிய மந்திரங்களைச் சொல்லி அதை இயக்க முடியாது. எல்லாமே வெள்ளத் தோடு போய்விட்டது. அதை இனி யாராலும் ஆட்டி வைக்க முடியாது. ஆனால், பக்தியாலே பணிந்து எதைக் கேட்டும் அடைய முடியும். அந்த ஸ்ரீ எந்திரமும் காலதேச வர்த்தமானங்களை எல்லாம் கடந்து அம்பிகையின் திரு

உள்ளப்படியே பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாயை என்பவர்க்கு அது மாயம்! இல்லை என்பார்க்கு அது இல்லை. இருந்தும் இல்லாமலும் இல்லாமல் இருந்தும் அது தொடர்கிறது... தொடர்கிறது... தொடர்கிறது...

முற்றும்